உ

ஸ்ரீ பகவத் கீதை

[முதல் பாகம்]

[அத்யாயம் 1 முதல் 7 வரை]



வில்லவரம்பல் குப்புஸ்வாமி அய்யரவர்களால்
இயற்றப்பட்ட
'கீதார்த்த தீபிகை'
எனும் தமிழ் அனுவாதத்தைத் தழுவிய
தமிழ் உரையுடன் கூடியது

தொகுத்தவர் :
அ. குப்புஸ்வாமி

கும்பகோணம் சாரதா விலாஸ அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

2-பாகங்களும் விலை ரூ. 30] [1974

உ

ஸ்ரீ பகவத் கீதை

[முதல் பாகம்]



ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர், ஸ்ரீராமானுஜாசார்யார்,
ஸ்ரீமத்வாசார்யார், ஸ்ரீ ஸ்ரீதரர், ஸ்ரீ ராகவேந்த்ரர்
ஆகிய ஆசார்ய புருஷர்களின் வ்யாக்யானங்களை
அனுஸரித்து,
வில்லவரம்பல் குப்புஸ்வாமி அய்யரவர்களால்
இயற்றப்பட்ட
'கீதார்த்த தீபிகை'
எனும் தமிழ் அனுவாதத்தைத் தழுவிய
தமிழ் உரையுடன் கூடியது

தொகுத்தவர் :
அ. குப்புஸ்வாமி

கும்பகோணம் சாரதா விலாஸ அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

2-பாகங்களும் விலை ரூ. 10] [1974

புத்தகம் கிடைக்குமிடம்:—

சாரதா விலாஸ் பிரஸ்,
8, கரிக்காரத் தெரு,
கும்பகோணம்,
(தஞ்சாவூர் ஜில்லா)

Sarada Vilasa Press,
8, Karikkara Street,
KUMBAKONAM.
(TANJORE DT.)

பி. ஜி. பால் & கோ.,
நெ. 4, பிரான்ஸிஸ்
ஜோஸப் தெரு,
சென்னை-1.

B. G. PAUL & Co.
No. 4, Francis Joseph St.,
MADRAS-1.



ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

श्रीः

ஸீல்

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकर भगवत्पादप्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटि पीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्र सरस्वती श्रीपादादेशानुसारेण
श्रीमज्जयेन्द्रसरस्वती श्रीपादैः क्रियते नारायणस्मृतिः ।

ஸ்ரீ க்ருஷ்ணபகவானால் அர்ஜுனனை நிமித்தமாகக் கொண்டு உலகத்திற்கு உபதேசிக்கப்பட்டதும், கர்ம, பக்தி, ஞானயோகங்களைத் தெளிவாக விளக்குவதுமான, ஸ்ரீ பகவத்கீதைக்கு அநேக மஹான்கள் பண்டைக் காலத்திலிருந்து ஸம்ஸ்க்ருதத்தில் வ்யாக்யானங்கள் செய்திருக்கிறார்கள். இவைகளுள் ஸ்ரீ சங்கரபகவத்பாதாள், ஸ்ரீ ராமானுஜாசார்யார், ஸ்ரீ மத்வாசார்யார், ஸ்ரீ ஸ்ரீதரர், ஸ்ரீ ராகவேந்த்ரஸ்வாமிகள் இவர்களின் வ்யாக்யானங்கள் முக்ய ஸ்தானங்களை வஹிக்கின்றன.

இந்த சிறந்த வ்யாக்யானங்களின் பொருள்களைத் தமிழறிந்தவர்கள் அறிந்துகொள்வதற்காகச் சுமார் தொண்ணூறு வருஷங்களுக்கு முன் சிறந்த அபிக்ஞராக விளங்கிய வில்லவரம்பல், குப்புஸ்வாமி அய்யர் இவைகளை எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தார்.

இப்போது அந்த நூல் கிடைப்பது துர்லபமாயிருப்பதால் அவருடைய கொள்பேரனும், ஓய்வுபெற்ற ஆசிரியருமான ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யர், "காமகோடி" பத்திரிகையின் மூலம் இந் நூலை கிரமமாகக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியிட்டு வந்து, இப்போது முழுதையும் நூல் வடிவமாக (இரு பாகங்களாக) வெளியிட முன் வந்துள்ளதை அறிந்து மிக மகிழ்ச்சியடைகிறோம்.

தமிழ் மொழியறிந்த ஆஸ்திகர்கள் இந் நூலைப் படித்து கீதையின் பொருளை உணர்ந்து கொண்டு.

"तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥"


என்னும் பகவானின் உபதேசத்தை அனுஸரித்து அவரவர்களுக்கு சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மாக்களை "நான் செய்கிறேன்" என்ற அஹம்பாவமில்லாமலும், பலனில் ஆசையில்லாமலும் அனுஷ்டித்துக்கொண்டு, பகவனுக்ரஹத்தினல் எல்லா மங்களங்களையும் அடைவார்களாக.

யாத்ராஸ்தானம்,
காளிகட்டம் (கல்கத்தா),
ஆனந்த ஆச்வின பூர்ணிமா

நாராயண ஸ்மிருதி:



ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ ஜயேந்த்ரஸரஸ்வதி ஸ்வாமிகள்



வில்லவரம்பல் குப்புஸ்வாமி அய்யர்

முகவுரை

ஸுமார் 90 ஆண்டுகளுக்கு முன்னர், வில்லவரம்பல் குப்புஸ்வாமி ஐயர் என்ற சான்றோர், பகவத்கீதை, பத்து உபநிடதங்கள், வாஸுதேவமனனம், விவேக சூடாமணி ஆகிய வேதாந்த க்ரந்தங்களை, ஸம்ஸ்க்ருத மொழியில் அதிக அறிவில்லாதோர் படித்து பயனடையும் பொருட்டு விசேஷத் தமிழ் உரைகளுடன் பிரசுரித்தார்கள். அவர் ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடத்தின் சிறந்த பக்தர். அன்னுருடைய பகவத் கீதைப் பிரசுரம், ஸ்ரீ சங்கரர், ஸ்ரீராமானுஜர், ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ஸ்ரீதரர், ஸ்ரீ ராகவேந்த்ரர் ஆகிய மதாசார்ய புருஷர்களின் விரிவுரைகளின் ஸாரத்துடன் கூடியது. தற்கால ஆஸ்திகர்களுக்கு, அந்த பகவத் கீதையை அந்தத் தமிழில் உள்ள உரைகளுடன் படிக்கும் வாய்ப்புக் கிட்டவேண்டுமென்ற நமது ஸ்ரீமத் பரமாசார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி, காலஞ்சென்ற வில்லவரம்பல் குப்புஸ்வாமி அய்யரின் வம்சத்தைச் சேர்ந்த திருவிடைமருதூர் ஸ்ரீ A. குப்புஸ்வாமி அய்யர் மூலத்துடனும், உரையுடனும், மேற்படி கீதை தற்காலத் தமிழ் இலக்கிய நடைக்கேற்ப தொகுத்துள்ளார். முதல் மூன்று அத்யாயங்களின் பகுதிகள் 'காமகோடி' ஸஞ்சிகையின் வாயிலாக சில ஆண்டுகளுக்கு முன் அவ்வப்போது பிரசுரமாயின.

புத்தக ரூபமாக நூலை சீக்கிரத்தில் வெளியிடும் நோக்குடன், பின்னர் பாக்கி அத்யாயங்களும், சென்னை, ஸ்ரீ S G. ரத்னமய்யர், சாத்தபுரம், ஸ்ரீ C. R. ஸ்வாமிநாதன், கோவை வக்கீல் ஸ்ரீ C. P. மீனாக்ஷிஸுந்தர சாஸ்திரிகள்

ஆகியோரிடம் பொருளுதவி பெற்றும், பாதிக்கு மேலான செலவுகளைத் தானே ஏற்றும், ஸ்ரீ A. குப்புஸ்வாமி அய்யர் ஸ்ரீ பரமாசார்யாளின் ஆக்ஞையைப் பூர்த்தி செய்துள்ளார்.

இந்நூல் அத்வைத, விசிஷ்டாத்வைத, த்வைத ஆகிய மூன்று ஸித்தாந்தங்களைத் தழுவுபவர்களுக்கும் பயன் தரக்கூடியது. யாவரும் படித்துப் பயனடைந்து ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் அருளுக்குப் பாத்திரமாகுக.

24, டபீர் நடுத்தெரு,
கும்பகோணம்,
18—10—74.

A. கோபாலய்யர்,
ஆசிரியர், ‘ காமகோடி ’

பிழைத் திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	11	பருகின்றவர்	பருகுகின்றவர்
,,	19	குணத்ர விபாகயோகம்	குணத்ரயவிபாக யோகம்
,,	20	பூருஷோத்தம யோகம்	புருஷோத்தமயோகம்
4	11	1911	1909
5	4	இந்த நூல்	இந்த நூலின் முதல் மூன்று அத்யாயங்கள்
8	17	ருதஸேனன்	ச்ருதஸேனன்
15	12	(உரோமம்)	உரோமம்
32	26	கீதாவ்ருத்தி	கீதாவிவ்ருதி
34	2	கீதாவ்ருத்தியில்	கீதாவிவ்ருதியில்
,,	24	கீதாவ்ருத்தி	கீதாவிவ்ருதி
38	5	கீதாவ்ருத்தியின்	கீதாவிவ்ருதியின்
40	11	கீதாவ்ருத்தி	கீதாவிவ்ருதி
45	21	வபரிணமதே	விபரிணமதே
,,	23	கீதாவ்ருத்தி	கீதாவிவ்ருதி
46	14	,,	,,
49	1	,,	,,
54	18	,,	,,
87	6	கீதாவ்ருத்	கீதாவிவ்ருத்
88	14	கீதாவ்ருத்தியில்	கீதாவிவ்ருதியில்
102	8	செய்வதில்	செய்வதில்லே
109	21	கீதாவ்ருத்தியின்	கீதாவிவ்ருதியின்
153	9	ब्रह्मणाहुतम्	ब्रह्मणा हुतम्
172	11	படுத்தப்படமாட்டா	படுத்தமாட்டா

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
197	24	सयोगी	स योगी
218	2	यस्मिनस्थितो	यस्मिन्स्थितो
235	4	युञ्जन्मदाश्रयः	योगं युञ्जन्मदाश्रयः
,,	7	பார்த்தயுஞ்ஜன்	பார்த்த யோகம்யுஞ்ஜன்
246	9	பொருள்கலில்	பொருள்களில்
253	16	परे	परं
256	1	உவகில்	உலகில்
263	28	भाविता	भावित:
265	10	नान्यकामिना	नान्यगामिना
270	15	भुवनाल्लोके	भुवनाल्लोका:
,,	17	புவனல்லோகே	புவனல்லோகா:
291	13	पृथक्द्वेन	पृथक्त्वेन
292	17	ஹுஹ்ருத்	ஸுஹ்ருத்
308	15	स्मरन्ति च	रमन्ति च
,,	17	ஸ்மரந்தி ச	ரமந்தி ச
379	12	श्वणु	शृणु
388	14	பலச்ருதி	பல ச்ருதி
401	4	அனுபவப்பவன்	அனுபவிப்பவன்
404	7	वावत्संजायते	यावत्संजायते
505	25	வ்யபொரமே	வ்யாபாரமே
510	24	स्वभावप्रभवैर्गुणः	स्वभावप्रभवैर्गुणैः
520	20	ப்ரவிமஞான	ப்ரஹ்மஞான

ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வராய நம:

ஸ்ரீ பகவத் கீதை

முன்னுரை

"போர்க்களத்தே மெய்கீதை பகன்றது எவர்வாய்?" என்று ஒரு நவீன கவி குறிப்பிட்டுள்ளார். பாரதப் போர் நடக்குமுன், எதிரிகளின் வரிசையில், தந்தைபோன்றவரும், பாட்டனுரான பீஷ்மரும், துரோணர், கிருபர் போன்ற குருமார்களும், ஸஹோதரர்கள் போன்ற துர்யோதனுதியரும், பந்துக்களும், நண்பர்களும் குழுமியிருப்பதைக் கண்ட பார்த்தனுக்கு, மனக்லேசமும் குழப்பமும் தோன்றின. போர்தொடுக்க மனமில்லாததை, தேரோட்டியான கண்ணனிடம் தெரிவித்தான்.

சஞ்சலமும் ஸந்தேஹமும் கொண்ட அர்ஜுனனுக்கு பகவானுன கிருஷ்ணன் பகன்ற புத்திமதியே கீதையாகும். எடுத்த கருமம் முடிக்கப்பாலது, ஜீவனெனும் அழிவற்ற ஆன்மாவையும் அழிவுடலையும் ஒன்ருக பாவிக்கும் அறிவின்மையையும், தன்கடனே பயன் கருதாது செய்யும் நோக்கையும், பரம்பொருளின் ஸர்வ வ்யாப்தியையும் உபதேசித்தார். வேதவ்யாஸரின் விசேஷ அனுக்ரஹத்தால், வெகு தூரத்தில் போர்க்களத்தில் நடக்கும் விசேஷங்களைப் பார்க்கவும் கேட்கவும் சக்தியைப்பெற்ற ஸஞ்ஜயன், கண்டதையும் கேட்டதையும் அவ்வாறே, பிறவிக் குருடனு திருதராஷ்டிர மஹாராஜனுக்கு எடுத்துரைத்தான். அர்ஜுனனுடைய ஸந்தேஹங்கள், கேள்விகள், அவனுக்குப் பகவான் உபதேசரீதியாகக் கூறிய பதில்களும், விளக்கங்களும், க்ருஷ்ணுர்ஜுன ஸம்வாதமான பகவத் கீதை எனப்படும்.

இந்த மோக்ஷப்ரதமான பகவத்கீதையை ஸ்ரீ வேதவ்யாஸர் தமது பாரத இதிஹாஸத்தில் சேர்த்தார். இதை ஒரு உபநிஷத்தாகவும், யோக சாஸ்திரமாவும், அத்வைத

கிரந்தமாகவும், வேதஸாரமாகவும் கொள்வது வழக்கு. வேதத்தின் ஸாரம் உபநிஷத்துக்கள். அந்த உபநிஷத்துக்களின் ஸாரத்தையே விளக்கிக்கூறுகின்றது பகவானின் வாக்கான பகவத்கீதை. கீதாத்யானம் என்று நமது தேசத்தில் சில ச்லோகங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவைகளில் ஒன்று பின்வருமாறு :—

"ஸர்வோப நிஷதாம் காவோ தோக்தா கோபாலநந்தன:|
பார்த்தோ வத்ஸ: ஸுதீர்போக்தா துக்தம் கீதாம்ருதம்
மஹத் ||"

எல்லா உபநிஷத்துகளும் கரவைப் பசுக்கள். இவைகளைக் கறப்பவன் கோபாலனான கண்ணன். பசுங்கன்று அர்ஜுனன். இப்படி கறக்கப்பட்டபாலைப் பருகின்றவர் நல்ல சுத்தமான அறிவுள்ளவர்கள். அப் பாலே அம்ருதமயமான புகழ்பெற்ற கீதை.

இந்த பகவத்கீதையில், அர்ஜுனவிஷாதயோகம், ஸாங்க்யயோகம், கர்மயோகம், ஞானகர்மஸந்யாஸயோகம், ஸந்யாஸயோகம், த்யானயோகம், ஞானவிஞ்ஞானயோகம், அக்ஷரப்ரும்மயோகம், ராஜவித்யாராஜகுஹ்யயோகம், விபூதியோகம், விச்வரூபதர்சனயோகம், பக்தியோகம், க்ஷேத்ரக்ஷேத்ரஞ்ஞ விபாகயோகம், குணத்ரவிபாகயோகம், பூருஷோத்தமயோகம், தைவாஸுரஸம்பத்விபாகயோகம், ச்ரத்தாத்ரய விபாகயோகம், மோக்ஷஸன்யாஸயோகம் என்ற க்ரமமாக 47, 72, 43, 42, 29, 47, 30, 28, 34, 42, 55, 20, 35, 27, 20, 24, 28, 78 ச்லோகங்களைக் கொண்ட 18 அத்யாயங்களுள்ளன.

ப்ரஸ்தானத்ரயமெனும் நமது வைதிக மத க்ரந்தங்களில் ஒன்றான இந்த பகவத்கீதைக்கு ஸம்ஸ்க்ருதம் முதல் பல வெளிநாட்டு மொழிகளில் உள்பட எண்ணிரந்த உரைகள் காணப்படுகின்றன. நம் நாட்டு ஆசார்ய புருஷர்களான ஸ்ரீ பகவத்பாத சங்கரரும், ஸ்ரீ ராமானுஜரும்,

ஸ்ரீ மத்வரும், அத்வைத, விசிஷ்டாத்வைத, த்வைதரீதிகளில் பகவத்கிதைக்கு பாஷ்யங்கள் எழுதியுள்ளனர். இவைகளையொட்டியே பிற்காலத்தில் பல உரைகள் ஏற்பட்டுள்ளன. இந்த பகவத்கிதையின் மாஹாத்ம்யத்தை ஸூதர் விசேஷமாகச் சொல்லியிருக்கிருர்.

இந்த பகவத்கீதையின் ஸாரத்தை ஸம்ஸ்க்ருத மொழியில் விசேஷ அறிவுப்பெற்று படிக்க முடியாதவர்களின் நிலையை உத்தேசித்து, அவர்களுக்கும் இந்தஉயர்ந்த நூலின் ஸாரம் கிட்டும்படி, ஸுமார் 84 ஆண்டுகளுக்கு முன்னர் (1884 - தாரணஹு) வில்லவரம்பல் குப்புஸ்வாமி அய்யர் என்றவரால் ப்ரசுரிக்கப்பட்டது.

அன்ஞர் 1830-ல் தஞ்சை ஜில்லாவில், வில்லவரம்பல் என்னும் சிற்றூரில் பிறந்து, கும்பகோணத்தில் வளர்க்கப்பட்டு, மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேர்ச்சியடைந்து சில ஆண்டுகள் கும்பகோணத்திலும், தரங்கம்பாடியிலும், ஆங்கிலேய உத்யோகஸ்தர்களுக்கு தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி, பின்னர் வக்கில் பரீக்ஷை எழுதி, கோயம்புத்-தூரில் பல ஆண்டுகள் வழக்கறிஞராக இருந்து செல்வமும் புகழும் கொண்டு வாழ்ந்தார். அவர் வேதாந்த அறிவிலும், அத்வைதக்ரந்தங்களைக் கற்பதிலும் விசேஷ ஈடுபாடு கொண்டவர். ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடத்தில் அக்காலத்தில் ப்ரகாசித்து வந்த ஸ்ரீ மஹாதேவேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகளிடம் சிறந்த பக்தி கொண்டிருந்தார். தற்போது ஸ்ரீ ஆசார்யாள் மடத்துப் பஞ்சாங்கம் என்று வழங்கி வரும் பஞ்சாங்கம் மேற்படி ஸ்ரீ ஸ்வாமிகள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது, அப் பஞ்சாங்கமே சுத்தமானதென்றும், எல்லோராலும் அனுஷ்டானத்தில் வைத்துக் கொள்ளப்படவேண்டுமென்றும் எடுத்துக்கூறி, ‘பஞ்சாங்க

நிர்ணயம்' என்ற சிறு தமிழ்நூலை 10,000 பிரதிகள் அச்சிட்டு இலவசமாகத் தமிழ்நாடு முழுவதும் வழங்கினார்கள்.

இப் பெரியார் ஸ்ரீமடத்திலிருந்து அவ்வப்போது வித்வான்களை அழைத்தும், கோயம்புத்தூரில் அக்காலத்தில் வாழ்ந்த வித்வான்களையும், மற்றும் தஞ்சை ஜில்லாவிலிருந்து சில கீர்த்திவாய்ந்த வித்வான்களையும் தமது இல்லத்தில் வைத்துக்கொண்டும், உபநிஷத்துக்கள், கீதை, வாஸுதேவமனனம், விவேகசூடாமணி போன்ற பல க்ரந்தங்களை நன்கு கற்றறிந்து அவைகளை தமிழ்மொழி பெயர்ப்புடன் நல்ல முறையில் பிரசுரித்தார்கள்.

1911-ஞ மஹாமஹ ஸ்நாநத்தை உத்தேசித்து கும்பகோணத்திற்கு வந்து தனது தௌஹித்ரன் (பெண்ணின் மகன்) வீட்டில் சிறிது காலம் வசித்து வந்தார்கள். பின்னர் திருவிடைமருதூரில் தனது மூத்த பெண்ணின் வீட்டில் சிறிது காலம் தங்கியிருந்து, பிறகு ஆடுதுறைக் கருகாமையில் உள்ள ஸூர்யநார்கோயில் என்ற ப்ரஸித்தமான நவக்ரஹக்ஷேத்ரத்தில் தனது இரண்டாவது மகளின் வீட்டில் (ஆகஸ்டு மாதம்) ஆடி மாதத்தில் சுக்ல பக்ஷ பஞ்சமியில் இறைவனடி சேர்ந்தார். சாகும் வரை சுத்தமான அறிவுடனிருந்து, தன் இறுதி இன்னும் சில நாழிகைக்குள் ஏற்படுமென்று கூறி, பகவன் நாமாவை நாவில் சொல்லிய வண்ணம் விடியற் காலையில் உயிர் நீத்தார்.

இவருடைய பிரசுரங்கள் இப்போது எங்கும் கிடைக்கவில்லை. அவையாவும் மிகச்சிறந்தவை என்பது நமது ஸ்ரீ பரமாசார்யாளான காஞ்சி காமகோடி பீடாதிபதீச்வரரின் அபிப்ராயம். அவைகளுள் கீதையையாவது திரும்ப

மக்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டுமென்ற எண்ணத்தால் அன்னார் பிரசுரித்த கீதை நூலை சிறுசிறு பகுதிகளாகக் காமகோடி பத்ரிகையில் அநுபந்தமாகப் பிரசுரிக்கப்பட்டதின் தொகுப்பே இந்த நூல். ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வர், ஸ்ரீதரர் முதலியோரினால் செய்யப்பட்டுள்ள பாஷ்யங்களிலிருந்து மேற்கோள்கள் நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

கீழே ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யரின் புத்தகத்தில் காணப்படும் முகவுரையிலிருந்து ஒரு சிறு பகுதி தரப்பட்டுள்ளது.

"இந்த கிரந்தத்தைச் செய்து அதினால் கீர்த்தியடைய வேண்டுமென்கிற எண்ணங்கொண்டு இதில் நான் ப்ருவருத்திக்கவில்லை. கீதா சாஸ்திரமானது மோக்ஷ சுகத்திற்கு வழிகாட்டியெனப் பெரியோர்களால் அறிந்து, அதை மனனம் செய்யத் தொடங்கியதில், சிரேஷ்டமான தத்வார்த்தங்கள் என் அற்பபுத்தியில் நிலைநிற்காமையால், எழுதி மனனம் செய்யலாமென்று தொடங்கினேன். பிறகு பிரசித்தமான மூன்று சித்தாந்தங்களையும் விசாரிக்க புத்தியுண்டானமையால், அவைகளை விசாரித்து எழுதினேன். அப்படி எழுதினது என்னைவிட அற்பசக்தியுள்ளவர்களுக்கு உபயோகமாகலாமென்றெண்ணி அச்சிடத் துணிந்தேன்"

A. குப்புஸாமிய்யர்,
திருச்சி.

உ

श्री भगवद्गीता

अर्जुनविषादयोगः

ஸ்ரீ பகவத்கீதை

அர்ஜுனவிஷாதயோகம்

धृतराष्ट्र उवाच (த்ருதராஷ்ட்ர உவாச) —

धर्मक्षेत्रे कुरुक्षेत्रे समवेता युयुत्सवः ।
मामकाः पाण्डवाश्चैव किमकुर्वत सञ्जय ॥ १

[தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ: ।
மாமகா: பாண்டவாஸ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய ॥]

திருதராஷ்டரனெனும் அரசன், சஞ்ஜயனை நோக்கி, "புண்ணிய பூமியான குருக்ஷேத்ரமென்னுமிடத்திலே யுத்தஞ்செய்ய விரும்பியிருக்கிற நம்மவர்களும், பாண்டவர்களுஞ்சேர்ந்து என்ன செய்தார்கள்?" என்று கேட்டான்.

सञ्जय उवाच (ஸஞ்ஜய உவாச) —

दृष्ट्वा तु पाण्डवानीकं व्यूढं दुर्योधनस्तदा ।
आचार्यमुपसङ्गम्य राजा वचनमब्रवीत् ॥ २

[த்ருஷ்ட்வா து பாண்டவானீகம் வ்யூடம்
துர்யோதனஸ்ததா ।
ஆசார்யமுபஸங்கம்ய ராஜா வசனமப்ரவீத் ॥]

சஞ்ஜயன் சொன்னான் :—

இரு கக்ஷி சேனைகளும் யுத்தகளத்திற் சேர்ந்திருந்த போது ராஜாவான துர்யோதனன், கிரமவரிசைப்படுத்தப்

பட்டிருக்கிற பாண்டவர்களுடைய சேனையைப் பார்த்த பின் துரோணுசாரியர் சமீபத்திற்போய் இனிச் சொல்லப் போகிற வாக்கியத்தைச் சொன்னுன்.

पश्यैतां पाण्डुपुत्राणामाचार्य महतीं चमूम् ।
व्यूढां द्रुपदपुत्रेण तव शिष्येण धीमता ॥ ३

[பச்யைதாம் பாண்டுபுத்ராணுமாசார்ய மஹதீம் சமூம் ।
வ்யூடாம் த்ருபதபுத்ரேண தவ சிஷ்யேண தீமதா ॥]

(துர்யோதனன் துரோணுசாரியரைப் பார்த்துச் சொன்னதாக சஞ்ஜயன் திருதராஷ்டரனுக்குச் சொல்வது):—

துரோணுசாரியரே! உம்முடைய சிஷ்யனும், அதி புத்திசாலியுமான திருஷ்டத்யும்னனுலே கிரமவரிசைப் படுத்தப்பட்டிருக்கிற விசாலமான பாண்டு குமாரர்களுடைய சேனையைப் பாரும்.

अत्र शूरा महेष्वासा भीमार्जुनसमा युधि ।
युयुधानो विराटश्च द्रुपदश्च महारथः ॥ ४

[அத்ர சூரா மஹேஷ்வாஸா பீமார்ஜுனஸமா யுதி ।
யுயுதானே விராடஸ்ச த்ருபதஸ்ச மஹாரத: ॥]

धृष्टकेतुश्चेकितानः काशिराजश्च वीर्यवान् ।
पुरुजित् कुन्तिभोजश्च शैब्यश्च नरपुङ्गवः ॥ ५

[த்ருஷ்டகேதுஸ்சேகிதான: காசிராஜஸ்ச வீர்யவான் ।
புருஜித் குந்திபோஜஸ்ச சைப்யஸ்ச நரபுங்கவ: ॥]

युधामन्युश्च विक्रान्त उत्तमौजाश्च वीर्यवान् ।
सौभद्रो द्रौपदेयाश्च सर्व एव महारथाः ॥ ६

[யுதாமன்யுஸ்ச விக்ராந்த உத்தமௌஜாஸ்ச வீர்யவான் |
ஸௌபத்ரோ த்ரௌபதேயாஸ்ச ஸர்வ ஏவ மஹாரதா: ||]

பாண்டவ சேனையிலேயுத்தத்தில் வல்லமையுடையவர்களாயும், (அதிக வல்லமையுடையவர்கள் என்று பெயர்போன) பீமார்ஜுனர்களுக்கு ஸமானமானவர்களாயும், பெரிதான விற்களையுடையவர்களாயுமிருக்கிற யுயுதானன், விராடன், மகாரதிகனுன துருபதன், திருஷ்டகேது, சேகிதானன், வல்லமையுள்ள காசி ராஜன், புருஜித், குந்திபோஜன், மனுஷ்ய சிரேஷ்டனுன சைப்யன், பராக்கிரமசாலியான யுதாமன்யு, வீரனுன உத்தமௌஜா, சுபத்ரையின் புத்ரன், துரௌபதியின் புத்ரர்கள்* இவர்களெல்லோரும்மகாரதிகர்களாக[1] இருக்கிருர்கள்.

---

*துரௌபதையிடத்தில் தருமபுத்திரருக்குப் பிறந்தவன் பிரதிவிந்தியன், பீமசேனனுக்குப் பிறந்தவன் சூதசோமன், அர்ஜுனனுக்குப் பிறந்தவன் ச்ருதகீர்த்தி, நகுலனுக்குப் பிறந்தவன் சதாநீகன், சகாதேவனுக்குப் பிறந்தவன் ருதஸேனன். (மகாபாரதம் ஆதிபர்வம் 63-வது அத்யாயம் பார்க்க.)

---

1. **ஸ்ரீதரர்** :—

" ஏகாதசஸஹஸ்ராணி யோதயேத்யஸ்து தன்விநாம் |
சஸ்த்ரசாஸ்த்ர ப்ரவீணஸ்ச மஹாரதஇதிஸ்ம்ருத: || "

எவனெருவன் விற்பிடித்து யுத்தஞ்செய்கிற பதினுயிரம் பெயர்களோடு எதிர்த்து யுத்தம் செய்ய வல்லமையும், ஆயுத சாஸ்திரத்தில் அதிக பயிற்சியுமுள்ளவனே அவன் மகாரதிகனென்று (மஹாரதன்) என்று சொல்லப்படுகிருன்.

* * * *

அளவற்ற ரதிகர்களை எதிர்த்து யுத்தஞ்செய்யும் வல்லமையும், ஆயுதப் பயிற்சியுமுள்ளவன் அதிரதனென்றும், ஒரே இரதத்திலிருந்துகொண்டு மற்றொரு இரதத்தில்

असाकं तु विशिष्टा ये तान्निबोध द्विजोत्तम ।
नायका मम सैन्यस्य संज्ञार्थं तान् ब्रवीमि ते ॥ ७

[அஸ்மாகம் து விசிஷ்டா யே தாந்நிபோத
த்விஜோத்தம ।
நாயகா மம ஸைன்யஸ்ய ஸம்ஞார்த்தம் தான்
ப்ரவீமி தே ॥]

பிராம்மணச் சிரேஷ்டரான துரோணாச்சாரியரே! நம்முடைய பக்கத்திலுள்ள வல்லவர்களையும், சேனைத் தலைவர்களையும் உமக்குத் தெரியும்பொருட்டுச் சொல்லுகிறேன்; அவைகளைத் தெரிந்துகொள்ளும்.

भवान् भीष्मश्च कर्णश्च कृपश्च समितिञ्जयः ।
अश्वत्थामा विकर्णश्च सौमदत्तिस्तथैव च ॥ ८

(**सौमदत्तिर्जयद्रथः** என்று ஒரு பாடமுண்டு)

अन्ये च बहवः शूरा मदर्थे त्यक्तजीविताः ।
नानाशस्त्रप्रहरणाः सर्वे युद्धविशारदाः ॥ ९

---

*ஸுபத்திரையினிடத்தில் அர்ஜுனனுக்கு பிறந்தவன் அபிமன்யு.

இருக்கிற தனக்குச் சமானவனுன ஒருவனேடெதிர்த்து யுத்தஞ் செய்கிறவன் ரதி என்றும், அவனுக்குத் தாழ்ந்தவன் அர்த்தரதனென்றும் சொல்லப்படுகிறுன்.

[பவான் பீஷ்மஸ்ச கர்ணஸ்ச கிருபஸ்ச
ஸமிதிஞ்ஜய: ।
அச்வத்தாமா விகர்ணஸ்ச ஸௌமதத்தி-
ஸ்ததைவ ச ॥]

[அன்யே ச பஹவ: சூரா மதர்த்தே த்யக்தஜீவிதா: ।
நாநாசஸ்த்ரப்ரஹரணா: ஸர்வே யுத்தவிசாரதா: ॥]

நீங்களும், பீஷ்மரும், கர்ணனும், கிருபாசார்யரும், யுத்தத்தில் ஜயசாலியான அச்வத்தாமாவும், ஸோமதத்தனின் மகனான பூரிசிரவஸும், ஜயத்ரதனும், பின்னும் பல சூரர்களும் எனக்காகப் பிராணனைக் கொடுக்கத் துணிந்து, பலவிதவாயுதங்களையுடையவர்காளாயுமெல்லோரும் யுத்தத்தில் வல்லமை பொருந்தியவர்களாயு மிருக்கின்றீர்கள்.

अपर्याप्तं तदस्माकं बलं भीष्माभिरक्षितम् ।
पर्याप्तं त्विदमेतेषां बलं भीमाभिरक्षितम् ॥ १०

[அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் பீஷ்மாபிரக்ஷிதம் ।
பர்யாப்தம் த்விதமேதேஷாம் பலம்
பீமாபிரக்ஷிதம் ॥]

எது பீஷ்மரால் செவ்வையாகக் காக்கப்பட்டிருக்கிறதோ அத்தகைய நம்முடைய சேனை பாண்டவர்களோடு யுத்தஞ்செய்ய வல்லமையற்றது. பீமனால் செவ்வையாய்க் காக்கப்பட்டிருக்கிற இவர்களுடைய இந்த சேனையோ வல்லமை பொருந்தியதாகக் காண்கிறது.

अयनेषु च सर्वेषु यथाभागमवस्थिताः ।
भीष्ममेवाभिरक्षन्तु भवन्तः सर्व एव हि ॥ ११

[அயனேஷு ச ஸர்வேஷு யதாபாகமவஸ்திதா: |
பீஷ்மமேவாபிரக்ஷந்து பவந்த: ஸர்வ ஏவ ஹி ||]

நீங்கள் (துரோணுசாரியார் உள்பட) எல்லோரும் சேனைக்குள் பிரவேசிக்கும் பொருட்டு வைக்கப் பட்டிருக்கிறவெல்லா மார்க்கங்களிலும், அவரவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற விடத்திலேயேயிருந்து கொண்டு, பீஷ்மரையே எல்லாப் பக்கங்களிலும் காக்க வேண்டும். (அவரொரு பக்கத்தில் யுத்தஞ் செய்துகொண்டுயிருக்கையில் வேறே பக்கங்களிற் சத்துருக்கள் வந்து அவர்பேரில் பாணம் போடாமல் பாதுகாக்க வேண்டியதென்பதே.)

[பீஷ்மரைக் காக்க வேண்டியதைப் பற்றிக் குறிப்பாய்ச் சொன்னதின் கருத்தானது—அவர் யுத்தத்தில் மகா வல்லமையுடையவர். தன் தேகத்தைத் தனக்கிஷ்டமான காலத்தில் விடலாமென்று வரம் பெற்றவர். இவரை யுத்தத்தில் ஜெயிப்பது அசாத்தியமென்று எதிரிகளால் பயப்படத்தக்கவர். இப்போது சேனுதிபதியாயுமிருக்கிறவர். ஆகையால் அவரைச் சத்ருக்கள் மோசடியாய் அங்கஹீனம் முதலியன செய்யவிடமன்றியில் காக்கிறபக்ஷத்தில், தன்னுடைய சேனைக்குக் கெடுதிவராமல் அவர் காப்பாரென்று துர்யோதனன் எண்ணியிருக்கலாமென்பதே.]

तस्य सञ्जनयन् हर्षं कुरुवृद्धः पितामहः ।
सिंहनादं विनद्योच्चैः शङ्खं दध्मौ प्रतापवान् ॥ १२

[தஸ்ய ஸஞ்ஜனயன் ஹர்ஷம் குருவ்ருத்த:
பிதாமஹ: |
ஸிம்ஹநாதம் விநத்யோச்சை: சங்கம் தத்மௌ
ப்ரதாபவான் ||]

சத்துருக்கள் பார்த்து பயப்படும்படியான வல்லமை பொருந்தியவரும், குருவம்சத்திலுள்ளவர்களுக்குள்ளே வயதுசென்றவரும், தகப்பனுடைய பெரிய தகப்பனுமான (தாத்தா) பீஷ்மர், துர்யோதனனுக்குச் சந்தோஷமுண்டாகும்படிப் பெரியதான சிங்கத்தின் முழக்கம்போன்ற சப்தத்தைச் செய்து சங்கத்தை ஊதினர்.

ततः शङ्खाश्च भेर्यश्च पणवानकगोमुखाः ।
सहसैवाभ्यहन्यन्त स शब्दस्तुमुलोऽभवत् ॥ १३

[ததः சங்காஸ்ச பேர்யஸ்ச பணவானககோமுகா: |
ஸஹஸைவாப்யஹன்யந்த ஸ சப்த-
ஸ்துமுலோzபவத் ॥]

பீஷ்மர் சங்கத்வனி செய்த பிறகு கௌரவ சேனையிலுள்ள மற்றவர்களாலே சங்கங்கள், நகராக்கள் (பேரி), மிருதங்கங்கள், தப்பட்டைகள், கொம்புகள் சீக்கிரமாக முழக்கப்பட்டன. அந்தச் சப்தமானது எங்கும் பரவியது.

ततः श्वेतैर्हयैर्युक्ते महति स्यन्दने स्थितौ ।
माधवः पाण्डवश्चैव दिव्यौ शङ्खौ प्रदध्मतुः ॥ १४

[ததः ச்வேதைர்ஹயைர்யுக்தே மஹதி ஸ்யந்தனே
ஸ்திதௌ |
மாதவ: பாண்டவஸ்சைவ திவ்யௌ சங்கௌ
ப்ரதத்மது: ॥]

அதற்குப் பிறகு வெள்ளைக் குதிரைகள் பூட்டிய பெரிதான இரதத்திலேறியிருக்கிற கிருஷ்ணனும் (மாதவனும்), அர்ஜுனனும், தெய்வத்தன்மை பொருந்திய சங்கங்களை உரக்க ஊதினர்கள்.

[சாந்தோக்ய உபநிஷத்திலுள்ள மதுவித்தையென்கிற வேதபாகத்தினுல் புகழப்பட்டவனுனதால் மாதவனென்றும், மா=லக்ஷ்மீ தவ:=பதி (கணவன்). இலக்ஷ்மீபதியானதால் மாதவனென்றும், மௌனம், தியானம், யோகம் இவைகளையுடையவனுனதால் மாதவனென்றும் பெயர் வந்தது. (விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு (சங்கரர்) செய்திருக்கிற பாஷ்யத்தின் 27-ஆவது பக்கத்தில் காண்க].

पाञ्चजन्यं हृषीकेशो देवदत्तं धनञ्जयः ।
पौण्ड्रं दध्मौ महाशङ्खं भीमकर्मा वृकोदरः ॥ १५

[பாஞ்சஜன்யம் ஹ்ருஷீகேசோ தேவதத்தம்
தனஞ்ஜய: |
பௌண்ட்ரம் தத்மௌ மஹாசங்கம் பீமகர்மா
வ்ருகோதர: ||]

अनन्तविजयं राजा कुन्तीपुत्रो युधिष्ठिरः ।
नकुलः सहदेवश्च सुघोषमणिपुष्पकौ ॥ १६

[அனந்தவிஜயம் ராஜா குந்திபுத்ரோ யுதிஷ்டிர: |
நகுல: ஸஹதேவஸ்ச ஸுகோஷமணிபுஷ்பகௌ ||]

काश्यश्च परमेष्वासः शिखण्डी च महारथः ।
धृष्टद्युम्नो विराटश्च सात्यकिश्चापराजितः ॥ १७

[காச்யஸ்ச பரமேஷ்வாஸ: சிகண்டீ ச மஹாரத: |
த்ருஷ்டத்யும்னோ விராடஸ்ச ஸாத்யகிஸ்சாபராஜித:||]

द्रुपदो द्रौपदेयाश्च सर्वशः पृथिवीपते ।
सौभद्रश्च महाबाहुः शङ्खान् दध्मुः पृथक् पृथक् ॥ १८

[த்ருபதோ த்ரௌபதேயாஸ்ச ஸர்வச: ப்ருதிவீபதே |
ஸௌபத்ரஸ்ச மஹாபாஹு: சங்கான் தத்மு:
ப்ருதக் ப்ருதக் ||]

ஓ! திருதராஷ்டர மஹாராஜாவே (கேளும்)! [1] ஹ்ருஷீகேசனெனும் கிருஷ்ணன் [2] பாஞ்சஜன்ய மென்னும் சங்கத்தை ஊதினர். [3] தனஞ்சயன் (அர்ஜுனன்) தேவதத்தமென்னுஞ் சங்கத்தையும், பயங்கரமான காரியத்தைச் செய்பவனும் செந்நாய் வயிற்றைப்போல் வயிற்றையுடையவனுமான பீம ஸேனன் பௌண்டரமென்னும் பெரிய சங்கத்தை யும், இராஜாவும் குந்தி புத்திரனுமான தருமபுத்திரர் அநந்தவிஜயமென்னுஞ் சங்கத்தையும், நகுலன் ஸுகோஷமென்னுஞ் சங்கத்தையும், ஸகதேவன் மணி புஷ்பகமென்னுஞ் சங்கத்தையும், சிரேஷ்டமான வில்லையுடைய காசிராஜனும், மகாரதிகனான சிகண்டி யும், த்ருஷ்டத்யும்னனும், விராட ராஜனும், அபஜய மடையாதவனான ஸாத்யகியும், துருபத மகாராஜ னும், துரௌபதையின் குமாரர்களும், தோள்வலி வுள்ள அபிமன்யுவும், இவர்களெல்லோருமாக தனித் தனியாய் (அவரவர்களுடைய) சங்கங்களை முழங்கச் செய்தனர்.

---

[1] ஹ்ருஷீகேசன் :— இந்திரியங்களுக்கு (ஸாக்ஷி யாக இருப்பதால்) எஜமானனாகிய க்ஷேத்ரஞனாக இருக்கிறபடியால் ஹ்ருஷீகேசனென்றும், இந்திரியங் களைச் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு அவைகளை விஷயங்களில் ஏவுகின்ற பரமாத்மாவானதினால் ஹ்ருஷீகேசனென்றும், சூர்யனின் உருவமாகவும், சந்த்ரனின் உருவாகவும் விளங்குகின்ற பகவான்,

स घोषो धार्तराष्ट्राणां हृदयानि व्यदारयत् ।
नभश्च पृथिवीं चैव तुमुलो व्यनुनादयन् ॥ १९

[ஸ கோஷோ தார்தராஷ்ட்ராணும் ஹ்ருதயானி வ்யதாரயத் |
நபஸ்ச ப்ருதிவீம் சைவ துமுலோ வ்யனுநாதயன் ||]

எங்கும் பரவிய அச் சங்கங்களின் சப்தம், ஆகாயத்தையும், பூமியையும் எதிரொலி ஏற்படுத்தும்படிச் செய்ததோடல்லாமல், திருதராஷ்டிர மன்னனின் குமாரர்களுடைய நெஞ்சங்களைப் பிளந்தது.

[பிளக்கப்பட்ட நெஞ்சுடையவர்களாக எண்ணி பயந்தார்கள் என்பது கருத்து.]

அச் சூர்யசந்திரர்களுடைய (உரோமம்) என்று சொல்லப்படும் கிரணங்களாலே உலகிற்கு, விழிப்பு, தூக்கம் என்ற அவஸ்தைகளால் மகிழ்ச்சி ஏற்படுத்துவதாலும் கிருஷ்ண பகவானுக்கு "ஹ்ருஷீகேசன்" என்ற பெயர்வந்தது. (விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம் 25-ஆவது பக்கம் பார்க்க).

[2]பாஞ்சஜன்யன் :— பஞ்சஜனன் என்கிற அஸுரனின் வயிற்றைக் கிழித்து, அவனுடைய எலும்பிலிருந்து எடுக்கப்பட்டதால், இந்த பகவானுடைய சங்கத்திற்கு 'பாஞ்சஜன்யம்' என்று பெயர் ஏற்பட்டது. (விஷ்ணுபுராணம், அம்சம் 5, அத்யாயம்-21, பாகவதம் பத்தாவது ஸ்கந்தம், 15-ஆவது அத்யாயம்.)

[3]தனஞ்ஜயன் :— இராஜசூய யாகத்திற்காக அநேக அரசர்களை ஜயித்து செல்வம் ஈட்டியதால்

தனஞ்ஜயனென்றும், செல்வத்தில் (தனத்தில்) ஆசை யற்றவனுதலால் தனஞ்ஜயனென்றும் அர்ஜுனனுக்குப் பெயர் ஏற்பட்டது.

अथ व्यवस्थितान् दृष्ट्वा धार्तराष्ट्रान् कपिध्वजः ।
प्रवृत्ते शस्त्रसम्पाते धनुरुद्यम्य पाण्डवः ॥ ௨௦
हृषीकेशं तदा वाक्यं इदमाह महीपते ।

[அத வ்யவஸ்திதான் த்ருஷ்ட்வா தார்தராஷ்ட்ரான் கபித்வஜ:।
ப்ரவ்ருத்தே சஸ்த்ரஸம்பாதே தனுருத்யம்ய பாண்டவ:॥
ஹ்ருஷீகேசம் ததா வாக்யம் இதமாஹ மஹீபதே।

மஹாராஜனே! பிறகு (அவர்கள்) ஆயுதங்களைப் பிரயோகிக்கத் துவங்கியபோது குரங்குக்கொடியோனுகிய, *அர்ஜுனன், போர்செய்ய ஆயத்தமாகவுள்ள துர்யோதனன் முதலியோரைப் பார்த்து, தன்னுடையவில்லை உயர்த்திக்கொண்டு, கிருஷ்ணபகவானைப் பார்த்து இந்த வாக்கியத்தைக் கூறினுன். (கீழ்க் காணும் வாக்கியத்தை).

---

*பீமனின் வேண்டுகோளுக்கிணங்கி, அனுமன் பாரத யுத்தத்தில், பாண்டவருக்கு வெற்றி கிட்டும் பொருட்டு, அர்ஜுனனின் இரதத்தின்மீதுள்ள கொடியில் வந்திருப்பதாக வரமருளியபடி, யுத்தகாலத்தில் அப்படியே, அர்ஜுனனின் இரதக்கொடியில் வீற்றிருந்ததால், அர்ஜுனனைக் 'குரங்குக்கொடியோன்' என்று சொல்லப்பட்டுள்ளது. —[மஹாபாரதம், ஆரண்ய பர்வம், அத்தியாயம்—151].

अर्जुन उवाच (*அர்ஜுனன் சொன்னான்*)

सेनयोरुभयोर्मध्ये रथं स्थापय मेऽच्युत ॥ २१
यावदेतान्निरीक्षेऽहं योद्धुकामानवस्थितान् ।
कैर्मया सह योद्धव्यमस्मिन् रणसमुद्यमे ॥ २२
योत्स्यमानानवेक्षेऽहं य एतेऽत्र समागताः ।
धार्तराष्ट्रस्य दुर्बुद्धेर्युद्धे प्रियचिकीर्षवः ॥ २३

[ஸேனயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மேஅச்யுத ॥
யாவதேதான்நிரீக்ஷேஅஹம் யோத்துகாமா-னவஸ்திதான் ।
கைர்மயா ஸஹ யோத்தவ்யமஸ்மின் ரணஸமுத்யமே ॥
யோத்ஸ்யமானானவேக்ஷேஅஹம் ய ஏதேஅத்ர ஸமாகதா: ।
தார்தராஷ்ட்ரஸ்ய துர்புத்தேர்யுத்தே ப்ரிய-சிகீர்ஷவ: ॥]

** "ஹே அச்யுத! (கிருஷ்ணா) கெட்டபுத்தியுடைய திருதராஷ்ட்ரனின் மகனாகிய துர்யோதனனுக்கு யுத்தத்தில் ப்ரியத்தைக்கொடுக்க (உதவிசெய்து ப்ரீதி அடையும்படிச் செய்ய) எண்ணங்கொண்டு எவர் போர்க்களத்தில் கூடியிருக்கிறார்களோ, அப்படிப் பட்டவர்களை; இப் போரின் துடக்கத்தில் நான் யாருடன் போர் தொடுக்கவேண்டுமோ அத் தகைய யுத்தஞ்செய்ய ஆசையுள்ள இவர்களை நான்*

---

* *ஸ்வரூப ஸாமர்த்தியத்திற்கு நாசமில்லாதவனாதலும், தன் ஸ்தானத்திலிருந்து அசைவில்லாதவனுகையாலும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு 'அச்யுதன்' என்று பெயர் ஏற்பட்டது. (சங்கரர் இயற்றிய விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம் பார்க்க.)*

எதுவரை பார்க்கிறேனோ; மற்றும் போர் செய்யப் போகிறவர்களை (மேற் சொல்லப்பட்டவர்களில் சேராத) நான் எதுவரையில் பார்க்கிறேனோ, அது வரை இரண்டு படைகளுக்குமிடையே எனது இரதத்தை நிறுத்தும்''

सञ्जय उवाच (ஸஞ்சயன் சொன்னான்)

एवमुक्तो हृषीकेशो गुडाकेशेन भारत ।
सेनयोरुभयोर्मध्ये स्थापयित्वा रथोत्तमम् ॥ २४
भीष्मद्रोणप्रमुखतः सर्वेषां च महीक्षिताम् ।
उवाच पार्थ पश्यैतान् समवेतान्कुरूनिति ॥ २५

[ஏவமுக்தோ ஹ்ருஷீகேசோ குடாகேசேன பாரத ।
ஸேனயோருபயோர்மத்யே ஸ்தாபயித்வா
ரதோத்தமம் ॥
பீஷ்மத்ரோணப்ரமுகத: ஸர்வேஷாம் ச மஹீக்ஷிதாம் ।
உவாச பார்த்த பச்யைதான் ஸமவேதான்குரூநிதி ॥]

இப்படி தூக்கத்தை ஜயித்தவனான அர்ஜுனனால் சொல்லப்பட்டபோது ஹ்ருஷீகேசன் (கிருஷ்ணன்), இருசேனைகளிடையே பீஷ்மர், த்ரோணர் போன்ற எல்லா அரசர்களுடைய முன்னால், அந்த உயர்ந்த வகையான தேரை நிறுத்தி, "ஓ அர்ஜுனா! இங்கு கூடியுள்ள இக்கௌரவர்களை (கௌரவப் படையை) பார்'', என்று கூறினார்.

तत्रापश्यत् स्थितान् पार्थः पितॄनथ पितामहान् ।
आचार्यान् मातुलान् भ्रातॄन् पुत्रान्पौत्रान् सखींस्तथा ॥ २६

श्वशुरान् सुहृदश्चैव सेनयोरुभयोरपि ।

[தத்ராபச்யத் ஸ்திதான் பார்த்த: பித்ரூனத
பிதாமஹான் |
ஆசார்யான் மாதுலான் ப்ராத்ரூன் புத்ரான்-
பௌத்ரான் ஸகீம்ஸ்ததா ||
ச்வசுரான் ஸுஹ்ருதஸ்சைவ ஸேனயோ-
ருபயோரபி |]

அதற்குப்பிறகு அங்கு இருதரத்துப் படைகளிலு முள்ள பூரிசிரவஸ் போன்ற தகப்பன் முறைமையுள்ள வர்களையும், பீஷ்மரைப்போன்ற பாட்டன் முறைமை யுள்ளவர்களையும், துரோணர் போன்ற ஆசிரியர்களை யும், தாய்மாமன்மாரை யொத்த உறவினரையும், துர்யோதனன் போன்ற உடன்பிறந்தார் முறைமை யுள்ளோரையும், மகன்முறைமை யுள்ளோரையும், மற்றும் பேரப்பிள்ளைகள் போன்ற உறவினரையும், நண்பர்களையும், மாமனுர்முறைமைகொண்டவர்களை யும், திரும்ப உதவியை எதிர்பாராத சிநேகிதர்களையும் அர்ஜுனன் பார்த்தான்.

तान् समीक्ष्य स कौन्तेयः सर्वान्बन्धूनवस्थितान् ॥ २७
कृपया परयाऽऽविष्टो विषीदन्निदमब्रवीत् ।

[தான் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய: ஸர்வான்பந்தூ-
னவஸ்திதான் ||
க்ருபயா பரயாஆவிஷ்டோ விஷீதந்நிதமப்ரவீத் |]

அர்ஜுனன் போர்க்களத்தில் நிற்கின்ற எல்லா உறவினர்களையும் கண்டு, அதிக இரக்கமும், தயவும் கொண்டு துயரடைந்தவனுய்ப் பின்வருமாறு கூறினுன். (கிருஷ்ணனை நோக்கி).

अर्जुन उवाच (அர்ஜுனன் சொன்னான்)

दृष्ट्वेमं स्वजनं कृष्ण युयुत्सुं समुपस्थितम् ॥ २८
सीदन्ति मम गात्राणि मुखं च परिशुष्यति ।
वेपथुश्च शरीरे मे रोमहर्षश्च जायते ॥ २९
गाण्डीवं स्रंसते हस्तात्त्वक्चैव परिदह्यते ।
न च शक्नोम्यवस्थातुं भ्रमतीव च मे मनः ॥ ३०
निमित्तानि च पश्यामि विपरीतानि केशव ।

[த்ருஷ்ட்வேமம் ஸ்வஜனம் க்ருஷ்ண யுயுத்ஸும்
ஸமுபஸ்திதம் ||
ஸீதந்தி மம காத்ராணி முகம் ச பரிசுஷ்யதி |
வேபதுஸ்ச சரீரே மே ரோமஹர்ஷஸ்ச ஜாயதே ||
காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத்த்வக்சைவ
பரிதஹ்யதே |
ந ச சக்னோம்யவஸ்தாதும் ப்ரமதீவ ச மே மன: ||
நிமித்தானி ச பச்யாமி விபரீதானி கேசவ |]

"ஓ கிருஷ்ண! போரிடும் ஆசையுடன் வந்துள்ள இவ் வுறவினர்களைப் பார்த்து என்னுடைய அவயவங்கள் சோர்வுறுகின்றன. வாய் வறட்சி யடைகிறது. என் உடலில் நடுக்கமும், மயிர்க்கூச்சலும் உண்டாகின்றன. காண்டீவம் (வில்) கையிலிருந்து நழுவுகிறது. எனது மேல்தோல் எரிச்சலிடுகிறது. இரதத்தின்மீது இருக்கச் சக்தியற்றவனாக உள்ளேன். என் மனம் சுழலுகின்றது. ஓ கேசவனே! கெட்ட சகுனங்களையும் காண்கிறேன்."

न च श्रेयोऽनुपश्यामि हत्वा स्वजनमाहवे ॥ ३१

न काङ्क्षे विजयं कृष्ण न च राज्यं सुखानि च ।
किं नो राज्येन गोविन्द किं भोगैर्जीवितेन वा ॥ ३२

येषामर्थे काङ्क्षितं नो राज्यं भोगाः सुखानि च ।
त इमे अवस्थिता युद्धे प्राणांस्त्यक्त्वा धनानि च ॥ ३३

आचार्याः पितरः पुत्राः तथैव च पितामहाः ।
मातुलाः श्वशुराः पौत्राः श्यालाः संबन्धिनस्तथा ॥ ३४

[ந ச ச்ரயோஅனுபச்யாமி ஹத்வா ஸ்வஜன-
மாஹவே ||

ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண ந ச ராஜ்யம் ஸுகானி ச |
கிம் நோ ராஜ்யேன கோவிந்த கிம் போகைர்ஜீவிதேன
வா ||

யேஷாமர்த்தே காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போகா:
ஸுகானி ச |
த இமே அவஸ்திதா யுத்தே ப்ராணும்ஸ்த்யக்த்வா
தனுனி ச ||

ஆசார்யா: பிதர: புத்ரா: ததைவ ச பிதாமஹா: |
மாதுலா: ச்வசுரா: பௌத்ரா: ச்யாலா: ஸம்பந்தின-
ஸ்ததா ||]

"போரில் உறவினர்களைக் கொன்றபின் யாதொரு ச்ரேயஸையும் (நற்பயனை) நான் காண்கிறதில்லை. ஹே கிருஷ்ணு! வெற்றியையோ, இராஜ்யத்தையோ நான் விரும்புகிறதாகயில்லை. கோவிந்தா! எங்களுக்கு இராஜ்யத்தினுலோ, சுகபோகங்களாலோ, உயிர்வாழ்வதாலோ யாது பிரயோஜனம்? எவரின் பொருட்டு

இராஜ்யமும், இன்பங்களையனுபவிப்பதும், ஸுகங்களும் விரும்பத்தக்கவைகளோ, அத்தகையவர்களான ஆசிரியர்கள், தகப்பன்மார், மகன்கள், அதுபோலவே மாமன்மார், மாமனார்கள், பேரன்கள், மைத்துனர்கள், ஸம்பந்திகள் (பெண் கொடுத்தவர், பெண்ணை தங்களது குடும்பத்தில் ஏற்றுக்கொண்டவர்) ஆகிய இவர்களனைவரும் உயிரையும், பொருளையும் விட்டு விடத் துணிந்து இந்த யுத்தகளத்தில் நிற்கின்றனரே!

एतान्न हन्तुमिच्छामि घ्नतोऽपि मधुसूदन ।
अपि त्रैलोक्यराज्यस्य हेतोः किं नु महीकृते ॥ ३५

[ஏதான்ன ஹந்துமிச்சாமி க்னதோऽபி மதுஸூதன[1]।
அபித்ரைலோக்யராஜ்யஸ்ய ஹேதோ: கிம் நு
மஹீக்ருதே ॥]

ஓ! மதுஸூதன! என்னைக் கொன்றுவிடுபவர்களாக இருந்தபோதிலும், மூவுலகின் அரசுப்பதவியின் இலாபம் கிடைக்குமாயினும்கூட, இவர்களைக் கொல்வதை நான் விரும்பவில்லை. இந்த பூமிக்காக என்ன? (இந்த அற்பமான இராஜ்யத்தின் பொருட்டா நான் இவர்களைக் கொல்ல விரும்புவேன்?)

निहत्य धार्तराष्ट्रान् नः का प्रीतिः स्याज्जनार्दन ।
पापमेवाश्रयेदस्मान् हत्वैतानाततायिनः ॥ ३६

[நிஹத்ய தார்தராஷ்ட்ரான் ந: கா ப்ரீதி: ஸ்யாஜ்-
ஜனார்த்தன[2] ।
பாபமேவாச்ரயேதஸ்மான் ஹத்வைதாநாததாயின:]॥

---

[1] மது என்ற அரக்கனைக் கொன்றவன் —(சங்கரரின் விஷ்ணுஸஹஸ்ரநாம பாஷ்யம்).

[2] கெட்டவர்களைக் களைவதாலும், இம்மையிலும்

ஓ! ஜனார்த்தனா! திருதராஷ்ட்ரனின் மகன்களைக் கொன்றால் எங்களுக்கென்ன மகிழ்ச்சி ஏற்படப் போகிறது. ஆததாயிகளானாலும்[1] (அறு வகை மாபாபங்கள் செய்தவரானாலும்) இவர்களைக் கொல்வதால் எங்களுக்குப் பாபமே வந்தடையும்.

तस्मान्नार्हा वयं हन्तुं धार्तराष्ट्रान् सबान्धवान् ।
स्वजनं हि कथं हत्वा सुखिनः स्याम माधव ॥ ३७

[தஸ்மான்னார்ஹா வயம் ஹந்தும் தார்தராஷ்ட்ரான்
ஸபாந்தவான் |

மறுமையிலும் ஸௌக்யங்களைக் கொடுக்கும் ஜனங்களால் வேண்டப்படுகிறவனானதாலும் ஜனார்த்தனன் எனப்பெயர் ஏற்பட்டது —(விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்).

[1] வீட்டிற்கு நெருப்பு வைத்தவன், உணவில் விஷங்கலந்தவன், ஆயுதத்தினால் கொல்ல முயல்பவன், பொருளைக் கவர்ந்தவன், பூமியை அபகரித்தவன், மனைவியைக் கவர்ந்தவன், இவ்வாறு பேர்களும் ‘ஆததாயிகள்’ எனப்படுவர். எதிர்ப்பட்ட ‘ஆததாயிகளை’ விசாரிக்காமலே கொல்லவேண்டியது. அவர்களைக் கொல்வதால் கொன்றவனுக்கு யாதொரு மாசும் ஏற்படாது —(ஸ்ரீதரர்).

[குறிப்பு:—பாண்டவர்களுக்கு மேற்கண்ட ஆறு வகைத் தீமைகளையும் துர்யோதனன் முதலானோர் செய்தனர் — மஹாபாரதம் ஆதிபர்வம் 128, 148-ஆவது அத்யாயங்கள், ஸபா பர்வம் 76-ஆவது அத்யாயமும் பார்க்க].

ஸ்வஜனம் ஹி கதம் ஹத்வா ஸுகின: ஸ்யாம
மாதவ ||]

ஹே மாதவா! ஆகவே உறவினருடன் கூடிய திருதராஷ்ட்ரன் மகன்களைக் கொல்ல நாங்கள் தகுதியற்றவர்கள். உறவினர்களைக் (நம்முடைய பந்துக்களை) கொன்று எவ்வாறு சுகத்தைப் பெற்றவர்களாகுவோம்.

यद्यप्येते न पश्यन्ति लोभोपहतचेतसः ।
कुलक्षयकृतं दोषं मित्रद्रोहे च पातकम् ॥ ३८

कथं न ज्ञेयमस्माभिः पापादस्मान्निवर्तितुम् ।
कुलक्षयकृतं दोषं प्रपश्यद्भिर्जनार्दन ॥ ३९

[யத்யப்யேதே ந பச்யந்தி லோபோபஹதசேதஸ:|
குலக்ஷயக்ருதம் தோஷம் மித்ரத்ரோஹே ச பாதகம்||
கதம் ந ஜ்ஞேயமஸ்மாபி: பாபாதஸ்மாந்நிவர்த்திதும்|
குலக்ஷயக்ருதம் தோஷம் ப்ரபச்யத்பிர்ஜனார்த்தன||]

ஜனார்த்தன! இராஜ்ய ஆசையினால் விவேகமற்றுப்போன மனமுடைய துர்யோதனன் முதலியோர், குலநாசத்தினாலுண்டாகும் பாவத்தையும், நட்புறவுக்குக் கேடு செய்வதாலேற்படும் தீவினையையும் அறிந்துகொள்ளாது போயினும், குலநாசத்தாலேற்படக்கூடிய பாவத்தை அறிந்துள்ள எங்களால், இந்தக் கொடிய பாவத்திலிருந்து எங்களை விடுவித்துக் கொள்ளும்பொருட்டு எப்படித் தெரிந்துகொள்ளாது போகக்கூடும்?

कुलक्षये प्रणश्यन्ति कुलधर्माः सनातनाः ।
धर्मे नष्टे कुलं कृत्स्नम् अधर्मोऽभिभवत्युत ॥ ४०

अधर्माभिभवात् कृष्ण प्रदुष्यन्ति कुलस्त्रियः ।
स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसङ्करः ॥ ४१

सङ्करो नरकायैव कुलघ्नानां कुलस्य च ।
पतन्ति पितरो ह्येषां लुप्तपिण्डोदकक्रियाः ॥ ४२

दोषैरेतैः कुलघ्नानां वर्णसङ्करकारकैः ।
उत्साद्यन्ते जातिधर्माः कुलधर्माश्च शाश्वताः ॥ ४३

उत्सन्नकुलधर्माणां मनुष्याणां जनार्दन ।
नरके नियतं वासो भवतीत्यनुशुश्रुम ॥ ४४

[குலக்ஷயே ப்ரணச்யந்தி குலதர்மா: ஸநாதநா: |
தர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ்னம் அதர்மோ-
அபிபவத்யுத ||

அதர்மாபிபவாத் க்ருஷ்ண ப்ரதுஷ்யந்தி குலஸ்த்ரிய: |
ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே
வர்ணஸங்கர: ||

ஸங்கரோ நரகாயைவ குலக்னானாம் குலஸ்ய ச |
பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்தபிண்டோதக-
க்ரியா: ||

தோஷைரேதை: குலக்னானாம் வர்ணஸங்கரகாரகை: |
உத்ஸாத்யந்தே ஜாதிதர்மா: குலதர்மாஸ்ச
சாச்வதா: ||

உத்ஸன்னகுலதர்மாணாம் மனுஷ்யாணாம் ஜனார்த்தன |
நரகே நியதம் வாஸோ பவதீத்யனுசுச்ரும ||]

குலநாசத்தால் அனுதியாகவுள்ள குலத்தைப் பற்றிய ஒழுக்கங்கள் அழியும். ஒழுக்கம் அழிந்தால் குலம் முழுவதும் அதர்மம் (அனுசாரம்) வ்யாபிக்கும். ஓ! க்ருஷ்ணு! அதர்மத்தின் பரவுதலால் குலஸ்த்ரீகள் பழிப்படைவார்கள். பெண்கள் பழிப்படையின் (கெட்டவர்களானுல்) ஜாதிக்கலப்பு ஏற்படும். ஓ! * வார்ஷ்ணேயா! (க்ருஷ்ணு!) ஜாதிக்கலப்பு குலநாசம் செய்தோரையும், குலத்தையும் நரகம் எய்தவே வழிசெய்யும். குலத்திற்குக் கேடு விளைவித்தவர்களின் பித்ருக்கள் (இறந்த முன்னேர்) அவர்களுக்காக அத்தகைய குடும்பத்தினரால் செய்யப்படும் சிராத்த தர்ப்பணங்களால் செய்யப்படும் க்ரியைகளாலுண்டாகும் பயனை இழந்து நரகத்தில் விழுவார்கள் (தள்ளப்படுவார்கள்). ஜாதிக்கலப்பு உண்டாகும்படி செய்து குலத்தைக் கெடுத்தவர்களின் இத்தகைய தீச்செயல்களால் (பாபங்களால்) தொன்றுதொட்டு வரும் ஜாதியாசாரங்களும் குலதர்மங்களும் அழிந்துபோம். ஜனுர்த்தனு! குலாசாரங்களை யிழந்த மனிதர்களுக்கு நரகத்தில் எப்போதும் வசிக்க நேரிடுமென்று கேட்டுள்ளோம்.

अहो बत महत् पापं कर्तुं व्यवसिता वयम् ।
यद्राज्यसुखलोभेन हन्तुं स्वजनमुद्यताः ॥ ४५

[அஹோ பத மஹத் பாபம் கர்த்தும் வ்யவஸிதா வயம் |
யத்ராஜ்யஸுகலோபேன ஹந்தும் ஸ்வஜன-முத்யதா: ||]

---

* வஸுதேவருடைய குலமாகிய வ்ருஷ்ணி குலத்தில் அவதரித்ததால் க்ருஷ்ணனுக்கு வார்ஷ்ணேயன் என்ற பெயர் ஏற்பட்டது.

எக்காரணத்தினுல் நாம் ராஜ்யம், ஸுகம் முதலியவற்றிலுள்ள விருப்பங்களால் உறவினர்களைக் கொல்லத் துணிந்தோமோ, அக்காரணத்தினுலேயே மாபாவத்தைச் செய்ய நிச்சயித்தோம். இதென்ன ஆச்சர்யம்! என்ன பெரும் துன்பம் (கஷ்டம்)!

यदि मामप्रतीकारम् अशस्त्रं शस्त्रपाणयः ।
धार्तराष्ट्रा रणे हन्युः तन्मे क्षेमतरं भवेत् ॥ ४६

[யதி மாமப்ரதீகாரம் அசஸ்த்ரம் சஸ்த்ரபாணய: |
தார்தராஷ்ட்ரா ரணே ஹன்யு: தன்மே க்ஷேமதரம் பவேத் ||]

ஆயுதங்களைத் தாங்கியுள்ள திருதராஷ்ட்ரனின் மகன்கள் ஆயுதமில்லாமலும், அவர்களை எதிர்க்காமலும் இருக்கிற என்னைக் கொல்வார்களானுல் அது எனக்கு அதிக நலனையே பயக்கும் (க்ஷேமமாகும்).

सञ्जय उवाच (ஸஞ்ஜயன் சொன்னுன்)

एवमुक्त्वाऽर्जुनः सङ्ख्ये रथोपस्थ उपाविशत् ।
विसृज्य सशरं चापं शोकसंविग्नमानसः ॥ ४७

[ஏவமுக்த்வார்ஜுன: ஸங்க்யே ரதோபஸ்த உபாவிசத் |
விஸ்ருஜ்ய ஸசரம் சாபம் சோகஸம்விக்னமானஸ: ||]

இவ்விதமாகக் (மேலே ச்லோகங்கள் 28 முதல் 46 முடியக் கூறப்பட்டபடி) கூறியபின், துக்கத்தினுல் துடிக்கும் மனத்தைக்கொண்ட அர்ஜுனன், அம்புடன்கூடிய வில்லை யெறிந்துவிட்டு, போர்க்களத்தின்கண் (நடுவே) நிற்கும் தேரில் உட்கார்ந்தான்.

அர்ஜுனவிஷாதயோகம் என்கிற முதலத்யாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்யாயம்

ஸாங்க்யயோகம்

सञ्जय उवाच (ஸஞ்ஜயன் சொன்னான்)

तं तथा कृपयाऽऽविष्टमश्रुपूर्णाकुलेक्षणम् ।
विषीदन्तमिदं वाक्यमुवाच मधुसूदनः ॥ १

[தம் ததா க்ருபயாஆவிஷ்டமச்ருபூர்ணாகுலே-க்ஷணம் ।
விஷீதந்தமிதம் வாக்யமுவாச மதுஸூதன: ॥]

தயவுடன் கூடியிருக்கிறவனும், துக்கத்துடன் கூடியிருக்கிறவனும், கண்ணீர் பெருகும் கண்களை யுடையவனுமான அர்ஜுனனைப் பார்த்து மதுஸூதனன் (கண்ணன்) பின்வருமாறு கூறினான் என்று திருதராஷ்ட்ரனுக்கு ஸஞ்ஜயன் சொன்னான்.

श्रीभगवानुवाच (பகவான் க்ருஷ்ணன் சொன்னான்)

कुतस्त्वा कश्मलमिदं विषमे समुपस्थितम् ।
अनार्यजुष्टमस्वर्ग्यमकीर्तिकरमर्जुन ॥ २

[குதஸ்த்வா கச்மலமிதம் விஷமே ஸமுபஸ்திதம் ।
அனார்யஜுஷ்டமஸ்வர்க்யமகீர்த்திகரமர்ஜுன ॥]

அர்ஜுனா! அறிவிலிகளுக்கு (அஞ்ஞானிகளுக்கு) உண்டாகக்கூடியதும், பரலோகத்திற்குக் கெடுதியானதும், கீர்த்திக்குக் (புகழுக்கு) கேடுண்டாக்கவல்லதுமான இக்குழப்பம் எக்காரணத்தால் காலம் தவறி (அகாலத்தில், இந்தப் போர் செய்யவேண்டிய காலத்தில்) உனக்குண்டாயிற்று?

क्लैब्यं मा स्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते ।
क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परन्तप ॥ ३

[க்லைப்யம் மா ஸ்ம கம: பார்த்த நைதத்த்வய்யுப-
பத்யதே ।
க்ஷுத்ரம் ஹ்ருதயதௌர்பல்யம் த்யக்த்வோத்திஷ்ட
பரந்தப ॥]

ஹே பார்த்த (அர்ஜுன)! பயமடையாதே. இது உனக்குத்தகுதியற்றது. இழிவான மன அதைர்யத்தை கைவிடு. எதிரிகளை வெல்லும் சக்தியுடையவனே எழு!

अर्जुन उवाच (அர்ஜுனன் சொல்கிறான்)

कथं भीष्ममहं सङ्ख्ये द्रोणं च मधुसूदन ।
इषुभिः प्रतियोत्स्यामि पूजार्हावरिसूदन ॥ ४

[கதம் பீஷ்மமஹம் ஸங்க்யே த்ரோணம் ச
மதுஸூதன ।
இஷுபி: ப்ரதியோத்ஸ்யாமி பூஜார்ஹாவரிஸூதன ॥]

பகைவரைக் கொல்லும் மதுஸூதனா! பூஜிக்கத் தக்கவர்களான பீஷ்மரையும், துரோணரையும், போரில் எதிர்த்து, அம்புகளை ஏவி எப்படிப் போரிடுவேன்?

गुरूनहत्वा हि महानुभावान्
श्रेयो भोक्तुं भैक्ष्यमपीह लोके ।
हत्वाऽर्थकामांस्तु गुरूनिहैव
भुञ्जीय भोगान्रुधिरप्रदिग्धान् ॥ ५

[குரூனஹத்வா ஹி மஹானுபாவான்
ச்ரேயோ போக்தும் பைக்ஷ்யமபீஹ லோகே ।

ஹத்வார்த்தகாமாம்ஸ்து குரூனிஹைவ
புஞ்ஜீய போகான்ருதிரப்ரதிக்தான் ‖]

மிகவும் மாக்ஷிமைதங்கிய ஆசிரியர்களைக் கொல்லாது (கொல்வதைப் பார்க்கிலும்) பிச்சையெடுத்துண்பதே இவ்வுலகில் மேலானதாகும். அல்லாது அவர்களைக் கொன்று இவ்வுலகத்தில் நான் அடையும் போகங்கள் அனைத்தும் இரத்தத்தில் (குருக்களின்) ஊறியதாகும். (இரத்தக் கரை படிந்த சுகங்களேயாகும்.) [இரத்தத்திலூறிய உணவுப்பொருள்கள் எப்படி உண்ணத்தக்கவையன்றோ அப்படியே குரு முதலிய பெரியோர்களைக் கொன்று, அதனுல் கிடைக்கக்கூடிய இராஜ்ய சுகங்களை அடைவது தவறு எனக் கருத்து.]

न चैतद्विद्मः कतरन्नो गरीयो
यद्वा जयेम यदि वा नो जयेयुः ।
यानेव हत्वा न जिजीविषामः
तेऽवस्थिताः प्रमुखे धार्तराष्ट्राः ॥ ६

[ந சைதத்வித்ம: கதரன்னோ கரீயோ
யத்வா ஜயேம யதி வா நோ ஜயேயு: |
யானேவ ஹத்வா ந ஜிஜீவிஷாம:
தே அவஸ்திதா: ப்ரமுகே தார்தராஷ்ட்ரா: ‖]

துர்யோதனன் முதலானவரை நாம் வெல்லுவோமோ, அல்லது துர்யோதனுதியர் எங்களை ஜயிப்பார்களோ, இவ்விரண்டில் எது உயர்ந்தது (சிலாக்யமானது) என்பதை அறியோம். எவர்களைக் கொன்று உயிர்வாழ விரும்போமோ அவர்களே

எதிரே நிற்கின்றனர். [நெருங்கிய உறவினரைக் கொன்று பின் எஞ்சிய சிலருடன் வாழ்ந்து இராஜ்யம், சுகபோகங்களை அனுபவிப்பது விரும்பத்தக்கதல்ல, அத்தகைய சூழ்நிலையில் வாழ விருப்பமில்லை என்பது கருத்து.]

कार्पण्यदोषोपहतस्वभावः
पृच्छामि त्वां धर्मसम्मूढचेताः ।
यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे
शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम् ॥ ७

[கார்ப்பண்யதோஷோபஹதஸ்வபாவ:
ப்ருச்சாமி த்வாம் தர்மஸம்மூடசேதா: |
யச்ரேய: ஸ்யான்நிஸ்சிதம் ப்ரூஹி தன்மே
சிஷ்யஸ்தே அஹம் சாதி மாம் த்வாம் ப்ரபன்னம் ||]

இரக்கத்தினல் இயற்கையான தன்மையை இழந்தவனும், (மனோதைர்யத்தை இழந்தவனாய்) கடமையை (தர்மத்தை) ச்செய்வதில் குழப்பமடைந்தவனும் இருக்கிற நான், எது எனக்கு நல்லதென்பதை நிச்சயமாகக் கூறும்படி கேட்கிறேன். நான் உம்முடைய சீடன். உம்மையே சரணமடைந்த என்னைத் தெளிவடையச் செய்யும்.

न हि प्रपश्यामि ममापनुद्यात्
यच्छोकमुच्छोषणमिन्द्रियाणाम् ।
अवाप्य भूमावसपत्नमृद्धं
राज्यं सुराणामपि चाधिपत्यम् ॥ ८

[ந ஹி ப்ரபச்யாமி மமாபனுத்யாத்
யச்சோகமுச்சோஷணமிந்த்ரியாணும்।
அவாப்ய பூமாவஸ்பத்னம்ருத்தம்
ராஜ்யம் ஸுராணுமபி சாதிபத்யம்॥]

இவ்வுலகில் நிகரற்ற செல்வத்தில் வளர்ச்சியடைந்துள்ள இராஜ்யத்தையும், தேவலோகத்தின் அதிபனுன இந்திரனின் பதவியையும் அடைந்தபோதிலும், இந்திரியங்களுக்கு (புலன்களுக்கு) வரட்சியைக் கொடுக்கும் என்னுடைய துயரத்தைப் போக்கக் கூடியதை நான் காணவில்லை.

सञ्जय उवाच (ஸஞ்ஜயன் சொன்னுன்)

एवमुक्त्वा हृषीकेशं गुडाकेशः परन्तपः ।
न योत्स्य इति गोविन्दं उक्त्वा तूष्णीं बभूव ह ॥ ९

[ஏவமுக்த்வா ஹ்ருஷீகேசம் குடாகேச: பரந்தப:।
ந யோத்ஸ்ய இதி கோவிந்தம் உக்த்வா தூஷ்ணீம்
பபூவ ஹ॥]

குடாகேசன் (தூக்கத்தை ஜயித்தவன்) எனும் எதிரிகளுக்கு பயத்தை உண்டுபண்ணக்கூடிய அர்ஜுனன் இப்படியாக (முன் ச்லோகங்களில் உள்ளபடி) க்ருஷ்ணனைப் பார்த்துக் கூறியபின், மறுபடி 'நான் போர் செய்யப்போவதில்லை' என்று சொல்லி மௌனமாயிருந்தான். [இந்த ச்லோகத்தின் கடைசியில், 'ஹ' (ह) என்ற பதம் சேர்க்கப்பட்டிருப்பதிலிருந்து அதிகபலமும் மனுேவலிமையும் கொண்ட அர்ஜுனன் அதைர்யமடைந்ததைப் பார்த்து ஸஞ்ஜயன் ஆச்சர்யமடைந்ததைக் குறிப்பிடுவதாகக் கொள்ளவேண்டுமென்று ஸ்ரீ இராகவேந்த்ரஸ்வாமிகளின் கீதாவ்ருத்தியில் காணப்படுகிறது].

तमुवाच हृषीकेशः प्रहसन्निव भारत ।
सेनयोरुभयोर्मध्ये विषीदन्तमिदं वचः ॥ १०

*[தமுவாச ஹ்ருஷீகேச: ப்ரஹஸன்னிவ பாரத ।
ஸேனயோருபயோர்மத்யே விஷீதந்தமிதம் வச: ॥]*

ஹே த்ருதராஷ்ட்ர மன்னனே! இரு படைகளி டையே துக்கத்தையடைந்திருக்கும் அர்ஜுனனை நோக்கி க்ருஷ்ணன் புன்சிரிப்புக் கொண்டவனைப் போல் பின்வரும் வாக்யத்தைச் சொன்னார். (இப்படி ஸஞ்ஜயன் த்ருதராஷ்ட்ரனை நோக்கிச் சொன்னான்.)

श्री भगवानुवाच *(பகவான் க்ருஷ்ணன் சொல்கிறார்)*

अशोच्यानन्वशोचस्त्वं प्रज्ञावादांश्च भाषसे ।
गतासूनगतासूंश्च नानुशोचन्ति पण्डिताः ॥ ११

*[அசோச்யானன்வசோசஸ்த்வம் ப்ரஞாவாதாம்ஸ்ச பாஷஸே ।
கதாஸூனகதாஸூம்ச நானுசோசந்தி பண்டிதா: ॥]*

"அர்ஜுன! நீ துக்கப்படத்தகாதவர்களைக் குறித் துத் துக்கப்படுகிறாய். ஆயினும் அறிவுபடைத்த விவேகிகளின் சொற்களைப் போன்றவற்றையும் கூறு கிறாய். இறந்தவர்களைக்குறித்தும், உயிர்வாழ்பவர் களைக்குறித்தும் அறிவாளிகள் (ஞானிகள்) வருந்த மாட்டார்கள்"

[இந்த ச்லோகத்தில் 'ப்ரஞாவாதாம்ஸ்ச' என்ற சொல்லிற்கு மத்வாசார்யர் "உன் புத்திக்குத் தோன்

றிய வார்த்தைகளை" என்று பொருள் கூறியுள்ளார். கீதாவ்ருத்தியில், "ஞானிகள் சொல்லக்கூடாத வார்த்தைகளை" என்றும், ராமானுஜாசார்யர், "தேகமே ஆத்மாவென்ற புத்தியுடையவன் பேசும் வார்த்தைகளை" என்றும் பொருள் கூறியுள்ளனர். ஆயினும் இந்த ச்லோகத்தின் கருத்தில் மதத்ரய பாஷ்யக்காரர்களுக்குள்ளும், பிற வ்யாக்யானக்காரர்களிடையேயும் விசேஷமான வேறுபாடில்லை. பேதமற்ற கருத்து யாதெனில் 'ஆத்மா அழிவற்றது. உடல் நிலையற்றது. உயிருடனிருப்பவனைப்பற்றி துக்கப்படுவது எப்படி ஸ்வபாவமல்லவோ அதேபோல் இறந்தவனைக் குறித்து விசனப்படுவது ஆத்ம விவேக ஞானமுள்ளவனுக்கு ஸ்வபாவமல்ல,' என்பதே கருத்து.]

न त्वेवाहं जातु नासं न त्वं नेमे जनाधिपाः ।
न चैव न भविष्यामः सर्वे वयमतः परम् ॥ १२

[ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜனாதிபா: |
ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம் ||]

"நானும், நீயும் இப் போர்க்களத்தேயுள்ள அரசர்களும், நாம் யாவரும் ஒருக்காலத்திலுமே இல்லாமலிருக்கவில்லை. பின்னர் (தேகமழிந்தபின்னர்) இல்லாமல் போய்விடுவோமென்பதுமில்லை." [இந்த ச்லோகத்தின் பொருளை ஸ்ரீ சங்கர பாஷ்யத்தையும் ஸ்ரீதர வ்யாக்யானத்தையும் ஒட்டியும், ஸ்ரீ ராமானுஜபாஷ்யத்தின்படியும், கீதாவ்ருத்தி தாத்பர்யத்தின் சுருக்கத்தையொட்டியும் கீழே விவரமாகத் தரப்பட்டுள்ளது.]

ஸ்ரீ சங்கரபாஷ்யம், ஸ்ரீதர வ்யாக்யானம் :— இந்த ச்லோகத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள பன்மைச்சொற்கள் தேகத்தை (உடலை)ப்பற்றினவேயன்றி ஆத்மாவுக்குச் சம்பந்தமானவையல்ல. பல உடல்களிலும் உள்ள ஆத்மாவொன்றே.

ஸ்ரீ ராமானுஜபாஷ்யம் :—

अहं (அஹம்)=ஸர்வேச்வரனாகிய நான் जातु (ஜாது)=அனாதிகாலம் முதலிதுவரை, எல்லாக்காலங்களிலும் नासमिति न (நாஸமிதி ந)=இருக்கவில்லை என்பதில்லை. त्वं-इमे-जनाधिपाः (த்வம்-இமே-ஜனாதிபா:)=நீ முதலிய இந்த எல்லா அரசர்களும் (என் ஆக்ஞைக்குட்பட்டு நடக்கப்பட்ட எல்லா உயிர்களும்) नासन्निति न (நாஸந்நிதி ந)= இருக்கவில்லையென்பதுமில்லை (எப்போதுமிருக்கிறோம்). ஸர்வேச்வரனாகிய நான் (க்ருஷ்ணன்) எப்படி நித்யனென்பதற்குச் சந்தேகமில்லையோ அதேபோல் ஜீவாத்மாக்களாகிய நீங்களும் நித்யமானவர்களென்றறிய வேண்டியது.

இப்படியானால் பரமாத்மாவான ஸர்வேச்வரனிடத்திலிருந்து ஜீவாத்மாக்களிலொவ்வொருவருக்கும் பரஸ்பரபேதம் வாஸ்தவமென்று ஸ்ரீ க்ருஷ்ண பகவானாலேயே சொல்லப்பட்டதாகக் காணப்படுகிறது. போகத்தில் மூழ்கியுள்ள அர்ஜுனனுக்கு ஆத்மஸ்வரூப நிச்சயதத்வத்தை உபதேசிக்கும்இந்தத் தருணத்தில் நீ, நான், இந்த ராஜாக்கள் என்றும், நாமெல்லோருமென்றும் பகவான் சொல்லியிருப்பதனாலேயே இவ்வித பேதமானது உண்மையாகத்தானிருக்க வேண்டும். “இந்த ஆத்மபேதம் பொய் உபாதியி

னுல் கற்பிக்கப்பட்டது," என்று கொண்டால், ஆத்ம தத்வம் உபதேசிக்கப்படும் காலத்தில் பகவான் பொய்யான பேத ஞானத்தை உபதேசிப்பது அஸம்பாவிதமாகவுள்ளது. மேலும், "नित्यो नित्यानां चेतनश्चेतनानां एको बहूनां यो विदधाति कामान् ।" (நித்யோ நித்யானும் சேதனஸ் சேதனுனும் ஏகோ பஹூனும் யோ விததாதி காமான்)=நித்யனுயும் (அழிவற்றவன்) சேதனனுயும், ஒருவனுயுமிருக்கிற எந்த பகவான் நித்யர்களாயும் (அழிவற்றவர்கள்) அநேகர்களாயும் சேதனர்களாயுமுள்ள ஜீவர்களுக்கு அவரவர்களின் இஷ்டங்களைக் கொடுக்கிருரோ என்ற ச்ருதிவாக்யத்தினுல் (வேதம்) இத்தகைய வேறுபாடு எப்போதுமுள்ளதென்பது வெளியாகிறது. ஜீவேச்வரபேதம் அறியாமையினுல் உண்டாகியது என்ருல் ஸர்வேச்வரனுகவும், சுத்த நித்ய ஸ்வரூபனுகவும், ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தினுலேயே அஞ்ஞானம், அஞ்ஞானத்தினுலுண்டாகும் கார்யமிவையாவு மற்றவனுகக் காணும் பகவான் க்ருஷ்ணனுக்கு 'நீ-நான்-அவர்' என்கிற பேத ஞானம், இத்தகைய தத்வோபதேச காலத்தில் இருக்கக்கூடாது. பகவானுக்கு அஞ்ஞானமும், அதனுல் ஏற்படும் கார்யமும் இல்லாவிடினும், தீப்பட்டு வெந்துபோன துணி, பிறகு உபயோகமற்றுப் போனுலும், வெளிப்பார்வைக்குத் துணி போல் காணப்படுவதுபோல், அஞ்ஞானம், அதன் கார்யங்கள் ஆகியவற்றின் வாஸனையால் பகவான் இப்படி உபதேசித்தான் என்று கூறுவதும் அஸம்பாவிதமே. பரமாத்மாவான க்ருஷ்ணனுக்கு அஞ்ஞானம், அதனுல் ஏற்படும் கார்யம், அவைகளின் வாஸனை இவையாவும் எப்பொழுதும் கிடையாது.

ஆகவே க்ருஷ்ணன் தன்னைத் தவிற வேறு வஸ்த்துக்களொன்றுமில்லை என்பதும், இப்போது காணப்படுவதாகவும், இருப்பதாகவும் சொல்வது அறியாமையினுல் கற்பிக்கப்படுவதென்பதும், உண்மையானுல், அர்ஜுனனுக்கு தத்வோபதேசம் செய்யும் காலத்தில், அபேதத்தை (ஜீவப்ருஹ்ம வேற்றுமையை)ச் சொல்லாது, 'நீ–நான்–அவன்' என்கிற வேறுபாடுகளைப் பற்றிச் சொன்னுரென்பது மேலும் அஸம்பாவிதமாகவுள்ளது. அஞ்ஞானமும், அதனுலேற்படும் கார்யங்களுமற்ற பகவானிடம், அவைகளின் வாஸனை மட்டும் வெந்துபோன துணி போல் இருக்குமென்பதும் சரியல்ல. பகவான் ஸர்வஞ்ஞன், ஞானஸ்வரூபி, மாயைக்கப்பாற்பட்டவன் என்று ச்ருதிப்ரமாணங்களில் சொல்லப்பட்டிருப்பதால் க்ருஷ்ணனுக்கு அஞ்ஞானமிருந்ததென்று சொல்ல இடமில்லை. தன்னைத் தவிர வேறு வஸ்துவே இல்லையென்று பகவான் எண்ணியிருப்பாரானுல், தன்னுடைய ப்ரதிபிம்பத்தை யொத்த அர்ஜுனனுக்கு உபதேசிப்பதெப்படி? ஒரு கண்ணுடியில் காணப்படும் தன்னுடைய உருவமான ப்ரதிபிம்பம், தன்னுடையதே, வேறல்ல என்ற நிச்சயபுத்தியுடையவன், கண்ணுடியில் காணப்படும் ப்ரதிபிம்பத்திற்கு உபதேசித்தான் எனச் சொல்லக்கூடுமோ? பகவான் வேறு, அர்ஜுனன் வேறு அல்ல என்று கொள்ளும்போது, ஞானுநந்த ஸ்வரூபியான பகவான் உபதேசஞ் செய்யக் காரணமே இல்லை. அர்ஜுனனைப்போல் பகவானும் அஞ்ஞானி என்ருல், ஒரு அஞ்ஞானிக்கு மற்ரெரு அஞ்ஞானி உபதேசிப்பது அர்த்தமற்றது,

பிரயோஜனமற்றது. ஆகையால் உபதேசிப்பதும், உபதேசம் பெறுவதும் வீணே! எனவே இந்த ச்லோகத்தின் கருத்து ஜீவேச்வர பேதத்தையே தெளிவாய் வெளிப்படுத்துகிறது.

கீதாவ்ருத்தியின் கருத்துச் சுருக்கம் :—

அர்ஜுனன் மோகத்தால் பந்துக்களை எப்படிக் கொல்வது என்று துயரமடைகிறான். அந்த துக்கத்தைப் போக்க தத்வோபதேசம் செய்யப்படுகிறது. நீ துக்கப்படுவது எதைப்பற்றி? தேஹத்தைப் பற்றியா? ஆத்மாவைப்பற்றியா? அல்லது தேஹமே ஆத்மாவென்ற கொள்கையினுலா? தேஹம் போகிறதே என்று துயரமடைந்தால், ("தேஹினோஸ்மின் யதாதேஹோ வாஸாம்ஸி ஜீர்ணனி யதாவிஹாய" என்ற கீதையிலுள்ள ச்லோகப்படி) ஓர் உடல் போகவும், மற்றொன்று வருகிறதாகவு மிருக்கிறபடியால், ஜடமாகிய உடல் ஒரு நாள் அழிவது நிச்சயம். நிச்சயமாக அழியக்கூடிய இயற்கையையுடைய உடல் நீ துக்கப்படுவதால் அழியாதிருக்குமா? ஆகையால் ஜடமான உடலைக் குறித்துத் துயரப்படக் காரணமில்லை. ஆத்மா போய்விடும் என்று துயரமடைகிறாயா? இந்த ச்லோகத்திலும், பின்வரும் பல ச்லோகங்களாலும், "நித்யோ நித்யானும்" என்ற ச்ருதி வாக்யத்தினுலும் பரமாத்மா எப்படி நித்யனோ (அழிவற்றவனோ) அப்படியே ஜீவனும் நித்யன் (அழிவற்றவன்) என்று சொல்லப்பட்டிருப்பதால், அழிவற்ற தன்மையுடைய ஆத்மாவைக் குறித்துத் துக்கப்படக் காரணமேயில்லை. பகவானுடைய கீதையில் பின்னர் வரும் சில ச்லோகங்களாலும், ச்ருதி வாக்யங்களாலும்

உடலையடைவதும், விடுவதும் ஜீவனுடைய கார்யமே. தேஹமும் ஜீவனும் ஒன்றென்று கொண்டால் உடல் போனால் ஜீவனும் அத்துடன் போய்விடவேண்டியதல்லவா? ஒரு தேஹத்தை விட்டு வேறு தேஹத்தையடைவது ஜீவனின் தொழிலெனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் தேஹமே ஆத்மாவல்ல. ஆகையால் அர்ஜுனன் துக்கிப்பதற்குக் காரணமில்லை என்பது கருத்து. இதனால் பகவானாகிய பரமாத்மாவைப் போலவே ஜீவனான ஜீவாத்மாவும், அநாதி, நித்யன், அழிவற்றவனென்று ஏற்படுகிறது.

देहिनोऽस्मिन्यथा देहे कौमारं यौवनं जरा ।
तथा देहान्तरप्राप्तिर्धीरस्तत्र न मुह्यति ॥ १३

[தேஹினோ அஸ்மின்யதா தேஹே கௌமாரம் யௌவனம் ஜரா ।
ததா தேஹாந்தரப்ராப்திர் தீரஸ்தத்ர ந முஹ்யதி ॥]

பூத உடலிலுள்ள ஜீவனுக்கு இவ்வுடலில் வாலிபமும், இளமையும் (யௌவனமும்), கிழத்தன்மையும் எப்படியோ (எப்படி ஒன்றின் பின் ஒன்றாக வந்துகொண்டிருக்கிறதோ) அப்படியே ஓர் உடல் (தேஹம்) போவதும் மற்றொரு தேஹம் வருவதாகவும் இருக்கிறது. இவ்விதமாக (உடல் நிலையற்றது என்றும், ஆத்மா தேஹமல்லவென்பதையும்) அறிந்துள்ள (அர்ஜுனனைப் போன்ற) ஞானிகள் மோகத்தை (கலக்கத்தை) அடைவதில்லை.

मात्रास्पर्शास्तु कौन्तेय शीतोष्णसमदुःखदाः ।
आगमापायिनोऽनित्याः तांस्तितिक्षस्व भारत ॥ १४

*[மாத்ராஸ்பர்சாஸ்து கௌந்தேய சீதோஷ்ண
ஸுமதுகதா: |
ஆகமாபாயினோ அநித்யா: தாம்ஸ்திதிக்ஷஸ்வ பாரத ||]*

குந்தியின் புதல்வனே! கண், செவி முதலிய புலன்கள் சப்தம் முதலிய விஷயங்களுடன் சேர்க்கை பெறுவதால், அந்தச் சேர்க்கையால் குளிர், உஷ்ணம், ஸுகம், துக்கம் ஆகியவை உண்டாகின்றன. பரத வம்சத்திலுதித்தவனான அர்ஜுனா! வருகிறதும், போகிறதுமானவையும், நிலையற்றவைகளாகவுமிருப்பதினாலே சீதோஷ்ணங்களையும் ஸுகம், துக்கம் ஆகியவைகளையும் பொறுத்துக்கொள்.

கீதாவ்ருத்தி :– இந்த்ரியங்களுக்கு (புலன்களுக்கு) விஷயங்களோடு ஸம்பந்தமானது ஸ்வபாவமாக (இயற்கையாக) சீதம், உஷ்ணம், சுக துக்கங்களை உண்டுபண்ணமாட்டா. ஆனால் விஷயங்களில் அபிமானத்தோடு கூடிய ஸம்பந்தம்தான் (சேர்க்கைதான்) சீதோஷ்ண ஸுகதுக்கங்களை உண்டுபண்ணுகிறது. ஆகையால் அத்தகைய அபிமானத்துடன் கூடிய விஷயேந்த்ரிய ஸம்பந்தத்தை (வெளி வஸ்துக்களுடன் புலன்களுக்குள்ள தொடர்பை) விட்டுவிடு.

கருத்து :— உதாரணமாகக் கண் ஒரு புலன். கண் சுத்தமான நீருள்ள ஒரு குளத்தையும், அதையடுத்துள்ள ஒரு அழகான தோட்டத்தையும் பார்த்து ஸந்தோஷத்தை (ஸுகத்தை) அடையும்.

இந்த ஸுகம் கண் ஜலம், தோட்டம் முதலிய வெளிப்படை விஷயங்களுடன் ஏற்பட்ட சேர்க்கையால் (ஸம்பந்தத்தால்) ஏற்படுகிறது. மற்ற புலன்களால் ஏற்படக்கூடிய ஸுகமும் இப்படியே. இந்த ச்லோகத்தினுல் குறிக்கப்படும் கருத்து என்னவெனில் ஸுகம், துக்கம் போன்றவை ஆத்மாவுக்குக் கிடையாது. இவை புலன்களுடன் ஒட்டியவை. ஆத்மாவாகிய உனக்கு ஸம்பந்தமில்லாத ஸுக துக்கங்களை நீ ஏன் இப்போது ஏற்றுத் துக்கமடைகிறுய் என்று க்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு விளக்குகிறுன்.

[இது ஆசிரியரின் அபிப்ராயம்].

यं हि न व्यथयन्त्येते पुरुषं पुरुषर्षभ ।
समदुःखसुखं धीरं सोऽमृतत्वाय कल्पते ॥ १५

[யம் ஹி ந வ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ஷப ।
ஸமது:கஸுகம் தீரம் ஸோऽம்ருதத்வாய கல்பதே ॥]

மானிடருள் உத்தமனுன அர்ஜுனு! இவை (புலன்களுக்கு விஷயங்களோடுண்டாகும் சேர்க்கைகள்) ஸுகத்தையும் துயரத்தையும் சமமாக எண்ணுபவனும் தைர்யமுள்ளவனுகவுமுள்ள (விவேகியாகவுமுள்ள) எந்த மனிதனைத் துன்புறுத்தாதோ (பாதிக்காதோ) அம்மனிதன் மோக்ஷத்தையடைய (வீடுபேறடைய) தகுதியுள்ளவனுகிறுன்.

கருத்து:— ஸுகமேற்படும்போது அதிக மகிழ்ச்சியும், துக்கம் ஏற்படும்போது அதிக வ்யஸனமும் அடைவது உண்மையறிவுள்ளவனுக்குச் சரியன்று. சுகமும் துக்கமும் எவ்வளவு ஏற்படினும் அவைகளைப் பொருட்படுத்தாது இருப்பவனே வீடுபேறு அடைய (மோக்ஷமடைய)த் தகுதியுள்ளவன். அப்படியல்லாது ஸுகதுக்கங்களால் பாதிக்கப்படுபவன் மோக்ஷத்தை அடையமுடியாது.

नासतो विद्यते भावो नाभावो विद्यते सतः ।
उभयोरपि दृष्टोन्तस्त्वनयोस्तत्त्वदर्शिभिः ॥ १६

[நாஸதோ வித்யதே பாவோ நாபாவோ வித்யதே ஸத: |
உபயோரபி த்ருஷ்டோந்தஸ்த்வன யோஸ்தத்வதர்சிபி: ||]

எது இல்லையோ அதற்கு (இல்லாததற்கு) இருப்புக் கிடையாது (இருக்கிறது என்று நினைப்பது தவறு). எது இருக்கின்றதோ (இருப்பதற்கு) அதற்கு இல்லாமை கிடையாது (இருக்கவில்லை என்ற நினைப்புத் தவறு). இவ்விரண்டின் நிச்சயமானது ஞானிகளால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

குறிப்பு:— "நா ஸதோ வித்யதே பாவ:" என்பதற்கு, பரமாத்மாவைத் தவிர மற்றெல்லாம் மாயையினல் தோற்றுவிக்கப்படுகிறதே யன்றி உண்மையல்ல. ஆகையால் பொய்யான சீதோஷ்ணம் முதலியவற்றிற்கு இருப்பில்லையென்று ஸ்ரீ சங்கராசார்யரும், அவை ஆத்மாவைச் சேர்ந்தனவல்ல வாகையால் அவைகளிருப்பதாகக் கொள்வது தவறு என்று ஸ்ரீதரரும், அசேதனங்களாகிய உடல் முதலியவைகளுக்கு நாசமடையாதிருக்கும் தன்மை யில்லையென்று ஸ்ரீ ராமானுஜாசார்யரும், ப்ருக்ருதி எனும் பௌதிகமானவற்றிற்கு இல்லாமை கிடையாது என்று ஸ்ரீ மத்வாசார்யரும், துஷ்கர்மத்தினல் ஸுகமுண்டாகாது என்று ஸ்ரீ ராகவேந்திரரும் கூறுகின்றனர். "நாபாவோ வித்யதே ஸத:" என்பதற்கு, ஆன்மாவுக்கு இல்லாமை இல்லையென்று ஸ்ரீ சங்கரரும், ஸ்ரீதரரும் கூறுகின்றனர். ஜீவேச்வரருக்கு நாசமடையும் தன்மை

இல்லையென்று ஸ்ரீ ராமானுஜரும், ப்ருஹ்மத்திற்கு அழிவில்லையென்று ஸ்ரீ மத்வரும், நல்ல கர்மங்களால் துக்கமேற்படாதென ஸ்ரீ ராகவேந்திரரும் கூறியுள்ளார்கள்.

अविनाशि तु तद्विद्धि येन सर्वमिदं ततम् ।
विनाशमव्ययस्यास्य न कश्चित्कर्तुमर्हति ॥ १७

[அவிநாசி து தத்வித்தி யேன ஸர்வமிதம் ததம் ।
விநாசமவ்யயஸ்யாஸ்ய ந கிஞ்சித்கர்துமர்ஹதி ॥]

இவையெல்லாம் (இவ்வுலகம் யாவும்) எதனால் (எந்த ப்ருஹ்மத்தினால்) வ்யாபிக்கப்பட்டிருக்கிறதோ அதை (அத்தகைய எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும் ப்ருஹ்மத்தை) அழிவற்றதாகவும், அதற்கு அழிவை உண்டுபண்ண எவனும் வல்லமை (சக்தி) உடையவனல்லன் என்பதையும் அறிந்துகொள்.

अन्तवन्त इमे देहा नित्यस्योक्ताः[1] शरीरिणः ।
अनाशिनोऽप्रमेयस्य[2] तस्माद्युध्यस्व भारत ॥ १८

[அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தா: சரீரிண:।
அநாசினோஅப்ரமேயஸ்ய ! தஸ்மாத்யுத்யஸ்வ
பாரத ॥]

---

[1] ஸ்ரீ சங்கரர் :— விகாரமற்றவன்.

[2] ஸ்ரீ சங்கரர் :— பிரத்யக்ஷம், அநுமானம் உபமானம், சப்தம், அருத்தாபத்தி, அனுபலப்தி, ஆகிய ப்ரமாணங்களால் அறியமுடியாதவன்.

ஸ்ரீதரர் — காலம், தேசம், ஸ்வரூபம் இவற்றால் அளவிடமுடியாதவன்.

ஸ்ரீ ராமானுஜர் :— ஜீவன் அறிகிறவனே யன்றி அறியப்படுகிறவனல்ல.

நித்யனுகவும், அழிவற்றவனுகவும், அறியப் படாதவனுகவுமுள்ள உடலை உடையவனுகிய ஆன்மா வின் இந்த பூத உடல்கள் முடிவையுடையவைகளாக (ஞானிகளால்) சொல்லப்பட்டிருக்கின்றன. பரத வம்சத்தைச் சேர்ந்த அர்ஜுனு! ஆகையால் யுத்தம் செய்.

(இங்கே தேஹத்தையுடையவன் என்று சொல் லப்பட்டிருப்பதால் அத்வைத ஸித்தாந்தப்படி வ்யவஹார தசையில் ஜீவனுகவும், பரமார்த்த தசையில் ப்ருஹ்மமாகவும் சொல்லத்தக்கது.)

य एनं वेत्ति हन्तारं यश्चैनं मन्यते हतम् ।
उभौ तौ न विजानीतो नायं हन्ति न हन्यते ॥ १९

[ய ஏனம் வேத்தி ஹந்தாரம் யஸ்சைனம் மன்யதே ஹதம் |
உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹன்யதே ||]

எவனெருவன் (தான்) இவனை (மற்றெருவனை) கொல்லுகிறதாக அறிகிருனே (நினைக்கின்றுனே), எவன் இவனை (மற்றெருவனை) கொல்லப்பட்டவனுக கருதுகிருனே, அவ்விருவரும் உண்மையை அறிந்தவர் களல்லர். இவன் கொல்வதுமில்லை, மற்றெருவன் கொல்லப்படுகிறதுமில்லை.

சங்கரர் :—அவிவேகிகள் (அறிவிலிகள்) 'இவன் அவனைக் கொன்றான்' என்றும் 'அவனுலிவன் கொல்லப்பட்டான்' என்றும் நினைக்கிறார்கள். ஆன்மா அழிவற்றவனாகையால் அந்த ஆன்மா ஒருவனால் கொல்லப் படத்தக்கவனல்ல என்பது கருத்து.

न जायते म्रियते वा कदाचिन्नायं भूत्वा भविता वा न भूयः ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे ॥ २०

[ந ஜாயதே ம்ரியதே வா கதாசி-
ன்னாயம் பூத்வா பவிதா வா ந பூய:।
அஜோ நித்ய: சாச்வதோஅயம் புராணோ
ந ஹன்யதே ஹன்யமானே சரீரே ‖]

ஆன்மா பிறப்பற்றவன், அழிவற்றவன், ஒரே நிலையில் இருப்பவன். முன்னோன். ஆகையினால், தேகம் (உடல்) கொல்லப்பட்டபோதிலும், ஆன்மா ஒரு போதுங் கொல்லப்படுவதில்லை, பிறக்கிறதுமில்லை, இறக்கிறதுமில்லை, உண்டாகி மறுபடி இருக்கப் போகிறதுமில்லை. [தேகங்களுக்குள்ள ஆறு விகாரங் களும் ஆன்மாவுக்கில்லையென்பது சொல்லப்பட்டது.] ஆறு விகாரங்களாவன :— (1) ஜாயதே=பிறப்பு; (2) அஸ்தி=இருப்பு; (3) வர்த்ததே=வளர்தல்; (4) வபரிணமதே=திரிதல் (மற்றொன்றாய் மாறுதல்); (5) அபக்ஷீயதே=குறுகுதல்; (6) நச்யதி=நசித்தல்.

கீதாவ்ருத்தி :—ஈச்வரனைப்போல ஜீவனும் பிறப் பிறப்பு முதலியவைகளற்றவன். ஈச்வரஸ்வரூபத் தைப்போல ஸமமான ரூபமுள்ளவனாகச் சொல்லப் படுகிறான் ஜீவன். ஆனால் பிறப்பிறப்புள்ளவனாகச் சொல்லப்படுகிறானே யென்றாலோ, தேகத்தை

அடைகிறதும் விடுகிறதுமாயிருப்பதால் அறிவிலிகள் பிறக்கிருனிறக்கிருனென்று சொல்லுகிருர்கள்.

(கடோபநிஷத் உ-ஆவது வல்லி, கஅ-ஆவது வாக்கியம் இந்தச் சுலோகத்துக்குச் சரியானது.)

वेदाविनाशिनं नित्यं य एनमजमव्ययम् ।
कथं स पुरुषः पार्थ कं घातयति हन्ति कम् ॥ २१

[வேதாவிஞசினம் நித்யம் ய ஏனமஜமவ்யயம் |
கதம் ஸ புருஷ: பார்த்த கம் காதயதி ஹந்தி கம் ||]

ஓ! அர்ஜுன! எவன் ஆன்மாவைப் பிறப்பற்றவன், குறைதலற்றவன், நாசமற்றவன், உயருதலற்றவன் என்பதாக அறிகிருனே, அந்த மனிதன் யாரை யாவது கொல்லவாவது கொல்லுவிக்கவாவது எப்படி முடியும்?

கீதாவ்ருத்தி :— இந்தச் சுலோகத்திற்கு பரப்பிரம்ம பரமாயும் ஒரு அர்த்தமுண்டு. அதாவது, ஓ! அர்ஜுன! பரமாத்மாவை, பிறப்பற்றவன், விகாரமற்றவன், தேகநாசமற்றவன், ஸ்வரூபநாசமற்றவன் என்று எவன் அறிகிருனே (மற்றவைகளுக்கு முன் சொல்லிய அர்த்தந்தான்), இப்படி பிரம்மத்தை எவன் தெரிந்திருக்கிருனே அவன், தான் கர்த்தாவல்ல, எல்லாவற்றிற்கும் கர்த்தா ஈச்வரன்தான் என்கிற அறிவுடையவன யிருப்பாஞனதால், அவனெருவனைக் கொல்லவாவது கொல்லுவிக்கவாவது மாட்டானென்பது கருத்து.

वासांसि जीर्णानि यथा विहाय
नवानि गृह्णाति नरोऽपराणि ।

तथा शरीराणि विहाय जीर्णा-
न्यन्यानि संयाति नवानि देही ॥ २२

[வாஸாம்ஸி ஜீர்ணனி யதா விஹாய
நவானி க்ருஹ்ணுதி நரோஅபராணி
ததா சரீராணி விஹாய ஜீர்ணு-
ன்யன்யானி ஸம்யாதி நவானி தேஹீ ॥]

மனிதன் எப்படி பழய துணிகளை விட்டுவிட்டு வேறு புதிய துணிகளைக் கொள்கிருனே, அப்படியே தேகத்தைக் கொள்ளும் ஆன்மாவானவன் பழய உடல்களை விட்டுவிட்டு வேறு புதிய உடல்களை யடைகிருன்.

नैनं छिन्दन्ति शस्त्राणि नैनं दहति पावकः ।
न चैनं क्लेदयन्त्यापो न शोषयति मारुतः ॥ २३

[நைனம் சிந்தந்தி சஸ்த்ராணி நைனம் தஹதி பாவக: ।
ந சைனம் க்லேதயந்த்யாபோ ந சோஷயதி மாருத: ॥]

ஆன்மாவை ஆயுதங்கள் வெட்டுகிறதில்லை, நெருப்பு எரிக்கிறதில்லை, தண்ணீர் நனைக்கிறதில்லை, காற்று உலர்த்துகிறதில்லை.

अच्छेद्योऽयमदाह्योऽयमक्लेद्योऽशोष्य एव च ।
नित्यः सर्वगतः स्थाणुरचलोऽयं सनातनः ॥ २४

[அச்சேத்யோஅயமதாஹ்யோஅயம்
அக்லேத்யோஅசோஷ்ய ஏவ ச ।
நித்ய: ஸர்வகத: ஸ்தாணு-
ரசலோஅயம் ஸனுதன: ॥]

ஆன்மா வெட்டப்படத்தக்கவனுமல்ல, எரிக்கப் படத்தக்கவனுமல்ல, நனைக்கப்படத்தக்கவனுமல்ல, உலர்த்தப்படத்தக்கவனுமல்ல. நித்தியனுயும், எங்

கும் நிறைந்தவனும் ஸ்திர ஸ்வபாவமுள்ளவனும், சலிக்காதவனும், அநாதியாயுமிருக்கிறவன்.

ராமாநுஜர் :— இந்த ச்லோகத்திற்கும் முந்திய ச்லோகத்திற்கும் பேதமென்னவென்ருல், முந்திய ச்லோகத்தில் வெட்டுகிறது, எரிக்கிறது முதலிய சக்திகள் ஆயுதம் முதலானவைகளுக்கில்லை யென்பது சொல்லப்பட்டது. ஏன் ஆயுதம் முதலியவைகளுக்குச் சக்தியில்லையென்ருலோ, ஆன்மா ஸ்திர ஸ்வபாவம் முதலியவைகளை யுடையவனுனதால் அவன் வெட்டப்பட, எரிக்கப்படத் தகுந்தவனல்லவென்பது இதில் சொல்லப்பட்டது.

[ஸர்வகத:, ஸ்தாணு: = எப்பவுமெங்கும் வியாபித்திருக்கிற பிரஹ்மத்தினுடைய ஆதாரத்தின் பேரிலும் அணுவாயுமிருக்கிறவன்.]

अव्यक्तोऽयमचिन्त्योऽयमविकार्योऽयमुच्यते ।
तस्मादेवं विदित्वैनं नानुशोचितुमर्हसि ॥ २५

[அவ்யக்தோஅயமசிந்த்யோஅயம்
அவிகார்யோஅயமுச்யதே |
தஸ்மாதேவம் விதித்வைனம்
நானுசோசிதுமர்ஹஸி ||]

ஆன்மா காணத்தக்கவனன்று, நினைப்புக்கெட்டினவனன்று, கை முதலிய அவயவங்களினு லெதுவுஞ் செய்யப்படத்தக்கவனன்று என்பதாகச் சொல்லப்படுகிருன். ஆகையினுலே, இவ்விதமான ஆன்மாவை யறிந்து துக்கிக்காதே. (இவ்விதமானவன் ஆன்மாவென்று நீ யறிந்து கொள்வாயாகில் விசனப்படக் காரணமிருக்கமாட்டாதென்பது கருத்து.)

கீதாவ்ருத்தி:—இந்த ச்லோகத்தில் சொல்லப் பட்டிருக்கிற விசேஷங்களையுடைய ஈச்வரன் ஸர்வ ஸ்வதந்த்ரன், நானவனுடைய அதினனுய் யுத்தஞ் செய்து அவனுக்குச் சமர்ப்பிக்கவேண்டியவனென்ப தாக நினைத்தால் உனக்குத் துக்கத்திற் கேதுவே யிருக்கமாட்டாதென்பது கருத்து. **அவிகார்ய** என் னும் சொல்லிற்கு விகாரமடையாதவன். அதாவது, மாறுதலில்லாதவனென்று சங்கரரும், ராமானுஜரும் கூறுகின்றனர்.

अथ चैनं नित्यजातं नित्यं वा मन्यसे मृतम् ।
तथापि त्वं महाबाहो नैनं शोचितुमर्हसि ॥ २६

[அத சைனம் நித்யஜாதம்
நித்யம் வா மன்யஸே ம்ருதம் |
ததாபி த்வம் மஹாபாஹோ
நைனம் சோசிதுமர்ஹஸி ||]

ஒருக்கால் ஆன்மாவை யெப்போதும் பிறப் பிறப்புடையவனுக எண்ணினபோதிலும், ஓ! அர் ஜுன! நீ ஆன்மாவைக்குறித்து விசனப்படுகைக்கு யோக்கியனல்ல.

[அத ச = தேகமே ஆன்மாவென்று ஒருக்கால் நினைத்தபோதிலும் —ராமானுஜர்.]

जातस्य हि ध्रुवो मृत्युः ध्रुवं जन्म मृतस्य च ।
तस्मादपरिहार्येऽर्थे न त्वं शोचितुमर्हसि ॥ २७

[ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு:
த்ருவம் ஜன்ம ம்ருதஸ்ய ச |

தஸ்மாதபரிஹார்யேஅர்த்தே
ந த்வம் சோசிதுமர்ஹஸி ||]

பிறந்தவனுக்கு மரணமும், இறந்தவனுக்குப் பிறப்பும் நிச்சயமாகையால் பரிகாரஞ் செய்யக்கூடாத இவ்விஷயத்தைக் குறித்து நீ துக்கப்படுவதற்கு தகுதியற்றவன்.

अव्यक्तादीनि भूतानि व्यक्तमध्यानि भारत ।
अव्यक्तनिधनान्येव तत्र का परिदेवना ॥ २८

[அவ்யக்தாதீனி பூதானி வ்யக்தமத்யானி பாரத |
அவ்யக்தநிதானுன்யேவ தத்ர கா பரிதேவனு ||]

ஓ! அர்ஜுனு! உடல் முதலியன மாயையிலிருந்துண்டாகி மத்திய காலத்திற் காணப்பட்டு, மாயையிலேயே ஒடுங்குகின்றன; இந்த விஷயத்தில் ஏன் விசனப்படவேண்டும்?

[உடல் முதலிய யாவற்றும் தோன்றுகையில் வ்யக்தமாகத் தெரிவதில்லை. அவை காலப்போக்கில் மத்தியில் தெளிவாகத் தெரிகின்றன. மறுபடி முடிவு காலத்தில் தெளிவாகக் காணப்படுவதில்லை. இதனுல் காணப்படுவது எதுவும் அழிவது திண்ணம் என்பது கருத்து.]

आश्चर्यवत्पश्यति कश्चिदेनं आश्चर्यवद्वदति तथैव चान्यः ।
आश्चर्यवच्चैनमन्यः शृणोति श्रुत्वाप्येनं वेद न चैव कश्चित् ॥ २९

[ஆஸ்சர்யவத்பச்யதி கஸ்சிதேனம்
ஆஸ்சர்யவத்வததி ததைவ சான்ய:|
ஆஸ்சர்யவச்சைனமன்ய: ச்ருணோதி
ச்ருத்வாப்யேனம் வேத ந சைவ கஸ்சித் ||]

ஆன்மாவை ஒருவன் ஆச்சர்யமான வஸ்துவைப் போலப் பார்க்கிருன். மற்ருெருவன் அதேபோல் ஆச்சர்யமான வஸ்துவைப்போல் சொல்லுகிருன். இன்னெருவன் ஆச்சர்ய வஸ்துவைப்போல் கேட்கிருன். அப்படிச்சொல்லியும், பார்த்தும், கேட்டுமிருப்பினும், அவர்களில் ஒருவனும் ஆன்மாவை அறிந்து கொள்ளவே இல்லை.

[இந்த ச்லோகத்திற்கு **சங்கரர்** உரை எழுதும் போது ஆன்மாவை ஆச்சர்யமான வஸ்து என்று எவன் சொல்கிருனே, பார்க்கிருனே அல்லது கேட்கிருனே அவன் ஆன்மாவைப் புறிந்துகொண்டவனல்லன் என்றும், இந்த ஆன்மாவைப்பார்த்து, கண்டு அல்லது கேட்டு அறிகிறவன், பல்லாயிரத்தில் ஒருவன் இருக்கக்கூடுமென்றும், ஆகவே ஆன்மா அறிந்து கொள்ளக்கூடியதல்ல என்று அபிப்பிராயப்படுகிருர்.

ஆநந்தகிரி :— 'ஆஸ்சர்யவத்' என்று ஆரம்பிப்பதால் இந்த ச்லோகத்தில் கண், வாய், காது போன்ற புலன்களுக்குப் புலப்படாத ஆச்சர்யமானது ஆன்மா என்று கூறுகிருர்.

மதுஸூதனஸரஸ்வதியின் விரிவுரையில், 'யதோ வாசோ நிவர்த்தந்தே | அப்ராப்ய மனஸா ஸஹ' || என்ற ச்ருதி வாக்யங்களின்படி மனம், வாக்குப்போன்ற புலன்களைக்கொண்டும், நேராகவும் மனனம், நிதித்யாஸனம் முதலியவைகளாலும், பல பிறவிகளாலும் ஆன்மாவைப்பற்றித் தெரிந்து கொள்ளமுடியாத நிலையை விளக்கி இச் சுலோகம் கூறுவதை விவரித்திருக்கிறது.

ஸ்ரீதரர் சொல்வதாவது :-சாஸ்த்ரம், ஆசார்யோபதேசம் ஆகியவற்ருல் அடைந்த யோகத்திஞல் ஆன்மாவைப் பார்க்கிற ஒருவன், ஆன்மா எங்கும் நிறைந்துகாணும் அறிவுப் பெருங்கடலாயும் (ஞானநந்தஸ்வரூபனுகவும்), உலக விலக்ஷணனுகவும், தன்ஞல் பார்க்கப்பட்டிராதவனுமாகவும் இருப்பதஞல் ஆச்சர்யமடைகிருன். மற்ருெருவன் சாஸ்திரம் முதலியவற்ருல் ஆன்மாவின் ஸ்வரூபத்தை யறிந்தவன் அதை மற்ருெருவனுக்குச் சொல்கிருன். அப்படி அறிந்து சொல்லும்போது அவன் ஆச்சர்யமடைகிருன். இப்படிச்சொல்வதைக் கேட்டு, இப்படியும் ஒரு வஸ்துவுண்டாவெனக் கேட்டவன் ஆச்சர்யமடைகிருன். இப்படிப் பார்த்தவனே, சொன்னவனே, கேட்டவனே, நித்யானந்தத்தின் உருவான ஆன்மாவை முழுதும் அறிந்தவனல்லன் என்பது கருத்து.]

देही नित्यमवध्योऽयं देहे सर्वस्य भारत ।
तस्मात्सर्वाणि भूतानि न त्वं शोचितुमर्हसि ॥ ३०

[தேஹீ நித்யமவத்யோஅயம்
தேஹே ஸர்வஸ்ய பாரத ।
தஸ்மாத்ஸர்வாணி பூதானி
ந த்வம் சோசிதுமர்ஹஸி ॥]

ஓ! அர்ஜுனு! எல்லோருடைய உடல்களும் கொல்லப்பட்டாலும் இந்த உடலையுடைய ஆன்மா ஒருபோதும் கொல்லப்படத்தக்கதல்ல. ஆகையால், எல்லா ப்ராணிகளையும் குறித்து நீ துக்கப்படுவது உகந்ததல்ல.

[**ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதி :—** ஸூக்ஷ்மசரீரம், ஸ்தூலசரீரம் என்று இருவகை. ஸ்தூலசரீரம் என்பதே பார்க்கப்படுகிறது. அது அழிவையுடையது. ஸூக்ஷ்மசரீரத்திலடங்கியதே ஆன்மா. அந்த ஆன்மா நித்யன்; அழிக்கப்படக்கூடியவனல்லன். ஆகையால் ஸ்தூலமான, கண்ணுக்குப் புலப்படும் பீஷ்மர் முதலானவர் கொல்லப்படுவதைப் பற்றித் துக்கமடையத் தேவையில்லை.]

स्वधर्ममपि चावेक्ष्य न विकम्पितुमर्हसि ।
धर्म्याद्धि युद्धाच्छ्रेयोऽन्यत्क्षत्रियस्य न विद्यते ॥ ३१

[ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய
ந விகம்பிதுமர்ஹஸி |
தர்ம்யாத்தி யுத்தாச்ச்ரேயோ
அன்யத்க்ஷத்ரியஸ்ய ந வித்யதே ||]

மேலும் உன் வர்ணத்தாருக்கு விதிக்கப்பட்டிருக்கிற (க்ஷத்ரியனுக்கு போர்புரிவது கடமையாதலால்) தர்மத்தைத் (கடமையை) தெரிந்துகொண்டு நீ நடுக்கங்கொள்வது தகுந்ததல்ல. ஏனெனில் க்ஷத்ரியனுக்குத் தர்மத்தோடுகூடிய யுத்தத்தைக்காட்டிலும் (அறப்போரைக் காட்டிலும்) மேலானது யாதுமில்லை.

ஸ்ரீ சங்கரர் :—பரமார்த்ததத்வத்தை ஒட்டி ஆன்மாவின் உண்மையை முன் ச்லோகத்தில் விளக்கியபின், இப் பிறப்பில் உலக ரீதியில் மனிதனுக்கு ஏற்பட்டுள்ள ஸ்வதர்மமும் சுட்டிக்காட்டப்படுகிறது. க்ஷத்ரியனுகப் பிறந்தவனுக்கு, போர் தர்மத்தை நிலைநாட்ட பிரதேசங்களை ஜயிப்பதும், அதனுல் தம் குடிமக்களை ரக்ஷிப்பதும் மேலான கடமை என்பதும் குறிக்கப்படுகிறது.

ஸ்ரீராமானுஜர் :— அக்னிஷ்டோமம் போன்ற யாகங்களில் பசுஹிம்ஸை எப்படி தர்மமானதோ அப்படியே க்ஷத்ரியனாகிய உனக்குத் தர்மமாக உண்டாயிருக்கிற இந்த யுத்தம் கடமையாதலால் அதனால் தோஷம் உண்டாகாது. யுத்தம் செய் என்பது கருத்து.

यदृच्छया चोपपन्नं स्वर्गद्वारमपावृतम् ।
सुखिनः क्षत्रियाः पार्थ लभन्ते युद्धमीदृशम् ॥ ३२

[யத்ருச்சயா சோபபன்னம்
ஸ்வர்கத்வாரமபாவ்ருதம் ।
ஸுகின: க்ஷத்ரியா: பார்த்த
லபந்தே யுத்தமீத்ருசம் ॥]

ஓ! அர்ஜுன! தானாக நேரிட்டிருக்கிறதும், திறந்துள்ள ஸ்வர்க்கத்தின் வாயிலுமான இத்தகைய போரைச் செய்யும் க்ஷத்ரியர்கள் ஸுகமடைபவர்கள். [தர்மமான போரில் இறந்தவர்களுக்கு ஸ்வர்கத்தின் வாயில் திறந்திருக்கிறது என்பது கருத்து.]

கீதாவ்ருத்தி :—போரில் மாண்டவருக்குச் சீக்ரமாக ஸ்வர்கலோகத்தை அடைவது என்பது விதி என்று கூறப்படுகிறது.

अथ चेत्त्वमिमं धर्म्यं संग्रामं न करिष्यसि ।
ततः स्वधर्मं कीर्तिं च हित्वा पापमवाप्स्यसि ॥ ३३

[அத சேத்த்வமிமம் தர்ம்யம்
ஸங்க்ராமம் ந கரிஷ்யஸி ।
தத: ஸ்வதர்மம் கீர்த்திம் ச
ஹித்வா பாபமவாப்ஸ்யஸி ॥]

ஸ்வர்க்கத்தையடையும் வாய்ப்பை இழப்பது மாத்திரமல்லாமல், இந்த தர்மயுத்தத்தை நீ செய்யாது போனல், உன் கடமையிலிருந்து வழுவினவனய், புகழையுமிழந்து பாவத்தையடைவாய்.

अकीर्तिं चापि भूतानि कथयिष्यन्ति तेऽव्ययाम् ।
संभावितस्य चाकीर्तिर्मरणादतिरिच्यते ॥ ३४

[அகீர்த்திம் சாபி பூதானி கதயிஷ்யந்தி தேஅவ்யயாம்|
ஸம்பாவிதஸ்யசா கீர்த்திர்மரணததிரிச்யதே ||]

மேலும் மக்கள் நீண்டகாலம் உன்னுடைய அபகீர்த்தியைச் (அவதூறு) சொல்லிக்கொண்டிருப்பார்கள். நன்மதிப்புப் பெற்றவனுக்கு அபகீர்த்தியடைவது மரணத்தைக்காட்டிலும் மோசமானது.

भयाद्रणादुपरतं मंस्यन्ते त्वां महारथाः ।
येषां च त्वं बहुमतो भूत्वा यास्यसि लाघवम् ॥ ३५

[பயாத்ரணதுபரதம்
மம்ஸ்யந்தே த்வாம் மஹாரதா: |
யேஷாம் ச த்வம் பஹுமதோ பூத்வா
யாஸ்யஸி லாகவம் ||]

நீ எவரால் நன்கு மதிக்கப்பட்டுள்ளாயோ அந்த மஹாரதிகர்கள், நீ பயத்தினல் போரிலிருந்து பின்னடைந்தாய் என்று நினைப்பார்கள். அதனல் நன்மதிப்புள்ளவனக இருந்தும் நீ இழிவடைவாய்.

अवाच्यवादांश्च बहून्वदिष्यन्ति तवाहिताः ।
निन्दन्तस्तव सामर्थ्यं ततो दुःखतरं नु किम् ॥ ३६

[அவாச்யவாதாம்ஸ்ச
பஹூன்வதிஷ்யந்தி தவாஹிதா: |
நிந்தந்தஸ்தவ ஸாமர்த்யம்
ததோ து:கதரம் நு கிம் ||]

உன்னுடைய எதிரிகள் உன்னுடைய திறனை நிந்தனைசெய்வர் (பழிப்பர்). சொல்லத்தகாத சொற்களைச் சொல்லுவர். அதைக் காட்டிலும் அதிகத் துயரம் என்ன இருக்கிறது?

हतो वा प्राप्स्यसि स्वर्गं जित्वा वा भोक्ष्यसे महीम् ।
तस्मादुत्तिष्ठ कौन्तेय युद्धाय कृतनिश्चयः ॥ ३७

[ஹதோ வா ப்ராப்ஸ்யஸி ஸ்வர்கம்
ஜித்வா வா போக்ஷ்யஸே மஹீம் |
தஸ்மாதுத்திஷ்ட்ட கௌந்தேய
யுத்தாய க்ருதநிஸ்சய: ||]

குந்தி புத்திரனே! (அர்ஜுனா!) நீ கொல்லப்படுவாயானால் ஸ்வர்க்கத்தை அடையலாம். வெற்றி பெற்றாலோ ராஜ்யத்தை அனுபவிப்பாய். ஆகையால் போர் புரிவதாக நிச்சயம் செய்துகொண்டெழு.

सुखदुःखे समे कृत्वा लाभालाभौ जयाजयौ ।
ततो युद्धाय युज्यस्व नैनं पापमवाप्स्यसि ॥ ३८

[ஸுகது:க்கே ஸமே க்ருத்வா
லாபாலாபௌ ஜயாஜயௌ |
ததோ யுத்தாய யுஜ்யஸ்வ
நைனம் பாபமவாப்ஸ்யஸி ||]

ஸுகம், துயரம், லாபம், நஷ்டம், வெற்றி, தோல்வி இவைகளைச் சமமாக எண்ணிக்கொண்டு, பிறகு போர் செய்யத் தயாராகக்கடவாய். இப்படித் திண்ணமான புத்தியுள்ளவனாக ஆனால் நீ பாவத்தை யடைய மாட்டாய்.

[ஸ்ரீதரர் :— ஸுகத்திற்குக் காரணம் லாபம், துக்கத்திற்கு காரணம் நஷ்டம். லாப நஷ்டங்களுக்குக் காரணங்கள் வெற்றியும் தோல்வியுமாகும். ஆகையால் காரணம் கார்யம் ஆகிய இரண்டினையும் விட்டுவிடவேண்டுமென்பது கருத்து.]

एषा तेऽभिहिता सांख्ये बुद्धिर्योगे त्विमां शृणु ।
बुद्ध्या युक्तो यया पार्थ कर्मबन्धं प्रहास्यसि ॥ ३९

[ஏஷா தேஅபிஹிதா ஸாங்க்யே
புத்திர்யோகே த்விமாம் ச்ருணு |
புத்த்யா யுக்தோ யயா பார்த்த
கர்மபந்தம் ப்ரஹாஸ்யஸி ||]

அர்ஜுனா! உனக்கு இதுவரை ஆன்மீக தத்வ விஷயத்தில் புத்திபுகட்டப்பட்டது. அதைச் செய்கையில் கொண்டுவரும் கர்மயோக ரீதியில் கூறுகிறேன், கேள். அத்தகைய அறிவைப் பெற்று விட்டால் கர்மபந்தத்திலிருந்து (ஊழ்வினையின் கட்டுகளிலிருந்து) உன்னை விடுவித்துக் கொள்வாய். [இந்த அத்யாயத்தில் 12 முதல் 30 வரையுள்ள ச்லோகங்களில் ஆன்மாவின் தத்வம் விளக்கப்பட்டது. 31 முதல் 38 முடிய உலகியல் வகையில் அறிவு உபதேசிக்கப்பட்டது. 40-ஆவது ச்லோகம் முதல் 51 முடிய ஊழ்வினையிலிருந்து விடுபட்டு வீடுபேறு (மோக்ஷம்) அடைவது கூறப்படுகிறது.]

नेहाभिक्रमनाशोऽस्ति प्रत्यवायो न विद्यते ।
स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् ॥ ४०

[நேஹாபிக்ரமநாசோஅஸ்தி
ப்ரத்யவாயோ ந வித்யதே|
ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய
த்ராயதே மஹதோ பயாத் ||]

பயன் கருதாது கடவுளுக்கே அர்ப்பணிக்கப் பட்டுச் செய்யப்படும் கார்யங்களைத் தொடங்குவது (நிஷ்காமகர்மா) வீணாகாது. இத்தகைய கர்மம் முடிவடையாவிடினும் கெடுதி ஏற்படாது. இத் தகைய பயன் கருதாத் தர்மத்தின் சிறுபகுதிகூட மிகப் பெரியதான அச்சத்திலிருந்து (ஜனன மரண பயத்திலிருந்து) காக்கும் (விடுவிக்கும்).

[**ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்:—** விவசாயம் முதலிய கர்மங்களைச் செய்யத் துவங்கி, இடையிலே விட்டு விட்டால், அல்லது இடையூறுகளால் பாதிக்கப் பட்டால், பயிர் பயனளிக்காது. ஆனால் பயன் கருதாது ஈச்வரார்ப்பணமாகச் செய்யப்படும் கர்மம் வீணாகாது. செய்த அளவுக்கு மோக்ஷ ஸாதனமான பெரும் பயனைக் கொடுக்கும்.]

व्यवसायात्मिका बुद्धिरेकेह कुरुनन्दन ।
बहुशाखा ह्यनन्ताश्च बुद्धयोऽव्यवसायिनाम् ॥ ४१

[வ்யவஸாயாத்மிகாபுத்தி-
ரேகேஹ குருநந்தன |
பஹுசாகா ஹ்யனந்தாஸ்ச
புத்தயோஅவ்யவஸாயினம் ||]

குருவம்சத்தினைக் களிப்பிக்கும் அர்ஜுனா! இந்தப் பயன் கருதா கர்மயோகத்தில் நிச்சயமான (நிலையான) புத்தியுள்ளவனுக்கு ஒரே தீர்மானம்தான் ஏற்படும். நிலையற்ற புத்தியுடையவர்களுடைய எண்ணங்களும் (புத்தி) எண்ணற்றவைகளாகவும், பலவிதமான பிரிவுகளுள்ளனவாகவும் காணப்படும்.

[**ஸ்ரீ ராமானுஜர்:–** ‘இஹ’ என்னும் சொல்லிற்கு, சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள கருமங்கள் என உரை எழுதியுள்ளார். ஸ்ரீதரர், ஈச்வர பக்தியினால் ஸம்ஸாரக்கடலைத் தாண்டமுடியும் என்கிற திடமான எண்ணம் என ‘வ்யவஸாயாத்மிகா’ என்ற சொல்லிற்குப் பொருள் கூறுகிறார். ஸ்ரீ ராமானுஜர் இந்தச் சொல்லிற்குப் “பரமாத்மாவை யறிந்து செய்யப்பட்ட, வேதத்தில் சொல்லப்பட்ட எல்லா கர்மாக்களையும், அந்த பரமாத்மாவுக்கே அர்ப்பணித்து, அதனாலேயே ஒருவன் கடைத்தேறுகிறானென்ற நிச்சயமான” என்று விரிவுரை எழுதியுள்ளார். இதற்கு ஒரு சிறு உதாரணம் கொடுக்கிறார் ஸ்ரீ ராமக்ருஷ்ணபரமஹம்ஸர்:– “கப்பல் கடலில் எத்திசையை நோக்கிச் சென்றாலும் மாலுமியின் திசைகாட்டும் கருவிமாத்திரம் வட திசையைத்தான் காட்டும். இதைப்போல் ஞானியின் மனம், வெளிப்படை வாழ்வில் பலவற்றைக் காண்கினும், ஒரே தத்வத்திலேதான் ஈடுபட்டிருக்கும்.” பயனைக்கருதி செய்யப்படும் கர்மங்களைச் செய்ய நினைப்பவன் அக்கர்மத்தின் விதி, அதற்கான இடம், பொருள், காலம் முதலியவைகளைத் தேட வேண்டும். பிறகு அதை இடையூறின்றி முடிக்க வேண்டும். எனவே பயன் கருதிச் செய்யும் கர்மாவில் பலவிதமான புத்திகள் கூறப்பட்டது. இப்படிச்

செய்து முடித்தாலும் பயன் நிரந்தரமானதல்ல. விடுதலையும் பெற இவை உதவா. ஆனால் இதே கர்மாக்களைப் பயன் விரும்பாது ஈச்வரார்ப்பணமாய்ச் செய்தால் அவைகளைப்பற்றிய கவலை இல்லை. ஈச்வரார்ப்பணமாகச் செய்கிறோம் என்ற திடபுத்தி ஒன்றுக்குத் தவிர வேறொன்றுக்கும் மனதில் இடமேற் படாது. ஈசனையடையும் மோக்ஷமே பயனாகிவிடும். இதுதான் கருத்து.]

यामिमां पुष्पितां वाचं प्रवदन्त्यविपश्चितः ।
वेदवादरताः पार्थ नान्यदस्तीतिवादिनः ॥ ४२

[யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவதந்த்யவிபஸ்சித:।
வேதவாதரதா: பார்த்த நான்யதஸ்தீதிவாதின: ॥]

कामात्मानः स्वर्गपराः जन्मकर्मफलप्रदाम् ।
क्रियाविशेषबहुलां भोगैश्वर्यगतिं प्रति ॥ ४३

[காமாத்மான: ஸ்வர்கபரா: ஜன்மகர்மபலப்ரதாம் ।
க்ரியாவிசேஷபஹுலாம் போகைச்வர்யகதிம் ப்ரதி ॥]

भोगैश्वर्यप्रसक्तानां तयापहृतचेतसाम् ।
व्यवसायात्मिका बुद्धिः समाधौ न विधीयते ॥ ४४

[போகைச்வர்யப்ரஸக்தானாம்
தயாபஹ்ருதசேதஸாம் ।
வ்யவஸாயாத்மிகா புத்தி:
ஸமாதௌ ந விதீயதே ॥]

அர்ஜுனா! வேதத்தில் பயனைச் சொல்லும் வாக்யங்களாகிய அர்த்த வாதத்தில் ப்ரியமுடையவர்களும், ஸ்வர்க்கத்தைக் காட்டிலும் அடையக்கூடிய வேறு விசேஷ பயன்களில்லை என்று சொல்லுகிறவர்களும், மனைவி, மக்கள், நண்பர்கள் ஆகியோரிடம் ஆசையுடையவர்களும், ஸ்வர்க்கமே மேலான ப்ரயோஜனமென எண்ணுகிறவர்களுமான அஞ்ஞானிகளுக்கு, ஸுகபோகங்களையும், செல்வத்தையும் அடைவதற்கு அநேக வேறுபட்ட கர்மாக்களை சொல்பனவாகவும், பிறப்பையும், கர்மத்தையும், கர்மத்தின் பயன்களையும் கொடுக்கின்றனவாகவும், பயனில்லாத புஷ்பங்களையுடைய மரங்களைப்போல் விளங்கும். இத்தகைய எச்சொற்களைக் கூறுகிறார்களோ அவ்வார்த்தைகளைக் கேட்டு, இழுக்கப்பட்ட மனத்தையுடையவர்களாகவும், செல்வம், ஸுகபோகங்களில் ஆசையுடையவர்களாகவுமுள்ளோருக்கு திடபுத்தி யுண்டாகவே உண்டாகாது.

[வேள்வி முதலிய கர்மங்களுக்கு ஸ்வர்க்கமடைதல், பெண்டிர், குழந்தைகள், செல்வம், ஸுகபோகங்கள் ஆகியவற்றை யடைவது பயன் என்று வேதத்தில் சொல்லப்படும் அர்த்தவாதங்களைக் கேட்டு, அப் பயன்களை அடைவதில் ஒரு மனிதனின் புத்தி இழுக்கக்கப்படுமாயின், அவனுக்கு ஆத்மஸ்வரூப அறிவில் ஈடுபடவேண்டுமென்ற எண்ணம் ஒரு போதும் ஏற்படாது என்பதே இம் மூன்று ச்லோகங்களின் கருத்து.]

त्रैगुण्यविषया वेदा निस्त्रैगुण्यो भवार्जुन ।
निर्द्वन्द्वो नित्यसत्त्वस्थो निर्योगक्षेम आत्मवान् ॥ ४५

[த்ரைகுண்யவிஷயா வேதா
நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுன |
நிர்த்வந்த்வோ நித்யஸத்வஸ்தோ
நிர்யோகக்ஷேம ஆத்மவான் ||]

அர்ஜுன! வேதங்கள் ஸத்வ, ரஜஸ், தமோ குண விஷயங்களைக் கொண்டவை (காம்யகர்மிகளுக்காக ஏற்பட்டன). நீ ஆசையற்றவனாகவும், த்வந்தங்களற்றவனாகவும் (ஸுகம், துக்கம், வெற்றி, தோல்விபோன்ற பரஸ்பர விரோத ஸ்வபாவங்களையுடையவை த்வந்த்வங்களெனப்படும்), நிரந்தரமான ஸத்வ நிலையையுடையவனாகவும், ஈட்டல், காத்தல், (யோகக்ஷேமங்கள்) அற்றவனாகவும் ஆத்மவானாக (ஆன்மீக அறிவில் ஊக்கமுடையவனாக) ஆகக் கடவாய்.

यावानर्थ उदपाने सर्वतः संप्लुतोदके ।
तावान्सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ॥ ४६

[யாவானர்த்த உதபானே
ஸர்வத: ஸம்ப்லுதோதகே |
தாவான் ஸர்வேஷு வேதேஷு
ப்ராஹ்மணஸ்ய விஜாநத: ||]

குளித்தல், குடித்தல் ஆகியவற்றிற்குச் சிறிது தண்ணீருள்ள கிணறு முதலியன எவ்வளவு பயன்படுமோ, அவ்வளவு பயன், நான்கு பக்கங்களிலிருந்தும் தண்ணீர் வந்து சேருகின்ற அதிகப் பரப்புள்ள ஏரியிலும் உண்டாவதுபோல, வேதத்தில் கூறப்பட்டுள்ள எல்லாக் கர்மங்களினாலும் எவ்வளவு பயன் கிட்டுமோ, அவ்வளவு நற்பயனும் ஆத்மஸ்வரூபத்தில் திடமான புத்தியுள்ள ப்ராம்மணனுக்குக் (ப்ரும்ம நிஷ்டனுக்கு) கிட்டும்.

[சிறிது நீருள்ள கிணறு, குட்டை முதலியவை அற்ப உபயோகமுள்ளவை. ஏரி, நதி முதலியன வ்யவஸாயம், மானிடனுக்கு உபயோகம் போன்ற அதிகமான பயன் தருபவை. வேதங்களில் சொல்லப்பட்ட கர்மங்கள் ஸ்வர்க்கம் முதலிய அற்பப் பயன்களைத் தரக்கூடியவை. ப்ரும்மஞானம் பெறுவது மோக்ஷமான பெரும் பயனை யளிக்கும். மோக்ஷமென்பது ஸ்வர்க்கம் முதலிய மற்ற அற்பப் பயன்களையும் அடக்கிக்கொண்டுள்ளது என்பது கருத்து.]

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।
मा कर्मफलहेतुर्भूर्मा ते सङ्गोऽस्त्वकर्मणि ॥ ४७

[கர்மண்யேவாதிகாரஸ்தே
மா பலேஷு கதாசன |
மா கர்மபலஹேதுர்பூ:
மா தே ஸங்கோஅஸ்த்வகர்மணி ||]

உனக்கு கர்மம் செய்வதற்குத்தான் உரிமை (அதிகாரம்) உண்டு. ஆனால் அப்படிச் செய்யும் கர்மத்திற்கான பயனில் ஒருபோதும் ஆசை (இச்சை) வைக்காதே. (பிறப்பிறப்பிற்குக் காரணமாகவுள்ள) கர்மபலனுக்கு ஆளாகாதே. உனக்குறிய கர்மம் செய்யாமலும் சும்மாயிருந்துவிடாதே.

[**ஸ்ரீ இராமாநுஜர்:**—கர்மத்தை ஈச்வராதீனமாகச் செய்யவேண்டியவன் நீ. அதின் பயன் கருதாது, செய்கிறவன் என்கிற எண்ணமில்லாமலும் செய்தால், கர்மப்பயனை யடையாது மோக்ஷப் பயனை அடைவாய். கர்மத்தைவிட்டுவிடவும் உனக்கு அதிகாரமில்லை.

இதற்கு உதாரணமாக ஸ்ரீ ராமக்ருஷ்ணபரமஹம்ஸர் கூறியிருப்பது:— 'ஒரு படகு தண்ணீரின் மேல் மிதக்கலாம். ஆனால் தண்ணீர் படகினுட்

புகலாகாது. மனிதன் உலகினில் வாழலாம். ஆனால் உலகப்பற்றுகள் அவனைப் பிடித்துக்கொள்ளக் கூடாது.' விதித்த கடமையைச் செய்யவேண்டியது அவச்யம். ஆனால் அதினால் நமக்குப் பயன்கிட்டும் என்ற எண்ணத்துடன் செய்யக்கூடாது. எந்தவிதப் பயனையும் கருதாது இது நமக்குக் கடவுளால் இடப் பட்டது என்று செய்வதால் அக்கடமையைச் செய் வதனால் ஏற்படும் மகிழ்ச்சியோ, துயரமோ நம்மைச் சாராது. கடமையைச் செய்துவிட்டோம் என்பதே ஒரு மகிழ்ச்சி என்பது கருத்து.]

योगस्थः कुरु कर्माणि सङ्गं त्यक्त्वा धनञ्जय ।
सिद्ध्यसिद्ध्योः समो भूत्वा समत्वं योग उच्यते ॥ ४८

[யோகஸ்த: குரு கர்மாணி
ஸங்கம் த்யக்த்வா தனஞ்ஜய|
ஸித்த்யஸித்த்யோ: ஸமோ பூத்வா
ஸமத்வம் யோக உச்யதே ||]

பொருளாசையற்றவனே! (அர்ஜுனா!) ஈசனோடு ஒன்றாகி (பகவானை த்யானித்து நிஷ்டையிலிருந்து), எதிலும் பற்றில்லாது பேரறிவுபெற்றாலும், பெறாவிடி னும் (ஞானஸித்தியடைந்தாலும், அடையாவிடினும்) கர்மங்களைச் செய். ஞானமடைவதில் வெற்றியிலும், தோல்வியிலும் மாறுபடாது ஸமநிலையிலுள்ளது யோக மெனப்படும்.

[ஞானஸித்தி யடைந்துவிட்டோமெனக் கர்வம் கொள்ளாமலும், ஞானஸித்தி கிட்டவில்லையே எனத் துயரமடையாமலும் கர்மங்களைச் செய்யவேண்டும்.]

दूरेण ह्यवरं कर्म बुद्धियोगाद्धनञ्जय ।
बुद्धौ शरणमन्विच्छ कृपणाः फलहेतवः ॥ ४९

[தூரேண ஹ்யவரம் கர்ம புத்தியோகாத்தனஞ்ஜய|
புத்தௌ சரணமன்விச்ச க்ருபணா: பலஹேதவ: ||]

தனஞ்ஜய! (அர்ஜுனா!) பயன் கருதிச் செய்யப்படும் கர்மம், ஸமநோக்குடன் கூடிய திடபுத்தியுடன் பயன் கருதாது செய்யப்படும் கர்மத்தைக் காட்டிலும் மிகவும் இழிவானது. பயனுக்கு ஆசைகொள்பவர்கள் துயரடைவார்கள்.

[**ஸ்ரீ சங்கரர்,** 'புத்தௌ சரணமன்விச்ச' என்ற சொற்களுக்கு, 'நிஷ்காம்யமான (பயன் கருதா) கர்மயோகத்தில் ஆச்ரயிப்பதை விரும்பு' என்று பொருள் செய்திருக்கிறார். அதாவது பரமார்த்த ஞானத்தைச் சரணடை என்பது கருத்து. **ஸ்ரீதரர்** இப்பதங்களுக்கு, 'ஞானமடைவதற்கான காரணமாகிய கர்மயோகத்தை அல்லது காக்கும் ஈசனை சரணடைக' என்றும், **ஸ்ரீ ராமானுஜர்,** 'பயன் கருதிச் செய்யப்படும் கர்மா பிறப்பிறப்பிற்குக் காரணமாகுமென்றும், பயன் கருதாது செய்யப்படும் கர்மம் மோக்ஷஸாதனமென்னும் அறிவை அடையக்கடவாய்' என்றும் பொருள் கூறுகின்றனர்.

'க்ருபணா:' என்ற சொல்லிற்கு ஸ்ரீ சங்கரரும், ஸ்ரீதரரும், 'ஜனனமரண துக்கத்தையடைவார்கள் பயன் கருதிக்கர்மம் செய்பவர்' என்று உரை எழுதியுள்ளனர்.]

बुद्धियुक्तो जहातीह उभे सुकृतदुष्कृते ।
तस्माद्योगाय युज्यस्व योगः कर्मसु कौशलम् ॥ ५०

[புத்தியுக்தோ ஜஹாதீஹ
உபே ஸுக்ருததுஷ்க்ருதே ।
தஸ்மாத்யோகாய யுஜ்யஸ்வ
யோக: கர்மஸு கௌசலம் ॥]

மகிழ்ச்சியிலும், துயரத்திலும் (ஸுகதுக்கங்களில்) ஸமமான புத்தியுடையவன் புண்யம் பாவம் ஆகிய இரண்டினையும் இந்த உலகிலேயே அல்லது இப்பிறவியிலேயே விலக்கிக்கொள்கிறான். ஆகையால் இந்த ஸமபுத்தியடைய முயற்சி செய். கர்மங்களைத் திறம்படச் செய்வது யோகமெனச் சொல்லப் படுகிறது.

[**ஸ்ரீதரர்:**—கர்மங்களிலுள்ள ஸாமர்த்யம் என்றால், கர்மங்கள் இயற்கையில் கட்டுண்டுவிடச் செய்யுமாயினும் (பந்தத்தை உண்டாக்குமாயினும்) அக்கர்மங்களைப் பயன் கருதாது ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்யின் அவைகளையே மோக்ஷத்திற்கு ஸாதனமாக்கிக் கொள்ளுவதுதான்.

ஸ்ரீ சங்கரர்:— 'கர்மஸு கௌசலம்' என்பதற்கு, ஸமத்வ புத்தியினால் பந்தங்களை ஏற்படுத்தக்கூடிய கர்மத்திலிருந்து விடுபடுத்திக் கொள்ளும் திறமை எனப் பொருள்.

ஸ்ரீ ராமானுஜர்:— 'யோக: கர்மஸு கௌசலம்' என்ற சொற்கள், கர்மம் செய்யும் விஷயத்தில் ஸமத்வபுத்தி முயற்சியினாலடையத் தகுந்தது என்று பொருள்படும்.]

कर्मजं बुद्धियुक्ताहि फलं त्यक्त्वा मनीषिणः ।
जन्मबन्धविनिर्मुक्ताः पदं गच्छन्त्यनामयम् ॥ ५१

[கர்மஜம் புத்தியுக்தாஹி
பலம் த்யக்த்வா மனீஷிண: ।
ஜன்மபந்தவினிர்முக்தா:
பதம் கச்சந்த்யனாமயம் ॥]

ஸுகதுக்கங்களில் ஸமத்வ புத்தியுடைய விவேகிகள், கர்மத்தினாலுண்டாகும் பயன்களை விட்டொழித்து, ஞானமுடையவர்களாகிப் பிறவித் துன்பத்திலிருந்து விடுபட்டுத் துன்பமற்ற மோக்ஷத்தை அடைகிறார்கள்.

[**'அனாமயம்'** என்கிற சொல், ஸ்வர்க்கம் முதலிய ஸுகங்களுக்கு அழிவுண்டு, மோக்ஷத்திற்கு அழிவில்லை; மோக்ஷமடைந்தால் பிறகு துயரமே கிடையாது என்பதை எடுத்துக்காட்டவே உபயோகிக்கப் பட்டுள்ளதாகத் தோன்றுகிறது.]

यदा ते मोहकलिलं बुद्धिर्व्यतितरिष्यति ।
तदा गन्तासि निर्वेदं श्रोतव्यस्य श्रुतस्य च ॥ ५२

[யதா தே மோஹகலிலம் புத்திர்வ்யதிதரிஷ்யதி ।
ததா கந்தாஸி நிர்வேதம் ச்ரோதவ்யஸ்ய ச்ருதஸ்யச॥]

எப்போது உன்னுடைய புத்தி உடலே ஆன்மா என்னும் அறியாமையாகிய குற்றத்தைக் (தோஷத்தை) கடக்குமோ அப்போது இதுவரை கேட்டுள்ள தத்வ விசேஷங்களிலும் (வேதாந்த தத்வங்களில்), இனி கேட்கப்போகிற வேதாந்தார்த்தத்திலும் வெறுப்பையடைவாய்.

[**ஸ்ரீ சங்கரர்** :–இனி கேட்கப்போகிற வேதாந்த தத்வங்களிலாவது, இதுவரையில் கேட்டுள்ள

தத்வங்களிலாது உனக்கு வெறுப்பு ஏற்படலாகாது. ஏனென்ருல் நீ அஞ்ஞான நிலையில் இருக்கிருய். வேதாந்த தத்வங்களையறிந்து அதன்படி நடக்க வேண்டியவனுகவும் இருக்கிருய். கர்மத்தையும், அதைச் செய்யவேண்டிய விவரங்களையும் சொல்வன வாகிய (ச்ருதி) வேத வாக்யங்களில் வெறுப்படை வது ப்ரும்மஞானிகளுக்குத் தகும். நீ அப்படிச் செய் வதற்குத் தகுதியற்றவன். உனக்கு இன்னும் அத் தகைய ஞானம் ஏற்படவில்லை.

[**ஸ்ரீ ராமானுஜர் :**—எப்போது உன் புத்தி அஞ் ஞானத்தைக் கடக்குமோ, அப்போது நான் இதுவரை எதை விடச்சொன்னேனே, இனி எதைச் சொல்லப் போகிறேனே அவைகளில் வைராக்யத்தை அடை வாய்.]

श्रुतिविप्रतिपन्ना ते यदा स्थास्यति निश्चला ।
समाधावचला बुद्धिः तदा योगमवाप्स्यसि ॥ ५३

[ச்ருதிவிப்ரதிபன்ன தே யதா ஸ்தாஸ்யதி நிஸ்சலா |
ஸமாதாவசலா புத்தி: ததா யோகமவாப்ஸ்யஸி ||]

அநேக விஷயங்களைக் கேட்டிருப்பதினுல் கலக்க மடைந்துள்ள உன்னுடைய புத்தி கலக்கம் தெளிந்து, எப்போது, பரம்பொருளிடத்தில் இடைவிடாத த்யானித்தலில் (ப்ரும்ம நிஷ்டையில்) நிலையாய் நிற்கு மோ, அப்போது தத்வ அறிவு பெறுவாய் (கர்ம யோகத்தின் பயனுன தத்வஞான யோகத்தை அடை வாய்).

अर्जुन उवाच (*அர்ஜுனன் கேழ்க்கிறுன்*)

स्थितप्रज्ञस्य का भाषा समाधिस्थस्य केशव ।
स्थितधीः किं प्रभाषेत किमासीत व्रजेत किम् ॥ ५४

*[ஸ்திதப்ரஞஸ்ய கா பாஷா ஸமாதிஸ்தஸ்ய கேசவ ।
ஸ்திததீ: கிம் ப்ரபாஷேத கிமாஸீத வ்ரஜேத கிம் ॥]*

ஹே கேசவா! ஸமாதியில் நிலைத்த அறிவு அடைந்தவனுடைய லக்ஷணம் எப்படிப்பட்டது? நிலைத்த ஞானி எப்படிப் பேசுவான்? எப்படியிருப்பான்? எப்படி நடப்பான்?

श्रीभगवानुवाच (*பகவான் சொல்கிறுர்*)

प्रजहाति यदा कामान् सर्वान् पार्थ मनोगतान् ।
आत्मन्येवात्मना तुष्टः स्थितप्रज्ञस्तदोच्यते ॥ ५५

*[ப்ரஜஹாதி யதா காமான்
ஸர்வான் பார்த்த மனேகதான் ।
ஆத்மன்யேவாத்மனு துஷ்ட:
ஸ்திதப்ரஞஸ்ததோச்யதே ॥]*

ஓ பார்த்தா! எப்போது ஒருவன் மனதிலுள்ள எல்லா விருப்பங்களையும் விட்டொழித்து, ஆன்மாவிலேயே மகிழ்ச்சியுள்ளவனுக ஆகின்றுனே அப்போது அவன் நிலைத்த ஞானியாகிறுன்.

[இதனுல் ஆத்மஸந்துஷ்டிதான் நிலைத்த ஞானியின் இலக்கணமென்று ஆகும். ஸ்ரீ சங்கரர், ராமானுஜர், மத்வர் ஆகிய மூவரும், 'ஆத்மன்யேவ' என்பதற்கு 'ப்ரத்யகாத்மஸ்வரூபத்தில்' என்று உரை செய்துள்ளனர்.]

दुःखेष्वनुद्विग्नमनाः सुखेषु विगतस्पृहः ।
वीतरागभयक्रोधः स्थितधीर्मुनिरुच्यते ॥ ५६

[து:கேஷ்வனுத்விக்னமனா: ஸுகேஷு விகதஸ்ப்ருஹ:।
வீதராகபயக்ரோத: ஸ்திததீர்முனிருச்யதே ॥]

துயரமேற்படும்போது, துயரத்தால் துடிக்காத மனமுடையவனும், ஸுகமேற்பட்டால் அதில் பற்றற்றவனும், விருப்பம், அச்சம், சினம் ஆகியவை இல்லாதவனும் இருக்கிற முனி நிலைத்த ஞானி எனச் சொல்லப்படுகிறான்.

[**ஸ்ரீதரர் :**—இந்த ச்லோகத்தினாலும், இதற்கு முந்திய ச்லோகத்தினாலும் நிலைத்த ஞானியின் லக்ஷணம் சொல்லப்பட்டதாகக் கருதுகிறார்.

[**ஸ்ரீ ராமானுஜர் :**-முன் ச்லோகத்தில் எவனைப் பற்றிச் சொல்லப்பட்டதோ அவன் முதல் படியிலுள்ள மனிதன். அவனே இப்புவி (பிரபஞ்ச) வாசனை முழுதுமற்றவன். இந்த (56-ஆவது) ச்லோகத்தில் சொல்லப்பட்டவன் இரண்டாவது படியிலுள்ளவன். பிரபஞ்ச வாஸனை முழுதுமற்றுப் போகாது சிறிது பற்றுள்ளவன்.]

यस्सर्वत्रानभिस्नेहस्तत्तत्प्राप्य शुभाशुभम् ।
नाभिनन्दति न द्वेष्टि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५७

[யஸ்ஸர்வத்ரானபிஸ்னேஹ-
ஸ்தத்தத்ப்ராப்ய சுபாசுபம் ।
நாபிநந்ததி ந த்வேஷ்டி
தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥]

எவன் எல்லாவற்றிலும் பற்றற்றவனும், தனது இச்சைகளையடைந்தாலும் ஸந்தோஷமடையாமலும்,

துன்பம் நேரிடினும் துயரடையாமலும், வெறுப்பு ஏற்படாமலுமிருக்கிறானோ அவன் நிலைத்த ஞான முடையவன்.

[இதில் சொல்லப்பட்டவன் மூன்றாவது வகுப் பினன், உதாசீனன் என்று ஸ்ரீ ராமானுஜர் கூறுகிறார். ஸ்ரீதரர், 54-ஆவது ச்லோகத்தில் அர்ஜுனனால் கேட்கப்பட்ட இரண்டாவது கேள்விக்கு இது பதில் எனக் கருதுகிறார்.]

यदा संहरते चायं कूर्मोऽङ्गानीव सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५८

[யதா ஸம்ஹரதே சாயம்
கூர்மோஅங்கானீவ ஸர்வச: ।
இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்ய-
ஸ்தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥]

நிலைத்த அறிவுபடைத்த யோகி, ஆமை வெளியே நீட்டப்பட்டத் தன் அவயவங்களை உள்ளுக்கிழுத்துக் கொள்வதுபோல், எல்லா விஷயங்களிலிருந்தும் (புலன் களுக்கு மகிழ்ச்சி தருவனவிலிருந்து) தனது புலன் களை எப்போது உள்ளுக்கிழுத்துக்கொள்வானோ அப் போது அவனுடைய அறிவு (ஞானம்) நிலைத்ததென்று சொல்லப்படும்.

[**ஸ்ரீதரர்** :—ஆமை தன்னவயவங்களை வருத்த மின்றி ஒட்டினுள் இழுத்துக்கொள்வதுபோல், இவன் விஷயங்களில் ஈடுபடும் புலன்களை வருத்தமின்றிச் சுவாதீனம் செய்துகொள்வான்.

ஸ்ரீ ராமானுஜர் :—இந்த்ரியங்களை இழுத்தும், விட்டும் தன்வயப்படுத்தியுள்ள இவன் நான்காவது வகுப்பைச் சேர்ந்தவன்.]

विषया विनिवर्तन्ते निराहारस्य देहिनः ।
रसवर्जं रसोऽप्यस्य परं दृष्ट्वा निवर्तते ॥ ௫௯

[விஷயா விநிவர்த்தந்தே
நிராஹாரஸ்ய தேஹிந: |
ரஸவர்ஜம் ரஸோஅப்யஸ்ய
பரம் த்ருஷ்ட்வா நிவர்ததே ||]

உணவு உட்கொள்ளாத (புலன்களின் வழியே விஷயஸுகங்களை உட்கொள்ளாத) உடலையுடையவனுக்கு (ஆன்மாவிற்கு) இச்சை (ஆசை)யைத் தவிர விஷயானுபவங்கள் நீங்கப்பெறும். இந்த இச்சையும் கூட பரமாத்மாவைப் பார்த்தால் நிலையுள்ள ஞானத்தையடைந்தவனுக்கு நீங்கிவிடும்.

['விஷயா:' என்ற சொல்லிற்கு ஸ்ரீ சங்கரர் புலன்கள் என்றும், 'பரம்' என்பதற்கு 'தன்னையே பரமாத்மாவாக' என்றும் பொருள் கூறுகிறார். ஸ்ரீ ராமானுஜர், 'விஷயங்களைத்தாண்டி வேறாகவும், ஸுக ஸ்வரூபமாக இருக்கிற ஆத்மஸ்வரூபத்தை' என்றும் பொருளுரைக்கின்றார்.

புலன்கள் வெளியேயுள்ளவைகளை எப்போதும் பார்க்கின்றதால் அவைகளுக்கு வெளியேயுள்ள வஸ்துக்கள் நிலைப்பொருள்களாகின்றன. ஆகையால் புலன்களை முதலில் அடக்கவேண்டும். புலன்களை அடக்கினாலும் மனம் அடங்காது. பரமாத்மஸ்வரூபத்தைத் தன்னுள் கண்டுவிட்டால் மனதும் கட்டுண்டுபோகும். இது ஒரு வகைக்கருத்து. உணவு உட்கொள்ளாமலிருந்தால், உடல் வலிமை குன்றி, கண், வாய் போன்ற புலன்கள் விஷயங்களிலிருந்து பிரிந்துவிடுமாயினும், இப்படிப் புலன்கள் அடக்கம் பெறுவது, பரமாத்ம

ஸ்வரூபத்தைக்காணவோ, மனதிலுள்ள ஆசையை யடக்கவோ பயன்படாது. நிலையுள்ள புத்தியை யடைந்த ஞானி தன்னிச்சையாகவே புலன்களையடக்கி மனதைப் பரமாத்மாவினிடம் அடக்கிப் பரமாத்ம ஸ்வரூபத்தைக் காண்கிறான் என்பது மற்றொரு கருத்து.]

यततो ह्यपि कौन्तेय पुरुषस्य विपश्चितः ।
इन्द्रियाणि प्रमाथीनि हरन्ति प्रसभं मनः ॥ ६०

[யததோ ஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபஸ்சித: ।
இந்த்ரியாணி ப்ரமாதீனி ஹரந்தி ப்ரஸபம் மன: ॥]

வீடுபேறு (மோக்ஷம்) அடைய பிரயத்னம் செய்யும் விவேகியின் மனதையுங்கூடக் கலங்கும்படிச் செய்யும் புலன்கள் அம்மனதை வலுவாக (கட்டாயப் படுத்தி) இழுத்துக்கொண்டுபோகின்றன.

[விவேகிகளின் மனதைக்கூட இழுத்துச் செல்லும் என்று சொல்லப்படுவதால் ஸாதாரண மானிடனின் மனதை இழுத்துக்கொண்டுபோவது ஆச்சர்யமல்லவென்பது புலனாகிறது.]

तानि सर्वाणि संयम्य युक्त आसीत मत्परः ।
वशे हि यस्येन्द्रियाणि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६१

[தானி ஸர்வாணி ஸம்யம்ய
யுக்த ஆஸீத மத்பர: ।
வசே ஹி யஸ்யேந்த்ரியாணி
தஸ்ய ப்ரஞா ப்ரதிஷ்டிதா ॥]

அந்த (முன்சொன்ன) புலன்களை யடக்கிய மன நிலையுள்ளவனாக, என்னையே பரம்பொருளாக எண்ணினவனாக இருக்கவேண்டும். எவனுக்குப் புலன்கள் வசமாகியிருக்கின்றனவோ அவனே நிலைத்த அறிவு (ஞானம்) பெற்றவனெனச் சொல்லப்படும்.

[ஸ்ரீ சங்கரர், 'மத்பர:' என்ற சொல்லிற்குப் பரமாத்மா தானே என்று நினைத்தவனாகவும் எனப் பொருள் உரைக்கிறார். ஸ்ரீராமானுஜர், அச்சொல்லிற்கு என்னிடத்தில் மனதை வைத்தவனாக எனப் பொருள் கூறுகிறார். ஸ்ரீதரர், அர்ஜுனனின் மூன்றாவது வினாவான "நிலைத்த ஞானமடைந்தவன் எப்படி இருப்பான்?" (54-ஆவது ச்லோகம்) என்பதற்கு இந்த விடை கூறப்பட்டதாகக் கூறுகிறார். புலன்களை அடக்க மனதின் நிலையும், பரமாத்மாவிடத்தில் நம்பிக்கையும் காரணமாகுமென்பது இந்த ச்லோகத்தில் சொல்லப்பட்டுள்ளது.]

ध्यायतो विषयान्पुंसः सङ्गस्तेषूपजायते ।
सङ्गात् सञ्जायते कामः कामात्क्रोधोऽभिजायते ॥ ६२

[த்யாயதோ விஷயான்பும்ஸ:
ஸங்கஸ்தேஷூபஜாயதே |
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:
காமாத்க்ரோதோஅபிஜாயதே ||]

क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद्बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति ॥ ६३

[க்ரோதாத்பவதி ஸம்மோஹ:
ஸம்மோஹாத்ஸ்ம்ருதிவிப்ரம: |

ஸ்ம்ருதிப்ரம்சாத்புத்திநாசோ
புத்திநாசாத்ப்ரணச்யதி ‖]

உலகிலுள்ள பொருள்களின்மீது எப்போதும் நினைப்புள்ள மனிதனுக்கு, அத்தகைய பொருள்களின் மீது பற்றுதலுண்டாகிறது. அப்பற்றுதலிலிருந்து ஆசையும், ஆசையினுல் கோபமும், கோபத்தினுல் அறிவின்மையும், அறிவின்மையால் நினைப்பின்மையும் (மறதியும்), மறதியினுல் புத்திக்கு அழிவும், ஒன்றிலிருந்து ஒன்ருக உண்டாகின்றன. புத்தி அழிவினுல் முழுதும் கெட்டுவிடுகிருன்.

[**ஸ்ரீ சங்கரர்** :-பொருள்களின்மீது வைக்கப்படும் எண்ணத்தால் (விஷய சிந்தையால்) ஏற்படும் பிரமாதங்கள் இங்கு சொல்லப்பட்டன. ஏனெனில், புலன்களை விஷயங்களில் செல்லாது அடக்கவேண்டியதும், அதேபோல் மனதை அடக்கவேண்டுமென்பதும் அவச்யம் என்பதைப் புலப்படுத்தவே.]

'ஸ்ம்ருதி விப்ரம:'=சாஸ்த்ரம், ஆசார்ய உபதேசம் இவைகளால் அறியப்பட்டதை மறத்தல்.

—ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், மத்வர்

'புத்தி நாச:'=செய்வது யாது, செய்யத்தகாதது யாது என ஆராய்வதற்கான அந்தக்கரணம் (மனச்சாக்ஷி) துர்பலமடைதல். —ஸ்ரீசங்கரர்.

रागद्वेषवियुक्तैस्तु विषयानिन्द्रियैश्चरन् ।
आत्मवश्यैर्विधेयात्मा प्रसादमधिगच्छति ॥ ६४

[ராகத்வேஷவியுக்தைஸ்து விஷயாநிந்த்ரியைஸ்சரன் ।
ஆத்மவச்யைர்விதேயாத்மா ப்ரஸாதமதிகச்சதி ‖]

விருப்பும் வெறுப்பு மற்று, தன்வயப்பட்ட (தனக்கு ஸ்வாதீனமான) புலன்களினுல் உணவு போன்ற

வற்றை (உலக ஸுகங்களை) அனுபவிக்கிறவனுனு லும், அவன் மனத்தெளிவை அடைகிறுன்.

[ஸ்ரீதரர் அர்ஜுனனின் நான்காவது வினுவான, "நிலைத்த ஞானமுடையவன் எப்படி நடப்பான்?" என்பதற்கு இது விடை எனக் கொள்கிறுர். புலன் களைக் கட்டுப்படுத்தி பரம்பொருள் த்யானத்தில் இடைவிடாது ஈடுபட்ட ஞானிக்கும் உடலைக்காப் பாற்றிக்கொள்ள வேண்டியது அந்த த்யானம் கெடா மலிருக்க அவச்யமாகையால், தேவையான அளவுக்கு உணவுபோன்றவைகளில் புலன்களை உபயோகிக்க லாம். புலன்களைத் தன்வசப்படுத்திய ஞானிகளுக்கு உடலைப் பாதுகாப்பதில் ஏற்படும் விஷயானுபவ மானது த்யானத்திற்குத் தடையாகாது என்பது கருத்து.]

प्रसादे सर्वदुःखानां हानिरस्योपजायते ।
प्रसन्नचेतसो ह्याशु बुद्धिः पर्यवतिष्ठते ॥ ௬௫

[ப்ரஸாதே ஸர்வ து:க்கானும்
ஹானிரஸ்யோபஜாயதே।
ப்ரஸன்னசேதஸோ ஹ்யாசு
புத்தி: பர்யவதிஷ்டதே ॥]

மனத்தெளிவு உண்டானவனுக்கு எல்லாத்துய ரங்களும் அழிந்துபோகும். தெளிவு அடைந்த மன முள்ளவனுக்கு விரைவில் புத்தி ஸ்திர நிலையை (நிலைத்த நிலையை) அடையும்.

['புத்தி: பர்யவதிஷ்டதே' என்பதற்கு, ஸ்ரீ சங்கரர், புத்தி அகண்ட பிரும்மாகாரமாக நிற்கும், அதாவது பரப்ரும்மம் தவிர வெறென்றுகத் தோன்றுது என் றும், ஸ்ரீ ராமானுஜர், ஆத்ம தர்சனம் உண்டாகும் என்றும் பொருள் கூறுகின்றனர்.]

नास्ति बुद्धिरयुक्तस्य न चायुक्तस्य भावना ।
न चाभावयतः शान्तिरशान्तस्य कुतः सुखम् ॥ ६६

[நாஸ்தி புத்திரயுக்தஸ்ய ந சாயுக்தஸ்ய பாவனா ।
ந சாபாவயத: சாந்திரசாந்தஸ்ய குத: ஸுகம் ॥]

புலன்களை ஸ்வாதீனப் படுத்தாதவனுக்கு ஆத்ம ஸ்வரூப அறிவுமில்லை, ஆத்மத்யானமுமில்லை. ஆத்ம த்யானமற்றவனுக்கு ஆத்மாவினிடத்தில் (பரப்ரும்ஹத்தினிடம்) மனது நிலைக்கிறதில்லை. நிலையற்ற மனமுள்ளவனுக்கு ஸுகமேது?

[புலன்களை விஷய ஸுகங்களில் ஈடுபடும்படி விட்டிருக்கும்வரை ஸுகம் (நிரந்தரமான ஆனந்தம்) இருக்கமாட்டாது என்பது ஸ்ரீ சங்கரரின் கருத்து. ஸ்ரீ ராமானுஜர், அத்தகைய மனிதனுக்கு மோக்ஷமாகிற ஆனந்தம் ஏது என்று பொருள் கூறுகிறார்.]

इन्द्रियाणां हि चरतां यन्मनोऽनुविधीयते ।
तदस्य हरति प्रज्ञां वायुर्नावमिवाम्भसि ॥ ६७

[இந்த்ரியாணாம் ஹி சரதாம் யன்மனோஅநுவிதீயதே ।
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவமிவாம்பஸி ॥]

விஷயஸுகங்களில் ஈடுபடுகின்ற புலன்களை எந்த மனம் பின்தொடர்ந்து செல்லுகின்றதோ (எந்த மனம் புலன்களை அவை செல்லும் வழியில் விட்டு விடுகிறதோ) அந்த மனம் ஒரு மனிதனின் விவேகத்தைக் கடலில் காற்று எப்படி ஒரு கப்பலை இழுத்துச் செல்லுமோ அப்படி இழுத்துக்கொண்டு போகிறது.

तस्माद्यस्य महाबाहो निगृहीतानि सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६८

[தஸ்மாத்யஸ்ய மஹாபாஹோ
நிக்ருஹீதானி ஸர்வச: |
இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்ய:
தஸ்ய ப்ரஞா ப்ரதிஷ்டிதா ||]

தோள் வலிமையுடைய அர்ஜுனா! புலன்கள் மனதை இழுத்துக்கொண்டு போகும் சக்தியைப் பெற்றுள்ளனவாகையால், எவனுடைய புலன்கள் விஷயங்களிலிருந்து விடுவிக்கப்படுகின்றனவோ அவனுடைய அறிவு நிலைத்த தன்மையையுடையது எனச்சொல்லப் படும்.

या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी ।
यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः ॥ ६९

[யா நிசா ஸர்வபூதானும் தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ |
யஸ்யாம் ஜாக்ரதி பூதானி ஸா நிசா பச்யதோ முனே:||]

எல்லா ப்ராணிகளுக்கும் எது இரவாகவுள்ளதோ அதில் புலன்களையடக்கியவன் விழித்துக்கொண்டிருக்கிறான். எதில் ப்ராணிகள் விழித்துக்கொண்டிருக்கின்றனவோ, அது ஆத்ம அறிவுபெற்ற ஞானிக்கு (முனிக்கு) இரவாகிறது.

[புலன்களையடக்கிய ஆத்மஞானிக்கு உலக விஷயங்களில் ஈடுபாடு ஏற்படாது. எனவே அவனுக்கு உலக விஷயங்கள் இரவு போலவும், பரமாத்மஸ்வரூப தர்சனம் பகல் போலவும் இருக்கின்றன. புலன்களை

அடக்காத அஞ்ஞானிக்கு ப்ரும்ஹ நிஷ்டையில் ஈடு பாடு இருக்காதாகையால், அவனுக்கு அது இரவு போலவும், உலக விஷயங்களைப் பார்ப்பது பகல் போலவுமிருக்கும். உலகப் பற்றுகளில் ஈடுபட்டவன் அவைகளில் களித்து விழித்துக்கொண்டு இருக்கிறான். பரம்பொருளின் ஸ்வரூபத்தைக் காணாது தூங்கி விடு கிறான். ஞானி பரமாத்ம ஸ்வரூபத்தில் கவனத்துடன், விழிப்புடன் இருக்கிறான். எந்த உலக விஷயங்களில் அஞ்ஞானிகள் விழிப்பாக இருக்கின்றனரோ, அதில் பற்றற்றவனாய் ஞானி கண்ணை மூடி (மறந்து) தூங்கு கிறான்.]

आपूर्यमाणमचलप्रतिष्ठं समुद्रमापः प्रविशन्ति यद्वत् ।
तद्वत्कामा यं प्रविशन्ति सर्वे स शान्तिमाप्नोति न कामकामी ॥

௭௦

[அபூர்யமாணமசலப்ரதிஷ்டம்
ஸமுத்ரமாப: ப்ரவிசந்தி யத்வத் |
தத்வத்காமா யம் ப்ரவிசந்தி ஸர்வே
ஸ சாந்திமாப்னோதி ந காமகாமீ ||]

தண்ணீர் நிறைந்த ஸ்திரமான நிலையையுடைய கடலைத் தண்ணீரைக்கொண்ட ஆறுகள் முதலியவை சென்று எப்படி அடையுமோ அதுபோல, எல்லா உலகப் பற்றுக்களும் ப்ரும்ஹஞானியை அடைந்த போதிலும் அவன் அதனால் மாறுபடாது மோக்ஷத்தை யடைகிறான். உலக விஷயங்களில் பற்றுள்ளவன் மோக்ஷமடைகிறதில்லை. [கடலில் பல ஆறுகள் தங்க ளுடையத் தண்ணீரைக் கொண்டு சேர்க்கின்றன. அதனால் கடல் நீர் மாறுபாடு அடைகிறதில்லை. ஒரே

நிலையில் இருக்கிறது. அதுபோல ஞானி உலகப் பற்றுகளால் மாறுபடுவதில்லை. உலக விஷயங்களில் ஈடுபட்டுள்ள அஞ்ஞானி சாந்தமடைவதில்லை. அவைகள் அவன் மோக்ஷமடைய உதவா.]

विहाय कामान्यः सर्वान्पुमांश्चरति निःस्पृहः ।
निर्ममो निरहङ्कारः स शान्तिमधिगच्छति ॥ ७१

[விஹாய காமான்ய: ஸர்வான்
புமாம்ஸ்சரதி நி:ஸ்ப்ருஹ: |
நிர்மமோ நிரஹங்கார:
ஸ சாந்திமதிகச்சதி ||]

பரம்பொருளான ப்ரும்ஹத்தில் எவன் லயித்துள்ளானோ, எவன் எல்லா உலகப்பற்றுள்ள விஷயங்களையும் விட்டு, எல்லாவற்றிலும் ஆசை, தான் என்னும் எண்ணம் (மமதை), அஹங்காரம் முதலியவைகளற்று, உடலைக் காத்துக்கொள்வதற்காக மட்டும் வெளி உலகில் சஞ்சரிக்கின்றானோ (உழல்கின்றானோ) அவன் எல்லாத் துயர்களிலிருந்தும் விடுபட்டு வீடு பேறு (மோக்ஷம்) அடைகின்றான்.

['நிர்மம:' என்பதற்கு ஸ்ரீ சங்கரர் தன்னுடைய தேஹமோ, தன்னுடைய தேஹத்தினைக் காக்கக் கூடிய பொருளோ தன்னுடையதென்ற எண்ணமில்லாதவன் என்று பொருள் கூறுகின்றார். நிரஹங்கார: = நான் ப்ரும்ஹ நிஷ்டையில் இருப்பவன் மற்றவர் இப்படிச் செய்யக்கூடுமா என்ற கர்வமில்லாதவன் (ஸ்ரீ சங்கரர்). தேகமே ஆத்மாவென்ற எண்ணமில்லாதவன். சாந்திம் = ப்ரும்ஹஸ்வரூபத்தை (ஸ்ரீ சங்கரர்)

54-ஆவது ச்லோகத்தில், அர்ஜுனன் கேட்ட கடைசிக் கேள்வியான 'நிலைத்த ஞானமுடையவன் எப்படி நடந்து கொள்வான்' என்பதற்கு இங்கு விடை கூறப்பட்டுள்ளது.]

एषा ब्राह्मी स्थितिः पार्थ नैनां प्राप्य विमुह्यति ।
स्थित्वाऽस्यामन्तकालेऽपि ब्रह्मनिर्वाणमृच्छति ॥ ७२

[ஏஷா ப்ராஹ்மீ ஸ்த்திதி: பார்த்த
நைனும் ப்ராப்ய விமுஹ்யதி |
ஸ்த்தித்வாஅஸ்யாமந்தகாலேஅபி
ப்ரஹ்மநிர்வாணம்ருச்சதி ||]

அர்ஜுன! இதுவரை ப்ரும்ஹஞான நிஷ்டை சொல்லி வரப்பட்டது. இதை அடைந்த பிறகு, பிறவிக்கடலின் மோஹத்தை (ஸம்ஸார மோஹத்தை) அடைகிறதில்லை. இறக்கும் காலத்திலிருந்த போதிலும் அவன் ப்ரும்ஹஸ்வரூபத்தில் ஒன்றிப் போகிறுன்.

[பிறப்பு முதல் மரணமடையும் வரையில் ப்ரும்ஹ ஞான நிஷ்டையில் ஒருவன் இருப்பானுகில், அவன் மோக்ஷமடைகிறுன் என்பது ஒரு சாராரின் அபிப்ராயம். ஆனுல் பெருவாரியான உரையாசிரியர்கள், ஒருவன் தான் மரணமடையும் தருவாயில் ப்ரும்ஹஸ்வரூபத்தில் ஒன்றிப்போனுனுகிலும்கூட அவன் மோக்ஷமடைகிறுன் என்று அபிப்ராயப்படுகின்றனர்.]

ஸாங்க்யயோகம் என்கிற இரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

மூன்றாவது அத்யாயம்

கர்மயோகம்

अर्जुन उवाच (அர்ஜுனன் சொன்னான்)

ज्यायसी चेत्कर्मणस्ते मता बुद्धिर्जनार्दन ।
तत्किं कर्मणि घोरे मां नियोजयसि केशव ॥ १

*[ஜ்யாயஸீ சேத்கர்மணஸ்தே மதா புத்திர்ஜனார்த்தன ।
தத்கிம் கர்மணி கோரே மாம் நியோஜயஸி கேசவ ॥]*

"ஜனார்த்தனா! கர்மத்தைப் பார்க்கிலும் (செய்கைகளிலீடுபடுவதைக் காட்டிலும்) ஞானத்தை (ஆத்ம தத்வத்தை) அடைவது மேலானதென உமது அபிப்ராயமானால், ஓ கேசவா! அப்போது எக்காரணத்தைக் கொண்டு பயங்கரமான கர்மத்தில் என்னை ஊக்குவிக்கின்றாய்?" என்று க்ருஷ்ண பகவானை அர்ஜுனன் கேட்டான்.

[**ஸ்ரீ சங்கரர்** :- ப்ரவ்ருத்தி (ஈடுபடல்) நிவ்ருத்தி (விடுபடல்) என இருவகை புத்தி (சிந்தனைகள்) உண்டு. முன்னர் ஸாங்க்ய யோகம் என்ற இரண்டாவது அத்யாயத்தில் "ப்ரஜஹாதி யதாகாமான்" என்ற 55-ஆவது ச்லோகம் முதல் 72-ஆவது ச்லோகம் வரை ஸாங்க்யமாகிய நிவ்ருத்தி புத்தி அதாவது கர்ம ஸந்யாஸத்தினால் பயனடையலாமெனக் கூறப்பட்டது. அதே இரண்டாவது அத்யாயத்தில் "கர்மண்யேவாதிகாரஸ்தே" என்ற 47-ஆவது ச்லோகத்தில் ப்ரவ்ருத்தி புத்தியினால் பயனடையலாமென்றும் சொல்லப்பட்டது. ஆகவே இவ்விரண்டினாலும் முக்தி

பெறக் கூடுமானுல், சுலபமான நிவ்ருத்தி மார்க்கத்தை விட்டு, கடினமான ப்ரவ்ருத்தி புத்தியைக்கொண்டு கர்மம் செய்வதில் ஈடுபடும்படி ஏன் என்னை ஏவுகிருய் என்பது அர்ஜுனனின் விஞ.

ஸ்ரீ ராமானுஜர் :— புலன்களை அடக்கிச் செய்ய வேண்டி ஆன்மீக அறிவு பெறும் வழியைக் கூறினீர். புலன்களையடக்கி, உலக விஷயங்களில் ஈடுபடுத்தி செய்யக்கூடிய பயன்கருதாக் கர்மம் ஞானத்திற்குக் காரணமென்றும் உரைத்தீர். புலன்களை விஷயங்களில் ஈடுபடுத்தக்கூடியதும், ஞானமடையும் வழிக்கு விரோத மாகவும் உள்ள பயங்கரமான கர்மத்தைச் செய்ய (போர்புரிய)த் தூண்டுகிறீர்களே இது ஏன்? என்பது அர்ஜுனனின் விஞவுக்குப் பொருள்.

குறிப்பு :— இங்கு ஸந்தேஹமேற்படுக்கூடும். மோக்ஷத்திற்கு ஞானம் ஸாதனமா? அல்லது கர்மாவே ஸாதனமா? அல்லது கர்மா, ஞானம் ஆகிய இரண்டுமே வழியா? ச்ருதி ஸ்ம்ருதிகளில் வர்ணுச்ரம தர்மத்திற்குக் கட்டுப்பட்ட ப்ரம்ஹசாரி, இல்வாழ்க் கையிலுள்ளவன் (க்ருஹஸ்தன்), வானப்ரஸ்தன், துறவி (ஸன்யாஸி) ஆகிய நான்கு படிகளுள்ளோருக் கும் கர்மஸன்யாஸம் சொல்லப்பட்டுள்ளது. மேலும், துறவறம் மேற்கொள்ளாதவனுக்கே கர்மம் செய்ய வேண்டியதாகவும் கூறப்பட்டுள்ளது. மோக்ஷத்தை விரும்பும் ஞானமார்க்கத்திலுள்ளவனுக்கு கர்மாசெய்ய வேண்டியதில்லை என்பதற்குப் பல ஆதாரங்கள் உள் ளன. ஆகையால் கர்மம் செய்யவேண்டியதும், ஞான நிஷ்டையில் நிலை பெறுவதும் ஒருவனுக்கே சொல்லப் பட்டதாகக் கருதுவதற்கில்லை. அந்தந்த தனிப்

பட்ட மனிதனைப் பொருத்தது அவனவன் ஈடுபடும் வழி அமையும். மோக்ஷமடைய ஆத்மஞானம் அடைவது வழி என்பதை பின்னர் கீதையின் 18-ஆவது அத்யாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.]

व्यामिश्रेणेव वाक्येन बुद्धिं मोहयसीव मे ।
तदेकं वद निश्चित्य येन श्रेयोऽहमाप्नुयाम् ॥ २

[வ்யாமிச்ரேணேவ வாக்யனே
புத்திம் மோஹயஸீவ மே ।
ததேகம் வத நிஸ்சித்ய
யேன ச்ரேயோஅஹமாப்னுயாம் ॥]

“ஸந்தேஹத்தையுண்டாக்குகிறது போன்ற வாக்யத்தினால் என்னுடைய புத்தியை மயங்கச் செய்பவர் போலக் காண்கிறீர். எதனால் மோக்ஷத்தை நான் அடையக்கூடுமோ, அதைத் தீர்மானித்துச்சொல்லும்” என்றான் அர்ஜுனன்.

श्रीभगवानुवाच (ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொன்னார்)

लोकेऽस्मिन्द्विविधा निष्ठा पुरा प्रोक्ता मयानघ ।
ज्ञानयोगेन साङ्ख्यानां कर्मयोगेन योगिनाम् ॥ ३

[லோகேஅஸ்மின்த்விவிதா நிஷ்டா
புரா ப்ரோக்தா மயானக ।
ஞானயோகேன ஸாங்க்யானாம்
கர்மயோகேன யோகினாம் ॥]

பாபமற்ற அர்ஜுனு! முன்னர் (2-ஆவது அத்யாயத்தில்) இவ்வுலகில் ஞான நிலையில் ப்ரும்ஹ நிஷ்டை செய்ய முயற்சிப்பவர்களுக்கு (ஸாங்க்யர் களுக்கு) ஞானமடையச் செய்யவேண்டிய த்யான மாகிய ஞானயோகத்தினுலும், கர்மயோகிகளுக்கு (கர்மம் செய்து அதனுல் எண்ணம் சுத்தமடைந்து பிறகு ஞான யோகத்தில் ஈடுபடக்கூடியவர்களுக்கு) பயன்கருதாக் கர்மயோகத்தினுலும் என்று இரு விதமான வழிகள் என்னுல் கூறப்பட்டன.

न कर्मणामनारम्भान्नैष्कर्म्यं पुरुषोऽश्नुते ।
न च संन्यसनादेव सिद्धिं समधिगच्छति ॥ ४

[நகர்மணுமனுரம்பாந்நைஷ்கர்ம்யம் புருஷோஅச்நுதே|
ந ச ஸன்ன்யஸநாதேவ ஸித்திம் ஸமதிகச்சதி ||]

மனிதன் கர்மங்களைச் செய்யாமல் ஞானத்தை (பேரறிவை) அடைகிறதில்லை. கர்மத்தைச் செய்வதை விட்டுவிடுவதினுலே மாத்திரம் மோக்ஷத்தை அடைந்துவிடுவதுமில்லை.

['கர்மாணும்' என்னும் சொல்லிற்கு ஸ்ரீ சங்கரர், எல்லாப் பாவங்களையும் போக்கடிக்கக்கூடிய, ஆன்மீக அறிவு பெற வழி செய்யக்கூடிய (ஞானநிஷ்டைக்குக் காரணமாகும்) கர்மங்களுடைய (செயல்களின்) என்றும், ஸ்ரீதரர், பயன்கருதாச் செயல்களுடைய என்றும், ஸ்ரீ ராமானுஜர், பயன்கருதாது, கோவிந்தனின் ஆராதனை உருவாக அமையப்பெறுவதும், வெகு காலமாக ஏற்பட்டுள்ள பாவத்தைப் போக்கக்கூடியதுமான கர்மங்களென்றும் பொருள் கூறுகின்றனர்.

'நைஷ்கர்ம்யம்' என்ற சொல்லிற்கு, ஞான நிஷ்டையினுலுண்டாகும் செயலற்ற தன்மையாகிய ஆத்ம ஸ்வரூபமாக இருத்தலை என்று ஸ்ரீ சங்கரரும், ஞானநிஷ்டையை என்று ஸ்ரீ ராமானுஜரும், ஞானத்தினுலுண்டாகும் மோக்ஷத்தை என ஸ்ரீமத்வரும் உரை எழுதியுள்ளனர்.

'ஸித்திம்' எனும் சொல்லிற்கு ஸ்ரீ சங்கரர் பின் வருமாறு கருத்துரைக்கிறுர்:- ஞானமடைவதற்குக் கர்மானுஷ்டானம் காரணமாகவுள்ளது. மனிதன் நற்செயல்களை (விதிக்கப்பட்ட கர்மங்களை) பயன் கருதாது பரம்பொருளுக்கே அர்ப்பணித்துச் செய்து வந்தால் அதனுல் சித்தம் (எண்ணம்) சுத்தமடையும். சித்த சுத்தியால் ஞானமேற்படும். ஞானத்தினுல் மோக்ஷமடையலாம். இப்படியின்றி கர்மங்களைச் செய்யாமலே விட்டுவிடுவதினுல் ஞானமோ, அதனுல் எற்படக்கூடிய செயலற்ற நிலையில் ஆத்மஸ்வரூபனுக இருப்பதோ ஏற்படுவதில்லை.]

न हि कश्चित्क्षणमपि जातु तिष्ठत्यकर्मकृत् ।
कार्यते ह्यवशः कर्म सर्वः प्रकृतिजैर्गुणैः ॥ ५

[ந ஹி கஸ்சித்க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத் |
கார்யதே ஹ்யவச: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர்குணை: ||]

ஒரு காலத்திலும், ஒரு கணங்கூட, ஒருவனும் செயல் புரியாதவனுக இருப்பதில்லை. ஏனெனில், பிறர் வசமாகவுள்ள மக்கள் யாவரும், இயற்கையாகவுண்டான (ஸ்வபாவத்திலிருந்துண்டான) விருப்பு, வெறுப்பு முதலிய குணங்களினுல் செயல்புரியும்படிக் (கர்மம்செய்ய) கட்டாயப்படுத்தப் படுகின்றனர்.

[“குணை:” என்பதற்கு, ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களால் என்று ஸ்ரீ சங்கரரும், முன் கர்மவினை யால் வளர்ச்சியடைந்துள்ள ஸத்வம் முதலிய குணங் களால் என்று ஸ்ரீ ராமானுஜரும் பொருள் கூறுகின் றனர்.]

இந்த ச்லோகத்திற்குப் பின் கண்டபடி கீதாவ்ருத் தியில் பொருள் கூறப்பட்டுள்ளது:- விழிப்பு, கனவு, துயில் என்ற மூன்று நிலைகளிலும், ஞானமடைந்த வனுயினும், அடையாதவனுயினும், ஒரு கணம்கூட கர்மம் செய்யாது, சும்மாயிருக்கிறதில்லை. விஷ்ணுவின் வயப்பட்ட (ஆதீனமாகவுள்ள) எல்லா மக்களாலும் இயற்கையிலிருந்து உண்டான ஸத்வம் முதலிய குணங்களினுல் கர்மம் செய்யப்படுகிறது (செயல் ஏற்படுகிறது).

இந்த ச்லோகத்தின் கருத்தை ஸ்ரீ ராமக்ருஷ்ணபர ஹம்ஸர் ஒரு உவமையால் அழகாக விளக்கியுள்ளார். அஃதாவது:- ஒரு மருத்துவமனையில் (ஆஸ்பத்திரி யில்) நோயின் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட ஒரு மனிதன், அந்நோயிலிருந்து அவன் குணமடையும் வரை வெளியே வர முடியாது. நோய் குணமடைந்த பின்னர் அவன் அங்கு இருக்கவும் தேவையில்லை. இதேபோல அறியாமை (அஞ்ஞானம்) என்னும் நோயால் துயரடைபவர்கள் ப்ரக்ருதி (இயற்கை) என்ற மருத்துவமனையில் சேர்க்கப்படுகிருர்கள். ஆங்கு அவர்கள் அறியாமை என்னும் நோயிலிருந்து விடு பட்டு ஞானமான நோயின்மையையடைய கர்மா என்னும் முறையில் சிகிச்சை பெறுகின்றனர். ப்ரும்ஹ ஞானம் உதயமாகிவிட்டால் மனிதன் ப்ரக்ருதியை

விட்டு, செயல்புரியா (கர்மம் செய்யா) நிலையை எய்துகிறான்.

कर्मेन्द्रियाणि संयम्य य आस्ते मनसा स्मरन् ।
इन्द्रियार्थान्विमूढात्मा मिथ्याचारः स उच्यते ॥ ६

[கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய
ய ஆஸ்தே மனஸா ஸ்மரன் |
இந்த்ரியார்த்தான்விமூடாத்மா
மித்யாசார: ஸ உச்யதே ||]

கர்மேந்த்ரியங்களை (புலன்களை) அடக்கிக் கொண்டு எவன் மனதினால் விஷயங்களைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கிறானோ மூடனான (விவேகமற்ற) அவன் கள்ளத்தனமான நடத்தை (ஆசாரத்தை) உடையவனென்று சொல்லப்படுகிறது.

[கீதாவ்ருத்தியில் 'கர்மேந்த்ரியாணி' என்ற பதத்திற்கு ஞானேந்த்ரிய கர்மேந்த்ரியங்களை என்று பொருள் கூறப்பட்டுள்ளது. பொதுவாகக் காது, கண், நாக்கு, மூக்கு, தோல் ஆகியவை ஞானேந்த்ரியங்களென்றும், வாய், கை, கால், பாயு, காம உணர்ச்சியை வெளிப்படுத்தும் உருப்பு ஆகியவை கர்மேந்த்ரியங்களெனவும், மனதும் ஒரு இந்த்ரியமாகவும் சொல்வதுண்டு. கர்மேந்த்ரியங்களை அடக்கிவைப்பது சற்று ஸுலபமானது. அதைக் காட்டிலும் கடினமானது ஞானேந்த்ரியங்களை அடக்குவது. பிறர் தொடுவதைத் தோல் உணராமலும், மூக்கு வாஸனையை உணராமலும், நாக்கு ருசியை உணராமலும் அடக்கும் சக்தியைப் பெற்றவன் ப்ரும்மநிஷ்ட யோக்யாம்சத்தைப் பெறும் நிலைக்கு ஸமீபத்தில் வந்துவிட்டவன்.

இனி அவனுக்கு மனதை அடக்குவது மட்டிலுமே பாக்கியாக நிற்கின்றது. எனவே, ஞானேந்த்ரியங்களை யடக்கியவனை இந்த ச்லோகத்தில் சொல்லப்பட்ட மூடன், கள்ளத்தனமான ஆசாரமுடையவனுகக் கூற முடியாதெனத் தோன்றுகிறது.

ஸ்ரீ ராமக்ருஷ்ணபரமஹம்ஸர் இந்தச்லோகத்திற்கு உவமையாக ஒரு சிறு கதையைக் கூறியுள்ளார்:—ஒருநாள் இரவு இரு நண்பர்கள் பொழுதுபோக்குக்காக உலாவிவரச் சென்றனர். போகும் வழியில் ஒரு கோயிலின் வெளிப்புறத்தில் சிலர் கூடி பாகவத ப்ரவசனமொன்றைக் கேட்டுக்கொண்டிருந்தனர். அந்த இருவருள் ஒருவன் அங்கு உட்கார்ந்து பாகவதம் கேட்கலாமென்றுன். மற்றவன் தான் ஒரு வேசி வீட்டிற்குச் சென்று இரவுப்போதை மகிழ்ச்சியுடன் கழிக்க எண்ணுவதாகக் கூறிப் போனுன். முதல்வன் பாகவதத்தைக் கேட்க உட்கார்ந்தான். பாகவத ச்லோகங்களும், அவைகளின் பொருளும் அவனுடைய காதுகளில் விழுந்தனவேயன்றி, அவனுடைய மனம் தன்னுடைய நண்பன் அப்போது அனுபவித்துக் கொண்டிருந்த இன்பத்தைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது. வேசிவீடு சென்றவனின் கர்மேந்த்ரியங்கள் இன்பத்திலாழ்ந்திருப்பினும், அவனது மனம் தனது நண்பன் பாகவத புராணத்தின் கருத்துக்களை எவ்வளவு நன்றுக ருசித்துக்கொண்டிருப்பான் என எண்ணிக்கொண்டிருந்தது. எனவே பாப புண்யங்கள் கர்மேந்த்ரியங்களை அடக்கியதாலோ, அல்லது அடக்காது விட்டதாலேயோ மாத்திரம் ஏற்படுவதில்லை. மனதின் பக்குவத்தினுலேயே ஏற்படுகின்றன எனத்

தெளிவாகிறது. ஆங்கிலக் கவி **மில்டனும்**கூட ஸ்வர்க்கத்தை நரகமாகவும், நரகத்தை ஸ்வர்க்கமாகவும் மாற்றவல்லது மனமென்று கூறுவது குறிப்பிடத் தக்கது.]

यस्त्विन्द्रियाणि मनसा नियम्यारभतेऽर्जुन ।
कर्मेन्द्रियैः कर्मयोगमसक्तः स विशिष्यते ॥ ७

[யஸ்த்விந்த்ரியாணி மனஸா நியம்யாரபதேஅர்ஜுன ।
கர்மேந்த்ரியை: கமர்யோகமஸக்த: ஸ விசிஷ்யதே ॥]

அர்ஜுனா! எவன் ஞானேந்த்ரியங்களை மனதினு லடக்கி, கர்மேந்த்ரியங்களினால் கர்மயோகத்தைப் பயன் கருதாது செய்கிருனே அவன் உத்தமனுகிருன் (ச்ரேஷ்டனுகிருன்).

['மனஸா' என்ற சொல்லிற்கு ஸ்ரீ ராமானுஜர் ஆன்மாவை யறிய முயற்சிக்க ஆரம்பித்த மனதினுல் என்று பொருள் கூறுகிருர். 'நியம்ய' என்ற சொல் லிற்கு ஸ்ரீதரர் ஈச்வரார்ப்பணமாகச் செய்வது என்று பொருள் கூறுகிருர். 'கர்மயோகம்' என்ற சொல் லிற்கு ஸ்ரீ மத்வர் வர்ணுச்ரம தர்மத்தை யொட்டிய தான ஞானஸாதனமான கர்மாவை என்று விவரித் துள்ளார்].

नियतं कुरु कर्म त्वं कर्म ज्यायो ह्यकर्मणः ।
शरीरयात्रापि च ते न प्रसिद्ध्येदकर्मणः ॥ ८

[நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண: ।
சரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்த்யேத கர்மண: ॥]

நித்யமாய் (விடாது எப்போதும்) செய்யத்தக்க கர்மாவை நீ செய்க. கர்மாவைச் செய்யாது இருப்

பதைக் காட்டிலும் கர்மம் செய்வது மேலானது. கர்மமே செய்யாதிருப்பதினுல் உன்னுடைய உடலைக் காத்துக்கொள்ளக்கூட இயலாது.

[இந்த ச்லோகத்திற்கு உரையெழுதும்போது ஸ்ரீ ராமானுஜர் கூறுவதாவது:— நியாயமான முறையில் செல்வத்தைத் திரட்டி வேள்வி முதலிய நல்ல கார்யங்களைச் செய்து, யாக சேஷத்தை உண்டு, அதனுல் சித்தசுத்தியடைந்து நல்லறிவை அடைவதால், கர்மம் மேலானது என்று சொல்லப்படுகிறது. ஞானமடைவது எல்லா வழிகளைக் காட்டிலும் மேன்மையுடையது என்று சொல்லப்பட்டது, ஞானத்தையடையத் தகுதியுடையவனுக்கே சொல்லப்பட்டதேயன்றி ஞானமடையாதவன் விஷயத்தில் சொல்லப்பட்டதல்ல. ஞானத்திற்குத் தகுதியானவனின் விஷயத்தில்கூட, ஞானநிஷ்டைக்கனுகூலமான உடல்நிலைத் திருப்பத்தின் பொருட்டுத் தேவையான கர்மங்களைச் செய்ய வேண்டியவனுக இருக்கிறுன். ஆகையால் ஞான நிஷ்டைக்கு முந்திய சாதனமாக இருப்பதால் இங்கு கர்மம் செய்வது மேலானதாகக் கூறப்பட்டது.

உண்பது, உடுப்பது, உறங்குவது பூத உடல் நிலைத்திருப்பதற்குத் தேவை. உடல் நிலைத்திராவிட்டால் எக் கார்யமும் செய்யமுடியாது. ஆகவே கர்மம் செய்யாது ஒருவனுலும் இருக்கமுடியாது. இதற்காகவே நித்யகர்மாக்கள் விதிக்கப்பட்டுள்ளன. ஸ்நானம், ஸந்த்யாவந்தனம், தேவபூஜை, பித்ருகார்யம், அதிதி பூஜனம், அக்னிஹோத்ரம் முதலிய நித்ய கர்மாக்களை ஈச்வரார்ப்பணமாகப் பயன் கருதாது செய்தால் சித்த சுத்தியடைந்து, ஞானமெய்தி மோக்ஷமடையலாம். உணவு போன்ற அத்யாவச்யமான கர்மங்களைத்

தவிர மற்றவற்றை விட்டுவிடுவது ஞானிக்குத் தகும். ஆனால், அஞ்ஞானிக்குத் தகாது என்பது கருத்து.]

यज्ञार्थात्कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबन्धनः ।
तदर्थं कर्म कौन्तेय मुक्तसङ्गः समाचर ॥ ९

[யக்ஞார்த்தாத்கர்மணோஅன்யத்ர
லோகோஅயம் கர்மபந்தன: |
ததர்த்தம் கர்ம கௌந்தேய
முக்தஸங்க: ஸமாசர ||]

விஷ்ணுவை ஆராதிக்கும் முறையான கர்மத்தைக் காட்டிலும், மற்ற பயன் தரும் (காம்யமான) கர்மத்தைச் செய்வதில் ஈடுபடும் ஜனங்கள் கர்மத்தினால் கட்டப்பட்டவர்களாகின்றனர். ஆகையால், விஷ்ணுவாராதனமான கர்மத்தைக் குந்தியின் மகனான நீ பயனையடையும் விருப்பத்தை விட்டுச் செவ்வனே செய்க.

[இந்த ச்லோகத்திற்கு ஸ்ரீ சங்கரர், "கர்மம் மறுபிறப்பையும், ஸம்ஸாரத்தையும் உண்டாக்கத்தக்கதாகையால், கர்மம் செய்யக் கூடாதென்று சிலர் கூறும் ஆக்ஷேபணையை நீக்கப் பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன், வேள்வி என்பதே விஷ்ணுவாகையாலும், வேள்வி செய்வது விஷ்ணுவின் ஆராதனையானதாலும், யாகம் முதலிய கர்மங்களைச் செய்து பயனை ஈச்வரார்ப்பணம் செய்துவிட்டால், கர்மத்தினால் கட்டுண்டு போகாது இருக்க முடியுமென்பதுஇந்த ச்லோகத்தில் விவரிக்கப் பட்டுள்ளது. 'முக்தஸங்க:' என்ற சொல்லிற்குத் தனக்கு வேண்டுமென்கிற ஆசையை விட்டுக் கர்மம் செய்யவேண்டுமென்பது பொருள் என்று ஸ்ரீ ராமானுஜர் எழுதியுள்ளார்.

सहयज्ञाः प्रजाः सृष्ट्वा पुरोवाच प्रजापतिः ।
अनेन प्रसविष्यध्वमेष वोऽस्त्विष्टकामधुक ॥ १०

[ஸஹயஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா
புரோவாச ப்ரஜாபதி: ।
அனேன ப்ரஸவிஷ்யத்வ-
மேஷ வோ அஸ்து இஷ்டகாமதுக் ॥]

யக்ஞத்துடன் (வேள்வியுடன்) கூடின ஜனங்களை ஆதிகாலத்தில் உண்டாக்கி ப்ரம்ஹா, "இந்த யக்ஞத்தினாலே வ்ருத்தி யடையுங்கள். இந்த யக்ஞம் உங்களுக்கு இஷ்டமான போகங்களை (ஸுகங்களை) தரக் கூடியதாக ஆகக்கடவது" என்று கூறினர்.

[இந்த ச்லோகத்திற்கு ஸ்ரீ ராமானுஜர் பொருள் கூறும்போது மோக்ஷத்தையும், அதற்குகந்தான மற்ற ப்ரயோஜனங்களையும் யக்ஞம் கொடுக்கக்கூடியதாகட்டும் என ஜீவன்களிடமுள்ள கருணையினால் ப்ரம்ஹா கூறினதாகச் சொல்கிறார்.

கருத்து: இந்த ச்லோகத்தினால் பயன்தரக் கூடிய கர்மாக்களைச் செய்யுங்கள் என்பது போலத் தோன்றக்கூடும். முன் ச்லோகத்தில் நிஷ்காம கர்மம் சொல்லப்பட்டது. எனவே முன் கூறியதும் இப்போது கூறப்படுவதும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகக் காணலாம். ஆனால் உண்மையில் அப்படியல்ல. இது எப்படி என்ற கேள்வி எழும்? ஒரே கர்மா செய்கிறவனின் எண்ணத்தைக்கொண்டு பயனளிக்கும். ஒரு விதமாகச் செய்யும்போது ஒரு கர்மா பந்த

ஹேதுவாகவும், வேறு விதமாகச் செய்தால் மோக்ஷ ஹேதுவாகவும் ஆகிவிடும். ஏன் ப்ரம்ஹா யக்ஞம் ஸுகங்களைக் கொடாமல், ஞானத்தை மட்டும் கொடுக்க வல்லதாக விதிக்கக்கூடாது? ஞானமே பலனாக விதிக்கப்பட்டால் வெகு சிலரே அப் பயனை விரும்பக்கூடும். ஸ்வர்க்கம் முதலிய போகங்களை விரும்பும் பலர் அவைகளையடைய எண்ணி யக்ஞம் முதலிய கர்மங்களைச் செய்ய முற்படுவார்கள். இப்படி இவைகளைச் செய்து ஸ்வர்க்கம் முதலிய பயன்களை யடைந்து, அவைகளின் அனுபவம் ஏற்பட்டு, அவை களைக் காட்டிலும் உயர்ந்த ஸுகமிருக்கிறதா என்று எண்ணிப்பார்த்தும், தமது புண்ய பயனை அனுபவித்த பின் மறுபடி பூவுலகுக்கு வந்து, தாம் செய்த கர்மா வின் பயன் அழிவுள்ளது என்று தெரிந்து, பிறகு பயன் கருதாக் கர்மா செய்யத் துவங்குவர். மறுபடி படிப்படியாக ஞான மார்க்கத்திற்குச் செல்ல, பயன் கருதாக் கர்மா செய்ய வழியாகும் என்பதைக் கருதியே ப்ரம்ஹாவினால் இப்படிச் சொல்லப்பட்டது.]

देवान्भावयतानेन ते देवा भावयन्तु वः ।
परस्परं भावयन्तः श्रेयः परमवाप्स्यथ ॥ ११

[தேவான் பாவயதானேன தே தேவா பாவயந்து வ:|
பரஸ்பரம் பாவயந்த: ச்ரேய: பரமவாப்ஸ்யத ||]

முன் சொல்லப்பட்ட யக்ஞத்தினால் தேவர்களை ஆராதிக்க வேண்டும். அந்த தேவர்கள் உங்களை காத் தருளட்டும். இப்படி நீங்கள் தேவதைகளையும், தேவர்கள் உங்களையும் ஒருவரையொருவர் வளர்ச்சி யடையச் செய்துகொண்டு மேன்மையான நன்மையை யடைகிறவர்களாவீர்கள்.

[யாகாதி கர்மங்களைச் செவ்வனே செய்வதால் மானிடர்கள் தாங்கள் ஆசைப்படும் பயன்களை யடைந்து ச்ரேயஸை யடைகிறார்கள். யாகாதி கர்மங்களினால் கிடைக்கப்பெறும் அவிர்பாகம் முதலியவற்றைப் பெற்று, பரம்பொருளால் மனிதன் போன்ற ஜீவராசிகளுக்கு மழை, வெய்யில், காற்று முதலிய இயற்கை வசதிகளைச் செய்துகொடுக்க நியமிக்கப் பட்ட தேவதைகள் திருப்தியடைந்து தங்களுடைய கடமைகளைச் செய்து ச்ரேயஸை யடைகிறார்கள்.]

इष्टान्भोगान्हि वो देवा दास्यन्ते यज्ञभाविताः ।
तैर्दत्तानप्रदायैभ्यो यो भुङ्क्ते स्तेन एव सः ॥ १२

இஷ்டான் போகான் ஹி வோ தேவா
தாஸ்யந்தே யஞபாவிதா: |
தைர்தத்தா னப்ரதாயைப்யோ
யோ புங்க்தே ஸ்தேன ஏவ ஸ: ||]

ப்ரம்ஹா பின்னும் கூறினார்:— "யக்ஞங்களினால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள் உங்களுக்கிஷ்டமான ஸௌகர்யங்களைக் கொடுப்பார்கள். அப்படிக் கொடுக்கப்பட்டவைகளை எவன் அந்தத் தேவதைகளுக்குத் திருப்பிக் கொடாமல் தானே அனுபவிக்கிறானோ அவன் திருடனே."

[ஒருவன் யாகம் முதலிய கர்மாக்களால் தேவதைகளை ப்ரீதி செய்வித்து அவர்களால் மழை, வெப்பம், காற்று முதலிய பொதுவான ஸுகங்களையும், தனம், தான்யம் போன்ற தனிப்பட்ட ஸௌகர்யங்களையு மடைகிறான். இப்படிக்கிடைக்கப்பெற்ற ஸுகங்களின்

ஒரு பகுதியை தேவபாகமாகக் கொடாது தானே எல்லாவற்றையும் அனுபவிப்பவன் திருடனென்று சொல்லப்படுகிறது]

यज्ञशिष्टाशिनः सन्तो मुच्यन्ते सर्वकिल्बिषैः ।
भुञ्जते ते त्वघं पापा ये पचन्त्यात्मकारणात् ॥ १३

[யக்ஞசிஷ்டாசின: ஸந்தோ
முச்யந்தே ஸர்வகில்பிஷை: |
புஞ்ஜதே தே த்வகம் பாபா
யே பசந்த்யாத்மகாரணாத் ||]

யக்ஞத்தில் ஈச்வரன் முதலியவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டபின் மிகுதியாகவுள்ளதை உண்ணும் நல்லோர் பஞ்சசூனு முதலிய எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். எவர் ஈச்வரார்ப்பணம் செய்யாமல் தமக்காகவே சமையல் செய்து உண்கிறார்களோ அத்தகைய பாவிகள் பாபத்தையே உண்கிறார்கள்.

['யக்ஞசிஷ்ட' என்ற பதத்திற்கு ஸ்ரீ சங்கரர் தேவயக்ஞத்தின் மிகுந்த அன்னம் என்றும், ஸ்ரீ ராமானுஜர், பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்ட அன்னம் என்றும், ஸ்ரீதரர் வைச்வதேவம் முதலிய யக்ஞமிச்சமான அன்னம் என்றும் பொருள் கூறியுள்ளனர். இதனால் யக்ஞசிஷ்டமென்றால் ஜோதிஷ்டோமம் முதலிய யக்ஞங்கள் மாத்திரம் குறிப்பிடப்படவில்லை. மனிதன் செய்யவேண்டிய பஞ்ச யக்ஞமும் கூடத்தான் குறிப்பிடப்படுகிறது என்று தோன்றுகிறது]

अन्नाद्भवन्ति भूतानि पर्जन्यादन्नसम्भवः ।
यज्ञाद्भवति पर्जन्यो यज्ञः कर्मसमुद्भवः ॥ १४

[அன்னுத்பவந்தி பூதானி பர்ஜன்யாதன்னஸம்பவ: ।
யக்ஞாத்பவதி பர்ஜன்யோ யக்ஞ: கர்மஸமுத்பவ: ॥]

कर्म ब्रह्मोद्भवं विद्धि ब्रह्माक्षरसमुद्भवम् ।
तस्मात् सर्वगतं ब्रह्म नित्यं यज्ञे प्रतिष्ठितम् ॥ १५

[கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி
ப்ரஹ்மாக்ஷரஸமுத்பவம் ।
தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம
நித்யம் யக்ஞே ப்ரதிஷ்டிதம் ॥]

एवं प्रवर्तितं चक्रं नानुवर्तयतीह यः ।
अघायुरिन्द्रियारामो मोघं पार्थ स जीवति ॥ १६

[ஏவம் ப்ரவர்திதம் சக்ரம் நானுவர்தயதீஹ ய: ।
அகாயுரிந்த்ரியாராமோ மோகம் பார்த்த ஸ ஜீவதி ॥]

ஏ குந்தியின் மகனே! அன்னத்தினுல் (உணவினுல்) உடல்களும், மழையினுல் அன்னமும், (உணவுத் தான்யங்கள் முதலியவையும்), யக்ஞத்தினுல் மழையும், கர்மாவினுல் (செய்கையால்) யக்ஞமும் உண்டாகின்றன. கர்மாவெனும் செயல் வேதத்தினுல் உண்டாகிறது (வேதத்தில் சொல்லியிருப்பதால்). இந்த வேதம் ப்ரஹ்மத்தினுல் உண்டாகிறது. அந்த ப்ரஹ்மம் எப்போதும் யக்ஞத்தில் நிலையாக இருக்கிறது. ஆகையால் இப்படி ப்ரஹ்மத்தினுல்

(பரமாத்ம ஸ்வரூபத்தால்) உண்டாக்கப்படும் கர்மம் முதலியவற்றைக் கொண்ட சக்ரத்தை இவ்வுலகில் எவன் பின்பற்றுவதில்லையோ, அவன் பாவமான ஆயுளைப் பெற்று, புலன்களின் வழியே விஷய ஸுகங்களை எப்போதும் அனுபவிக்கும் மனிதனுக உபயோக மற்ற வெத்து வாழ்க்கை நடத்துபவனென்று அறிந்து கொள். [ஸ்ரீ ராமானுஜர் : கர்மா பிரகிருதி விகாரமான உடலிலிருந்து உண்டாவதாகவும், 'ப்ரஹ்ம' என்ற பதத்திற்கு தேஹம் (உடல்) என்றும், அந்த தேஹம் ஜீவனுல் உண்டாவதாகவும், அந்த தேஹமே எப்பவும் யக்ஞத்திற்கு மூலமாகவுள்ளது என்றும் உரை எழுதியுள்ளார். யக்ஞத்திஞல் ப்ரஹ்மத்தையடையலாம். யக்ஞாதி கர்மாக்கள் ஈச்வர ஸ்வரூபமானது. ஈச்வரனை ஆராதிப்பது என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் பாப ஸ்வரூபமான ஆயுளைப் பெற்றவர்கள். விஷய ஸுகங்களை அனுபவிப்பவர்கள். அத்தகையவர்களின் வாழ்க்கை வீண் வாழ்வு என்பது கருத்து.]

यस्त्वात्मरतिरेव स्यादात्मतृप्तश्च मानवः ।
आत्मन्येव च सन्तुष्टस्तस्य कार्यं न विद्यते ॥ १७

[யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யா-
தாத்மத்ருப்தஸ்ச மானவ:|
ஆத்மன்யேவ ச ஸந்துஷ்டஸ்-
தஸ்ய கார்யம் ந வித்யதே ||]

எந்த மனிதன் ஆத்மாவினடத்திலேயே பிரியம் வைத்து திருப்தியான ஸந்தோஷத்தை அடைகிருனே அவனுக்குக் கர்மாவில்லை. (அதாவது ஆத்மாவை ப்ரும்மமென உணர்ந்து அதிலேயே ஸந்தோஷமடை

கிறவனுக்குக் கர்மாவைச் செய்து அதனுல் அடைய வேண்டிய பயன் ஒன்றுமில்லை என்ற கருத்து).

नैव तस्य कृतेनार्थो नाकृतेनेह कश्चन ।
न चास्य सर्वभूतेषु कश्चिदर्थव्यपाश्रयः ॥ १८

[நைவ தஸ்ய க்ருதேனர்த்தோ
நாக்ருதேனேஹ கஸ்சன |
ந சாஸ்ய ஸர்வபூதேஷு
கஸ்சிதர்த்தவ்யபாச்ரய: ||]

இப்படி ஆத்மாவிலேயே ஸந்தோஷம் முதலியவற்றை அடைந்த பிரும்ம ஞானிக்கு இவ்வுலகில் கர்மா செய்வதால் பயனில்லை, கர்மாக்களைச் செய்யாததாலும் எவ்வித தோஷமுமில்லை. அத்தகைய பிரும்ம நிஷ்டனுக்கு எல்லா பூதங்களையும் ஆச்ரயித்து அடைய வேண்டிய பயன் ஒன்றுமில்லை.

तस्मादसक्तः सततं कार्यं कर्म समाचर ।
असक्तो ह्याचरन्कर्म परमाप्नोति पूरुषः ॥ १९

[தஸ்மாதஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர |
அஸக்தோ ஹ்யாசரன்கர்ம பரமாப்நோதி பூருஷ: ||]

ஆகையால் பயன் கருதாது எப்போதும் செய்ய வேண்டிய கர்மாக்களைச் செய். ஏனெனில் பயன் கருதாது கர்மாவை அனுஷ்டித்து வருகிற மானிடன் உத்தமமானதை அடைகிறுன். [உத்தமமானதை என்ருல் சித்தசுத்தியையும், அதனுல் மெய்யறிவையும், அதனுல் மோக்ஷத்தையும் அடைகிறுன் என்று கருத்து.]

कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः ।
लोकसंग्रहमेवापि सम्पश्यन्कर्तुमर्हसि ॥ २०

[கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்த்திதா ஜனகாதய: ।
லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பச்யன்கர்துமர்ஹஸி ॥]

ஜனக மஹாராஜா முதலானவர்கள்கூட பயன் கருதாது செய்த கர்மாவினால் மெய்யறிவு பெற்றார்கள். மக்களுக்கு ஏற்படக்கூடிய பயன்களைக் கருதியாவது நீ கர்மத்தைச் செய்யவேண்டியவனாக இருக்கிறாய்.

[சங்கரரும், ஸ்ரீதரரும் கூறும் கருத்தாவது:— "ஒருவன் தனக்கு ஞானம் உண்டாகிவிட்டது, இனி கர்மாவைச் செய்யவேண்டியதில்லை என எண்ணினாலும் கூட, ஞானமேற்படாத, அக்ஞான இருளில் அகப்பட்டுள்ள மக்கள் நல்ல கர்மாக்களைச் செய்யத் தூண்டுவதற்காகவாவது, ஞானிகள் தங்களுக்குக் கர்மம் செய்து அடைய வேண்டியது ஒன்றுமில்லாவிடினும், ஸாதாரண உலக மக்களுக்காக கர்மாக்களைச் செய்து காட்டவேண்டியது அவசியம்." பொதுவாக உலக மக்களுக்குத் தங்களுக்கு நன்மை செய்வோரிடத்தில் நல்ல பிரியம் ஏற்படுகிறது இயல்பு. ஜனக மஹாராஜனை உதாரணம் கூறக் காரணம், அர்ஜுனனுக்கு அவனைப்போலவே அரசனாகத் திகழ்ந்த ஜனக மஹாராஜனே கர்மாக்களில் ஈடுபட்டிருந்தபோது அர்ஜுனன் தான் கர்மம் செய்யவேண்டியதில்லையென எண்ணுவது தப்பென எடுத்துக்காட்டவே.]

यद्यदाचरति श्रेष्ठस्तत्तदेवेतरो जनः ।
स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥ २१

[யத்யதாசரதி ச்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜன: ।
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததனுவர்த்ததே ॥]

வயது, தகுதி, நடத்தை முதலானவைகளில் பெரியோன் எக் கருமத்தைச் செய்கிறானோ, அதையே மற்றவனும் செய்ய முற்படுவான். அப் பெரியவன் (உத்தமன்) எந்த சாஸ்திரத்தைப் பிரமாணமாக எண்ணி அதைப் பின்பற்றிச் செய்கிறானோ, உலக மக்களும் அதையே பின்பற்றுவர்.

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किञ्चन ।
नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥ २२

[ந மே பார்த்தாஸ்தி கர்தவ்யம்
த்ரிஷு லோகேஷு கிஞ்சன ।
நானவாப்தமவாப்தவ்யம்
வர்த ஏவ ச கர்மணி ॥]

ஓ குந்தியின் மகனே! நான் செய்யவேண்டியது ஒன்றுமே கிடையாது. மூவுலகிலும் எனக்கு அடைய வேண்டியது, நான் அடையாதது என்று ஒன்றும் கிடையாது. அப்படியானாலும் நான் கர்மா செய்வதில் ஈடுபட்டே இருக்கிறேன்.

यदि ह्यहं न वर्तेयं जातु कर्मण्यतन्द्रितः ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥ २३

[யதி ஹ்யஹம் ந வர்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித: ।
மம வர்த்மானுவர்தந்தே மனுஷ்யா: பார்த்தஸர்வச: ॥]

ஓ பார்த்தா! நான் எந்த ஒரு காலத்திலேனும் கண்காணிப்புடன் (ஜாக்ரதையுடன்) கர்மம் செய்

வதில் ஈடுபடாமலிருப்பேனுனல், மனிதர்கள் எல்லா வற்றிலும் என் வழியைப் (நான் நடக்கும் முறையை) பின்பற்றுவார்கள். ['அதந்த்ரித:' என்ற சொல்லிற்கு சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள வழியிலிருந்து நழுவாது என்று பொருள் கூறுவர். அஞ்ஞானிகளான மானிடர் ராஜாவாகவும், சக்தி, சாமர்த்யம், கீர்த்தி முதலியவைகளால் பெரியோன் என்று மதிக்கப்படும் கிருஷ்ணனே கர்மாக்களைச் செய்வதில், நாம் ஏன் செய்ய வேண்டுமென எண்ணி கர்மத்தை விட்டுவிடத் துணிவார்களென்பது கருத்து.]

उत्सीदेयुरिमे लोका न कुर्यां कर्म चेदहम् ।
सङ्करस्य च कर्ता स्यामुपहन्यामिमाः प्रजाः ॥ २४

[உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம் |
ஸம்கரஸ்ய ச கர்தா ஸ்யாமுபஹன்யாமிமா: ப்ரஜா: ||]

நானே கர்மாக்களைச் செய்யாது போனுல், இந்த உலகிலுள்ள மக்கள் கர்மம் செய்யாத பாபத்தினுல் கெட்டுப்போவார்கள். இதனுல் ஜாதிகளின் கலப்பு ஏற்படும். அதற்கு நானே காரணமாவேன். மக்களை அழித்தவனுகவுமாவேன்.

[ஸ்ரீ ராமானுஜர் இந்த ச்லோகத்திற்கு உறை யெழுதும்போது "பிரஜைகளை (மக்களை) அனுக்ர ஹிக்க ஊக்கம் கொண்ட எனக்கு அந்த மக்கள் கெட்டுப் போகும்படியான இக்கார்யம் செய்வது தகுந்தது அல்ல" என்று குறிப்பிட்டுள்ளார். முதல் அத்யாயத்தில் குல ஸ்த்ரீகள் கெட்டுப் போனுல் ஜாதிக் கலப்பு ஏற்படுமென்று அர்ஜுனன் பகவா னிடம் சொன்னுன். பகவான் இப்போது பெண்டிர்

கெடுவதால்மாத்திரம் ஜாதிக்கலப்பு ஏற்படுவதில்லை. அவரவர் செய்யவேண்டிய கர்மங்களைச் செய்யாவிடில் (சாஸ்திர விதிப்படி செய்யாவிடில்) வர்ணாச்ரம தர்மம் கெடும். அதனாலும் ஜாதிக் கலப்பும், சேர்க்கையும் ஏற்படும் என்று சுட்டிக்காட்டுகிறார்.]

सक्ताः कर्मण्यविद्वांसो यथा कुर्वन्ति भारत ।
कुर्याद्विद्वांस्तथासक्तश्चिकीर्षुर्लोकसंग्रहम् ॥ २५

[ஸக்தா: கர்மண்யவித்வாம்ஸோ
யதா குர்வந்தி பாரத |
குர்யாத்வித்வாம்ஸ்ததாஸக்தஸ்-
சிகீர்ஷுர்லோகஸம்க்ரஹம் ||]

ஓ பரத வம்சத்தில் தோன்றியவனே! ஆத்ம ஞானமில்லாதவர்கள் கர்மத்தைப் பயன் கருதி எப்படிச் செய்கிறார்களோ, அப்படியே ஆத்மஞானமுள்ளவனும் பயனைக் கருதாது, அதில் ஆசையில்லாமல் மக்களுடைய ப்ரயோஜனத்தைக் கருதி கர்மத்தைச் செய்யவேண்டும்.

[ஆத்மஞானமில்லாதவர்களாகவும், மோக்ஷத்தில் ஆசையுள்ளவர்களாகவும், கர்மா செய்வதில் ஊக்கமுள்ளவர்களாகவும், கர்மம் செய்துகொண்டு வருபவர்களுக்கு, கர்ம மார்க்கத்தைத் தவிர வேறு ஸாதனமிருப்பதாகத் தோற்றுவித்து, புத்தி பேதத்தை உண்டுபண்ணி விடக்கூடாது. ஆத்மஞானிக்கு கர்மஞ்செய்வதால் பயனொன்றுமில்லையாதலால், அவன் கர்மத்தை விட்டுவிடுவான். இதைப்பார்த்து, ஞானமடையாதவனும், ஞானி எக்காரணத்தால் கர்மத்தை விட்டான் என்று அறியாது, தானும்

கர்மத்தை விட்டுவிடுவான். எனவே அஞ்ஞானிக்கு ஞானமும் (ஆன்மாவைப் புரிந்து கொள்ளுதலும்) ஏற்படுவதில்லை. ஞான ஸாதனமான கர்மத்தின் பயனு மேற்படுவதில்லை. ஆகவே இரண்டும் கெட்ட நிலையில் அஞ்ஞானி நிற்பான். எனவே அவிவேகிகள் கெட்டுப் போகாமலிருப்பதை உத்தேசித்து, அவர்கள் கர்மத்தில் பற்றுடன் கர்மத்தையாவது முறைப்படி செய்து வருவதற்காக, ஞானிகள் தாங்களே கர்மங்களைச் செய்தும், செய்வித்தும் வழிகாட்டிகளாக வேண்டுமென்பது கருத்து.]

न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसङ्गिनाम् ।
जोषयेत्सर्वकर्माणि विद्वान्युक्तः समाचरन् ॥ २६

[ந புத்திபேதம் ஜனயே-
தஞானும் கர்மஸங்கினும் |
ஜோஷயேத்ஸர்வகர்மாணி
வித்வான்யுக்த: ஸமாசரன் ‖]

ஆத்மஞானிகள் கர்மத்தில், விருப்பமுள்ள அவிவேகிகளுக்கு (அஞ்ஞானிகளுக்கு) புத்தித் தடுமாட்டத்தை உண்டாக்கக்கூடாது. முறைப்படி ஞானிகள், தாங்கள் கர்மத்தில் ஈடுபட்டு, எல்லாக் கர்மங்களையும் செய்தும், செய்வித்தும் காட்டவேண்டியது.

प्रकृतेः क्रियमाणानि गुणैः कर्माणि सर्वशः ।
अहङ्कारविमूढात्मा कर्ताहमिति मन्यते ॥ २७

[ப்ரக்ருதே: க்ரியமாணனி குணை: கர்மாணி ஸர்வச: |
அஹங்காரவிமூடாத்மா கர்தாஹமிதி மன்யதே ‖]

ப்ரக்ருதி என்னும் மாயையின் குணங்களாகிய புலன்களினாலே அநேகவிதமாகச் செய்யப்படும் கருமங்களை நான் செய்கிறேன் என்று, தான் என்னும் மமதையால் விவேகமற்ற மனதையுடையவன் நினைக்கிறான்.

तत्त्ववित्तु महाबाहो गुणकर्मविभागयोः ।
गुणा गुणेषु वर्तन्त इति मत्वा न सज्जते ॥ २८

[தத்வவித்து மஹாபாஹோ குணகர்மவிபாகயோ: ।
குணா குணேஷு வர்தந்த இதி மத்வா நஸஜ்ஜதே ॥]

பெரும் கைகளை உடையவனே! குணங்கள், கருமங்கள் ஆகியவற்றின் பாகுபாடுகளின் உண்மையையறிந்தவன், புலன்கள் சப்தம் போன்ற விஷயங்களில் ஈடுபடுபவன என அறிந்து கருமத்தில் ஆசை வைக்கிறதில்லை. [ஸ்ரீதரர், "குண கர்மங்களுடைய விபாகத்தின் உண்மையை அறிந்தவன் என்பதை, ஸத்வ, ரஜஸ், தமஸ் என்கிற குணங்கள் தன்னுடையவையல்ல, ஆன்மாவாகிய தான் அக்குணங்களுமல்ல, கருமமும் தன்னுடையது அல்ல, தான் கருமங்களைச் செய்பவனுமல்ல, குணங்கள் என்னும் புலன்களுக்கும், கருமங்களுக்கும் தான் வேறானவன் என்பதை உணர்ந்தவன்தான் குண கர்ம விபாகங்களைத் தெரிந்தவன்" என்று குறிப்பிட்டுள்ளார்.]

प्रकृतेर्गुणसंमूढाः सज्जन्ते गुणकर्मसु ।
तानकृत्स्नविदो मन्दान् कृत्स्नविन्न विचालयेत् ॥ २९

[ப்ரக்ருதேர்குணஸம்மூடா:
ஸஜ்ஜந்தே குணகர்மஸு।
தானக்ருத்ஸ்னவிதோ மந்தான்
க்ருத்ஸ்னவின்ன விசாலயேத் ॥]

மாயையினுடைய குணங்களினாலே மூடர்களாக இருக்கிற எவர் புலன்களுடைய கார்யங்களில் ஆசை வைக்கிறார்களோ, ஒன்றுமறியாத அறிவிலிகளாகிய அவர்களை ஆத்மஞானி மாறி நடக்கும்படிச் செய்யக் கூடாது.

मयि सर्वाणि कर्माणि सन्यस्याध्यात्मचेतसा ।
निराशीर्निर्ममो भूत्वा युध्यस्व विगतज्वरः ॥ ३०

[மயி ஸர்வாணி கர்மாணி
ஸன்யஸ்யாத்யாத்மசேதஸா।
நிராசீர்நிர்மமோ பூத்வா
யுத்யஸ்வ விகதஜ்வர: ॥]

அர்ஜுனா! நீ எல்லாக் கருமங்களையும் என்னிடத்தே ஒப்புவித்து (கருமங்களின் பயன்களை எனக்கே அர்ப்பணம் செய்து) நான் பரமாத்மாவின் ஏவலாளாக எல்லாக் கருமங்களையும் செய்து, அக் கருமங்களாலே ஏற்படும் பயன்களையும் அந்த பரமாத்மாவிற்கே அர்ப்பணம் செய்யவேண்டியவனென்ற எண்ணத்துடன், பயன் கருதாது, நான் என்கிற மமதையை விட்டு, துயரத்தையும் விட்டு, அத்தகைய நிலையில் இருந்து கொண்டு போர் செய்.

ये मे मतमिदं नित्यमनुतिष्ठन्ति मानवाः ।
श्रद्धावन्तोऽनुसूयन्तो मुच्यन्ते तेऽपि कर्मभिः ॥ ३१

[யே மே மதமிதம் நித்ய
மனுதிஷ்ட்டந்தி மானவா: |
ச்ரத்தாவந்தோ அனுஸூயந்தோ
முச்யந்தே தே அபி கர்மபி: ||]

எந்த மனிதர்கள் என்னுடைய வாக்கியத்தில் விச்வாஸமுள்ளவர்களாகவும், என்னிடம் துவேஷ மனப்பான்மையின்றியும், என்னுடைய இந்த அபிப்பிராயத்தை (ஸித்தாந்தத்தை) அனுஸரித்து நடக்கிறார்களோ அவர்களும்கூட, பாவம் புண்ணியம் கூடிய செய்கைகளிலிருந்து (கருமத்தினால் ஏற்படும் கேட்டிலிருந்து) விடுபடுகிறார்கள்.

ஸ்ரீ ராமானுஜர் :– **'तेऽपि'** என்ற பதத்திற்கு விரிவுரை செய்யும்போது கூறுவது:– 'அவர்களுங்கூட' என்பதினால் மற்றும் சிலரை சேர்ப்பதற்காக இப்பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. அவர்கள் யார்? என்று கேட்டால், சாஸ்திரங்களில் உள்ள கருத்துக்களை அறியத் தகுதியுள்ளவர்கள் இந்த கீதா சாஸ்த்ரம் தான் சாஸ்த்ரார்த்தம் என்று அறிந்து அதன்படி நடக்கின்றார்களோ அவர்களும், மற்றும் இந்த கீதா சாஸ்த்ரத்தை உணர்ந்து அதன்படி நடக்கமுடியாது போனாலும், அதில் பக்தி சிரத்தையுடன் கூடி இருப்பவர்களும், அத்தகைய பக்தி சிரத்தை இல்லாவிடினும், இதை நிந்தனை செய்யாதிருப்பவர்களும்கூட எல்லாவிதமான கர்மபந்தங்களிலிருந்தும் (கட்டுகளிலிருந்தும்) விடுபடுகிறார்கள்.

'इदं मतम्'= இந்த அபிப்பிராயம்'' என்பது இதற்கு முன் சொல்லப்பட்ட செய்யுளில் சொல்லப்

பட்ட அபிப்பிராயமெனத் தோற்றுகிறது. அதாவது மானிடன் தன் செய்கைகள் யாவற்றையும் ஈச்வரார்ப் பணமாகச் செய்து பயனையும் அந்த ஈச்வரனிடமே ஒப்படைத்துவிட்டு, தான் பயனை (பலனை) வேண்டாதும், ஆசை (அபிமானம்) இல்லாதும் இருப்பதேயாகும். (இது ஆசிரியரின் அபிப்பிராயம்)

ये त्वेतदभ्यसूयन्तो नानुतिष्ठन्ति मे मतम् ।
सर्वज्ञानविमूढांस्तान् विद्धि नष्टानचेतसः ॥ ३२

[யே த்வேததப்யஸூயந்தோ
நாநுதிஷ்ட்டந்தி மே மதம் ।
ஸர்வஞானவிமூடாம்ஸ்தான்
வித்தி நஷ்டானசேதஸ: ॥]

எவர்கள் என்னுடைய இந்த அபிப்பிராயத்தை வெறுக்கிறார்களோ (துவேஷிக்கிறார்களோ), எவர்கள் இந்த அபிப்பிராயப்படி நடக்கிறதில்லையோ அவர்கள், பரப்ருஹ்மத்தை அறிவதிலும், மற்றும் எல்லா கருமங்களைப் பற்றியும் அறிந்துகொள்வதிலும் மூடர்கள், அறிவற்றவர்கள் என்றும், கெட்டுப்போனவர்கள் என்றும் அறிந்துகொள்.

'एतद् मतम्' (ஏதத் மதம்) என்ற இரு பதங்களுக்கும் **ஸ்ரீ ராமானுஜர்,**

"எல்லாப் பொருள்களும் (ஸகல வஸ்துக்களும்) என்னுடைய சரீரமானபடியால் என்னையே ஆதாரமாயுடையவனென்றும், என்னுடைய சேஷ பூதங்கள் என்றும் (பகவானின் மீதிமிச்சங்கள்) என்னாலேயே ஏவப்படுகிறவை (எல்லாம்) என்றுமுள்ள என்னுடைய மதத்தை (அபிப்பிராயத்தை)" என்று விரிவுரையாற்றியுள்ளார்.

सदृशं चेष्टते स्वस्याः प्रकृतेर्ज्ञानवानपि ।
प्रकृतिं यान्ति भूतानि निग्रहः किं करिष्यति ॥ ३३

[ஸத்ருசம் சேஷ்டதே ஸ்வஸ்யா:
ப்ரக்ருதேர்ஞானவானபி |
ப்ரக்ருதிம் யாந்தி பூதானி
நிக்ரஹ: கிம் கரிஷ்யதி ||]

ஆத்மஞானம் அடைந்தவனும்கூட தன்னுடைய பூர்வ ஜன்மாவின் கருமசேஷங்களுக்கேற்ப, உலக இயலில் (ப்ரக்ருதி விஷயங்களில்) அல்லது உலக வியாபாரங்களில் ஈடுபடுகிறுன். பிராணிகள் (உயிருள்ளவர்கள்) கருமத்தின் (முன்ஜன்ம கர்மவினையின். பாக்கியை (சேஷத்தை) அடைந்தேதிர்வார்கள். புலன்களைக் கட்டுப்படுத்துவதால் இவர்கள் என்ன லாபமடையப் போகிறுர்கள்? பூர்வகர்ம விசேஷத்தினுல் (முன் பிறவியில் செய்யப்பட்ட செய்கைகளின் பயனுல்) இவர்கள் (ஆத்மஞானிகள்கூட) கட்டாயமாக விஷயங்கள் எனப்படும் செய்கைகளில் இழுக்கப்படும்போது இந்திரியங்களை அடக்குவதினுல் பிரயோஜனமில்லை என்பது கருத்து.

'प्रकृतेः' (ப்ரக்ருதே:) என்ற பதத்திற்கு ஸ்ரீ சங்கரரும், கீதாவ்ருத்தியின் ஆசிரியரும் பூர்வகர்ம ஸம்ஸ்காரமென்றும், ஸ்ரீ ராமானுஜர், பூர்வகர்ம வாஸனை என்றும், ஸ்ரீதரர், பூர்வகர்ம ஸம்ஸ்காரத்திற்குட்பட்ட ஸ்வாபாவமென்றும் வியாக்யானம் செய்துள்ளார்கள். அன்வயார்த்தத்தில் (பதவுரையில்) பூர்வகர்ம சேஷமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. முன் பிறவியில்

ஒருவன் செய்த நற்செய்கைகள் (புண்ய கர்மங்கள்) ஸ்வர்கம் முதலிய லோகங்களில் அவனுக்கு ஸுகங்களேயும், நற் பயன்களேயும், அவன் செய்த தீய செயல்களுக்காக (பாவங்களுக்காக) நரகத்தில் துயரங்களேயும் கொடுக்கும். அப்படி அத்தகைய பயன்களே அடைந்தவன், அச் சுக துக்கங்களே அந்தந்த லோகங்களில் அனுபவித்த பின்னர், மீதமுள்ள கருமம், பாவமோ, புண்ணியமோ, அததற்குத் தகுந்தபடி இந்த மனித உலகில், அதைவிட உயர்ந்த அல்லது தாழ்ந்த ஓர் உலகில் மறுபடி பிறவி எய்துகிருன். இப்படி மறுபடியும் பிறவியடையக் காரணமாகவுள்ள மிகுதியான கர்மமே, கர்மசேஷம், கர்மவாஸனே, கர்ம ஸம்ஸ்காரமென்றெல்லாம் சொல்லப்படுகிறது.

கஸ்தூரி, புனுகு, குங்குமப்பூ முதலிய வாஸனேப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த சிமிழ் (பாத்திரம்), பெட்டி முதலியவைகளில், அவற்றில் உள்ள வாஸனே பொருள்கள் அனேத்தும் செலவழிந்துவிட்ட போதிலும், சிமிழ், பெட்டி முதலியவைகளில் வைக்கப்பட்டிருந்த பொருள்களின் வாஸனே மட்டும் எப்படி போவதில்லேயோ, எண்ணே, நெய் ஆகியவை வைக்கப்பட்டிருந்த பாத்திரங்களில் அந்த எண்ணே, நெய் செலவழிந்த பின்னருங்கூட எப்படி எண்ணே, நெய் ஆகியவற்றின் பசைமட்டும் போவதில்லேயோ, அதே போல் புண்ய பாப கருமங்களுக்கேற்ற பயனே ஒருவன் அனுபவித்தபின்னருங்கூட அவன் செய்த கருமங்களுடைய வாஸனே அவனேத் தொடரும். அதற்குத் தக்க மறு பிறவியையும், அதற்கேற்ப செய்கைகளேயும் உண்டாக்கும் என்பதே இதன் கருத்து.

इन्द्रियस्येन्द्रियस्यार्थे रागद्वेषौ व्यवस्थितौ ।
तयोर्न वशमागच्छेत्तौ ह्यस्य परिपन्थिनौ ॥ ३४

[இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்த்தே
ராகத்வேஷௌ வ்யவஸ்த்திதௌ |
தயோர்ன வசமாகச்சேத்தௌ
ஹ்யஸ்ய பரிபந்த்திநௌ ||]

அந்தந்த இந்திரியத்தினுடைய (புலனுடைய) விஷயத்தில் ஆசை, வெறுப்பு (துவேஷம்) ஆகியவை உள்ளன. அவைகளின் (ஆசை, வெறுப்புகளின்) வச மாகி (அவைகளின் வலையில் விழுந்து) விடக்கூடாது. அவை இவனுக்கு (ஞானிக்கு) எதிரிகளாக (சத்ருக்க ளாக) இருக்கின்றன.

ஸ்ரீ சங்கரர்: "ஆசை, வெறுப்பு இவைகளுக்கு வசப்படாமல் இருக்கவேண்டுமானல் சாஸ்திரங்களின் கோட்பாடுகளை அறிந்து அவைகளின்படி நடந்துவர வேண்டியது முக்யமானதாகும்."

ஸ்ரீதரர்: "ஆசை துவேஷங்களுக்கு வசப்படா மலிருக்க, ஈச்வரனை பஜனை செய்வது முக்யமாகும்."

ஸ்ரீ மத்வர்: "கரும வாஸனையினுலிழுக்கப்படு கிறவனுக்கு இந்த்ரியநிக்ரஹத்தால் (புலன்களையடக்கு வதால்) பயனில்லையென முன் ச்லோகத்தில் சொல்லப் பட்டது. இந்த ச்லோகத்தில் காமக்ரோதாதிகளுக்கு (ஆசை, வெறுப்பு முதலியவற்றிற்கு) சுவாதீனமாகக் கூடாது எனக் கூறப்படுகிறது. இதனுல் படிப்படி யாக, சிறிதுசிறிதாக புலன்களையடக்கி, பின்னர்

விருப்பு வெறுப்புகளையும் களைந்து காலப் போக்கில் பயனடைய வழியுண்டு என்பது தெளிவு."

இந்த ச்லோகத்தினால் அறியப்படுவதாவது:— புலன்கள் வெளியுலகில் காணப்படும் பொருள்களைப் பார்ப்பது, அவைகளைப்பற்றிக் கேட்பது, நுகர்வது, ருசிப்பது போன்ற உணர்ச்சிகளால் அவைகளிடம் ஆசையை உண்டாக்குகின்றன. அத்தகைய பொருள்களும், அவைகளில் ஆசையும் கிடைக்காமலும், பூர்த்தி அடையாமலும் போனால் வெறுப்பும் சினமும் ஏற்படுவது இயல்பு. அப் பொருள்களைப் பெறுவதில் அல்லது அனுபவிப்பதில் ஏதேனும் தடை ஏற்படுமாகில், அத் தடைக்குக் காரணமான மனிதன் அல்லது பொருளிடத்தே வெறுப்பும் கோபமும் ஏற்படுவது இயற்கை. எனவேதான் ஆசையும் த்வேஷமும் விஷயங்களெனும் பொருள்களில் உளதாகக் கூறப் பட்டது. ஞானி, விஷயமாகிய பொருளில் விருப்பம் கொள்வானாகில், அதிலிருந்து ஆசையும், கோபமும், வெறுப்பும் உண்டாகி ஞானத்திலேற்படும் முயற்சியை (ப்ருவ்ருத்தியை)க் கெடுத்துவிடும். ஆகையால் தான் விருப்பும் வெறுப்பும் ஞானிக்குச் சத்ருக்களென குறிக்கப்பட்டுள்ளன. எனவேதான் ஸ்ரீ சங்கரபகவத் பாதாளும், ஸ்ரீதரரும் கூறியபடி சாஸ்திரங்களின் தத்வங்களை அறிவதில் முயற்சிசெய்து, அதனால் ஈச்வரனை பஜித்து, அதன் மூலம் ராகத்வேஷங்களுக்கு (விருப்பு வெறுப்புகளுக்கு) உட்படாது தப்பித்துத் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது.

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥ ३५

[ச்ரேயான்ஸ்வதர்மோ விகுண:
பரதர்மாத் ஸ்வனுஷ்ட்டிதாத்|
ஸ்வதர்மே நிதனம் ச்ரேய:
பரதர்மோ பயாவஹ: ||]

பிறருக்குறிய தர்மத்தை (வகுக்கப்பட்ட விதிகளை) செவ்வனே கடைப்பிடித்து ஒழுகுவதைக் காட்டிலும், குணமற்ற (நன்கு பின்பற்றப்படாத) தன்னுடைய தர்மமே நல்லதாகும். தனக்கேற்பட்ட முறையில் (தர்மத்தில்) நடப்பவனுக்கு மரணம் நல்லதாகும் (சிரேஷ்டமாகும்), பிறருடைய தர்மம் (முறை) நரக பயத்தை உண்டாக்கும்.

இந்த ச்லோகத்திலுள்ள 'श्रेयान्' என்ற முதற் சொல்லுக்கு 'ஸ்வர்கம் முதலிய பயன்களைத் தரக் கூடியவை' என்று ஸ்ரீதரர் பொருள் கூறியுள்ளார்.

ஸ்ரீ ராமானுஜரின் அபிப்பிராயமாவது: "அர்ஜுனா! கருமத்திற்கு மாத்திரம் பொறுப்புடைய நீ,

---

परधर्मात् — ஞான யோகத்தைக்காட்டிலும்
(ஸ்ரீ ராமானுஜர்)
विगुणः — அங்கஹீனம், பரிபூர்ணமாகாத கருமம்
(ஸ்ரீதரர், கீதாவிவிருதி)
स्वधर्मः — கர்மயோகம் (ஸ்ரீ ராமானுஜர்)
,, — தன்னுடைய வர்ணாச்ரமத்திற்கேற்ற தர்மம்
(கீதாவிவிருதி)

உயர் ஞானத்திற்குத் தகுதியானவனுகலாமெனக் கருதி, போர் புரிவதைக் கைவிட்டு விடுவாயாகில் நரகமடைவாய்''

ஒவ்வொருவனும் அவனவனுக்கு வேத சாஸ்திரங்களால் எந்த எந்த செய்கைகள் (கருமங்கள்) விதிக்கப்பட்டுள்ளனவோ அவைகளைச் செய்வதே நன்மை பயக்கும். தமக்குறிய தர்மத்தை (கருமத்தை)க் காட்டிலும் பிற ஒருவனுடைய தர்மம் உயர்ந்ததாகத் தோற்றிடினும், அம் மாற்ருன் தர்மத்தை அனுஷ்டிப்பவன் நரகத்தையடைவானென்பது இச்லோகத்தின் கருத்து.

अर्जुन उवाच—

अथ केन प्रयुक्तोऽयं पापं चरति पूरुषः ।
अनिच्छन्नपि वार्ष्णेय बलादिव नियोजितः ॥ ३६

[அத கேன ப்ரயுக்தோஅயம்
பாபம் சரதி பூருஷ:।
அனிச்சன்னபி வார்ஷ்ணேய
பலாதிவ நியோஜித: ॥]

அர்ஜுனன் பகவானைக் கேட்கிருன்—

வ்ருஷ்ணி வம்சத்தில் உதித்தோனே! (கிருஷ்ணு!) அப்படியானல் யாதொரு மனிதன் பாவங்களைச் செய்வதில் மனமில்லாதவனுக இருந்தபோதிலும், கட்டாயப்படுத்தி ஏவப்பட்டவனைப்போல் எக்காரணத்தினுல் பாவத்தை (தீச்செயலை) செய்கிருன்?

ஸ்ரீ மத்வாசார்யார்: காமம் (ஆசை), க்ரோதம் (கோபம்), லோபம் (கஞ்சத்தன்மை), மோஹம் (மயக்கம்), மதம் (திமிர்), மாச்சர்யம் (பொருமை) இந்த ஆறு விதமான தீய சக்திகளில் முன்னிரண்டான காம க்ரோதங்கள்தான் முக்யமானவை என்றும் அவைகளுக்கு வசமாகக்கூடாதென்பது முன்னர் 34-ஆவது ச்லோகத்தில் சொல்லப்பட்டது. அவை இரண்டில் பாவத்தில் மனிதனை ஏவுவது எது என்பது அர்ஜுனனின் கேள்வி.

श्री भगवानुवाच—

काम एष क्रोध एष रजोगुणसमुद्भवः ।
महाशनो महापाप्मा विद्ध्येनमिह वैरिणम् ॥ ३७

[காமஏஷ க்ரோத ஏஷ ரஜோகுணஸமுத்பவ: |
மஹாசனோ மஹாபாப்மா வித்யேனமிஹவைரிணம் ||]

ஸ்ரீ பகவான் சொல்லுகிருர்—

நீ கேட்டது யாதென்ருல் (பாவம் செய்ய எதனுல் ஏவப்படுகிருனென்ருல்) இரஜோ குணத்திலிருந்து உண்டான ஆசையினுல்தான். அந்த ஆசை கோபமாகவும், அனுபவிக்கக்கூடிய அநேக வஸ்துக்களை (பொருள்களை) அடைவதற்குக் காரணமாகவும், அதன் மூலம் மாபாவங்களுக்கு வழியாகவும் ஆகின்றது. வீடு

'अनिच्छन्नपि' — விஷயானுபவத்திலிச்சை யில்லா திருந்தாலும் (ஸ்ரீ ராமானுஜர்)

'पापम्' — விஷயானுபவரூபமான பாபத்தை (ஸ்ரீ ராமானுஜர்)

பேறு அடைவதற்கு (மோக்ஷத்திற்கு) உகந்த வழிக்கு எதிரியாகவும் (சத்ருவாகவும்) ஏற்படுகிறது என்பதை அறிந்துகொள். [ஸம்பூர்ணமான ஐச்வர்யம், வீர்யம், கீர்த்தி, ஸம்பத்து, ஞானம், வைராக்யம் ஆகிய ஆறும் "பக" என்று சொல்லப்படும். இந்த ஆறும் கிருஷ்ண பரமாத்மாவிடம் தடையின்றி ஒன்று சேர்ந்து காணப் படுவதால் அவருக்குப் பகவானென்ற பெயர் ஏற்பட் டது. மற்றும் உயிர்வாழ்வன, உயிறற்றவையான பூதங்கள் (பஞ்ச பூதங்களுங்கூட) இவைகளின் தோற் றம், அழிவு, போக்குவரத்து, வித்தை (அறிவு), அவித்தை (அறிவின்மை) இவைகளை அறிந்தவர் யாரோ அவர் பகவானென்று சொல்லப்படுகிறார் மற்றும் இந்த ச்லோகத்தின் பின் பகுதியிலுள்ள 'इह' (இஹ) என்ற சொல்லிற்கு ஸ்ரீ சங்கரர் 'பிறவி மரணம் கூடிய கடலில்' என்றும், ஸ்ரீ ராமானுஜர், "ஞான யோகத்தில்" என்றும், ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி கள் "இஹபர புருஷார்த்த விஷயத்தில்" (இம்மை மறுமைகளில் அடையக்கூடிய குறிக்கோள்களில்) என்றும் பொருள் கூறியுள்ளார்.]

धूमेनाव्रियते वह्निर्यथादर्शो मलेन च ।
यथोल्बेनावृतो गर्भस्तथा तेनेदमावृतम् ।। ३८

[தூமேனாவ்ரியதே வஹ்னிர்-
யதாதர்சோ மலேன ச ।
யதோல்பேனாவ்ருதோ கர்பஸ்-
ததா தேனேதமாவ்ருதம் ॥]

நெருப்பு புகையினாலும், கண்ணாடி அழுக்கினாலும், ஒரு மாதின் வயிற்றிலுள்ள சிறு குழந்தை கருப்பையினாலும் எப்படி மூடப்பட்டிருக்கின்றதோ, அதே போல் ஆன்மீக அறிவு (ஞானம்) ஆசையினால் மூடப்பட்டுள்ளது.

[ஸ்ரீ மத்வாசார்யாரும், ஸ்ரீ ராகவேந்திரரும் பின் கண்டவாறு அபிப்பிராயப்படுகின்றனர் :— தானே ஒளியுடன் பிரகாசிக்கும் நெருப்பு பார்ப்பவர்களுக்கு புகையினால் மறைக்கப்பட்டிருப்பது போல (சற்று தொலைவிலிருந்து பார்ப்பவனுக்கு ஸர்வக்ஞ்யனான ஈசன் ஜீவனாகிய மானிடனுக்குக் காமத்தினால் மறைக்கப்படுகிறான். ஆதலால் ஈச்வரன் (பரம்பொருள்) ஜீவனால் அறியப்படுவதில்லை. கண்ணாடி அழுக்கினால் மறைக்கப்பட்டிருப்பது போல் அந்தக்கரணம் (தூய மனமென்னும் உணர்வு) காமத்தினால் (ஆசையால்) மறைக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில் அந்தக் கரணம் காமத்தினால் மூடப்பட்டு ஈச்வரனான பரம் பொருளையும் ஜீவனான பிறவியெய்தியதையும் காண்பிக்கிறதில்லை. எப்படி கருப்பையில் அகப்பட்டுள்ள சிசு (சிறு குழந்தை) யாதொரு செயலும் செய்ய சக்தியற்றதாக உளதோ, அப்படியே காமத்தினால் மூடப்பட்ட ஜீவன் (மானிடப்பிறவி) பிரம்மமெனும் பரம் பொருளையோ, ஞானம் எனும் ஆன்ம அறிவையோ அடையக்கூடாதவனாக இருக்கிறான்.]

இந்த ச்லோகத்தில் சொல்லப்பட்டுள்ள புகை, அழுக்கு, கருப்பை ஆகிய மூன்று உதாரணங்களும் மூன்று வகை மானிடர்களைக் குறிப்பிடுவது போல் காண்கிறது.

ஆசையாகிய புகையினால் ஆத்மஞானமாகிய நெருப்பு மூடப்பட்டிருப்பது போன்றவர் ஒருவகை மக்கள். இவர்கள் ஆன்மீக அறிவு (ஆத்மஞானம்) உள்ளவர்களே. ஆனால் களங்கமற்று ஆத்ம ஞானத்திலேயே நிலை கொள்ளாது, விஷயங்களில் (புலன்களுக்கு உணவாகவுள்ள பொருள்களில்) பற்றுதல் முழுதும் விடாமலிருப்பவர்களாவர். இவர்கள் விரைவில் ஆத்மஞானிகளாகக் கூடும். எப்படி காற்றடிப்பதால் நெருப்பைச் சூழ்ந்துள்ள புகை நீங்கிவிடுமோ, எப்படி தீ செவ்வனே எரிய ஆரம்பித்தவுடன் புகை மறைந்துவிடுமோ, அதேபோல் இத்தகைய மனிதர்கள் அப்பியாசத்தினாலேயே ஆத்மஞானமடைவர். இவர்கள் முதல் வகுப்பினர். அழுக்கடைந்த கண்ணாடியில் பார்ப்பவனுக்கு அவனுடைய முகம் தெளிவாகத் தெரியாவிடினும் ஓரளவு தெரியும். இவனுக்கு முகம் பிரகாசமாகத் தெரிய வேண்டுமென்ற அபிப்பிராயமுள்ளது. அழுக்கை அகற்றினால் முகம் தெளிவாகத் தெறியுமென்ற அறிவில்லை. இவனுக்கு ஆத்மஞானம் அடைய வேண்டுமென்ற விருப்பம் இருக்கிறது. ஆனால் ஆசை என்ற அழுக்கை அகற்றினால்தான் ஞானமடையலாம் என்ற தெளிவு ஏற்படாது கலங்கி நிற்கின்றான். இவன் இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவன். கருப்பையில் அகப்பட்ட சிறு குழந்தை எப்படித் தானாகவே அந்தப் பையை விட்டு வெளிப்படச் சக்தியற்றதாக இருக்கிறதோ, அதேபோல் ஆத்மஞானமில்லாதவன், ஆன்மா என்பது யாது என்பதையே அறியாமலும், ஆசை வலையில் கட்டுண்டு, அதனின்று விடுபட முடியாதவனாகத் தவிக்கின்றான். இவன் மூன்றாவது வகையைச் சேர்ந்தவன.

आवृतं ज्ञानमेतेन ज्ञानिनो नित्यवैरिणा ।
कामरूपेण कौन्तेय दुष्पूरेणानलेन च ॥ ३९

[ஆவ்ருதம் ஞானமேதேன
ஞானிநோ நித்யவைரிணா ।
காமரூபேண கௌந்தேய
துஷ்பூரேணாநலேன ச ॥]

ஓ குந்தியின் மகனான அர்ஜுனா! நிரம்பாததும், திருப்தியற்றதும், ஆசாசுவ ரூபமானதும் (காமமென்ற பெயரையுடையதும்) ஞானிக்கு எப்பொழுதும் பகையுள்ளதாக இருக்கின்ற அந்த ஆசையினால் ஞானம் (பேரறிவு) மூடப்பட்டிருக்கிறது.

[ஸ்ரீதரரும் ஸ்ரீ ராமானுஜரும் अनलेन என்ற சொல்லுக்கு விரிவுரை கூறுவதாவது :— அக்னி 'இவ்வளவு விறகு கட்டைகள் போடுகிறவரைதான் நான் அவைகளை எரிப்பேன், பின்னும் அதிகம் கட்டைகளைப் போட்டால் நான் எறிக்கமாட்டேன்' என்று சொல்கிறதில்லை — திருப்தியடைகிறதில்லை. அதே போல் காமம் திருப்தியடையாதது என்பது தாத்பர்யம்.]

காமம் ஞானிக்கு எப்போதும் பகையுடையது என்பதினால் அஞ்ஞானிக்கு (அறிவிலிகளுக்கு) ஏதோ ஒரு காலத்தில்மட்டும் சத்ருவென நினைக்கக்கூடியதாக இருக்கிறது. ஆன்மீக அறிவில்லாதவன் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குகையில் அதனால் லேற்படக் கூடிய கெடுதி, விபரீதம் இவைகளைத் தெரிந்து கொள்ளாமலேயே அக்காரியத்தைச் செய்கிறான். அச்செயலால் துன்பத்தை அடைந்த பின்னர்

அச்செயல் தனக்கு எதிரி (சத்ரு) என நினைக்கின்றான். ஞானியோவென்றால், முன் பிறவியின் கருமப் பயனால் தன்னிச்சையின்றியே ஒரு செயலில் கட்டாயமாக உந்தித் தள்ளப்படுகிறான் (இச்சை கொள்ளும்படிச் செய்யப்படுகிறான்).

இதற்கு உதாரணமாக பாகவதம் ஐந்தாவது ஸ்கந்தம் 8ஆவது அத்தியாயத்தில் கூறப்படும் கதை ஒன்றின் ஸாரத்தை அறியப்பாலது: —

மாபெரும் தவசியாகத் திகழ்ந்த ஜடபரதர் என்ற மஹான் நிஷ்டையிலிருந்துவிட்டு ஓர் ஆற்றில் நீராடச் சென்றக்கால், ஒரு கர்ப்பிணியாக இருந்த ஒரு பெண் மான், அருகிலுள்ள காட்டிலிருந்து ஒரு சிங்கத்தின் கர்ஜனை ஒலி கேட்டு பயங்கொண்டதையும், உடன் அதன் கருப்பையிலிருந்து ஒரு மான்குட்டி நதிக் கரையில் விழுந்ததையும், தாய் மான் நதியில் விழுந்து இறந்ததையும் கண்ணுற்றார். அப்போது மஹாஞானி யான ஜடபரதருக்கு "இக்குட்டியை யார் காப்பாற்று வார்? இங்கேயோ யாருமில்லையே! தான் இதைப் பற்றிக் கவலைப்படாது போனால் இந்தச் சிறு ஜீவனு மிறந்துவிடுமே!" என்ற எண்ணச்சுழல்கள் மனதில் ஏற்பட்டன. உடன் அந்த மான்குட்டியை எடுத்து வந்து தனது ஆச்ரமத்தில் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார். அவருக்கு மரணகாலம் நெருங்கிய போது, தான் வளர்த்த மானை இனி யார் கவனித்துப் பார்ப்பார்கள் என்ற எண்ணம் மனத்தை வாட்டியது.

அந்த எண்ணத்துடன் மாண்டார். மரண காலத்தில் எதைக் கடைசியாக ஸ்மரித்தாரோ (எண்ணினரோ) அதே மானுக அடுத்த பிறவி எடுத்தார். இம்மஹானுக்கு மானை எடுக்கும்போதும், அதை வளர்க்கும்போதும், அதனுலேற்படக்கூடிய துன்பம் யாது என்று தெரியும். அந்தக் காரியம் தனது ஞானநிஷ்டைக்கு எதிரி என்று நன்கு அறிந்திருந்தும், முன் பிறவி ஊழ்வினைப் பயனின் வேகத்தால் ஞானச்சிதைவுக்கு உந்தித் தள்ளப்பட்டார். இதிலிருந்து காமம் என்னும் எந்தவித ஆசையும் எப்போதும் சத்ருவென்பது புலனுகிறது.

इन्द्रियाणि मनो बुद्धिरस्याधिष्ठानमुच्यते ।
एतैर्विमोहयत्येष ज्ञानमावृत्य देहिनम् ॥ ४०

இந்த்ரியாணி மனே புத்திரஸ்யாதிஷ்ட்டானமுச்யதே ।
ஏதைர்விமோஹயத்யேஷ ஞானமாவ்ருத்ய தேஹினம் ॥

இந்திரியங்கள் (புலன்கள்), மனது, புத்தி இவை காமத்திற்கு (ஆசைக்கு) இருப்பிடங்களாகச் சொல்லப் படுகின்றன. காமமென்பது புலன்கள், மனம், புத்தி இவைகளைக்கொண்டு உண்மைப்பேரறிவை (ஞானத்தை) மறைத்து ஜீவனெனும் ஆன்மாவையுடைய மனிதனை மயக்குகிறது.

கண், மூக்கு, நாக்கு போன்ற புலன்கள் (இந்திரியங்கள்) சப்தம், ரூபம், ஒளி போன்ற விஷயங்களைச் சேகரித்து மனதிற்குச் சேர்ப்பிக்கின்றன. தன்னிடம் சேர்ப்பிக்கப்பட்டவைகளை புத்தியிடம் கொடுக்கிறது. புத்தி அவைகளை ஆன்மாவிடம் சேர்ப்பிக்கின்றது. அழுக்கற்ற ஆன்மாவிடம் அழுக்கான ஆசைகளை கொண்டு சேர்ப்பதற்கு புலன்களும், மனமும், புத்தியும்

காரணங்களாக இருப்பதால், அவைகள் காமத்தின் இருப்பிடங்களாகச் சொல்லப்பட்டன. அழுக்கையடைந்த ஆத்மா அசுத்தமாகிவிட்டபடியால், களங்கமற்ற ஆத்மஞானம் மறைக்கப்பட்டு மயங்குகிருன். இதே கருத்தையே ஸ்ரீதரர் சுருக்கமாய் கூறியுள்ளார்.

तस्मात्त्वमिन्द्रियाण्यादौ नियम्य भरतर्षभ ।
पाप्मानं प्रजहि ह्येनं ज्ञानविज्ञाननाशनम् ॥ ४१

தஸ்மாத்வமிந்த்ரியாண்யாதௌ நியம்ய பரதர்ஷப ।
பாப்மானம் ப்ரஜஹி ஹ்யேனம் ஞானவிஞானநாசனம் ॥

ஓ பரதச்ரேஷ்டனை அர்ஜுனை! (காமம் இவ்வளவு பெரிய துன்பங்களை உண்டாக்குமாகையால்) நீ முதலில் புலன்கள், மனது, புத்தி இவைகளை அடக்கி ஞான விக்ஞானங்களை (ஆன்மீக அறிவு, பேரறிவு) போக்கடிக்கிற பாவமே உருவாகவுள்ள இந்த காமத்தை (ஆசையை) விட்டுவிடு.

इन्द्रियाणि पराण्याहुः इन्द्रियेभ्यः परं मनः ।
मनसस्तु परा बुद्धिः यो बुद्धेः परतस्तु सः ॥ ४२

இந்த்ரியாணி பராண்யாஹு: இந்த்ரியேப்ய: பரம் மன: ।
மனஸஸ்து பரா புத்தி: யோ புத்தே: பரதஸ்து ஸ: ॥

தேஹம் (உடல்) முதலியவைகளைக் காட்டிலும் புலன்களும், புலன்களைக்காட்டிலும் (இந்த்ரியங்களைக் காட்டிலும்) மனதும், மனதைக்காட்டிலும் புத்தியும் படிப்படியே உயர்ந்தது (சிரேஷ்டமானது). எது புத்தியையும் காட்டிலும் சிரேஷ்டமானதாக (உயர்ந்ததாக) உள்ளது அதே ஜீவாத்மா.

[ஸ்ரீ சங்கரர் :— ஆத்மஸ்வரூபத்தில் அடைக்கலம் புகுந்தால் (ஆத்மநிஷ்டையையடைந்தால்) காமத்தை ஜயிக்கலாமென்பது இந்த ச்லோகத்தினுல் சொல்லப் படுகிறது.

ஸ்ரீ ராமானுஜர் :— ஞானத்திற்கு முக்கிய பகை கொண்டது இந்திரியங்கள், அவைகளைவிட அதிக விரோதி மனது, மனதைவிடப் பெரிய எதிரி புத்தி, அதையும் விடப் பெரிய சத்ரு காமம் என்று தாத்பர்யம்.

கீதாவிவிருதி :— இந்திரியங்களைக்காட்டிலும் எவை பெரியவை என்ருல் "தேகத்தைக்காட்டிலும்" எனச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இந்திரியங்களுக்கு (புலன் களுக்கு) அபிமானிகள் தேவதைகளான சந்திரன், குபேரன், சூரியன், வருணன், அசுவினி தேவதைகள், அக்னி, இந்திரன், ஜயந்தன், யமன், தக்ஷன் ஆகியோர். இவர்களைக்காட்டிலும் விஷயாபிமானி தேவதைகளான ஸௌவர்ணி, வாருணி, பார்வதி ஆகியோர் மேலானேர். இவர்களையும் காட்டிலும் மனேபிமானி தேவதைகளான கருடன், சேஷன், ருத்ரன் மேலானவர்கள். இவர்களுக் கும் மேலாக புத்தி அபிமானி தேவதையான ஸரஸ்வதி இருக்கிருள். இவளைக்காட்டிலும் மஹத் தத்துவாபிமானி யாகிய பிரும்மா சிரேஷ்டமானவர். இவரையும் காட்டி லும் மேலானவள் ப்ருக்ருதி தத்வ அபிமான தேவதை யான லக்ஷ்மி. இந்த லக்ஷ்மியையும் காட்டிலும் எல்லா குணங்களும் முழுதும் நிறைந்த மஹாவிஷ்ணு சிரேஷ்ட மானவர். இவரையும்விட பெரியவர் எவருமில்லாத தால் அவரே அடையத்தகுந்தவர்."

மேற்கண்ட ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமிகளின் விரிவுரைக்கு ஆதாரமாக அன்னர் கடோபநிஷத்தின் வாக்கி யங்களையும் அவைகளின் பாஷ்யத்தையும் குறிப்பிட் டுள்ளார்.

(கடோபநிஷத் - 3-வது வல்லி 10, 11ஆவது வாக்கி யங்கள்)

एवं बुद्धेः परं बुद्ध्वा संस्तभ्यात्मानमात्मना ।
जहि शत्रुं महाबाहो कामरूपं दुरासदम् ॥ ४३

ஏவம் புத்தே: பரம் புத்த்வா ஸம்ஸ்தப்யாத்மானமாத்மனு ।
ஜஹி சத்ரும் மஹாபாஹோ காமருபம் துராஸதம் ॥

பெருந்தோளுடையோய்! ஓ அர்ஜுன! இவ்விதம் புத்தியைக் காட்டிலும் சிரேஷ்டமானதான (உயர்ந்த தான) ஆத்மாவை (ஆன்மாவின் உண்மையை) அறிந்து திடமான புத்தியுடன், மனதை நிறுத்தி (அடக்கி) தடுக்கக் கூடாத காமம் என்ற உருவில் உள்ள எதிரியை (சத்ருவை) நிவர்த்திசெய் (அழித்துவிடு, கொல்லு). (ஸ்ரீதரர் 'விஷயங்களில் ப்ருவ்ருத்திக்கும் இந்திரியங்களினுல் உண்டாகும் காமம் போன்ற விகாரங்கள் புத்திவரையுள்ள தத்வங்களைச் சேர்ந்தவை. ஆத்மாவைச் சேர்ந்தனவல்ல'வென்று அபிப்பிராயப்படுகிருர்.

கர்மயோகமென்கிற மூன்ருவது அத்யாயம்
முற்றிற்று.

உ

चतुर्थोऽध्यायः

நான்காவது அத்யாயம்

ஞானயோகம்

श्रीभगवानुवाच

इमं विवस्वते योगं प्रोक्तवानहमव्ययम् ।
विवस्वान्मनवे प्राह मनुरिक्ष्वाकवेऽब्रवीत् ॥ १

இமம் விவஸ்தே யோகம் ப்ரோக்தவானஹமவ்யயம் ।
விவஸ்வான்மனவே ப்ராஹ மனுரிக்ஷ்வாகவேஅப்ரவீத் ॥

பகவான் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனை நோக்கி மேலும் கூறியது — அழிவற்ற (நாசமில்லாத) பயனைக் (பலனை) கொடுப்பதற்கான ஹேதுவான (காரணமாக விளங்கும்) இந்த (ஞானகர்ம) யோகத்தை நான் முற்காலத்தில் (ஆதியில்) ஸூர்யனுக்குச் சொன்னேன். ஸூர்யன் அதை மனுவுக்குரைத்தான். அந்த மனு அதனை இக்ஷ்வாகுவுக்குச் சொன்னான்.

[ஸ்ரீராமானுஜர் :— 'நீ யுத்தம் செய்யவேண்டியதின் பொருட்டு இந்தக் கர்மயோக வழியை உனக்குச் சொன்னதாக நினைக்கவேண்டாம். மன்வந்த்ராதியிலேயே (வைதிக மதத்தின்படி காலக்கணக்கு வகுக்கப்படும்போது' யுகம், மன்வந்தரம், இத்தகைய பெரும் காலப்பிரிவுகள் உண்டு). ஸூர்யனுக்குச் சொல்லியிருக்கிறேன்.]

एवं परम्पराप्राप्तमिमं राजर्षयो विदुः ।
स कालेनेह महता योगो नष्टः परंतप ॥ २

ஏவம் பரம்பராப்ராப்தமிமம் ராஜர்ஷயோ விது: ।
ஸ காலேநேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப ॥ 2

ஓ சத்ருவைத் தவிக்கச் செய்பவனே, அர்ஜுனு!) இவ்விதமாக பரம்பரையாக (தகப்பனிடமிருந்து மகனுக்கு, குருவிடமிருந்து சீடனுக்கு இப்படித் தலைமுறை தலைமுறையாக) சொல்லப்பட்டு வந்த இந்த யோகத்தை இராஜரிஷிகள்† அறிந்திருந்தனர். வெகு காலமாகிவிட்டபடியால் அந்த யோகமானது நஷ்டமடைந்துவிட்டது†† (இழக்கப்பட்டுள்ளது).

[ஸ்ரீசங்கரரும், ஸ்ரீராமானுஜரும், ஸ்ரீதரரும் இந்த நஷ்டத்திற்குக் காரணம் கூறுவதாவது:— காலம் செல்லச் செல்ல அந்தக் கர்மயோகத்தை உபதேசிக்கிறவர்களும், அதை கேட்டு அறிந்துகொள்ளும் புத்தித்திறனுள்ளவர்களும், விசேஷமாக இல்லாது போய்விட்டதினுல்தான்.]

स एवायं मया तेऽद्य योगः प्रोक्तः पुरातनः ।
भक्तोऽसि मे सखा चेति रहस्यं ह्येतदुत्तमम् ॥ ३

ஸ ஏவாயம் மயா தே அத்ய யோக: ப்ரோக்த: புராதன: ।
பக்தோஅஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேததுத்தமம் ॥

நீ என்னுடைய பக்தனுகவும், தோழனுகவும் இருப்பதால், மிகவும் பழமையான (முன்னர் ஸூர்யனுக்குச் சொல்லப்பட்ட) அதே யோகம் என்னுல் இப்போது உனக்குச் சொல்லப்பட்டது. இந்த யோகம் மிகவும்

Footnote :- † ராகவேந்த்ர ஸ்வாமிகள்:- ராஜாக்களும், ரிஷிகளும் அல்லது ராஜரிஷிகள். ஜனகர் போன்று, ரிஷிகளின் வாழ்க்கையை மேற்கொண்டு அரசர்களாக விளங்கியவர் ராஜரிஷிகள் எனப்படுவர்.

†† ராமானுஜர்:- நஷ்டமானது போலாகியது.

சிறந்தது; உயர்ந்தது, மிகவும் ரஹஸ்யமானது (பலரும் அறியக்கூடியதல்ல).

(உத்தமம் என்பதற்கு சிரேஷ்டமென்று விரிவுரை எழுதப்பட்டுள்ளது. 'சிறந்தது' என்பதே தகுந்த தமிழ் பதமெனலாம்)]

अर्जुन उवाच

अपरं भवतो जन्म परं जन्म विवस्वतः ।
कथमेतद्विजानीयां त्वमादौ प्रोक्तवानिति ॥ ४

அபரம் பவதோ ஜன்ம பரம் ஜன்ம விவஸ்வத: ।
கதமேதத்விஜானீயாம் த்வமாதௌ ப்ரோக்தவாநிதி ॥ 4

அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ண பகவானைக் கேட்கிறான் :— உம்முடைய பிறவி இப்பால் (நான் பிறந்த காலத்தில்) ஏற்பட்டது. ஸூர்யனின் பிறவியோ (காலத்தால்) முந்தியது. அப்படியிருக்க நீர் முற்காலத்தில் (ஆதிகாலத்தில் ஸூர்யனுக்கு) சொன்னீர் என்பதை (இந்த ஞானகர்ம யோகத்தை உபதேசித்தீர் என்பதை) எப்படி நான் அறியக்கூடும்? (நம்பக்கூடும்).

[ஸ்ரீசங்கரர் :— அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ண பகவான் பரப்ரஹ்மமென்றறிந்திருப்பினும், (எவருக்கேனும் இந்தக் கால அளவில் பல யுகாதிகால வித்யாஸத்தினால் ஸந்தேகமேற்படக்கூடுமென்றும் அந்த ஐயப்பாட்டைப் போக்கிவைப்பதற்காக) ஸ்ரீகிருஷ்ணன் ப்ரஹ்மமென்பதை வெளிப்படுத்தவே அர்ஜுனன் இக்கேள்வியைக் கேட்டதாகக் கொள்ளவேண்டும்.

ஸ்ரீராமானுஜர் :— " இருபத்தெட்டு சதுர்யுகங்களுக்கு (க்ருத, த்ரேதா, த்வாபர, கலி என நான்கு யுகங்களின் கூடுதலான கால அளவு ஒரு சதுர்யுகமெனப்படும்). முன்னர் பிறந்த ஸூர்யனுக்கு, இப்போது சிறிது காலம்

முன்னர் (சில ஆண்டுகள் முன்) பிறந்த நீர் எவ்வாறு இதை (இந்த யோகத்தை) சொல்லியிருக்கக்கூடும்?" என்பது கருத்து.]

श्रीभगवानुवाच

बहूनि मे व्यतीतानि जन्मानि तव चार्जुन ।
तान्यहं वेद सर्वाणि न त्वं वेत्थ परंतप ॥ ५

பஹூனி மே வ்யதீதானி ஜன்மானி தவ சார்ஜுன ।
தான்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப ॥ 5

ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்குச் சொல்வது :— என்னுடையதும், உன்னுடையதுமான பல ஜன்மங்கள் (பிறவிகள்) சென்று போயின. அவைகள் யாவற்றையும் நான் அறிவேன். நீ அறியமாட்டாய்.

[ஸ்ரீசங்கரர், 'அஹம் வேத' என்ற இரு பதங்களுக்கு எழுதும் உரையின் ஸாரம் — "நித்ய, சுத்த, புத்த, முக்த (அதாவது நிரந்தரமான, சுத்தமான, விவேகமுள்ள, விடுபட்ட) ஸ்வபாவத்தை (இயற்கைத் தன்மையை) உடையவனுனதாலும், ஞானம் (பேரறிவு) எப்போதும், யாதாலும் மறைக்கப்படத்தக்கதல்லவாதலாலும், நான் முந்திய ஜன்மாக்கள் யாவற்றையும் அறிவேன்".

ஸ்ரீராமானுஜர் :— "உனக்கும் எனக்கும் அநேக ஜன்மங்கள் ஆயினவென்று சொன்னதினுல் இந்த ஜன்மங்கள் (பிறவிகள்) யாவும் வாஸ்தவமென்று (உண்மையென்று) சொன்னதாகக் கொள்ளலாம்.

ஸ்ரீராகவேந்த்ரஸ்வாமிகள் (கீதா விவ்ருதியில்) :— "ஸ்ரீகிருஷ்ணன் தன்னுடைய ஜன்மத்தைக் குறித்து மட்டும் பதில் சொல்லவேண்டியிருக்க அர்ஜுனனுடைய ஜன்மத்தையும் பற்றிச் சொல்லி, "நான் அறிவேன், நீ

அறியமாட்டாய்" என்று கூறியதின் உத்தேசமென்ன வெனில், " நான் பரப்ரஹ்மம் (பரமாத்மா), நீ ஜீவன் (ஜீவாத்மா). பரப்ரஹ்மம் எல்லாவற்றையும் அறியும், ஜீவன் எல்லாவற்றையும் அறியமாட்டான். ஆகையால் பரப்ரஹ்மம் வேறு, ஜீவன் வேறு என்கிற வேற்றுமை யை (பேதத்தை) காட்டும்பொருட்டு பகவான் அர்ஜுன னையும் சேர்த்துப் பதில் சொன்னதாகத் தாத்பர்யம்]

अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन् ।
प्रकृतिं स्वामधिष्ठाय संभवाम्यात्ममायया ॥ ६

அஜோஅபி ஸன்னவ்யயாத்மா பூதாநாமீச்வரோஅபி ஸன் ।
ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா ॥ 6

நான் பிறப்பற்றவனானாலும், அழிவற்ற தன்மை யுடையவனானாலும், உயிருள்ள பிராணிகளனைவற்றிற்கும் ஈசனானாலும் (தலைவனாயினும்) எனக்குச் சொந்தமான ஸத்வாம்ச மாயையை ஸ்வீகரித்து (எடுத்துக்கொண்டு) ஸ்வரூப (உருவ) சக்தியினால் அவதரிக்கின்றேன் (பூமி யில் பிறப்பெய்துகிறேன்).

[ஸ்ரீசங்கரர்:— **आत्ममायया** என்ற சொல்லிற்குப் பின் வருமாறு பொருள் கூறுகிறார்:— "என்னுடைய அதீன மாயும் (எனக்குட்பட்டதும்) முக்குணங்களுடன் (ஸத்வ, ரஜஸ், தமஸ்) கூடியுமிருக்கும் மாயையால்". **संभवामि**= (**इव**) பிறந்தவனைப்போலக் காணப்படுகின்றேன்.

ஸ்ரீராமானுஜர்:— **स्वां प्रकृतिमधिष्ठाय** = என்னுடைய ஸ்வயமான (இயற்கையான) ஸ்வபாவத்துடன் கூடி, **आत्ममायया** = என்னுடைய ஆத்மஞானமாகிற ஸங்கல் பத்தினால் **संभवामि**= தேவ, மனுஷ்யாதி (தேவர், மனிதர் போன்ற) உருவங்களாய் அப்ராக்ருதமான (அப்ராக்ருதம் என்றால் உலகில் காணப்படுகிறதைப்போலல்லாத) சரீரத்

துடன் (உடலுடன்) அவதரிக்கிறேன் (பூவுலகில் பிறவி எடுக்கிறேன்).

ஸ்ரீமத்வரும், ஸ்ரீஇராகவேந்த்ரரும் :— अव्ययात्मा — அழிவற்ற தன்மையையும், தேஹத்தையும் (உடலையும்) உடையவனானாலும், स्वां = சொந்தமான, அதாவது என்னாலுண்டாக்கப்பட்ட, प्रकृतिं = வாஸுதேவாதி தேஹங்களை (பிறப்புடல்களை) अधिष्ठाय = பிரவேசித்து (அடைந்து), आत्ममायया = தன் விருப்பத்தால் அல்லது தன்னறிவால் संभवामि = உண்டானவனைப்போல் காண்கிறேன்.]

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥ ७

யதா யதா ஹி தர்மஸ்ய க்ளானிர்பவதி பாரத ।
அப்யுத்தானமதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம் ॥ 7

ஓ பரத வம்சத்தில் பிறந்தவனே! (அர்ஜுனா!) எந்தெந்தக் காலங்களில் தர்மத்திற்கு (வர்ணாச்ரம தர்மத்திற்கு) கெடுதியும், அதர்மத்திற்கு வளர்ச்சியும் உண்டாகின்றதோ அவ்வப்போது என்னை, நான் சிருஷ்டி செய்து கொள்கிறேன். (அதாவது நான் ஒரு உடலுடன், உருவத்துடன் வெளிப்படுகிறேன் அல்லது அவதாரம் செய்கிறேன்).

[ஸ்ரீராமானுஜர் 'धर्मस्य' என்ற பதத்திற்கு கொடுத்துள்ள பொருள் பின் வருமாறு :— என்னையே கதியாகக் கொண்டும், என்னுடைய தர்சனத்தை எதிர்பார்த்துக் கொண்டும், தன் உடலின் பராமரிப்பில் ஆசையை விட்டும், என்னைப் பாராத ஒரு விநாடிக்காலத்தை அநேக கல்பங்களாக (நீண்டகால அளவு) எண்ணி, உடலையும், புலன்களையுமடக்கித் திகழ்கிற வைணவப் பெருந்தகைகளுக்கு.]

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥ ८

பரித்ராணய ஸாதூனும் விணசாய ச துஷ்க்ருதாம் ।
தர்மஸம்ஸ்தாபநார்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥ 8

ஸாதுக்களை (நற்குணங்களையும், அடக்கத்தையு முடைய பெரியோர்களை) காப்பதின் பொருட்டும், துஷ்டர்களை (கெட்ட வழிகளில் செல்வோரை) அழிக்கவும், (அவர்களை தண்டித்து, நல்லொழுக்கத்திற்குத் திருப்பவும்), மற்றும் தர்மத்தை (நல்லொழுக்கத்தை) நிலைநாட்டும் பொருட்டும் ஒவ்வொரு யுகத்திலும் (க்ருத முதலிய நான்கு யுகங்கள் ஒவ்வொன்றிலும்) நான் அவதாரஞ்செய்கிறேன் (உலகில் பிறவி எடுக்கிறேன்).

[ஸ்ரீராமானுஜர் :— परित्राणाय (பரித்ராணய) = என்னுடைய ஸ்வரூபதர்சனம், லீலாவிநோதங்கள் இவைகளை அருள்வதாலும் (காண்பிப்பதால்), என்னுடைய உரையாடலை (ஸம்பாஷணையை) அவர்கள் (ஸாதுக்கள்) அடையும்படி செய்வதாலும், அவர்களை ஸம்ரக்ஷிக்கவும் (காக்கவும்), दुष्कृतां (துஷ்க்ருதாம்) = மேலே சொல்லப்பட்ட ஸாதுக்களல்லாதவர்களுடைய, धर्मसंस्थापनार्थाय (தர்மஸம்ஸ்தாபநார்தாய) = வேதோக்தமானதாயும் (வேதத்தில் விதிக்கப்பட்டதாயும்), என்னுடைய ஆராதனரூபமாகவுமுள்ள (பூசனை வழியாகவுள்ள) தர்மத்தைக் காப்பதின் பொருட்டு.

ஸ்ரீதரர் :— युगे युगे (யுகே யுகே) என்ற சொற்களை "அவ்வக்காலத்தில்" என்று விளக்கியுள்ளார்.]

जन्म कर्म च मे दिव्यमेवं यो वेत्ति तत्त्वतः ।
त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन ॥ ९

ஜன்ம கர்ம ச மே திவ்யமேவம் யோ வேத்தி தத்த்வத: ।
த்யக்த்வா தேஹம் புனர்ஜன்ம நைதி மாமேதி
ஸோஅர்ஜுன ॥ 9

ஓ அர்ஜுனா! திவ்யமான (தேவ ஸம்பந்தமான) என்னுடைய அவதாரத்தையும், செய்கையையும் எவன் இவ்வாறு உண்மையாக அறிகின்றானோ அவன் தேஹத்தை (பூத உடலை) விட்டுப் பின்னர் மறுபடியும் பிறவி எய்துவதில்லை. அத்தகையவன் என்னை அடைகிறான்.

[ஸ்ரீசங்கரரும், ஸ்ரீராமானுஜரும் दिव्यम् (திவ்யம்) என்ற சொல்லிற்கு அப்ராக்ருதம் (ப்ரக்ருதித் தொடர்பில்லாத, உலகியலில் காணப்படாதது போன்றது) என்று பொருள் கூறியுள்ளனர். சங்கரர், ஐச்வரம் (ஈச்வர மயமானது) என்றும் சேர்த்துக் கூறியுள்ளார். ஸ்ரீதரர், தெய்வ ஸம்பந்தமான என்று பொருள் எழுதியுள்ளார். देहम् (தேஹம்) என்ற சொல்லுக்கு ஸ்ரீதரர் உடலிலுள்ள பற்று (ஆசை) என்று கூறியுள்ளார். जन्म (ஜன்ம) = ஸம்ஸாரம் (பிறவிக்கடல்), (ஸ்ரீதரர்).

ஸ்ரீராமானுஜர் :- मे (மே) = முக்குணங்களோடு கூடிய ப்ரக்ருதி ஸம்பந்தமான(பூவுலகத் தொடர்பு)பிறவியற்றவனும், ஸர்வேச்வரத்வம் (எல்லாவற்றிற்கும் தலைவனான தன்மை), ஸர்வஜ்ஞத்வம் (எல்லாவற்றையும் அறியும் தன்மை அல்லது எல்லா அறிவும் படைத்த தன்மை) ஸத்யஸங்கல்பம் போன்ற எல்லா அளவிலா மங்களமான குணங்களுடன் கூடிய என்னுடைய. जन्म (ஜன்ம = அவதாரத்தையும் कर्म च (கர்ம ச) = ஸாதுக்களைக் காக்கும் பொருட்டும், என்னையே கதியாகவடைந்த மக்கள் கடைத்தேறட்டுமென யான் செய்த அவதார சரித்திரத்தையும், दिव्यम् (திவ்யம்) = அப்ராக்ருதம் (பூவுலகின்

தொடர்பற்றது) என்பதை உண்மையில் எவன் அறிகிருனே.

ஸ்ரீமத்வாசார்யரும், ஸ்ரீராகவேந்த்ரஸ்வாமியும் :— என்னுடைய அவதாரத்தின் (உலகில் பிறவியின்) மேன்மை, என் சரித்திர மேன்மை, இவைகளின் தத்வத்தையறிந்து, அதனுல் முக்தி (வீடு பேறு) அடையத் தகுதியடையும் ஜீவன் (ஜீவாத்மா) எவனே, அத்தகைய ஜீவன் முக்தியடையும் விஷயத்தை நிருபிக்கவே இந்த ச்லோகம் (செய்யுள்) ஏற்பட்டதாக அறியப்பாலது]

वीतरागभयक्रोधा मन्मया मामुपाश्रिताः ।
बहवो ज्ञानतपसा पूता मद्भावमागताः ॥ १०

வீதராகபயக்ரோதா மன்மயா மாமுபாச்ரிதா: 1
பஹவோ ஞானதபஸா பூதா மத்பாவமாகதா: ll 10

ஆசை, கோபம் (சினம்), பயம் இவைகளற்றுப்போய், மனதை என்னிடத்தில் வைத்து, என்னையே உபாஸித்தும் (பூஜித்து, ஜபித்து), பலர் ஞானமாகிற (பேரறிவாகிற) தவத்தினுலே, தூய்மையடைந்து என்னுடைய ஸாயுஜ்யத்தையடைந்தார்கள் (என்னுடன் இணைந்துவிட்டார்கள், அதாவது ஐக்யமுக்தியடைந்தார்கள். ஜீவப்ருஹ்ம ஐக்யம் குறிப்பிடப்படுகிறது.)

[मन्मया: (மன்மயா:) என்ற சொல்லிற்கு ஸ்ரீ சங்கரர் 'தானே ஈச்வரன் என்று அறிந்தவர்கள்' என்றும், ஸ்ரீமத்வர், 'என்னைத்தவிர பிற பொருள்களில் நோக்கில்லாத' என்றும், கீதாவிவ்ருதியின் ஆசிரியர், 'நானே ஸர்வோத்தமன்; அகில உலகங்களுக்கும் முக்கியக் காரணமானவனென்றுமறிந்திருக்கிற' என்றும் பொருள் கூறியுள்ளனர். उपाश्रिता: (உபாச்ரிதா:) என்ற சொல்லிற்கு சங்கரரின் உரையில் "ஞான நிஷ்டையினுல் அறிகின்ற" என்றும், கீதாவிவ்ருதியில் "என்னையே சரணடைந்திருக்

கின்ற" என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது. ज्ञानतपसा (ஞானதபஸா) என்பதற்கு ஸ்ரீதரர், "ஞானத்தாலும், தவத்தாலும்" என்றும், ஸ்ரீராமானுஜர், "என்னுடைய ஜன்ம கருமத்தின் தத்வத்தை (எனது அவதாரம், லீலைகளின் உட்கருத்தை) அறிகிற ஞானமாகிற தவத்தினாலே" என்றும், கீதாவிவ்ருதியின் ஆசிரியர், "ஞானமாகிற தவத்தினாலே அல்லது ஞானத்தினாலும், தவத்தினாலும்" என்றும் உரை எழுதியுள்ளார்கள். मद्भावम् (மத்பாவம்) என்ற பதத்திற்கு ஸ்ரீசங்கரர் "மோக்ஷத்தை" என்றும். கீதாவிவ்ருதியின் ஆசிரியர் "ஸாயுஜ்யத்தை" (பரப்ருஹ்மத்தின் ஸமீபத்திலிருப்பதை) என்றும் விளக்கம் கூறுகின்றனர்.

ஸ்ரீ ராமானுஜர் இந்தச் சொல்லிற்குப் பொருள் கூறவில்லை. ஆனால் 8ஆவது அத்யாயம், 5வது ச்லோகத்தில் இதே சொல்லிற்கு, "என்னை எந்த ஆகாரமாய் (உருவாய்) நினைத்து தியானம் செய்கின்றானோ அந்த ஸ்வரூபம்" என்றும், 14ஆவது அத்யாயம், 19–20 ச்லோகங்களில் "ஆத்மானுபாவத்தை" என்றும் பொருள் உரைத்திருப்பதால், அவைகளில் ஒன்றை இவ்விடத்திற்கும் ஏற்றதாகக் கொள்ளத்தக்கது.]

ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम् ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥ ११

யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம் ।
மம வர்த்மானுவர்தந்தே மனுஷ்யா: பார்த்த ஸர்வச: ॥ 11

ஓ பார்த்த! (அர்ஜுனா) எவரெவர் எவ்விதமாக என்னை உபாஸிக்கின்றனரோ அவரவர்களை அவ்விதமாகவே நான் அனுக்ரஹம் செய்கிறேன். (வேண்டியனவற்றை கொடுத்து ஆசீர்வதிக்கிறேன்). மனிதர் என்னுடைய மார்க்கத்தை (வழியை, பாதையை) எல்லா முறைகளிலும் கடைபிடிக்கின்றனர்.

[யதா (யதா) என்ற சொல்லிற்கு சங்கரர் "பயன் (பலன்) கருதியோ, பயனைக் கருதாமலோ" என்று பொருள் கூறியுள்ளார். भजामि (பஜாமி) என்றால் ஸேவிக்கிறேன், வணங்குகிறேன், உபாஸிக்கிறேன் என்பதுதான் பொதுவாகக் கூறக்கூடிய பொருள். ஆனால் இது பகவான் கிருஷ்ணனால் கூறப்பட்டதால் உரை ஆசிரியர்கள் 'அனுக்ரஹம் செய்கிறேன்' என்று பொருள் தந்துள்ளனர். वर्त्म (வர்த்ம) என்ற பதத்திற்கு சங்கரர், 'பூஜை ரூபமான வழி' என்றும் ராமானுஜர், 'ஸ்வபாவத்தை' என்றும், ஸ்ரீதரர், "பஜனை மார்க்கத்தை" என்றும் உரை எழுதியுள்ளனர். सर्वशः (ஸர்வச:) என்றால் நற்கார்யங்களாலாவது, ஞானத்தினாலாவது, ச்ரவணம், மனனம், கீர்த்தனம், அர்ச்சனம், த்யானம் போன்ற எந்த வழியிலாவது, மற்றெப்படியாவது என்று பொருள் கொள்ளலாம்.

ஸ்ரீதரர் கூறுவது:— தன்னையே உபாஸிப்பவர்களுக்கு ஸாயுஜ்யபதவியைக் (தன்னுடன் இணைப்பை கொடுப்பதாக) முன்னர் (10ஆவது ச்லோகத்தில்) சொல்லப்பட்டதால், மற்ற இந்திரன் முதலிய தேவர்களை உபாஸிப்பவனுக்கு பயன் கிட்டாது என்று ஏற்படுகிறது; இதனால் பகவானிடத்தில் பக்ஷபாதம் (ஸம நோக்கில்லாத மனப்பான்மை) காணப்படுவதுபோல் தோன்றும். அத்தகைய பக்ஷபாதமில்லை என்பதை இந்த ச்லோகத்தில் பகவான் வெளிப்படுத்துகிறார். "யதா (யதா) = எவ்விதமானாலும்" என்கிற சொல்லினால் எவர் பயன் கருதியோ, பயன் கருதாதோ, பகவானை நேரிலோ, அல்லது இந்திரன் முதலிய தேவதைகளைப் பூஜிப்பது மூலம் தன்னை உபாஸிக்கிறார்களோ அவர்களுக்கு அவரவர்களின் வேண்டுகோளை அனுஸரித்துத் தானே பயனை (பலனை) தருவதாக பகவான் இச் செய்யுளில் கூறியுள்ளார்.

மேற்கண்ட கருத்தை ஸ்ரீசங்கரர் ஆதரிக்கிறார். ஆனால் தேவதைகளைப்பற்றி மேலே சொல்லப்பட்டுள்ள விஷயங்களை சங்கரர் குறிப்பிடவில்லை.

ஸ்ரீ ராமானுஜர் :— "என்னை சரணடைகிறவனுக்கு மாத்திரம் அனுக்ரஹம் செய்கிறேன் என்பதல்ல. என்னை ஆச்ரயிக்க மனமுள்ளவனுய் எவ்விதமான பயனைக் கருதி யாவது, வேண்டியாவது, என்னை உபாஸிப்பவனையுங்கூட அனுக்ரஹித்து, அவனுக்குத் தர்சனமும் கொடுக்கிறேன் என்பது கருத்து"

ஸ்ரீ மத்வர் :— "யாகம் (வேள்வி) என்னும் கர்மாவினுல் ஆராதிக்கப்படுகின்ற இந்திரன் முதலிய தேவர்களின் பெயர்கள் யாவும் என்னுடையனவே. ஆகையால் அப்பெயர்களினுல் பூஜிக்கப்படுபவனும் நானே ஆகின்றனன்" என்ற ஒரு விஷயத்தை அதிகம் கூறி மற்றபடி மேலே ஸ்ரீதரரினுல் கூறப்பட்ட கருத்தையேதான் மத்வரும் வெளியிட்டுள்ளார்.]

काङ्क्षन्तः कर्मणां सिद्धिं यजन्त इह देवताः ।
क्षिप्रं हि मानुषे लोके सिद्धिर्भवति कर्मजा ॥ १२

காங்க்ஷந்த: கர்மணும் ஸித்திம் யஜந்த இஹதேவதா: ।
க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா ॥ 12

செய்யும் நற்செய்கைகளின் (கர்மங்களின்), பலனைக் (பயனை) கருதி ஆசைப்படுகின்றவர்கள் இந்திரன் முதலிய தேவதைகளை ஆராதிக்கிருர்கள். (யாகம், பூஜை, கீர்த்தனம், ஜபம் முதலியவை ஆராதன முறைகள்). ஏனெனில் மானிட உலகில் (பூவுலகில்) செய்யப்படும் கர்மாவிற்குச் சீக்கிரமே பயன் உண்டாகிறது (கிடைக்கிறது).

[ஸ்ரீராமானுஜர் :— கர்மாவினுலுண்டாகிற பலன் மாநிட உலகிலும், ஸ்வர்க்கலோகத்திலும் யாதொரு காரணத்தினுல் சீக்கிரமாக உண்டாகிறதோ, அக்காரணத்தினுலேயே செய்யப்பட்ட கருமங்களின் பயனுக உண்டாகின்ற, பசு, புத்திரன், ஸ்வர்க்காதி பலனை விரும்புகின்றவர்கள்,

தேவதைகளை ஆராதிக்கின்றனர். இதன் கருத்து யாதெனில் இந்திரன் முதலிய தேவர்களை ஆராதிப்பதனுல் சீக்கிரமாகப் பயன் கிட்டும் என்று சொன்னதினுல் பகவானை ஆராதிப்பதால் சீக்கிரமாகப் பலன் கிடைக்காது என்று சொன்னதாகும். எஞ்ஞான்றும் தூய்மையான மோக்ஷபலன் சீக்கிரமாகக் கிட்டாது என்பதும், இப்படி மோக்ஷபலனை விரும்புபவர்கள் வெகு சிலரென்பதுமே கருத்தாகும்.

கீதாவிவ்ருதியில் :— "எந்த தேவதைகளை ஆராதித்தாலும் அந்தந்த தேவதையுனுள் நானே இருந்து பலனை அளிக்கிறேன்".]

चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः ।
तस्य कर्तारमपि मां विद्ध्यकर्तारमव्ययम् ॥ १३

சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகச: I
தஸ்யகர்தாரமபி மாம் வித்த்யகர்தாரமவ்யயம் II 13

நான்கு வர்ணங்கள் (ப்ரஹ்ம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர) என்னுல், குணங்கள்; கர்மாக்கள் (செய்கைகள்) இவைகளைப் பாகங்களாகச் செய்வதினுலே உண்டாக்கப் பட்டன. அத்தகைய ச்ருஷ்டிக்கு (உண்டாக்குதலுக்கு) நானே கர்த்தா (ஆக்கியோன்) ஆனுலும், என்னைப் பற்றற்றவனுகவும், ஆக்கியோனல்லனென்பதாகவும் அறிந்துகொள்.

[இச் செய்யுளில் முதலில் வர்ணங்களின் படைப்புக்குத் தானே காரணன் என்றும், பின்னர் அத்தகைய ச்ருஷ்டிக்குத் தான் கர்த்தாவல்ல என்றும் கூறப்பட்டுள்ளது, ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாகக் காணப்பட்டாலும் அத்தகைய முரண்பாடு உண்மையாக இல்லை என்று உறையாசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

ஸ்ரீசங்கரர் :— மாயையைக் கடைப்பிடித்து, படைப்பைச் செய்திருப்பதால் கர்த்தா என்று முதலில் சொல்லப்பட்ட போதிலும் பாரமார்த்த ரீதியில் கர்த்தாவல்ல.

ஸ்ரீதரர்:— படைப்பு விஷயத்தில் நான் கர்த்தாவானாலும், பயனில் (பலனில்) விருப்பமோ, பற்றுதலோ எனக்கில்லாதலால் அந்தப் படைப்பெனும் கருமத்தின் பலன் என்னிடம் ஒட்டிக்கொள்வதில்லையாதலால் நான் கர்த்தாவல்ல.

ஸ்ரீமத்வர் :— எனக்கு யாதொன்றையும் படைப்பதில் யாதொரு பிரயாசமுமில்லை (சிரமமில்லை, முயற்சி தேவையில்லை). மற்றவர்கள் யாதொன்றை உண்டாக்க வேண்டுமானாலும் மிகுந்த முயற்சியும் சிரமமும் எடுத்துக்கொள்ள வேண்டும். நான் நினைத்த உடனேயே எதுவும் தானே உண்டாகிவிடுமாகையால் நான் கர்த்தாவில்லை.

ஸ்ரீஇராகவேந்த்ரர் — மேலே ஸ்ரீதரஸ்வாமிகளின் கருத்துப் போலவே தனது அபிப்பிராயத்தையும் தெரிவித்து மேற்கொண்டு கூறுவதாவது :— "எல்லாப் படைப்புகளுக்கும் (ஸர்வ ச்ருஷ்டிகளுக்கும்) நானே கர்த்தாவாயினும் (காரணமானவனானாலும்) என்னைப் படைப்பவன் யாருமில்லை எனவே நான் அகர்த்தா (கர்த்தாவுடையவனல்லன்), ஏன் என்பது அடுத்த செய்யுளில் கூறப்பட்டுள்ளது"]

குறிப்பு:- இந்த ச்லோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வர்ணங்கள் — ப்ரஹ்ம, க்ஷத்ரிய. வைச்ய, சூத்ர ஆகிய நான்கு. குணங்கள் — ஸத்வ, ரஜோ, தமோ குணங்களாம். கர்மங்கள் முன் கூறப்பட்ட நான்கு வர்ணங்களுக்குறிய கர்மங்களாகும். நான்கு வர்ணங்களுக்குறிய குண விபாகங்கள் பாஷ்யக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய அபிப்பிராயங்களை ஒன்றுசேர்த்து பார்க்கின் ஒவ்வொரு வர்ணப்பிரிவினரிடையேயும் முக்குணங்களும் உள்ளனவென்றும், ஒவ்வொரு குணம் ஒவ்வொரு பிரிவினரிடம் அதிகமாகவும், மற்ற குணங்கள் குறைவாகவும் இருக்குமென்பது தெளிவுபடுகிறது.

न मां कर्माणि लिम्पन्ति न मे कर्मफले स्पृहा ।
इति मां योऽभिजानाति कर्मभिर्न स बध्यते ॥ १४

ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலே ஸ்ப்ருஹா l
இதி மாம் யோ அபிஜானாதி கர்மபிர்ன ஸ பத்யதே ll 14

என்னைக் கர்மங்கள் ஒட்டுவதில்லை. எனக்குக் கர்ம பலன்களில் (செய்கைகளினால் அடையக்கூடிய பயன்களில்) ஆசையில்லை. இவ்விதமாக எவன் என்னைத் தெரிந்துகொள்கிறானோ அவன் கர்மங்களால் கட்டப்படுகிறதில்லை.

(கர்மங்களுக்குக் காரணமான நான் என்ற எண்ணம் கிரமமாகத் தேய்வுபெறுவதால்தான்).

[ஸ்ரீசங்கரர் :— ஏன் கர்மபலன் பகவானிடம் ஒட்டுகிறதில்லையென்றால், அஹங்காரமாவது (தான் என்ற எண்ணம்), பலாபேக்ஷையாவது (பயனையடையும் ஆசை) அவருக்கு இல்லை என்பதால்தான். தானே ப்ரஹ்மமென்பதையும், ஒரு கர்மாவுக்கும் தான் கர்த்தாவல்லவென்பதையும் அறிந்தும், நான், என்னுடையது என்ற எண்ணங்களும், ஆசை முதலியவை இல்லாது இருக்கிறவனையும் கர்மாக்கள் கட்டுப்படுத்துகிறதில்லை.

ஸ்ரீராமானுஜர் :— என்னைக் கர்மபயன் ஏன் ஒட்டுகிறதில்லை என்றால், அந்தந்தப் பிராணிகளின் முன்ஜன்ம (பண்டை) கர்மங்களுக்குத் (செய்கைகளுக்கு) தக்கபடி தேவ, மானிட, பசு, பறவை போன்ற உடல்களுள்ளவைகளாக அவைகளைப் படைக்கிறேனேயல்லாது யாதொரு விருப்பு, வெறுப்பினால் நான் அப்படிப் படைக்கிறதில்லை. அந்தந்தப் பிறவியினுடைய அவ்வத்தகைய உடலுக்கு (தேஹத்திற்கு) காரணம் அந்தந்தப் பிராணிகளின் முன் பிறவிகளின் கர்மமே (ஊழ்வினையே). ஆகையால் நான் யாதொரு பக்ஷபாதம் (வேறுபாடுகளுடைய நோக்கு)

செய்கிறதில்லை. யாதொரு தோஷமும் (தீங்கும்) என்னை ஒட்டாது, ஒட்டவும் முடியாது. பண்டைக் கர்மங்களை யொட்டி பிராணிகளைப் படைப்பது போலவே, அவைகளுக்கு உண்ணத்தகுந்த பொருள்களையும் படைக்கிறேன். அந்தப் பலனில் (பயனில்) எனக்கு யாதொரு தொடர்புமில்லை. எனவே அப்பயனும் என்னிடம் ஒட்டுகிறதில்லை. ச்ருஷ்டி (படைப்புக்கு)க்குக் காரணம் அவரவரின் முற்பிறவிகளின் கர்மமே (செய்கைகளே). நான் நிமித்த காரணமாக (சாக்கு, உடனடிக் காரணம்) மட்டுமிருக்கிறேன். இந்த முறையில் என்னை எவன் அறிகிருனே அவனுடைய கர்மயோகத்திற்கு விரோதியாக (எதிரியாக) உள்ள பண்டைக்கர்மத்தினுல் அவன் கட்டப்படுகிறதில்லை என்பது கருத்து.

ஸ்ரீமத்வர் :— பக்ஷபாதம் (வைஷம்யம் = வேறுபாடுகள் கூடிய நோக்கு) இல்லாததால் கர்மம் ஒட்டுகிறதில்லை. ஆசையில்லாததால் பலன் ஒட்டுகிறதில்லை என்பது கருத்து.

ஸ்ரீராகவேந்த்ரர் :— ஜீவனைப்போல் (உயிருடலுடன் கூடிய பிறவியைப் போல்) நான் பயனை விரும்பி கர்மாக்களைச் (கார்யங்களை) செய்வதில்லை. ஆகவே கர்மங்களோ, பலனே என்னைக் கட்டுப்படுத்துகிறதில்லை. அந்தந்தப் பிறவியின் (பிராணியின்) முன் கர்மத்தையொத்துப் படைப்பதினுல் பலவிதமான படைத்தலைச் செய்த பக்ஷபாத தோஷமென்னையடைகிறதில்லை. இப்படியாக என்னை அறிந்தவனும் எவ்விதத்திலும் கட்டுப்படுகிறதில்லை அப்படிப்பட்டவனுக்கே பந்தம் (கட்டு) இல்லாதபோது எனக்கு எப்படி கட்டு உண்டாகும்? "இப்படி என்னை அறிந்தவன்" என்ற பகவானின் சொற்களால் ஸ்ரீகிருஷ்ணபகவான் பரமாத்மாவென்பதும், அறிகிறவன் ஜீவனென்பதும், அறியப்படுகிறவன் தான் அந்த பரமாத்மாவென்றும், தெளிவாகிறபடியால் ஜீவேச்வர பேதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு :- கர்மங்களும், அவைகளின் பயனும் ஈச்வரனை ஒட்டாது என்று ஆன்மீக அறிவில்லாதவரும்கூட தெரிந்துகொள்ளக்கூடும். அப்படித் தெரிந்துகொண்டவன் கர்மங்களால் கட்டுப்படுகிறதில்லையென்று இந்த ச்லோகத்தில் சொல்லியிருக்கிறபடியால், ஞானமடைதல், நிஷ்டை, தவம் முதலியன அனுவசியமென பகவான் கூறியுள்ளதாகத் தோன்றும். ஈச்வரனுடைய சக்தி, செய்கை, மேன்மை முதலியவைகளைப்பற்றி அறிந்து கொண்டவனுக்கு அந்த ஈச்வரனிடம் பக்தியேற்பட்டு, அதன்மூலம் அவன் ஈசனை உபாஸிக்க முற்படுவான். அத்தகைய உபாஸனையால் அவனுக்கு ஈச்வரனின் அனுக்ரஹம் (அருள்) ஏற்பட்டு, படிப்படியாக கர்மங்களின் கட்டுகளிலிருந்து அவனுக்கு விடுதலை ஏற்படும் என்பதே தெளிவான கருத்து.]

एवं ज्ञात्वा कृतं कर्म पूर्वैरपि मुमुक्षुभिः ।
कुरु कर्मैव तस्मात्त्वं पूर्वैः पूर्वतरं कृतम् ॥ १५

ஏவம் ஞாத்வா க்ருதம் கர்ம பூர்வைரபி முமுக்ஷுபி: 1
குரு கர்மைவ தஸ்மாத்த்வம் பூர்வை: பூர்வதரம் க்ருதம் 11

இவ்விதமாக (அஹங்காரம், அதாவது தான் என்ற கர்வம், கர்த்ருத்வம், நான் செய்கிறேன் என்ற தத்வம், இவை இல்லாது செய்யும் கர்மங்கள் தன்னைக் கட்டாது என்ற முறையில்) தெரிந்துகொண்டு, முன்னோர்களும் மோக்ஷத்தில் (வீடுபேறு அடைதலில்) விருப்பமுள்ளவர்களாலும் (ஜனகர் முதலியோரால்) கூட கர்மங்கள் (செய்தற்கறிய செயல்கள்) செய்யப்பட்டதால், முன்னோர்களால் செய்யப்பட்டதும், நீண்டகாலமாக நீடித்துவந்துள்ளதுமான கர்மத்தை நீயும் செய்வாயாக.

[மாபெரும் ஞானிகளான (பேரறிவு பெற்றவர்களான) ஜனகர் போன்றவர்கூட உரிய கர்மாக்களைச் செய்து வந்தனர். எனவே நீ உனக்குரிய செயலைச் செய்யேனெனச் சொல்வதற்குத் தகுதியுள்ளவனல்ல. தக்க

கர்மத்தைச் செய்து அதன் பலனை ஈச்வரனுக்கு அர்ப்பணித்தால், அதனுல் புத்தி, மனம் சுத்தமடைந்து, ஞானமும் பெற்று, அந்த ஞானத்தினுல் மோக்ஷமெனும் பிறவிக் கடலிலிருந்து விடுதலையையும் அடையலாம் என்பது கருத்து.]

किं कर्म किमकर्मेति कवयोऽप्यत्र मोहिताः ।
तत्ते कर्म प्रवक्ष्यामि यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ॥ १६

கிம் கர்ம கிமகர்மேதி கவயோஅப்யத்ர மோஹிதா: 1
தத்தே கர்ம ப்ரவக்ஷ்யாமி யஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேஅசுபாத்ll

கர்மமென்பது எத்தகையது? (செய்யத்தக்கது எப்படிப்பட்டது?) (அகர்மம் செய்கையற்ற நிலை) எத்தகையது? என்பதுபற்றி கவிஞர்கள்கூட (கற்றறிந்தவர்கள்கூட) மோஹமடைகிருர்கள் (தெளிவில்லாத நிலையையடைகிருர்கள்). எதைத் தெரிந்துகொண்டு அல்லது கடைப்பிடித்து பிறவிப்பெருங்கடலிலிருந்து விடுபடுவாயோ அந்தந்த கர்மாகர்மங்களை உனக்குச் சொல்கிறேன்.

[ஸ்ரீ இராகவேந்த்ர ஸ்வாமி இந்த ச்லோகத்தின் பின் பகுதியிலுள்ள तत्ते कर्म (தத்தே கர்ம) என்ற பதங்களை 'அந்த கர்மத்தை உனக்கு' என்று முதலில் பொருள் கூறி, பிறகு முன்பாதியில் அகர்மமும் சொல்லப்பட்டிருப்பதால் அகர்மத்தையும் பகவான் சொல்வதாகச் சொல்ல வேண்டுமென்பதற்காக அகர்மத்தையும் சேர்த்து மறுபடியும் பொருள் கூறியுள்ளார். ஸ்ரீ சங்கரரும், ஸ்ரீதரரும் ச்லோகத்தின் பின்பாதியில் அகர்மத்தையும் சேர்த்தே விரிவுரையாற்றியுள்ளனர். ஸ்ரீ ராமானுஜர் — 'कर्म किम्' (கர்ம கிம்) = மோக்ஷத்தை விரும்புபவர்கள் பின்பற்ற வேண்டிய கர்மம் எப்படிப்பட்டது? अकर्म किम् (அகர்ம கிம்) = அக்கர்மத்தினுள்ளடங்கியிருக்கும் கர்த்தாவினுடைய (செய்கிறவனுடைய) ஆத்மஸ்வரூபஞானமாகிற

அகர்மமெப்படிப்பட்டது? இந்த விஷயத்தில் வித்வான்கள்கூட தெளிவற்ற மோஹிக்கும் நிலைமை அடைகிருர்கள் என்று உரை செய்துள்ளார்.]

कर्मणो ह्यपि बोद्धव्यं बोद्धव्यं च विकर्मणः ।
अकर्मणश्च बोद्धव्यं गहना कर्मणो गतिः ॥ १७

கர்மணோ ஹ்யபி போத்தவ்யம் போத்தவ்யம் ச விகர்மண: ।
அகர்மணஸ்ச போத்தவ்யம் கஹநு கர்மணோ கதி: ॥ 17

செய்யத்தக்கவையின் (கர்மத்தின்) தத்வம் (ஸ்வரூபம்) அறிந்துகொள்ளப்படவேண்டியது. செய்யத்தகாதவையின் தத்வமான ஸ்வரூபமும் அறிந்துகொள்ளப்படவேண்டியதே. அகர்மமென்னும் கர்மத்தை செய்யாமையின் ஸ்வரூபமும் தெரிந்துகொள்ளப்படவேண்டியதே. ஏனெனில் இம்மூன்றின் உண்மைகளைத் தெரிந்துகொள்வது கடினம்.

[**कर्मणः** (கர்மண:) என்ற சொல்லிற்கு ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர், ஸ்ரீதரர் ஆகியோர் வேதத்தில் விதிக்கப்பட்ட நல்ல கர்மாக்கள் எனப் பொருள் கூறியுள்ளனர். ஸ்ரீ ராமானுஜர் மாத்திரம் மோக்ஷ ஸாதனமான கர்மம் என்றுள்ளார்.

विकर्मणः (விகர்மண:) என்ற பதத்திற்கு ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் ஆகியோர் வேதத்தினுல் நிஷேதிக்கப்பட்ட கீழ்த்தரமான செய்கைகள் என்று பொருள் கூறுகின்றனர். ஸ்ரீ ராமானுஜர் 'நித்ய, நைமித்திக காம்ய கர்மாக்களும் அவைகளுக்குக் காரணமான பொருளீட்டல் முதலிய பலவிதச் செயல்களும் எனப் பொருள் கூறியுள்ளார்.

अकर्मणः (அகர்மண:) என்பதற்கு ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் ஆகியோர் கர்மத்தைச் செய்யாமை (அதாவது விதிக்கப்பட்ட செயல்களைக்கூடச்

செய்யாதிருத்தல்) என உரை செய்துள்ளனர். ஸ்ரீ ராமானுஜர் 'கர்மத்திலடங்கியிருக்கிற அகர்த்தாவாகிய (செய்யாதவனுகிய, செய்கையிலொட்டாத) தன்னுடைய ஆத்மஸ்வரூப ஞானம்' என்று பொருள் கூறியுள்ளார்.]

कर्मण्यकर्म यः पश्येदकर्मणि च कर्म यः ।
स बुद्धिमान्मनुष्येषु स युक्तः कृत्स्नकर्मकृत् ॥ १८

கர்மண்யகர்ம ய: பச்யேத் அகர்மணி ச கர்ம ய: ।
ஸ புத்திமான்மனுஷ்யேஷு ஸ யுக்த: க்ருத்ஸ்னகர்மக்ருத் ॥

கர்மத்தில் (விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்வதில்) அகர்மத்தையும் (செய்யாத நிலையையும்), அகர்மத்தில் (யாதும் செய்யாத நிலையில்) கர்மத்தையும் எவன் காண்கின்ருனே அவன் மனிதர்களுள் புத்திகூர்மையுள்ளவனுக (விவேகமுள்ளவனுக), மனச்சாந்தியுள்ள யோகியாக, எல்லாக் கர்மங்களையும் செய்தவனுகவும் ஆகின்ருன்.

[ஸ்ரீ சங்கரர்:— உடல், மனம், புலன்கள் ஆகியவைகளின் வியாபாரம் (செய்கைகள்) கர்மமென்றும், உடல் முதலிய முன் கூறப்பட்ட மூன்றினுல் எந்தச் செய்கை செய்யப்படுவதில்லையோ அச் செய்யாமை அகர்மமென்றும் சொல்லப்படும். ஆன்மாவுக்கு, செய்வது, செய்யாமலிருப்பது ஆகிய கர்மம், அகர்மம் இரண்டுமே இல்லை. விவேகமற்றவர்கள் (அஞ்ஞானிகள், அறிவிலிகள்) கர்மம், அகர்மம் இவற்றை ஆன்மாவின்மீது ஏற்றிவைத்து, நான், என்னுடையது என்ற எண்ணங்களால், 'நான் செய்கிறேன்', 'நான் செய்யாமலிருக்கிறேன்' என வ்யவஹரிக்கிருர்கள் (சொல்லுகிருர்கள்). ஆன்மா கர்மங்களைச் செய்வதுபோல் தோற்றமளித்தாலும், கர்மங்களைப் புரிவது உடல் முதலியவைகளே, இதில் ஆன்மாவுக்கு யாதொரு தொடர்புமில்லை, ஆன்மா கர்மஞ் செய்வதில்லை என்று எவன் உணர்கின்ருனே, அவன் செயலில்

செயலின்மையைக் காண்கின்றுன். உதாரணமாக ஓர் ஆற்றில் வேகமாகச் செல்லும் ஓர் ஓடத்தில் நின்று கொண்டிருக்கும் ஒருவனுக்கு அவ்வாற்றின் கரையிலுள்ள மரங்கள் வேகமாகப் பின்னுேக்கிச் செல்வதுபோலத் தோன்றும். அவன் வேகமாகச் செல்லும் ஓடத்திலுள்ள தன்னிடத்தில் வேகமாகச் செல்லும் செய்கை இருக்கும் போது, செயலற்றவைகளான கரையிலுள்ள மரங்களிடத்தில் செய்கையைக் காண்கின்றுன். அதேபோல், உடல், மனம், புலன்கள் ஆகியவை செய்யும் கர்மத்தை செயலில் ஈடுபடாத ஆன்மாவிடம் மனிதன் பார்க்கிறுன். மரங்களில் செய்கை இல்லாததுபோல் ஆன்மாவிடமும் கர்மமில்லை எனக் காண்கிறவன் கர்மத்தில் அகர்மத்தைப் பார்ப்பவனுவான்.

செய்கையின்றி இருக்கையிலுங்கூட (அகர்மம்) நான் என்ற எண்ணத்தால் அதைத்தான் (ஆன்மா) செய்யவில்லையென அறிவிலி (மூடன்) நினைக்கிறுன், சொல்கிறுன். எப்படியெனில், 'நான் அதைச் செய்யவில்லை, அதனுல் ஸுகமாக இருக்கிறேன்' என்கிறுன் ஒருவன். இப்போது 'அதைச் செய்யாமலிருப்பதாகிய அகர்மத்தில் (செய்யாமையில்) "அதை "நான்" செய்யவில்லை, அதனுல் "நான்" ஸுகமாக இருக்கிறேன்", என்பதில் 'நான்' என்கிற அஹங்காரத்தின் கர்மத்தை(செய்கையை) பார்க்கிறுன். (அதாவது அறிவாளி செய்யாமலிருப்பதிலுங் கூட கர்மம் அடங்கியிருப்பதை அறிகிறுனென்று கருத்து)

ஸ்ரீதரர் :— "कर्मणा बध्यते जन्तुः" = பிராணி கர்மத்தினுல் கட்டப்படுகிறுன் என்ற ப்ரமாண வாக்யத்தால், கர்மத்தின் இயற்கையே கட்டப்படுவதை கொடுப்பதாக உள்ளது. அப்படியிருப்பினும் கர்மமே, பயன் கருதாதும், நான், என்னுடையது என்ற எண்ணங்களை விட்டும், ஈச்வரனுக்கு அர்ப்பணிக்கும் புத்தியுடனும் செய்கிறவனுக்கு, கட்டுப்படும் தன்மையைக் கொடாது, முன் செய்த கர்மவினைகளைக்கூடப் போக்கி, மோக்ஷப் பிரயோஜனத்தை உண்டாக்குகின்றது. ஆதலால் கட்டுப்படுத்தும்

கர்மத்தில் கட்டவிழ்த்துவிடும் அகர்மத்தைப் பார்க்கிருன். செய்கிற செய்கையே செய்யாமை ஆகிவிடுகிறது. சோம்பலினுலாவது, கெட்ட புத்தியினுலாவது நற்செயல் களைச் செய்யாது ஒருவன் விட்டுவிடுகிருன் என்போம். இப்படி விட்டுவிடுவதே தீமையையும், கட்டுக்குள்ளாக்கு வதையும் உண்டுபண்ணும். ஆதலால் கர்மத்தை விடுகிற தான அகர்மத்தில், தீங்கான (தோஷமான) பந்தத்தை (கட்டுப்படுத்துதலை) கொடுக்கும் கர்மம் அடங்கியிருப்ப தாகவும், கர்மங்களை (வேதத்தால் விதிக்கப்பட்ட நற் செயல்களை) விட்டுவிடாமல் செய்துவரவேண்டுமென அறிந்துகொள்பவன் அகர்மத்தில் கர்மத்தைப் பார்க் கிருன்.

ஸ்ரீ ராமானுஜர் :— தன்னுடைய ஆத்மஸ்வரூபானு ஸந்தானத்தோடு (ஆன்மாவின் இயற்கையை பின்பற்றி) கூடிச் செய்யப்படும் கர்மத்தில் ஆத்மஸ்வரூபஞானம் (ஆன்மாவைப் பற்றிய நுண்ணறிவு) அடங்கியிருப்பதாக அறிகிறவன், கர்மத்தில் ஞானமாகிற அகர்மத்தைப் பார்க் கிருன். அகர்மமாகிற தன் ஆத்மஸ்வரூப ஞானத்தோடு செய்யப்படும் கர்மமானது, ஞானத்துடன் கலக்கிறபடி யால் ஞானமாகிய அகர்மத்தில் கர்மத்தைப் பார்க்கிருன். இவ்விதம் ஞானம், கர்மம் இரண்டும் ஒன்றி இருப்பதால், ஞானம் கர்மாகாரமாயும் (கர்மாவின் உருவாகவும்), கர்மம் ஞானுகாரமாகவும் (ஞான உருவில் பின்னிய உரு வாகவும்) ஆகிறதென்பதை அறிந்தவன் விவேகி (சிறந்த அறிவாளி) என்பது கருத்து.

ஸ்ரீ மத்வர் :— कर्म (கர்ம) என்ருல் செய்கை அல்லது க்ரியை. अकर्म (அகர்ம) என்ருல் விஷ்ணுவின் செய்கை ('அ' = விஷ்ணு), அல்லது விஷ்ணுவைச்சேர்ந்த செய்கை. தான் கர்மத்தைச் செய்யினும், அந்த கர்மத்தைச் செய்ப வனும் (காரண புருஷன்), செய்விப்பவனும் விஷ்ணு. ஆகையால் தான் செய்பவனல்லவென்றும், எல்லாக் கர்மமும் விஷ்ணுவைச் சேர்ந்தவை என்றும் எவன் அறி கின்ருனே அவன் கர்மத்தில் (செய்கையில்) அகர்மத்

தைப்(செய்யாமையை) பார்க்கிருன். ஜீவன் (உயிருடைய மனிதன்) செய்கை யாதொன்றுமில்லாத தூக்கத்தி லிருக்குங்கால், கனவு காண்கிருன். அப்போது பல செய்கைகளைப் புரிவது போல் காண்கிருன். இப்படி கனவில் காணும் யாவையும் கடவுளின் படைப்பாயினும், மனிதன் தன் செயல்களாகவே கனவில் காண்கின்ருன். இப்படி கனவில் தான் செயல் யாதுமற்றுள்ள நிலையில் காணும் செயல்கள் யாவும் ஈசனின் படைப்பு என எவன் உணர்கிருனே அவன் அகர்மத்தில் கர்மத்தைப் பார்க்கிருன்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— இவர் மத்வ ஸித்தாந்தத்தை ஒட்டி ஒருவிதக் கருத்தைக் கூறி மற்ருெரு பொருளும் கூறியுள்ளார். கர்மம் கட்டுறச் செய்கிறதாலும், ஜீவன் கட்டிலகப்பட்டிருப்பதாலும் கர்மம் என்ருல் ஜீவன். ஜீவனிடத்தில் கர்த்ருத்வம் (செய்கைக்கான தத்வம்) இல்லையென அறிகின்றவன் கர்மத்தில் அகர்மத்தைப் பார்க்கின்ருன், கர்மாவினுல் கட்டுப்படுத்தப்படாதவன். ஆகையால் அகர்மா ஈச்வரன். அவனிடத்தில் பிரபஞ்ச ச்ருஷ்டி (உலகின் படைப்பு) முதலிய செய்கைகளிலிருக்கிறதாக எவன் தெரிந்துகொள்கிருனே அவன் கர்மத்தில் அகர்மத்தைக் காண்கிருன்.

குறிப்பு :- மேற்கண்டவர்களின் அபிப்பிராயங்களையெல்லாம் ஆராய்ந்து பார்க்கின் கர்மமென்பது பிரபஞ்ச ச்ருஷ்டி (உலகுகளின் படைப்பு). அகர்மமென்பது ப்ரஹ்மம். ச்ருஷ்டியான கர்மாவில் (படைப்பு எனும் செய்கையில்) ச்ருஷ்டியைச் செய்பவன் பரப்ரஹ்மமல்ல. அந்த ப்ரஹ்மத்தின் முன்னிலை மாத்திரத்தில் எல்லா பிரபஞ்சங்களும் தானுகவே படைக்கப்படுகின்றன. எனவே படைப்பு எனும் கார்யத்தில் ப்ரஹ்மம் (கர்த்தாவல்லாத) அகர்மம் எனப் பார்க்கிறவனும், அத்தகைய அகர்மாவாகிய ப்ரஹ்மத்தைத் தவிர எல்லா உலகங்களையும் படைக்கும் கார்யத்தைச் செய்யக்கூடிய சக்தியுள்ளது வேறெதுவுமில்லை

எனவே அகர்மாவாகிய ப்ரஹ்மத்தில் ச்ருஷ்டியெனும் படைத்தல் செயலை பார்க்கிறவனும், மானிடருள், விவேகியாகவும் (அறிவாளியாகவும்), யோகியாக வும், எல்லாவிதமான கர்மாக்களையும் செய்தவனுக வும் ஆகிருன். இதன் பொருள் யாதெனில், ப்ரஹ் மத்தின் சக்தியின்றி படைத்தலேற்படுவதில்லை. ஆனுல் அதே ப்ரஹ்மம் குயவன் சட்டிபானைகளைச் செய்வது போல் உலகங்களைப் படைக்கிறதில்லை. பரம்பொருள் விரும்பிய மாத்திரத்திலும் அதன் முன்னிலையில் மாத்திரமாகவும் எல்லாவிதமான படைப்புகளும் ஆகிவிடுகின்றன. இதே கருத்தைத்தான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் இந்த அத்யாயத்தின் 13ஆவது ச்லோ கத்தில், '' ச்ருஷ்டிக்கு நான் கர்த்தாவானுலும், நான் கர்த்தாவல்ல, என அறி'' என்று அர்ஜுனனுக்குச் சொல்லியிருப்பதாகத் தோன்றுகிறது.

இப்படி ப்ரஹ்மத்தைத் தெரிந்துகொள்வதின் பயன் யாதெனில் ப்ரும்மஸ்வரூபம், அதன் சக்தி, மேன்மை, ஆகியவற்றை அறிவதே மோக்ஷத்திற்கு (பிறவியிலிருந்து விடுபட) ஸாதனம் (வழி) – அத்தகைய ப்ரஹமத்தை அணுகி, பக்தி செய்தால் கட்டுகளினின்று விடுபடலா மென்கிற திடமான புத்தி ஏற்படக் காரணமாகும்].

यस्य सर्वे समारम्भाः कामसंकल्पवर्जिताः ।
ज्ञानाग्निदग्धकर्माणं तमाहुः पण्डितं बुधाः ॥ १९

யஸ்ய ஸர்வே ஸமாரம்பா: காமஸங்கல்பவர்ஜிதா: l
ஞானுக்னிதக்தகர்மாணம் தமாஹு: பண்டிதம் புதா: ll 19

எவனுடைய எல்லாச் செயல்கள், ஆசையும் (குறிப் பிட்ட ஒன்றை அடையவேணுமென்கிற விருப்பமும்), ஸங்கல்பமும் (திட்டமிடப்பட்டதும்) இல்லாததாகவுள் ளதோ, ஞானமாகிற (ஆன்மீக அறிவாகிற) நெருப்பினுல் எரிக்கப்பட்ட கர்மத்தையுடைய அவனை ஞானிகள் (அறிவாளிகள்) பண்டிதன் (விவேகி) எனச் சொல்வர்.

[कामसंकल्पवर्जिता: (காமஸங்கல்பவர்ஜிதா:) என்ற சொல்லிற்கு ஸ்ரீ ராகவேந்த்ரர், பலத்தில் ஆசை, கர்மத்தினுல் ஸ்வர்க்கத்தையடையலாமென்கிற உத்தேசம் இவைகளற்றிருக்குமோ எனவும், ஸ்ரீதரர், பயனில் ஆசையற்றதாக இருக்கிறதோ, எனவும், ஸ்ரீ ராமானுஜர், பயத்தில் ஆசையற்றவர்களும், ப்ரக்ருதி (உலகு, இயற்கை) விமுக்த (விடுபட்ட) ஆத்மஸ்வருபானுஸந்தானம் (ஆன்மாவின், ப்ரஹ்மத்தின் இயற்கையில் ஈடுபாடு) உள்ளவர்களுமாகவுள்ள, என்றும் பொருள் கூறியுள்ளனர். ज्ञानाग्निदग्धकर्माणं (ஞானுக்நிதக்தகர்மாணம்) என்பதற்கு ஸ்ரீ சங்கரரும், ஸ்ரீதரரும், கர்மம் அகர்மமாகிறது என்று கருத்து, எனவும், ஸ்ரீ ராமானுஜர், கர்மத்திலடங்கியிருக்கிற தன்னுடைய ஸ்வரூப (ஆத்மஸ்வரூப) ஞானமாகிற அக்னியினுல் (நெருப்பினுல்) எரிக்கப்பட்ட முன் கர்ம வினையுடைய, என்றும், ஸ்ரீ ராகவேந்த்ரர், தான் கர்த்தாவல்ல (செயல் புரிபவனல்ல), எல்லாவற்றிற்கும் கர்த்தா விஷ்ணுவென அறிந்த ஞானியாகிற, எனவும் உரை எழுதியுள்ளனர்.

கருத்து :- ஆசை, திட்டம் (ஸங்கல்பம்) இவையின்றி ஈச்வரார்ப்பண எண்ணத்துடன் செயல் செய்மின், புத்தியும் மனதும் தெளிவடைந்து (சித்தசுத்தியடைந்து) பின்னர் அறிவொளி (ஞானேதயம்) ஏற்படும். அத்தகை ஞானம், நெருப்பு எப்படி குப்பைகளை எரித்துவிடுமோ, அப்படி - ஸஞ்சிதம் முதலிய கர்மங்களை எரித்துவிடும். (ஸஞ்சித கர்மம், ப்ராரப்த கர்மம், ஆகாமி கர்மமென மூன்று பிரிவுகளுண்டு. பல பிறவிகளின் செயல்களின் பயனின் கூட்டம் ஸஞ்சிதம், ஒரு குறிப்பிட்ட பிறவியில் எதன் பயனுக நன்மை தீமைகள் அனுபவிக்கப்படுகின்றனவோ அது ப்ராரப்தம், ஒரு பிறவியில் 14 வயது முதல் செய்யப்படும் கர்மமும், ஸஞ்சித கர்மத்துடன் சேரக்கூடியதும் ஆகாமி எனப்படும்)].

त्यक्त्वा कर्मफलासङ्गं नित्यतृप्तो निराश्रयः ।
कर्मण्यभिप्रवृत्तोऽपि नैव किञ्चित्करोति सः ॥ २०

த்யக்த்வா கர்மபலாஸங்கம் நித்யத்ருப்தோ நிராச்ரய: I
கர்மண்யபிப்ரவ்ருத்தோஅபி நைவ கிம்சித்கரோதி ஸ: II 20

கர்மத்தில் (செய்கையில்) விருப்பமும், அதன் பயனில் ஆசையையும் விட்டு எப்போதும் ஆத்மானந்தத்தில் த்ருப்தியடைந்தவனாக (தானே ப்ரஹ்மம் என்ற ஸந்தோஷத்தினால் அமைதி எய்தியவனாக) ஒருவரையும் அண்டாதவனாக இருப்பவன், கர்மாவில் ஈடுபாடுடையவனாக இருப்பினும், அவன் உண்மையில் யாதொரு கார்யமும் செய்யவில்லை எனலாம். (செயலில் ஈடுபட்டிருந்த போதிலும் அவன் கட்டுப்படுத்தப்படுகிறதில்லை).

[नित्यतृप्तः (நித்யத்ருப்த:) என்பதற்கு 'தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்திலேயே த்ருப்தியுள்ளவனான' என்றும், निराश्रयः (நிராச்ரய:) என்ற சொல்லிற்கு நிலையற்ற ப்ரக்ருதியிடத்தில் (ப்ரபஞ்சம்) ஆச்ரய (ஒட்டிய) புத்தியில்லாதவனெனவும், नैवकिंचित्करोति (நைவகிம்சித்கரோதி) என்ற சொற்களுக்கு, கர்மம் செய்யினும் ஞானாப்யாஸமே செய்கிறான் கர்மத்தைச் செய்தவனாகான் எனவும், ஸ்ரீ ராமானுஜர் உரை செய்துள்ளார்].

निराशीर्यतचित्तात्मा त्यक्तसर्वपरिग्रहः ।
शारीरं केवलं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥ २१

நிராசீர்யதசித்தாத்மா த்யக்தஸர்வபரிக்ரஹ: I
சாரீரம் கேவலம் கர்ம குர்வன்னாப்னோதி கில்பிஷம் II 21

ஆசையற்றதாகவும், மனதையும், புலன்களையும் அடக்கியும், எல்லாவிதமான ஸம்பாதனைகளை (ஈட்டலை) விட்டும், சரீரம் (பூதவுடல்) நிலைத்திருப்பதற்கான உணவு

நிமித்தமாய் செய்யவேண்டிய கர்மம் எவ்வளவோ, அவ்வளவு மட்டும் செய்கிறவன், பாவத்தை அடைகிற தில்லை.

[ஸ்ரீ சங்கரர் :— முன் ச்லோகத்தில் சொல்லப்பட்ட வன் கர்மயோக நிஷ்டன் (கர்மயோகத்தில் தோய்ந்தவன்). இவன் 'ஆருருக்ஷு' எனவும் சொல்லப்படுகிறான். இந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிறவன் அவனைவிட மேலான நிலையிலுள்ள ப்ரஹ்மஞான நிஷ்டன். இவன் 'ஆரூடன்' எனப்படுகிறான்.

'यतचित्तात्मा' (யதசித்தாத்மா) என்பதற்கு ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் ஆகியோர், சித்தம் (புத்தி), மனது, இவைகளை தன்வயமாக்கிக்கொண்டுள்ள வன் என உரை செய்துள்ளனர். 'त्यक्तसर्वपरिग्रहः' (த்யக்தஸர்வபரிக்ரஹ:) என்பதற்கு ஸ்ரீ ராமானுஜர், ஆன்மாவையே முக்கியப் பயனாகக் கொண்டு, ப்ரக்ருதி, ப்ரக்ருதியினாலுண்டான பொருள்கள் இவைகளில் மமதை (என்னுடையன) என்ற எண்ணமற்றவன் என்றும் ஸ்ரீ மத்வரும், ஸ்ரீ ராகவேந்த்ரரும், உடல், புலன் முதலிய வற்றில் ஆசையற்றவன் என்றும் பொருள் கூறியுள்ளனர். 'किल्बिषं नाप्नोति' (கில்பிஷம் நாப்நோதி) என்ற சொற் களுக்கு ஸ்ரீ சங்கரர், பாவ புண்யங்களின் பயனாக ஸம்ஸாரமெனும் பிறவிக்கடலையடைகிறதில்லை என்று விளக்கம் தந்துள்ளார். ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ சங்கரரைப் போலவே கூறி, கர்மயோகத்தினாலேயே ஆன்மாவைப் பார்க்கிறானென்பது கருத்து என ஒரு குறிப்பையும் சேர்த்துள்ளார்].

यदृच्छालाभसंतुष्टो द्वन्द्वातीतो विमत्सरः ।
समः सिद्धावसिद्धौ च कृत्वापि न निबध्यते ॥ २२

யத்ருச்சாலாபஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ விமத்ஸர: ।
ஸம: ஸித்தாவஸித்தௌ ச க்ருத்வாபி ந நிபத்யதே ॥ 22

விரும்பாமல் கிடைத்த லாபத்தினுல் திருப்தியடைந்தவனுகவும், குளிர், உஷ்ணம், இன்ப துன்பங்களில் விருப்பு, வெறுப்பற்றவனுகவும், அசூயையற்றவனுகவும், கிடைத்தாலும், கிடைக்காவிடினும், மகிழ்ச்சியோ, துயரமோ அடையாது ஸமநிலையிலிருப்பவன் கர்மங்கள் (உணவு தேடுவதுபோன்ற செய்கைகள்) செய்திடினும், கர்மாக்களால் கட்டுப்படுத்தப்படுவதில்லை.

['यदृच्छालाभसंतुष्टः' (யத்ருச்சாலாபஸந்துஷ்ட:) என்பதற்கு விரும்பாமல் தன் உடலைக் காக்க கிடைத்தவரை த்ருப்தியடைந்தவன் என்றும், 'सिद्धौ असिद्धौ च' (ஸித்தௌ அஸித்தௌ ச) என்ற சொற்களுக்கு கர்மம் பூர்த்தியடையினும் (ஸித்தித்தாலும்) அடையாவிடினும் எனவும், 'कृत्वापि' (க்ருத்வாபி) என்பதற்கு ஞான நிஷ்டையில்லாது கர்மத்தையே செய்திடினும் என்றும், ஸ்ரீ ராமானுஜர் பொருள் கூறியிருக்கிருர்].

गतसङ्गस्य मुक्तस्य ज्ञानावस्थितचेतसः ।
यज्ञायाचरतः कर्म समग्रं प्रविलीयते ॥ २३

கதஸங்கஸ்ய முக்தஸ்ய ஞாஞவஸ்திதசேதஸ: I
யக்ஞாயாசரத: கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே II 23

அபிமானம் (பற்று), கர்மம் (ஆசை), க்ரோதம் (சினம்) இவைகளை விட்டு, ஞான நிஷ்டையில் அசைவற்ற மனமுடையவனுய் ஈச்வரனை ஆராதிப்பதில், அதே கார்யமாகச் செய்பவனின் கர்மம் (செயல்) பயனுடன் கூடி அழிந்துபோகும். (கர்மம், கர்மபலன் ஆகியவை இவனை கட்டுப்படுத்தாது. ஞானத்தை உண்டாக்குமென்பது கருத்து).

['गतसङ्गस्य' (கதஸங்கஸ்ய) என்பதற்கு ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் பயன் கருதாது பயனில் ஆசையற்றவன் என்றும், 'मुक्तस्य' (முக்தஸ்ய) என்பதற்கு உடல் முதலிய

வற்றில் ஆசையை விட்டவன் என்றும் பொருள் தந்துள்ளனர். 'यज्ञाय' (யக்ஞாய) என்பதற்கு ஈச்வராராதனத்தின் பொருட்டு என்பதுடன் மக்களின் பிரயோஜனத்தை உத்தேசித்து ஞானிகள் செய்யும் யாகங்கள் முதலியவை என்று பின்னுமொரு பொருளும் ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர் ஆகியோரால் தரப்பட்டுள்ளது. 'समग्रम्' (ஸமக்ரம்) என்பதற்கு ப்ராசீன கர்மம் முழுதும் என்பது ஸ்ரீ ராமானுஜரின் விரிவுரை].

ब्रह्मार्पणं ब्रह्म हविर्ब्रह्माग्नौ ब्रह्मणाहुतम् ।
ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्मसमाधिना ॥ २४

ப்ரஹ்மார்பணம் ப்ரஹ்ம ஹவிர்ப்ரஹ்மாக்னௌ
ப்ரஹ்மணாஹுதம் ।
ப்ரஹ்மைவ தேன கந்தவ்யம் ப்ரஹ்மகர்மஸமாதிநா ॥ 24

யக்ஞத்தில் (யாகத்தில், ஹோமங்களில்) எந்த வஸ்துவினால் (பொருளினால்) நெய்யை எடுத்து அக்னியில் ஹோமம் செய்யப்படுகிறதோ அப்பொருள் ப்ரஹ்மமே. அக்னியில் அர்ப்பணம் செய்யப்படும் அன்னம், நெய் முதலியனவும் ப்ரஹ்மமே. இவைகளை வாங்கிக் கொள்ளும் அக்னியும் ப்ரஹ்மம்தான். அக்னியில் அன்னம், நெய் முதலியவற்றை அர்ப்பணம் செய்யும் கர்த்தாவும் (மனிதனும்) ப்ரஹ்மமே. அவனது இந்த அர்ப்பணமாகிற செய்கையும் (ஹோமமும்) ப்ரஹ்மமே. இப்படியாக இந்த யக்ஞ (ஹோமம், யாகம்) கர்மாவில் நிலையான மனமுடைய கர்த்தாவினால் (செயல்படுபவனால்) அடையப்படுவதும் ப்ரஹ்மமே.

[முன் ச்லோகத்தில் 'யக்ஞாய' என்ற சொல்லிற்கு விசேஷமாக ஞானிகள் மக்களின் நலனை உத்தேசித்துச் செய்யும் வேள்வி முதலியன என்று பொருள் கூறியதை யொட்டி ஸ்ரீ சங்கரரும், ஸ்ரீதரரும் இந்த ச்லோகத்திற்கு கூறும் பொருள் :— ஞானிகள் தாம் செய்யும் வேள்வி

களில் உபயோகிக்கப்படும் எல்லாப் பொருள்களும். வேள்வியைச் செய்விக்கிற ரித்விக்குகள் (புரோகிதர்) முதலியோரும், மற்றும் அதில் தொடர்புள்ள யாவும் 'பரப்ரஹ்மம்' என்கிற திடமான எண்ணத்தோடு செய்கிற படியால் அவர்களே ப்ரஹ்மமாகிவிடுகிறார்கள் என்பது கருத்து.

ஸ்ரீ ராமானுஜர் :— கர்மா, அதற்கு உபயோகமான எல்லாப் பொருள்களும் ப்ரஹ்மமென்கிற எண்ணத்துடன் செய்யப்படுகிறபடியால் ஞானவடிவாக ஆகிறது. இத் தகைய கர்மத்தினால் பரப்ரஹ்மத்தை ஆத்மாவாகவுடைத் தான ஆத்மஸ்வரூபத்தை அடைகிறான் என்பது பொருள்.

ஸ்ரீ மத்வரும், ஸ்ரீ ராகவேந்த்ரரும் :— யக்ஞ ஸாதன மான (வேள்வியில் உபயோகப்படும்) எல்லாம் பரப்ரஹ் மத்தின் வயப்பட்டதாகையால், அவைகளையும் ப்ரஹ்ம மெனச் சொல்லப்பட்டது. ஸ்ரீ ராகவேந்த்ரர் அதிகப்படி யாகக் கூறுவது — எல்லாவற்றிற்கும் ப்ரஹ்மமே அதிப ரானதால் எல்லாமே ப்ரஹ்மமெனச் சொல்லப்பட்டது. இதனால் 'அபிமானத் தியாகம்' (ஆசை, பற்று இவைகளை விடுதல்) சொல்லப்பட்டதாகக் கொள்ளலாம்.

குறிப்பு :- 'सर्वं कलु इदं ब्रह्म' (ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம) = 'எல்லாம் ப்ரஹ்ம ஸ்வரூபம்' என்ற வாக்யத்தின்படி, தான் செய்கிற ஒவ்வொரு செயலிலும், காணப்படும் எல்லாப் பொருளிலும், ப்ரஹ்மம் நிறைந்துள்ளது என்ற முழு நினைவுடன், எவன் தான் செய்கிற ஒவ் வொரு கர்மத்தையும், அதில் உபயோகமாகும் எல் லாக் கருவிகள், பொருள்கள் யாவற்றையும், ப்ரஹ்ம மென்றே அறிகின்றானோ அவன் ப்ரஹ்மமாகவே ஆகி விடுகிறானென்பது இச் செய்யுளின் கருத்தாகும்].

दैवमेवापरे यज्ञं योगिनः पर्युपासते ।
ब्रह्माग्नावपरे यज्ञं यज्ञेनैवोपजुह्वति ॥ २५

தைவமேவாபரே யக்ஞம் யோகின: பர்யுபாஸதே I
ப்ரஹ்மாக்னுவபரே யக்ஞம் யக்ஞேனைவோபஜுஹ்வதி II

சில கர்மயோகிகள் இந்திரன் முதலிய தேவதைகளைக் குறித்து வேள்விகளைச் செய்கின்றனர். சில ஞான யோகிகள் (முன் ச்லோகத்தில் சொன்னபடி) ப்ரஹ்மார்ப்பணமான (யக்ஞத்தினாலேயே, வேள்வியினாலேயே) ஆன்மாவை ப்ரஹ்மமாகிற அக்னியில் (வேள்வித் தீயில்) அர்ப்பணம் செய்கிறார்கள்.

[ஸ்ரீ சங்கரர் :— यज्ञेनैव (யக்ஞேனைவ) = தன்னாலேயே, यज्ञं (யக்ஞம்) தன்னை, ब्रह्माग्नौ (ப்ரஹ்மாக்னௌ) ப்ரஹ்மமாகிற வேள்வித் தீயில், उपजुह्वति (உபஜுஹ்வதி) = அர்ப்பணம் செய்கிறார்கள். இதன் கருத்து யாதெனில், நெய் எப்படி அக்னியில் சேர்க்கப்படுகிறதோ அதேபோல், உடல், புலன் முதலிய உபாதிகளையுடைய ஆன்மாவை எந்தவிதமான உபாதியுமில்லாது (நிருபாதிகனான) பரமாத்மாவிடத்தில் ஒன்றாக்கிவிடுவது (ஐக்யப்படுத்துவது, சேர்த்துவிடுவது).

ஸ்ரீ ராமானுஜர் :— இந்த ச்லோகம் முதற்கொண்டு கர்மயோகம் பலவிதமானது என்பது சொல்லப்படுகிறது. ச்லோகத்தின் பின்பகுதியின் பொருள்—"மற்றும் சில கர்மயோகிகள் அக்னியை ப்ரஹ்மமாக எண்ணி, ஸ்ருக், (வேள்வி, ஹோமம் முதலியவற்றில் அன்னம் எதனாலெடுத்து அக்னியில் அர்ப்பணம் செய்யப்படுகிறதோ அந்த மரத்தினாலான கரண்டி போன்ற ஸாதனம்) ஸ்ருவம் (அக்னியில் நெய்யைச் சேர்க்க உபயோகப்படும் மரத்தாலான சிறு அகப்பை) ஆகியவற்றால் ஹவிஸை (அன்னம் முதலியவற்றை) ஹோமம் செய்கிறார்கள் (அக்னியில் சேர்க்கிறார்கள்).

ஸ்ரீ மத்வர் :— अपरे योगिन: (அபரே யோகின:) சில ஞானிகள் दैवमेव (தைவமேவ) பகவானையே यज्ञं (யக்ஞம்) = ஆராதித்து पर्युपासते (பர்யுபாஸதே) = உபாஸிக்கிறார்கள்,

अपरे (அபரே) = மற்றும் சில ஞானிகள் यज्ञेनैव (யக்ஞே னைவ) = யக்ஞமென்கிற பசுவினுலேயே (வேள்வியில் தீயிலிடப்படும் பலிக்குப் பசு எனப் பெயர்) यज्ञं (யக்ஞம்) = விஷ்ணுவைக் குறித்து, ब्रह्माग्नौ (ப்ரஹ்மாக்னௌ) = ப்ரஹ் மத்தை அக்னியாக எண்ணி, அந்த அக்னியில், उपजुह्वति (உபஜுஹ்வதி) = அர்ப்பணம் செய்கிருர்கள். தன் னுடைய இந்தக் கருத்துக்காதாரமாக ஸ்ரீ மத்வர் கீழ்க் கண்ட வாக்கியங்களைத் தந்துள்ளார் :—

"विष्णुं यज्ञेन पशुना ब्रह्मा ज्येष्ठेन सूनुना।
अयजन्मानसे यज्ञे पितरं प्रपितामहः ॥"

இந்த வாக்யத்தின் பிற்பகுதியே மானஸ யக்ஞமென அறியப்பாலது).

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— दैवं (தைவம்) = விஷ்ணு, எனவே விஷ்ணுவை உபாஸிக்கிறதாக வேள்வி செய்கிருர்கள். यज्ञेनैव (யக்ஞேனைவ) = பகவானை நிமித்த காரணமாகக் கொண்டு, ब्रह्माग्नौ (ப்ரஹ்மாக்னௌ) = ஸ்வானந்தமான (ஆத்மானந்தமான) ஹவிஸை (வேள்வித் தீயலிடப்படும் அன்னம் முதலியன) உண்பதால், அக்னியாகச் சொல்லப் பட்ட ப்ரஹ்மத்தினிடத்தில் उपजुह्वति (உபஜுஹ்வதி) = சேர்ப்பிக்கிருர்கள்.

குறிப்பு :- இந்த அத்யாயத்தில் 25 முதல் 29 வரையுள்ள ச்லோகங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை மனு ஸ்ம்ருதியின் 4-ஆவது அத்யாயத்தில் 22 முதல் 24 முடியவுள்ள ச்லோகங்களில் காணலாம்].

श्रोत्रादीनीन्द्रियाण्यन्ये संयमाग्निषु जुह्वति ।
शब्दादीन्विषयानन्ये इन्द्रियाग्निषु जुह्वति ॥ २६

ச்ரோத்ராதீனீந்த்ரியாண்யன்யே ஸம்யமாக்னிஷு ஜுஹ்வதி ।
சப்தாதீன்விஷயானன்யே இந்த்ரியாக்னிஷு ஜுஹ்வதி ॥ 26

சிலர் காது முதலிய புலன்களையடக்குகின்றதான அக்னியில் ஹோமம் செய்கிறார்கள். சிலர் சப்தம் (ஒலி) முதலிய விஷயங்களை புலன்களாகின்ற அக்னியில் ஹோமம் செய்கிறார்கள்.

[ஸ்ரீதரர் :— நைஷ்டிக ப்ரஹ்மசாரிக்கு (மணம் ஆகாத வாழ்க்கையைக் கடைப்பிடிப்பவருக்கு) புலன்களையடக்கு வதே வேள்வியாக அமையும். எப்படியெனில் வேள்வி யில் பல பொருள்கள் தீயில் இடப்படுகின்றன. தீயிலிடப் பட்டவை அழிந்து உருவற்றுப்போகின்றன. அதேபோல் புலன்களுடைய செயல்களை, அவை போகும் வழியைத் தடுத்து நிறுத்துவதே அக்னி. அதில் புலன்களுடைய செயல்களை இட்டுவிட்டால் அந்த வியாபாரம் அழிகிறது. இல்வாழ்க்கையிலிருப்பவனுக்கு விஷய ஸுகங்களில் (புலன்களின் இன்பத்தில்) பற்றுதலை விடுவதே வேள்வி யாகும். எப்படியெனில் அவன் விஷய ஸுகங்களில் ஈடுபடினும், அவைகளிலுள்ள பற்றை ஹவிஸாகவும் (அக்னியிலிடும் பொருளாகவும்), புலன்களை அக்னியாக வும் எண்ணி, அந்தப் பற்றான ஹவிஸை, புலன்களான அக்னியில் இட்டுவிடுகிறான். அந்தந்தப் புலன் (கண், செவி முதலிய ஒவ்வொன்றும்) அந்தந்தப் பொருளில் உண்டாகும் பற்றை விடுவதேதான் ஹோமம்.

ஸ்ரீ சங்கரர் :— நைஷ்டிக ப்ரஹ்மசாரி, இல்வாழ்க்கை யோன் என்று பிரித்துச் சொல்லாது, விஷயங்களில் (சிற்றின்பங்களில்) ஏற்படும் பற்றை ஹோமம் செய்கிறு னென்று சொல்லி, மற்றபடி ஸ்ரீதரரின் கருத்துப்போலவே விரிவுரை செய்துள்ளார். ச்லோகத்தின் பிற்பகுதியில் அன்யே (அன்யே) என்பதற்குப் பதிலாக அன்யேபி (அன்யேபி) என்ற பாடமும் சங்கரரால் கொள்ளப்பட்டது. ‘அவிருத்த விஷயக்ரஹணம்’ (மனோ விகாரமற்ற சிற்றின்பப் பற்று) ஹோமமாக மதிக்கப்படுகிறது என்று கூறியுள்ளார்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— சிற்றின்பங்களை அனுபவித்தா லும் அந்த அனுபவங்களை ஈச்வரனை உபாஸிப்பதாகக் கொள்வதே ஹோமம். இந்த ஒரு வேற்றுமை தவிர மற்றபடி மேற்கண்ட மற்றவர்களின் கருத்தை ஒத்தே யுள்ளது இவரது அபிப்பிராயம்.]

सर्वाणीन्द्रियकर्माणि प्राणकर्माणि चापरे ।
आत्मसंयमयोगाग्नौ जुह्वति ज्ञानदीपिते ॥ २७

ஸர்வாணீந்த்ரியகர்மாணி ப்ராணகர்மாணி சாபரே I
ஆத்மஸம்யமயோகாக்னௌ ஜுஹ்வதி ஞானதீபிதே II 27

சிலர் ஞானேந்த்ரியங்களுடையவும் (அறிவுக்குரிய புலன்களின்), கர்மேந்த்ரியங்களுடையவும் (செய்கைக் குரிய புலன்களின்) ப்ராணவாயு முதலிய பத்துவித வாயுக்களுடையதுமான செயல்களை, ப்ரஹ்மஞானத்தி ஞல் ஒளி வீசுகிற ப்ரஹ்மஞான நிஷ்டையில் (நிலைபெற்று நிற்பதில்) மனதை நிறுத்தலாகிய யோகமெனும் தீயில் ஹோமம் செய்கிருர்கள் (சேர்ப்பிக்கிருர்கள்). [புலன் களின் செயல்களிலாவது. ப்ராணன் முதலிய வாயுக் களின் வியாபாரத்திலாவது மனதைச் செல்லாது தடுப்பது தான் ஹோமம் என்பது ஸ்ரீ ராமானுஜரின் கருத்து. ज्ञानदीपिते (ஞானதீபிதே) என்ற பதத்திற்கு சங்கரர், 'விவே கத்திஞல் பிரகாசிக்கிற' என்று பொருள் கூறியுள்ளார்.

குறிப்பு :- ஐந்து ஞானேந்த்ரியங்களாவன — கண், காது, மூக்கு, நாக்கு, உடலின் மேல்தோல். இவைகளின் செய்கைகளாவன முறையே — பார்ப்பது, கேட்பது, வாஸனை அறிவது, உருசியறிவது, உணர்வது.

ஐந்து கர்மேந்த்ரியங்களாவன — வாய், கை, கால், பாயு (மலம் கழிக்கும் பகுதி), உபஸ்தம் (சிற்றின்பத்தி லீடுபடும் பகுதி). இவைகளின் செயல்கள் முறையே- பேசுதல் (உண்ணலும்), எடுத்தல், நடத்தல், மலம் கழித்தல், சிற்றின்பம் அனுபவித்தல்.

பத்து வாயுக்களையும், அவைகளின் செயல்களையும் ஸ்ரீதரர் பின்வருமாறு குறிப்பிடுகிருர் :—

வாயுவின் பெயர்	வாயுவின் செயல்
1 பிராணன்	— உடலினுள்ளிருந்துகொண்டு ஞானேந்த்ரியங்கள், மூலம் சிறு பகுதி வெளிச் செல்வதும், வரு வதுமாக இருப்பது.

2	அபானன்	— சிறிது (மலத்வாரத்தின் வழியே) வெளியே போவது, வருவது.
3	வியானன்	— உடல் முழுதும் சுற்றிக்கொண்டே இருப்பது (இரத்த ஓட்டத்திற்குக் காரணமாகவுள்ளது).
4	உதானன்	— உடலில் வயிற்றிலுள்ள தொப்புளிலிருந்து தலை உச்சிவரை போய் வருவதாகும்.
5	ஸமானன்	— உண்ணும் உணவை ஜீரணிக்கச் செய்து, அதன் ஸத்தை உருப்புகளுக்குச் சேர்த்து, கழிவுப் பொருள்களை வெளிப்படுத்துவது.
6	நாகன்	— வாந்தியையுண்டுபண்ணுகிறது.
7	கூர்மன்	— கண்களை மலரச்செய்கிறது.
8	க்ருகரன்	— தும்மலையுண்டுபண்ணுகிறது.
9	தேவதத்தன்	— கொட்டாவியையுண்டுபண்ணுகிறது.
10	தனஞ்ஜயன்	— இது உடலில் ஆவி (பிராணன்) இருக்கும்போதும், ஆவி போன பிறகும் இருக்கிறதாம்.]

द्रव्ययज्ञास्तपोयज्ञा योगयज्ञास्तथापरे ।
स्वाध्यायज्ञानयज्ञाश्च यतयः संशितव्रताः ॥ २८

த்ரவ்யயக்ஞாஸ்தபோயக்ஞா யோகயக்ஞாஸ்ததாபரே I
ஸ்வாத்யாயஞானயக்ஞாஸ்ச யதய: ஸம்சிதவ்ரதா: II 28

சிலர் பொருள்களைப் பிறருக்குத் தானம் செய்வதையும், சிலர் தவத்தையும், சிலர் யோகம் செய்வதையும், சிலர் வேதமோதல், வேதப்பொருளை அறிதல் ஆகியவற்றையும் வேள்விகளாகச் செய்கின்றனர். இத்தகைய வேள்விகளைச் செய்வோர் கடினமான வ்ரதத்தை (நியமத்தை) உடையவர்களாக இருக்கிறார்கள்.

[द्रव्ययज्ञाः (த்ரவ்யயக்ஞா:) என்பதற்கு ஸ்ரீ சங்கரரின் பொருள் :— 'த்ரவ்யங்களை (பொருள்களை) நல்ல புனிதத் தலம், புண்ய தீர்த்தம் (நதி முதலிய புனிதமான நீர் நிலையம்) ஆகிய இடங்களில், நற்தகுதியுள்ளோருக்கு தானம் செய்வதையே வேள்வியாக (யக்ஞமாக) எண்ணு கின்றவர்'. இதே சொல்லிற்கு ஸ்ரீ ராமானுஜர் :– 'நியாய மாக ஈட்டிய பொருளை கடவுளின் பூஜை, யாகங்கள், நியமமாகச் செய்யும் ஹோமம், தானம் முதலியவற்றிற் காகச் செலவிடுவதையே யக்ஞமாக (வேள்வியாக) எண்ணுகிறுர்கள்'. ஸ்ரீ மத்வர் :- 'ஆத்மஸம்யம யோகாக்னி யில் ஹவிஸ் (அன்னம்) முதலிய த்ரவ்யங்களை ஹோமம் செய்கிறது அல்லது பொருளைத் தக்கவர்களுக்கு தானஞ் செய்தல்'. ஸ்ரீ ராகவேந்த்ரர், 'பகவதற்பணமாக பொரு ளைச் செலவிடுவது'.

तपोयज्ञाः (தபோயக்ஞா:) என்ற சொல்லிற்கு ஸ்ரீசங்கரர் 'தவம் செய்வதையே யக்ஞமாக (வேள்வியாக) எண்ணு கிறுர்கள்' – ஸ்ரீதரரும், ஸ்ரீ ராமானுஜரும், ஸ்ரீ ராகவேந்த்ர ரும் இந்தச் சொல்லிற்கு, க்ருச்ர சாந்த்ராயண வ்ரதம் போன்றவை, உபவாஸம் (பட்டினியிருத்தல்) போன்றவை எனப் பொருள் கூறுகின்றனர். ஸ்ரீ மத்வர், 'தான் செய்யும் தவத்தை ப்ரஹ்மார்ப்பணமாகச் செய் வது' என்று பொருளுரைத்துள்ளார். ஸ்ரீ ராகவேந்த்ரர் இந்த அபிப்பிராயத்தையும் ஒப்புக்கொள்கிறுர்.

योगयज्ञाः (யோகயக்ஞா:) என்பதற்கு, ஸ்ரீ சங்கரர் :— 'ப்ராணுயாமம் (மூச்சைக் கட்டுப்படுத்தல்) ப்ரத்யா ஹாரம் முதலிய அஷ்டாங்க யோகம்', ஸ்ரீதரர் :— 'மனதை அமைதியாக ஒரேயிடத்தில் நிறுத்துவது', ஸ்ரீ ராமா னுஜர் :— 'புனிதத் தலம், புனித நதி, தடாகக் கரைகளில் வசித்தல்', ஸ்ரீ ராகவேந்த்ரர் :— 'பகவானை எப்போதும் த்யானம் செய்யும் யக்ஞம்'.

स्वाध्यायज्ञानयज्ञाश्च (ஸ்வாத்யாயஞானயக்ஞாஸ்ச) என்பதற்கு, ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர் ஆகியோர், வேதபாராயணம், வேதப்பொருள் காண்பதி

ஞல் ஏற்படும் ஞானம் (அறிவு) என்றும், ஸ்ரீதரர், இதே பொருளைக் கூறி, அத்துடன் 'அல்லது வேதத்தின் பொருளைத் தேடி அறிவதிஞல் கிடைக்கும் ஞானமே (அறிவே) வேள்வியாகும்' எனவும் பொருள் கூறுகிருர்கள்.

यतय: (யதய:) என்ற சொல்லிற்கு, ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீதரர், ஸ்ரீ ராகவேந்த்ரர் ஆகியோர், 'ப்ரயத்னம் அல்லது முயற்சி செய்வோர்' என விரிவுரை எழுதியுள்ளனர்.

संशितव्रता: (ஸம்சிதவ்ரதா:) என்பதற்கு, ஸ்ரீ ராமானுஜர், 'திடமான நிச்சய புத்தியுள்ளவர்கள்' என்றுள்ளார்.]

अपाने जुह्वति प्राणं प्राणेऽपानं तथापरे ।
प्राणापानगती रुद्ध्वा प्राणायामपरायणा: ॥ २९

அபானே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேஅபானம் ததாபரே ।
ப்ராணுபானகதீ ருத்த்வா ப்ராணுயாமபராயணா: ॥ 29

ப்ராணுயாமம் (மூச்சை அடக்கல், கட்டுப்படுத்தல்) செய்கிறவர்களாகவுள்ள மற்றும் சிலர், ப்ராணன், அபானன் என்கிற வாயுக்களின் வழியைத் தடுத்து, அபான வாயுவில் ப்ராண வாயுவையும், அதேபோல், ப்ராண வாயுவில் அபான வாயுவையும் ஹோமம் செய்கிருர்கள் (அர்ப்பணிக்கிருர்கள்).

[ஸ்ரீதரர் ப்ராணுயாமம் என்பதை விரிவாகக் கூறுகிறதாவது :— பூரகமென்ருல், மூக்கிஞல் மூச்சுக் காற்றை உள்ளுக்கிழுப்பது. கும்பகமென்ருல், உள்ளுக்கு இழுக்கப்பட்ட மூச்சுக்காற்றை உள்ளேயே நிறுத்துவது. ரேசகமென்ருல், உள்ளே நிறுத்தப்பட்ட காற்றில் சிறிது வெளியிடுவது. (இம்மூன்று செயல்களின் சேர்க்கைக்கே ப்ராணுயாமம் எனப்பெயர்). பூரக காலத்தில் மூக்கின் ஒரு த்வாரத்திஞல் காற்று உள்ளுக்கு இழுக்கப்படுகிறது. ரேசக காலத்

தில், மூக்கின் மற்றொரு த்வாரத்தினுல் சுவாஸம் (மூச்சுக் காற்று) வெளிவிடப்படுகிறது. இப்படி காற்றை உள்ளுக்கு இழுக்கையிலும், வெளியே விடும்போதும், முறையே "ஹம்ஸ: ஸோஹம்" என்றும், "ஸோஹம் ஹம்ஸ:" என்றும் ப்ரகாசிக்கும் அஜபா மந்த்ரத்தால் (ஜபிக்கப் படாது தானே தோன்றும் ஒலியால்) 'தத்த்வமஸி' (तत्त्वमसि) என்ற மஹா வாக்யத்தில் சொல்லப்படும் 'ஜீவப்ரஹ்ம ஐக்யத்தை' (உயிருள்ள ஜீவாத்மா ப்ரஹ் மத்துடன் இணைவதை) மறுபடியும், மறுபடியும் நினைப்ப வர்களாக இருக்கிறார்கள். இதற்கு ஆதாரமாக கீழுள்ள ச்லோகமும் ஸ்ரீதரரால் தரப்பட்டுள்ளது :—

"सकारेण बहिर्याति हकारेण विशेत्पुनः ।
प्राणस्तत्र स एवाहं हंस इत्यनुचिन्तयेत् ॥"

ஸ்ரீ ராமானுஜர், இந்த ச்லோகத்தையும், அடுத்த ச்லோகத்தின் முன் பாதியையும் சேர்த்தே பொருள் கூறி யுள்ளார் :— சில கர்மயோகிகள் ப்ராணுயாமம் செய்வதில், பூரக, கும்பக, ரேசக (மூச்சை உள்ளிழுத்தல், உள் நிறுத்தல், வெளிவிடுதல்) என்னும் வேறுபாடுகளினுல் மூன்றுவிதமான நிஷ்டைகளைச் செய்கிறார்கள். இம் மூவகையருக்கும் மிதமான ஆஹாரம் (உணவு) என்பதை नियताहारः (நியதாஹார:) என்ற (அடுத்த ச்லோகத்தின் முன் பகுதியிலுள்ள சொல்லை) அடைமொழியாக எடுத்துக் கொள்ளவேண்டும்.]

अपरे नियताहाराः प्राणान्प्राणेषु जुह्वति ।
सर्वेऽप्येते यज्ञविदो यज्ञक्षपितकल्मषाः ॥ ३०

அபரே நியதாஹாரா: ப்ராணுன்ப்ராணேஷு ஜுஹ்வதி I
ஸர்வேஅப்யேதே யக்ஞவிதோ யக்ஞக்ஷபிதகல்மஷா: II 30

சிலர் மிதமான (குறைவான) உணவை உண்டு, புலன் களுடைய செயல்களை தன்வசப்படுத்தப்பட்ட புலன்களி

லேயே சேர்த்துவிடுகிறார்கள். இவர்கள் யாவரும் வேள்விகளைச் செய்து, அதனால் தங்களுடைய பாவங்களைப் போக்கிக்கொண்டவர்களாகின்றனர்.

[ஸ்ரீ சங்கரர் :- प्राणान् (ப்ராணான்) प्राणेषु (ப்ராணேஷு) என்பவைகளுக்கு தரும் பொருள் :— "ப்ராணன் முதலிய வாயுக்களை, ப்ராணன் முதலிய வாயுக்களில்,— அதாவது எந்த வாயு அடக்கி நிறுத்தப்படுகிறதோ, அதில் மற்ற வாயுக்களை".

ஸ்ரீதரர்:- नियताहारः (நியதா ஹார:)—மிதமான உணவு, ஒருவன் தனது வயிற்றை நிரப்ப எவ்வளவு உணவு தேவையோ, அவ்வளவை நான்கு பங்குகளாக்கி, இரண்டு பங்கை உணவுப் பொருள்களால் நிரப்பி, ஒரு பங்கைத் தண்ணீரால் நிரப்பி, மீதமுள்ள ஒரு பாகத்தை (வாயுக்கள் உலாவ) நிரப்பாமல் விட்டுவைக்கவேண்டும். இந்த முறையில் உண்ணப்படுவதே மிதமான உணவு என்பதாம்.

குறிப்பு :- புலன்களின் செயல்களைப் புலன்களில் அடக்குவதென ஸ்ரீதரரும், ப்ராணன் முதலிய வாயுக்களை வாயுக்களிலடக்குவதென ஸ்ரீ சங்கரரும் சொல்லியிருப்பதின் கருத்து யாதெனில், புலன்களையும் வாயுக்களையும் (யோகாப்யாஸம் செய்வோர்) அவைகளுக்குரிய செயல்களில் அவை ஈடுபடாது அடக்க வேண்டியது அவச்யம். எல்லாப் புலன்களையோ வாயுக்களையோ ஒரே காலத்திலடக்குவது முதலில் செய்யமுடியாது. ஒவ்வொன்றாக அடக்கவேண்டும். முதலில் எந்த ஒன்று அடக்கப்படுகிறதோ, அத்துடன் அடக்கபடாதுள்ளவைகளை ஒவ்வொன்றாகச் சேர்ப்பதே ஒன்றில் மற்றொன்றை சேர்ப்பது அல்லது ஹோமம் செய்வது எனக் கூறப்படுகிறது. இப்படிப் படிப்படியாக ஒவ்வொன்றாக அடக்கிக் கடைசியில் எல்லாம் அடங்கிவிடுமாகில், அப்போது மனம் அசைவற்று ஒரே நிலையில் நிற்கும்.]

यज्ञशिष्टामृतभुजो यान्ति ब्रह्म सनातनम् ।
नायं लोकोऽस्त्ययज्ञस्य कुतोऽन्यः कुरुसत्तम ॥ ३१

யக்ஞசிஷ்டாம்ருதபுஜோ யாந்தி ப்ரஹ்ம ஸநாதனம் 1
நாயம் லோகோஅஸ்த்யயக்ஞஸ்ய குதோஅன்ய: குருஸத்தம॥

எப்போதும் செய்யவேண்டிய யக்ஞங்கள் (கர்மாக்கள்), (வைச்வதேவம், பலிஹரணம், ஸ்வாமி நிவேதனம், ஹோமங்கள்) விசேஷ காலங்களில் செய்யவேண்டிய கர்மங்கள் முதலியவற்றைச் செய்து, மிச்சமான அன்னம் அம்ருதம் போன்றது. அதை உண்பவர்கள் சாச்வதமான (நிரந்தரமான) ப்ருஹ்மத்தை அடைகின்றனர். ஓ குருவம்சத்தில் மேன்மையடைந்தவனே! (அர்ஜுனா!) யக்ஞம் (வேள்வி, கர்மங்கள்) செய்யாதவனுக்கு இவ்வுலகிலோ, ஸ்வர்கம் போன்ற விண்ணுலகிலோ ப்ரயோஜனம் (உபயோகமான விஷயம்) கிடையாது.

[ஸ்ரீ சங்கரரும், ஸ்ரீதரரும்:— த்ரவ்யயக்ஞம், தபோயக்ஞம் முதலிய கர்மாக்கள் முன்னர் சொல்லப்பட்டிருக்கின்றனவல்லவா? அவைகளில் அன்னம் ஏது? மீதமேது? என்று கேட்கலாம். எந்த எந்த யக்ஞங்களில் அன்னம் மிச்சமுண்டோ அவைகளில் மீதியான அன்னமென்றும், அன்ன ஸம்பந்தமில்லாத யக்ஞங்களில், யக்ஞம் செய்த காலத்தைத் தவிர மிகுதியான காலத்தில் விதிப்படி உண்ணப்படும் சுத்தமான அன்னமென்றும் கருத்து.

ஸ்ரீ ராமானுஜர்:— **अयज्ञस्य** (அயக்ஞஸ்ய) = மஹாயக்ஞத்துடன் (வேள்வியுடன்) நித்ய நைமித்திக (அன்றுட விசேஷகால) யக்ஞம் (கர்மாக்கள்) செய்யாதவனுக்கு, **अयं लोकः** (அயம் லோக:) = ஸ்வர்க்கம் (விண்ணுலகு) முதலான உலகங்களில் தர்மார்த்த காமங்களுடைய (அறம், பொருள், இன்பத்தின்) அனுபவமாவது, **अन्यः** (அன்ய:) = மோக்ஷமாவது (பிறவிக்கடலினின்று விடுதலை) **कुतः** (குத:) = ஏது? **नास्ति** (நாஸ்தி) = கிடைக்கமாட்டாது.

குறிப்பு :— இந்த ச்லோகத்தின் பொருளுக்கு ஏற்ப 3ஆவது அத்யாயம் 13வது ச்லோகமும் உள்ளதைக் கவனிக்கவும்]

एवं बहुविधा यज्ञा वितता ब्रह्मणो मुखे ।
कर्मजान्विद्धि तान्सर्वानेवं ज्ञात्वा विमोक्ष्यसे ॥ ३२

ஏவம் பஹுவிதா யக்ஞா விததா ப்ரஹ்மணோ முகே 1
கர்மஜான்வித்தி தான்ஸர்வானேவம்ஞாத்வாவிமோக்ஷ்யஸே!!

இப்படிப்பட்ட (முன்னர் சொல்லப்பட்ட) பலவகையான யக்ஞங்கள் (வேள்வி முறைகள்) வேதத்தில் விவரமாகச் சொல்லப்பட்டுள்ளன. அந்த எல்லா யக்ஞங்களையும், மனம், வாக்கு (நாக்கு), தேஹம் (உடல்) இவைகளின் செய்கைகளாகிய கர்மத்தாலுண்டானதென அறிக. இவ்விதமறிந்து (ஞானநிஷ்டையையடைந்தால்) கர்மத்தினுல் கட்டுப்படுவதிலிருந்து விடுபடுவாய்.

[ஸ்ரீ சங்கரர் :— இவ்விதமறிந்து கர்மத்தின் கட்டிலிருந்து விடுபடுவாய் என்றதின் கருத்து, யக்ஞம், முதலிய கர்மங்கள் ஆன்மாவைச் சேர்ந்ததல்ல, மனம், வாக்கு, காயங்களின் செய்கைகள் என அறிந்து, ஆத்ம ஞான நிஷ்டையில் இருப்பானுகில் கர்மம் அவனைத் தொடராது எனக் கருத்து.

ஸ்ரீ ராமானுஜர் :— एवं बहुविधाः (ஏவம் பஹுவிதா:) =இப்படிப்பட்ட பலவிதமான यज्ञाः (யக்ஞா:) = கர்மயோகங்கள் ब्रह्मणो मुखे विततः (ப்ரஹ்மணே முகே விததா:)= ஆத்மஸ்வருப நிச்சயமடையக் காரணங்களாகவுள்ளன. सर्वान् तान् कर्मजान् (ஸர்வான் தான் கர்மஜான்)= மேற்சொன்ன எல்லா கர்மயோகங்கள் அன்ருடம் தான் செய்யும் நித்ய, நைமித்திக கர்மாக்களாலுண்டானவையென विद्धि (வித்தி)=அறி. एवं (ஏவம்)= இவ்விதம் ज्ञात्वा (ஞாத்வா) = தெரிந்தும், செய்தும் வந்தால் विमोक्ष्यसे (விமோக்ஷ்யஸே)=மோக்ஷமடைவாய்.

6

ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— ब्रह्मणो मुखे वितताः (ப்ரஹ்மணோ முகே விததா:) = யக்ஞபோக்தா ப்ரஹ்மமான தால், ப்ரஹ்மத்தின் வாயில் யக்ஞங்கள் விசாலமாக வுள்ளன. सर्वान् तान् कर्मजान् विद्धि (ஸர்வான் தான் கர்ம ஜான் வித்தி = இந்த யக்ஞங்களெல்லாம் மனம் வாக்கு காயங்களுடைய கர்மங்களாலுண்டானவை என அறி. (மற்ற சொற்களுக்கெல்லாம் மேலே சொன்னபடி பொருள் கூறியுள்ளனர்)]

श्रेयान्द्रव्यमयाद्यज्ञाज्ज्ञानयज्ञः परंतप ।
सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते ॥ ३३

ச்ரேயான்த்ரவ்யமயாத்யக்ஞாத் ஞானயக்ஞ: பரம்தப ।
ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஞானே பரிஸமாப்யதே ॥ 33

எதிரியை தவிக்கும்படி செய்யுமர்ஜுனா! பணம், அல்லது வேள்விகளில் உபயோகமாகும் பொருள்களால் செய்யக்கூடிய வேள்வியைப்பார்க்கிலும் ஞானமாகிற வேள்வி உயர்ந்ததாகும். ஓ பார்த்தா! ஈச்வரார்ப்பண மாகச் செய்யப்படும் எல்லாக் கர்மங்களும் அவைகளின் பயனுடன் ப்ருஹ்மஞானத்திலடங்கியிருக்கிறது. (ஞானத் தைவிட கர்மபலன் மிகவும் அற்பமானது).

[ஸ்ரீ ராமானுஜர் :— திரவ்யம் முதலியவைகளால் செய்யப்படுகிற யக்ஞத்தில் ஞானமடங்கியிருக்கிறது. எப்படியெனில் யக்ஞரூபமான ஒவ்வொரு கர்மத்திலும், ஒரு பகுதி கர்மாவாகவும், மற்றொரு பகுதி ஞானமாயு முள்ளது. கர்மபாகத்தைக்காட்டிலும் ஞான பாகம் மேலானது. எல்லாக் கர்மமும், अखिलं (அகிலம்) = அக் கர்மத்திற்கு உதவும் எல்லாப் பொருள்களும், ஞானத்தில் முடிவடையுமெனில், இப்படிச் செய்யப்படும் கர்மமே ஞான உருவாகிவிடுமென்று கருத்து.

ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— अखिलं सर्वकर्म (அகிலம் ஸர்வகர்ம) என்ற சொற்களுக்கு பூர்ணமாக (குறைவின்றி) செய்யப்படும் கர்மம் ஞானத்தைப் பலனாக வுடையதாக ஆகிறது.]

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनस्तत्त्वदर्शिनः ॥ ३४

यज्ज्ञात्वा न पुनर्मोहमेवं यास्यसि पाण्डव ।
येन भूतान्यशेषेण द्रक्ष्यस्यात्मन्यथो मयि ॥ ३५

தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரச்னேன ஸேவயா ।
உபதேக்ஷ்யந்தி தே ஞானம் ஞானினஸ்தத்த்வதர்சின: ॥ 34

யஜ்ஞாத்வா ந புனர்மோஹமேவம் யாஸ்யஸி பாண்டவ ।
யேன பூதான்யசேஷேண த்ரக்ஷ்யஸ்யாத்மன்யதோ மயி ॥ 35

ஓ அர்ஜுனா! ஆத்மதத்வத்தையறிந்த ப்ரஹ்மஞானிகள், எந்த ப்ரஹ்மஞானத்தை உனக்கு உபதேசிப்பார்களோ, எந்த ஓர் அறிவையடைந்தால் இவ்வித (உறவினர்களைக் கொல்வதான போரைச் செய்யேன் என்கிற) மோஹத்தை (புத்தி மாருட்டத்தை) அடையாயோ, எந்த அறிவினுல் எல்லாப் பிராணிகளையும் உன்னிடத்தேயும் அதேபோல் என்னிடத்திலும் காண்பாயோ, அந்த ஞானத்தை, எல்லா உடலுருப்புகளும் (அஷ்டாங்கங்களும்) பூமியில் படும்படியாக நமஸ்காரம் செய்வது, செவ்வனே கேட்பது, குருவின் ஸேவை இவைகளினுலேயே அறி.

[ஸ்ரீதரர் :— ஸகல பூதங்களையும் (எல்லாப் பிராணிகளையும்) உன்னிடத்தில் அபேதமாகப் பார்த்து, பிறகு உன்னையும் என்னிடத்தில் அபேதமாகப் பார்ப்பாய் என்பது கருத்து.)

[34ஆவது ச்லோகம் :— ஸ்ரீ ராமானுஜர் :— "அத்யாயம் 2 இல் 17 முதல் 39 வரையுள்ள சுலோகங்களினுல் ஆத்மதத்வத்தை உனக்கு யான் சொல்லியிருக்கிறேன். இப்போது நான் சொல்லிவந்த விதமாக கர்மயோகத்தை, நீ அனுஷ்டித்து வந்தால், கர்மயோக ஸித்தி உனக்குக் கிட்டும். அஃது உண்டாகும் காலத்தில், பெரியோர்களைப்

பேணி, அவர்களுக்கு ஸேவை புரிவாயாகில் அவர்கள் உனக்கு ஞானத்தை உபதேசிப்பார்கள்.

ஸ்ரீ ராகவேந்த்ரர், "அத். 2, ச்லோகம் 12 முதலுள்ள ச்லோகங்களால் ஆத்மஞானம் சுருங்கச் சொல்லப் பட்டது. அத். 7 ச்லோகம் 2 முதல் இனியும் அந்த ஆத்ம ஞானம் சொல்லப்படப் போகிறது. அர்ஜுனனுக்கு ஞானோபதேசம் செய்யவே இந்த கீதை ஆரம்பிக்கப் பட்டதால் உபதேக்ஷ்யந்தி = உபதேசிப்பார்கள் என்றால் நாம் (பகவான்) உபதேசிக்கிறோம் என்று கருத்து.

குறிப்பு :— ப்ரஹ்மஞானம் குருவின் உபதேசத்தினால் அடையவேண்டியது எனவும், ஞானோபதேசத்தை விரும்புகிறவன் குருவுக்கு பணிவிடை செய்ய வேண்டுமென்றும், ப்ருஹ்மக் ஞானிகளே அத்தகைய உபதேசத்தைச் செய்யத் தகுந்தவர்கள் என்றும் ஸ்ரீபகவான் அபிப்பிராயப்படுவதாகக் கொள்ளலாம்.]

[35ஆவது ச்லோகம் :— ஸ்ரீ ராமானுஜர் :— எந்த அறிவைப் பெற்றால் உடல் முதலியவற்றில் ஆத்மாபிமானமும், அதனாலுண்டாகும் மமதை (தன்னுடையது) ஆகியவைகளுமான புத்தி மாறாட்டத்தையடையமாட்டாயோ, எவ்வறிவையடைந்தால், தேவர், மானிடர், பிராணிகள் என்ற உருவுங்களுடன் கூடிய எல்லாவற்றையும் உன்னிடமே பார்ப்பாயோ, (ப்ரக்ருதியிலிருந்து விடுபட்ட ஜீவாத்மாக்கள் யாவும் ஒரே மாதிரியாக உன் ஆத்ம ஸ்வரூபம் போலவே ஞான உருவுள்ளதெனக் காண்பாயோ) என்பது கருத்து. இதே பொருள் அத். 5, 19ஆவது ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. இதேபோல் எல்லாப் பிராணிகளையும் என்னுடைய உருவத்திலும் காண்பாயோ என்றால், ப்ரக்ருதியிலிருந்து (பிறப்பிறப்பிலிருந்து) விடுபட்ட எல்லா ஜீவன்களின் உருவையும் என் உருவிற்கு (ஸ்ரீ பகவானுக்கு) ஸமமெனப் பார்ப்பாயோ எனப் பொருள்படும். இப்பொருள் அத். 14, ச்லோகம் 2லும், "तदा विद्वान् पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यं उपैति",

என்கிற ச்ருதி வாக்யத்தினுலும் தெளிவாக்கப்பட்டுள்ளது. இவைகளால் எல்லா ஜீவாத்மஸ்வரூபமும் ஒன்றுக்கொன்று ஸமம் (ஒத்தது) என்றும், அப்படியே எல்லா ஜீவாத்மஸ்வரூபமும் பரமாத்மஸ்வரூபத்திற்கு நிகரானது எனக்காண்பாய் என்பது கருத்து.

ஸ்ரீ மத்வர் :- நீ உண்மையான அறிவை (ஞானத்தை) அடைந்தால், எல்லா பூதங்களையும் (உயிருள்ள உருவங்களையும்) என்னிடத்திலும், உன்னிடத்தே என்னையும் காண்பாய்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— நீ ஞானமடைந்தால், आत्मनि (ஆத்மனி) = அந்தர்யாமியாயிருக்கிற (தன்னுள்ளேயடங்கியுள்ள) मयि (மயி) = என்னிடத்தில், அல்லது आत्मनि (ஆத்மனி) ஸர்வவ்யாபகமான (எல்லாவற்றிலும் பரவிநிற்கும்) मयि (மயி) = என்னிடத்தே, ஸகல உலகங்களும் இருப்பதாகக் காண்பாய் எனக் கருத்து]

अपि चेदसि पापेभ्यः सर्वेभ्यः पापकृत्तमः ।
सर्वं ज्ञानप्लवेनैव वृजिनं संतरिष्यसि ॥ ३६

அபி சேதஸி பாபேப்ய: ஸர்வேப்ய: பாபக்ருத்தம: l
ஸர்வம் ஞானப்லவேனைவ வ்ருஜினம் ஸம்தரிஷ்யஸி ll 36

முன் சொன்னபடி ஞானத்தை (பேரறிவை) அடைந்தால் எல்லாவிதமான பாவங்களையும் செய்துள்ளவர்களைக் காட்டிலும் நீ அதிகமான பாவத்தைச் செய்திருந்தபோதிலும், அப்பாவக் கடலை ஞானமென்னும் படகினுல் கடந்துவிடுவாய்.

[அத். 4, ச்லோகம் 19ல் கர்மத்தின் கட்டு ஞானத் தீயினுல் எரிக்கப்படுகிறது என்பதையும், பின்வரும் 37ஆவது ச்லோகத்தின் பொருளுடனும் ஒப்பிட்டுப் பார்க்கவும்.]

यथैधांसि समिद्धोऽग्निर्भस्मसात्कुरुतेऽर्जुन ।
ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा ॥ ३७

யதைதாம்ஸி ஸமித்தோஅக்னிர்பஸ்மஸாத்குருதேஅர்ஜுன l
ஞானக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதே ததா ll 37

ஓ அர்ஜுன ! நன்ருகக் கொழுந்துவிட்டு எரியும் பெருந்தீ (அதையடுத்துள்ள) விறகு கட்டைகளை எப்படி எரித்துச் சாம்பலாக்குமோ (விறகின் உருத்தெரியாது அழித்துவிடுமோ) அப்படியே ஞானமெனும் தீ அதையடுத்துள்ள ஸகல கர்மங்களையும் (அவைகளின் பயனுடன்) அழித்துவிடும்.

[ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், ஸ்ரீ ராகவேந்த்ரர் ஆகியோர் सर्वकर्माणि (ஸர்வகர்மாணி) என்பதற்கு, 'ப்ராரப்த கர்மங்களைத் தவிர (உடலுள்ளவரை தொடர்ந்து வரும் ப்ராரப்த கர்மம் அனுபவிக்கவேண்டியதென்பதால்) மற்ற எல்லாக் கர்மங்கள்', என்றும் ஸ்ரீ ராமானுஜர் — "ஆரம்பமின்றி (அநாதியாக) தொடர்ந்து வந்துள்ள கர்மங்களின் கூட்டங்களை", என்றும் பொருள் கூறியுள்ளனர்.]

न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते ।
तत्स्वयं योगसंसिद्धः कालेनात्मनि विन्दति ॥ ३८

ந ஹி ஞானேன ஸத்ருசம் பவித்ரமிஹ வித்யதே l
தத்ஸ்வயம் யோகஸம்ஸித்த: காலேநாத்மனி விந்ததி ll 38

இவ்வுலகில் (அல்லது முன் சொல்லப்பட்ட யக்ஞம் முதலியவற்றில்) ஞானத்திற்கு ஸமமான தூய்மையுடையது கிடையாது. கர்மயோக ஸித்தியை (கர்மயோகத்தால் சித்த சுத்தியை) அடைந்தவன், நீண்ட காலத்திற்குப் பின் தன்னிடத்தில் அந்த ஞானத்தைத் தானுகவே அடைகிருன்.

श्रद्धावाँल्लभते ज्ञानं तत्परः संयतेन्द्रियः ।
ज्ञानं लब्ध्वा परां शान्तिमचिरेणाधिगच्छति ॥ ३९

ச்ரத்தாவான் லபதே ஞானம் தத்பர: ஸம்யதேந்த்ரிய: l
ஞானம் லப்த்வா பராம் சாந்திமசிரேணுதிகச்சதி ll 39

எந்த ப்ரஹ்ம ஞானம் குருவினுலுபதேசிக்கப்படுகிறதோ அதில் நம்பிக்கையும், ஞானத்தையடைவதிலேயே முயற்சியும் உள்ளவனுகப் புலன்களையடக்கியிருப்பவன், ஞானம் பெற்று, சீக்கிரமாக மோக்ஷத்தையடைகிருன்.

[श्रद्धावान् (ச்ரத்தாவான்) என்பதறகு, ஆஸ்திக புத்தியுடையவன் (தெய்வமுண்டென்று நம்புகிறவன்) என்றும், तत्परः (தத்பர:) என்பதற்கு, என்னிடம் த்யானம் (நிஷ்டை) உடையவன் என்றும் ஸ்ரீ ராகவேந்த்ரர் பொருள் தருகிருர்.]

अज्ञश्चाश्रद्दधानश्च संशयात्मा विनश्यति ।
नायं लोकोऽस्ति न परो न सुखं संशयात्मनः ॥ ४०

அஞ்ஞஸ்சாச்ரத்ததானஸ்ச ஸம்சயாத்மா வினச்யதி l
நாயம் லோகோஅஸ்தி ந பரோ ந ஸுகம் ஸம்சயாத்மன: ll

குருவினுல் உபதேசிக்கப்பட்டதைத் தெரிந்துகொள்ளாதவனும், அதில் நம்பிக்கை இல்லாதவனும், அதனுல் பயனுண்டாகுமோ ஆகாதோ என்ற ஐயப்பாடு (ஸந்தேஹம்) உள்ளவனும் கெட்டுப்போவான். ஸந்தேஹமுள்ளவனுக்கு இவ்வுலகிலும், பரலோகத்திலும் (விண்ணுலகிலும்) ப்ரயோஜனமும் (உபயோகமும்), ஸுகமும் இல்லை.

[विनश्यति (வினச்யதி) என்பதற்கு, நரகத்தையடைவான் என ஸ்ரீ ராகவேந்த்ரர் பொருள் தந்துள்ளார்]

योगसंन्यस्तकर्माणं ज्ञानसंछिन्नसंशयम् ।
आत्मवन्तं न कर्माणि निबध्नन्ति धनंजय ॥ ४१

யோகஸம்ன்யஸ்தகர்மாணம் ஞானஸம்சின்னஸம்சயம் l
ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்னந்தி தனஞ்ஜய ll 41

ஓ பொருளாசையற்றவனே! (அர்ஜுனா!) பயன் கருதாது (பலனில் ஆசையை விட்டு) ஈச்வரார்ப்பணமாகக் கர்மஞ் செய்யும் நிஷ்காம கர்மயோகியாயும், ப்ரஹ்ம ஞானத்தினால் எல்லா ஐயங்களையும் போக்கிக் கொண்டவனாகவும், ப்ரஹ்மநிஷ்டனாகவும் (ப்ரஹ்மத்தில் நிலைகொண்டவனாகவும்) இருப்பவனைக் கர்மங்கள் கட்டுப் படுத்தப்படமாட்டா.

[योगसंन्यस्तकर्माणम् (யோகஸம்ன்யஸ்தகர்மாணம்) = (1) ஞானயோகத்தினால் எல்லாக் கர்மங்களையும் விட்டவனாக (ஸ்ரீ சங்கரர்), (2) ஞானவுருவான கர்மத்தையுடையவனாக (ஸ்ரீ ராமானுஜர்).

ज्ञानसंछिन्नसंशयम् (ஞானஸம்சின்னஸம்சயம்) என்பதற்கு (ஸ்ரீ ராமானுஜர்) = குருவினாலுபதேசிக்கப்பட்ட ஞானத்தினால் ஆத்மாவினிடத்தில் எல்லா ஐயங்களையும் போக்கிக்கொண்டவனாக.

आत्मवन्तम् (ஆத்மவந்தம்)=(1) தவராதவனை (சங்கரர், ஸ்ரீதரர்) (2) உபதேசிக்கப்பட்ட விஷயத்தின் பொருளில் திடமான மனமுள்ளவனாகவும் (ஸ்ரீ ராமானுஜர்) (3) பரமாத்ம பக்தனாகவும் (ஸ்ரீ ராகவேந்த்ரர்).]

तस्मादज्ञानसंभूतं हृत्स्थं ज्ञानासिनात्मनः ।
छित्त्वैनं संशयं योगमातिष्ठोत्तिष्ठ भारत ॥ ४२

தஸ்மாதக்ஞானஸம்பூதம் ஹ்ருத்ஸ்தம் ஞானாஸினாத்மன: l
சித்த்வைனம் ஸம்சயம் யோகமாதிஷ்டோத்திஷ்ட பாரத ll

ஹே பாரத! ஆகையினுல் (இதுவரை நீ செவிமடுத்த என் உபதேசத்தினுல் உனக்கு அய்யங்கள் நீங்கியிருக்கு மாகையால்) உன் புத்தியில் அறிவின்மையால் ஏற்பட்ட (உறவினர் முதலியோரைக் கொல்லலாமா என்ற) இந்த ஸந்தேஹத்தை ஞானமாகிற கத்தியினுல் வெட்டி, ஞான யோக ஸாதனமான கர்மயோகத்தைப் பின்பற்றி, போர் செய்ய எழுந்திரு.

[तस्मात् (தஸ்மாத்) என்பதற்கு, ஸ்ரீ சங்கரர், "கர்ம யோகத்தைப் பின்பற்றுவதாய் சித்தம் (புத்தி) தெளி வடைந்தவன் ஐயப்பாடுகளைப் போக்கிக்கொண்டு ஸம் ஸாரத்தில் கட்டுப்படமாட்டான். ஸந்தேகமுள்ளவனுக்கு இவ்வுலகும், மற்றுலகும் கெடும் எனவே", என்று பொருள் கூறியுள்ளார்.

हृत्स्थं (ஹ்ருத்ஸ்தம்) = ஆத்ம விஷயமான (ஸ்ரீ ராமா னுஜர்).]

ஞானயோகமென்கிற நான்காவது அத்யாயம் முற்றிற்று.

अथ पञ्चमोऽध्यायः

ஐந்தாவது அத்யாயம்

கர்மஸன்யாஸயோகம்

अर्जुन उवाच

सन्यासं कर्मणां कृष्ण पुनर्योगं च शंससि ।
यच्छ्रेय एतयोरेकं तन्मे ब्रूहि सुनिश्चितम् ॥ १

ஸன்யாஸம் கர்மணும் க்ருஷ்ண புனர்யோகம் ச சம்ஸஸி 1
யச்ச்ரேய ஏதயோரேகம் தன்மே ப்ரூஹி ஸுநிஸ்சிதம் 11 1

அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கேட்கிறுன் :—

கர்மங்களை விட்டு விடும்படியும், மறுபடி கர்மயோகத்தைச் செய்யும்படியும் சொல்கிறீர். இவ்விரண்டினுள் எது மேம்பட்டதோ எது செவ்வனே தீர்மானிக்கப்பட்டதோ அதொன்றையே எனக்குச் சொல்லவும்.

[ஸ்ரீதரர் :— 'यस्त्वात्मरतिरेव स्यात्' (அத். 3, ச்லோகம்-17), 'सर्वं कर्माखिलं पार्थ'' (அத். 4, ச்லோகம் 33) இவைகளால் ஞானிக்கு (மெய் ஆத்ம அறிவு படைத்தவனுக்கு) கர்மஸன்யாஸம் (கர்மத்தை விட்டுவிடுதல்) சொல்லப்பட்டது.

"छित्वैनं संशयं योगमतिष्ठोत्तिष्ठ भारत।" (அத். 4, ச்லோகம் 42), என்றதால் கர்மாவைச் செய்யும்படி சொல்லப்பட்டது. இவ்விரண்டையும் ஒரே காலத்தில் ஒரு மனிதன் பின்பற்றுவது முடியாதது ஆதலால், இவைகளுள் மேம்பட்டது எது என்பது அர்ஜுனனின் கேள்வி.

ஸ்ரீ சங்கரர் :— சாத்திரங்களில் கூறப்பட்டதும், பின்பற்றக்கூடியதுமான கர்மங்களைச் செய்யும்படி ஓர் இடத்திலும், கர்மங்களை விடும்படி ஓரிடத்திலும் சொல்லப்பட்டுள்ளது. (கர்மானுஷ்டானம் செய்யும்படி அத். **2**ல்-**18, 31, 47, 48** ச்லோகங்களிலும், அத். **3**ல்-**6, 8, 9,** ச்லோகங்களிலும், அத். **4**ல் ச்லோகம் **42**லும், கர்மாவை விட்டு விடும்படியாக அத். **4**ல் **18, 19, 21, 22, 24, 32, 33, 37, 41** ஆகிய ச்லோகங்களாலும் சொல்லப்பட்டுள்ளது). எனவே இந்த இரண்டுள் எது மேலானதாக நிச்சயிக்கப்பட்டுள்ளதோ அதைச் சொல்லும்படியாக அர்ஜுனனது வேண்டுகோள்.

ஸ்ரீ ராமானுஜர் :— நான்காவது அத்யாயத்தில் கர்மயோகத்தில் ஞானம் அடங்கியுள்ளபடியால் கர்மத்தைச் செய்து வந்தால் அந்தக் கர்மமே ஞான உருப்பெறுவதாகவும் அந்த ஞானம்தான் மேலானதென்றும் சொல்லப்பட்டது. மூன்ருவது அத்யாயத்தில் ஞானத்திற்குத் தகுதி வாய்ந்தவனுக்கும்கூட கர்மயோகத்தில் ஞானமடங்கியுள்ளதாலும், சுலபமானதாலும் '**अप्रमादम्**' (தப்பிதமில்லாதது) என்பதாலும், கர்மயோகம் மேம்பட்டதெனச் சொல்லப்பட்டது, இப்போது (அத் 4ல்) ஞானநிஷ்டையைக் காட்டிலும் கர்மயோகமே ஆத்மஸ்வரூப ப்ராப்தியை சீக்கிரமுண்டாக்குமென்றும், கர்மயோகத்தில் தான் கர்த்தா (செய்பவன்) அல்லவெனும் ஆத்மானுஸந்தானமும், ஆத்ம ஸ்வரூபத்தை அறியக் காரணமான அறிவின் (ஞானம்) விவரமும் சொல்லப்பட்டது.

இந்த ச்லோகத்தின் கருத்து யாதெனில், ஸன்யாஸமெனும் ஞானயோகத்தையும், மறுபடி கர்மயோகத்தையும் சொன்னதாகக் காண்கிறது. இரண்டாவது அத்யாயத்தில், மோக்ஷத்தை விரும்புவோருக்கு முதலில் கர்மயோகம்தான் செய்யவேண்டுமென்றும், கர்மயோகத்தால் மனத்தூய்மை (அந்தக்கரணசுத்தி) அடைந்தவனுக்கு, ஞானயோகத்தால் ஆத்ம தர்சனம் கிட்டுகிறதெனவும் சொல்லி, பிறகு மூன்ருவது, நான்காவது அத்யாயங்களில், ஞானயோகத் தகுதியுள்ளவர்களுக்கும்கூட கர்ம

யோகமே மேலானது எனவும், ஏனெனில் கர்மயோகம் ஞானயோகத்தின் தேவையின்றியே ஆத்மஸ்வரூப ப்ராப்தியை உண்டுபண்ணுகிறது எனவும் சொல்லப்பட்டுள்ளது. எனவே, கர்மயோகம், ஞானயோகமாகிய இரண்டினுள் எது சுலபமாகவும், சீக்கிரமாகவும் ஆத்மஸ்வரூபத்தை அடைய உதவுமோ அதைச் சொல்லும்படி கேள்வி.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— "योगस्थः कुरु कर्माणि" அத். 2 ச்லோகம் 48) என்பதால் கர்மங்களைச் செய்யவேண்டியவை எனப் பொதுவாகச் சொல்லப்பட்து. கர்மங்கள் பயன் கருதாது, ஈச்வரார்ப்பணமாகச் செய்யவேண்டுமென மூன்ருவது அத்யாயத்தில் சொல்லப்பட்டது. மறுபடி முன்னர் சொல்லப்பட்ட கர்மயோகம் விரிவாகச் சொல்லப்பட்து.

ஸ்ரீ மத்வரும் ஸ்ரீ ராகவேந்த்ரரும் :- "यदृच्छालाभसन्तुष्टो" (அத். 4, ச்லோகம் 22), என்ற ச்லோகத்தினல் கர்மங்களை விட்டுவிடுவதாகிய ஸன்யாஸமும், "कुरुकर्मैव तस्मात्त्वम्" (அத். 4-ச்லோகம்-15) என்பதால் ஈச்வரார்ப்பண புத்தியுடன் செய்வதும், வர்ணச்ரம தர்மத்திற்குத் தகுதியுள்ள கர்மயோகமும் சொல்லப்பட்டன. இவைகளுள் எது சிறந்ததோ, அதை நிச்சயித்துச் சொல்லும் என அர்ஜுனனது கேள்வி", எனக் கருத்துரைத்துள்ளனர்.

श्रीभगवानुवाच

सन्यासः कर्मयोगश्च निःश्रेयसकरावुभौ ।
तयोस्तु कर्मसन्यासात् कर्मयोगो विशिष्यते ॥ २

ஸன்யாஸ: கர்மயோகஸ்ச நி:ச்ரேயஸகராவுபௌ 1
தயோஸ்து கர்மஸன்யாஸாத் கர்மயோகோ விசிஷ்யதே 11 2

ஸ்ரீ க்ருஷ்ண பகவான் அர்ஜுனனை நோக்கிச் சொல்வது :— கர்மத்தை விடுவதும், ஈச்வரார்ப்பண புத்தியுடன்

கர்மத்தைச் செய்வதும், இரண்டுமே மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியவைகளே. அவைகளில் கர்மத்தை விடுவதைக்காட்டிலும் ஈச்வரார்ப்பண புத்தியுடன் செய்யப் படும் கர்மயோகம் சிறந்தது.

[ஸ்ரீ சங்கரரும் ஸ்ரீதரரும் :— "கர்மயோகம் நேராக மோக்ஷத்திற்குக் காரணமாகாவிடினும் ஞானத்திற்குக் காரணமாகிறது. அந்த ஞானம் மோக்ஷத்திற்கு காரணமாகும். ஞானமுடையவன் கர்மத்தை விடக்கூடுமாகுலும், தகுதியுள்ளவன் என்ற முறையில் பார்க்கின் உன்னைப் போன்றவன் கர்மத்தை விடக்கூடாது

सन्यास: (ஸன்யாஸ:) = (1) ஞானி கர்மத்தை விடுவதும் (ஸ்ரீ சங்கரர் ஸ்ரீதரர்) (2) ஞானயோகமும் (ராமானுஜர்) (3) காமம் (ஆசை) க்ரோதம் (கோபம்) முதலிய த்வந்த்வங்களை விடுதல் (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

कर्मसन्यासात् (கர்மஸன்யாஸாத்) = (1) ஞானநிஷ்டையைக்காட்டிலும் (ஸ்ரீ ராமானுஜர்) (2) கர்மானுஷ்டான விஷயத்தில் காமம் முதலிய விடவேண்டியவைகளின் உருவான ஸன்யாஸத்தைக்காட்டிலும் (ஸ்ரீ ராகவேந்த்ரர்)

ज्ञेयः स नित्यसन्यासी यो नद्वेष्टि न काङ्क्षति ।
निर्द्वन्द्वो हि महाबाहो सुखं बन्धात् प्रमुच्यते ॥ ३

ஜ்ஞேய: ஸ நித்யஸன்யாஸீ யோ நதவேஷ்டி ந காங்க்ஷதி ।
நிர்த்வந்த்வோ ஹி மஹாபாஹோ ஸுகம்
பந்தாத் ப்ரமுச்யதே ॥ 3

ஓ பெரும் கைகளையுடையவனே! (அர்ஜுன!) எவன் விருப்பு வெறுப்பற்று இன்ப துன்பங்களான (ஸுக துக்கங்களான) இருமைகளை ஸஹிக்கிறவனே (பொறுத்துக்கொள்கிறானோ) அவன் நித்ய ஸன்யாஸியாக (நித்யத் துறவியாக) அறியத்தக்கவன். அவன் முயற்சியின்றி கர்மத்தின் கட்டிலிருந்து விடுபடுவான்.

[ஸ்ரீ ராமானுஜர் :— नकाङ्क्षति (நகாங்க்ஷதி) என்ற சொற்களுக்கு "கர்மத்திற்குள்ளடங்கியுள்ள ஆத்மானுபவத்தில் திருப்தியடைந்திருக்கிறதால் அதைத் தவிர மற்றதில் விருப்பமற்றவன் என்று பொருள் கூறுகிருர். नित्यसन्यासी (इति) ज्ञेय: (நித்யஸன்யாஸீ இதி ஞேய:) = (1) "எப்போதும் ஞான நிஷ்டையில் இருப்பவனுக அறியத்தக்கவன்" (ஸ்ரீ ராமானுஜர்) (2) யதி முதலிய ஸ்ன்யாஸியல்ல (ஸாதாரணத்துறவியல்ல) காம்ய கர்மங்களை விட்டவனுக அறியத்தக்கவன் (ஸ்ரீ ராகவேந்த்ரர்)].

सांख्ययोगौ पृथग्बालाः प्रवदन्ति न पण्डिताः ।
एकमप्यास्थितः सम्यगुभयोर्विन्दते फलम् ॥ ४

ஸாங்க்யயோகௌ ப்ருதக்பாலா: ப்ரவதந்தி ந பண்டிதா: ।
ஏகமப்யாஸ்தித: ஸம்யகுபயோர்விந்ததே ஃபலம் ॥ 4

ஞானயோகத்தின் பலன் (பயன்) வேறு, கர்மயோகத்தின் பலன் வேறு என அவிவேகிகள் (அறியாதவர்கள்) சொல்கிருர்கள். விவேகிகள் (அறிவாளிகள்) அவ்வாறு சொல்வதில்லை. ஏனெனில் இரண்டிலொன்றையேனும் செவ்வனே பின்பற்றி, இரண்டினுடைய பயனுகிய மோக்ஷத்தையடையலாம்.

[ஸ்ரீ சங்கரர் & ஸ்ரீதரர் :— கர்ம ஸன்யாஸம், கர்ம யோகம், இவைகளுள் எது சிறந்ததெனும் அர்ஜுனனுடைய கேள்விக்குப் பதிலாக ஸ்ரீ பகவான் ஸாங்க்ய யோகத்தையும், கர்மயோகத்தையும் பற்றி சொல்ல வேண்டியது ஏனெனில் ஸாங்க்யமென்பது ஞானம்; ஞானமே கர்ம ஸன்யாஸமாகும். எப்படியெனில் ஞான நிஷ்டை ஏற்படுபவனுக்கு கர்மம் விட்டுப்போகும். எனவே ஸன்யாஸமென்பதற்கு மாற்றுச்சொல்லாக (ஞானமாகின்ற) ஸாங்க்யமென்னும் சொல் இந்த ச்லோகத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராமானுஜர் :— கர்மயோகத்தின் பயன் ஞான யோகமென்றும், ஞானயோகத்தின் பலன் ஆத்மதர்சனம் (தான் யாரெனும் உண்மையை அறிதல்) என்றும் ஆகவே இரண்டிற்கும் பலன் வெவ்வேறு என அறியாத வர் சொல்வார்கள். விவேகிகள் அப்படி சொல்கிறகில்லை. ஏனெனில் ஞானயோகம், கர்மயோகம் ஆகிய இரண்டிற் கும் ஆத்மதர்சனம் எனும் ஒரே பலன்தான்.

[ஸ்ரீ ராகவேந்த்ரர் :— ஞானத்திற்குப் பலன் வேறு, கர்மத்திற்குப் பலன் வேறு, ஆகையால், ஞானத்திற்குக் கர்மம் ஸாதனமல்லவென அவிவேகிகள் சொல்வர். விவேகிகள் ஞானத்திற்குக் கர்மம் ஸாதனமெனவும், முடிவில் மோக்ஷ பலனைக் கொடுக்கத்தக்கது எனச் சொல்வர்.

குறிப்பு :— ஞானயோகம் மோக்ஷத்திற்குக் காரணமென வும், கர்மயோகம் ஞானத்திற்குக் காரணமெனவும், முன்னர் பகவானுல் சொல்லப்பட்டது; இனியும் அப்படிச் சொல்லப்படும். இந்த ச்லோகத்தில் இரண் டும் ஒன்றே இரண்டிற்கும் பயன் ஒன்றே என்று சொல்லப்படுவது எவ்வாறு சரியாகுமென்ற கேள்வி பிறக்கலாம். அதற்கு பதில் யாதெனில்— ஞான நிஷ்டைக்குத் தகுதியில்லாது கர்மயோகத்திலீடுபடக் கூடிய ஒருவனிருப்பானுகில், அவனை நோக்கி ஞான யோகமே சிறந்தது, அதைத்தான் நீ பின்பற்ற வேண்டுமென்று சொல்லப்படுமாகில், ஞான நிஷ் டையைக் கடைப்பிடிக்கத் தகுதியற்ற அவன் கர்மத் திலும் ஊக்கத்தை இழந்து இரண்டும்கெட்ட நிலையில் தவிப்பானுதலால், கர்மயோகத்தையும் ஞானயோகத் தையும் ஒரே விதமாகப் புகழ்ந்து ஸ்ரீ பகவான் கூறிய தாகக் கொள்ளவேண்டும்.]

यत्सांख्यैः प्राप्यते स्थानं तद्योगैरपि गम्यते ।
एकं सांख्यं च योगं च यः पश्यति स पश्यति ॥ ५

யத்ஸாம்க்யை: ப்ராப்யதே ஸ்தானம் தத்யோகைரபி
கம்யதே ।
ஏகம் ஸாங்க்யம் ச யோகம் ச ய: பச்யதி ஸ பச்யதி ॥ 5

ஞான நிஷ்டையைக் கடைப்பிடித்த ஸன்யாஸிகளால் எந்த நிலை அடையப்படுமோ அதே நிலை கர்மயோகிகளாலும் அடையப்படும். ஸாங்க்ய யோகத்தையும், கர்ம யோகத்தையும் ஒரே பயனுள்ளதாக எவன் அறிகிருனே அவனே அறிந்தவன்.

[ஸ்ரீ சங்கரர் :— முன்னர் கர்மயோகம் சிறந்தது என்று கூறிவிட்டு, இப்போது ஞானயோகமும், கர்ம யோகமும் ஒன்றெனவும், ஒரே பலனுள்ளதெனவும் எப்படிக் கூறப்படுமெனில், கர்மயோகம் ஞானத்தை உண்டாக்கி, முடிவில் மோக்ஷத்தை (வீடுபேறு)க் கொடுக்கின்றது. ஞானமும் மோக்ஷத்தையே கொடுப்பதல், பலன் இரண்டுக்குமொன்றே. எனவே இரண்டும் ஒன்றெனச் சொல்லப்படுகிறது. ஞான யோகத்தைவிட கர்ம யோகம் சிறிது தாழ்ந்ததாக இருக்க கர்மயோகம் சிறந்தது என எவ்வாறு கூறலாமெனில், நீ (அர்ஜுனன்) கர்மத்தை விடும் ஸன்யாஸம் சிறந்ததா? கர்மம் செய்யும் கர்ம யோகம் சிறந்ததா? என இப்போது கேட்டதால், இப்போது நீ கர்மத்தைச் செய்யவேண்டியவனுக இருப்பதால் கர்மயோகம் சிறந்தது என்று சொல்லப்பட்டது. உண்மையில் ஞானயோகமே சிறந்தது.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— இவர் இருவிதமாகப் பொருள் கூறியுள்ளார் :- (1) ஸாங்க்யமென்பது ஞானம், யோகமென்பது பயன் கருதாத கர்மம். ஞானத்திற்குப் பலன் மோக்ஷம். நிஷ்காம (பயன் கருதாத) கர்மத்திற்குப் பலன் ஞானம். இவ்விரண்டிற்கும் ஒரே பலன் எப்படியாகுமெனில், ஞானம் உடன் மோக்ஷத்தைக் கொடுப்பதாலும், நிஷ்காம கர்மம் சிறிது கால தாமதத்திற்குப் பிறகு மோக்ஷத்தைத் தருமாகையாலும், இரண்டிற்கும் பயன் ஒன்றெனச் சொல்லப்பட்டது. மேலும் ஞானகர்மங்கள்

கார்யம், காரணமென்ற முறையில் ஒன்ருேடொன்று இணைந்தே உள்ளன. (2) ஸன்யாஸியாகிய (துறவி) ஞானி, மோக்ஷத்தில் ஆனந்தத்தின் வளர்ச்சிக்காக கர்மம் செய்யவேண்டும். இல்லறத்தோன் எனும் கர்மயோகி மோக்ஷமடைய ஞானத்துடன் கர்மம் செய்யவேண்டும். ஆகையால் ஞானிக்குக் கர்மமும், கர்மயோகிக்கு ஞான மும் தேவைப்படுவதால் ஞானமும், கர்மமும் ஒன்ருகச் சொல்லப்பட்டதெனக் கருத்து.]

सन्यासस्तु महाबाहो दुःखमाप्तुमयोगतः ।
योगयुक्तो मुनिर्ब्रह्म नचिरेणाधिगच्छति ॥ ६

ஸன்யாஸஸ்து மஹாபாஹோ து:கமாப்துமயோகத: l
யோகயுக்தோ முனிர்ப்ரஹ்ம ந சிரேணுதிகச்சதி ll 6

பெருங் கைகளையுடைய அர்ஜுனு! பரமார்த்த ஸன் யாஸம் கர்மயோகமில்லாதவனுல் அடையப்படுவது கடினம். கர்மயோகத்துடன் கூடி த்யானம் செய்கிறவன் ப்ரஹ்மத்தை விரைவில் அடைகிருன்.

[सन्यासस्तु (ஸன்யாஸஸ்து) = (1) பரமார்த்த ஸன் யாஸம், அதாவது, ஞானநிஷ்டையை நிலைத்தடைந்தவ னுக்கு கர்மம் தாளுக விட்டுப்போவதென்பது (ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்). (2) ஞானயோகம் (ஸ்ரீ ராமானுஜர்). ब्रह्म (ப்ரஹ்ம) = பரமார்த்த நிஷ்டையை (ஸ்ரீ சங்கரர்).

ஸ்ரீ ராமானுஜர் :— मुनिः (முனி:) = ஸ்வரூபானுஸந் தானத்துடனுள்ள, योगयुक्तः (யோகயுக்த:) = கர்மயோகி, ब्रह्म (ப்ரஹ்ம) = தன் உடல் (ப்ரக்ருதி) விடுபட்ட ஆத்ம ஸ்வரூபத்தை. नचिरेण (நசிரேண) = சீக்கிரமாக, अधिगच्छति (அதிகச்சதி) = அடைகிருன். ஞானி முயற்சியினுல் ஞான யோகத்தை ஸாதிக்கிறதால் அவனுக்கு அதிக காலமாகும்.

ஸ்ரீ மத்வர் :— காமம் (ஆசை), க்ரோதம் (கோபம்) முதலியவைகளை விடுவதுதான் ஸன்யாஸம். யோக மென்பது, பயன் கருதாமல் ஈச்வரார்ப்பண புத்தியுடன்

செய்யும் நிஷ்காம கர்மமாகும். காமக்ரோதங்களை விட்டதால் மட்டுமே ப்ரஹ்மத்தை அடையமுடியாது. அவைகளை விட்டு, பயன் கருதாக் கர்மம் செய்துவந்தால் விரைவில் ப்ரஹ்மத்தை அடைவான். எனவே காமம், க்ரோதம் முதலியவற்றை விடுவதான ஸன்யாஸத்தைவிட கர்மயோகம் சிறந்ததெனச் சொல்லப்பட்டது. ஆசை, கோபம் முதலியவற்றை விடுவதால் மனச்சுத்தம் (சித்த சுத்தி) முதலிய பயன்கள் ஏற்படுமாளுலும் அவை அற்ப பலன்கள். எனவே அவை இங்கு சொல்லப்படவில்லை.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— ஆசை, கோபம் முதலியனவற்றை விடுவதன்றி கர்மயோகம் மாத்திரமோ, கர்மயோகமின்றி காமம், க்ரோதம் இவைகளை விடுவது மாத்திரமோ மோக்ஷத்திற்கு வழியாகாது. த்யாகமும், கர்மயோகமும் சேர்ந்தால்தான் சீக்கிரமாக மோக்ஷம் கிடைக்குமென்பது கருத்து.]

योगयुक्तो विशुद्धात्मा विजितात्मा जितेन्द्रियः ।
सर्वभूतात्मभूतात्मा कुर्वन्नपि न लिप्यते ॥ ७

யோகயுக்தோ விசுத்தாத்மா விஜிதாத்மா ஜிதேந்த்ரிய: ।
ஸர்வபூதாத்மபூதாத்மா குர்வன்னபி ந லிப்யதே ॥ 7

கர்மயோகியாகவும், தூய மனத்தையுடையவனாகவும், உடலையும், புலன்களையும் அடக்கியவனாகவும், எல்லா ப்ராணிகளிடத்திலுமுள்ள ஆன்மாவும் (ஆத்மாவும்), அல்லது பரம்பொருளும், தன்னிடத்தேயுள்ள ஆன்மாவும் ஒன்றேயென உணர்ந்தவனும், கர்மம் செய்யினும் (உலக இயலையொட்டிச் செய்தாலும்), கர்மபந்தம் (கர்மத்தின் கட்டு) அவனை ஒட்டுகிறதில்லை.

[सर्वभूतात्म भूतात्मा (ஸர்வபூதாத்ம பூதாத்மா) = (1) தேவர் முதல் எல்லா பூதங்களுக்கும் ஆன்மாவாகவுள்ள ஸ்வரூபத்தையே தனக்கும் ஆத்மாவாக அறிகிறவன், அதாவது ஞானகாரத்தால் ஆன்மாக்கள் யாவும் ஸமமென

உணர்பவன் (ஸ்ரீ ராமானுஜர்). (2) ப்ரம்மா முதலாகவுள்ள எல்லா உலகிற்கும் ஈச்வரன் எவனோ அவனே தனக்கும் ஈச்வரன் என அறிகிறவன் (ஸ்ரீமத்வர், ஸ்ரீராகவேந்த்ரர்)]

नैव किंचित्करोमीति युक्तो मन्येत तत्त्ववित् ।
पश्यञ्शृण्वन् स्पृशञ्जिघ्रन्नश्नन्गच्छन्स्वपञ्श्वसन् ॥ ८

प्रलपन्विसृजन्गृह्णन्नुन्मिषन्निमिषन्नपि ।
इन्द्रियाणीन्द्रियार्थेषु वर्तन्त इति धारयन् ॥ ९

நைவகிம்சித்கரோமீதி யுக்தோ மன்யேத தத்த்வவித் ।
ப்சயஞ்ச்ருண்வன் ஸ்ப்ருசன் ஜிக்ரன்னச்னன் கச்சன் ஸ்வபன் ச்வஸன் ॥ 8

ப்ரலபன் விஸ்ருஜன் க்ருஹ்ணன்னுன்மிஷன்நிமிஷன்னபி ॥
இந்த்ரியாணீந்த்ரியார்தேஷு வர்தந்த இதி தாரயன் ॥ 9

கர்மயோகி ஆத்ம தத்வத்தை அறிந்து, தான் பார்த்தல், கேட்டல், தொடுதல், நுகர்தல், சாப்பிடுதல், நடத்தல், தூங்குதல், மூச்சு விடுதல், பேசுதல், மலம் சிறுநீர் கழித்தல், எடுத்தல், கண்களை விழித்தல் மூடுதல் முதலிய செய்கைகளைச் செய்கிறவனாயினும், புலன்கள், அவைகளின் செயல்களாகிய விஷயங்களில் ஈடுபட்டுள்ளனவெனத் தீர்மானித்துக்கொண்டவனாக ஒரு செயலையும் தான் செய்யவில்லையென்று அறிகிறான்.

[இந்த ச்லோகங்களில் குறிக்கப்படுபவன் ஞானத்திற்கு ஏற்றவனாக அறியவேண்டும்.]

ब्रह्मण्याधाय कर्माणि सङ्गं त्यक्त्वा करोति यः ।
लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा ॥ १०

ப்ரஹ்மண்யாதாய கர்மாணி ஸங்கம் த்யக்த்வா கரோதி ய: ।
லிப்யதே ந ஸ பாபேன பத்மபத்ரமிவாம்பஸா ॥ 10

எவன் கர்மங்களை பரமாத்மாவிடம் ஒப்புவித்து (ஈச்வரார்ப்பண புத்தியுடன் செய்து) பயனில் ஆசையை விட்டுச் செய்கிறானோ அவனிடம் எப்படி தாமரை இலையில் ஜலம் ஒட்டுகிறதில்லையோ, அதுபோல புண்ய பாவங்கள் ஒட்டுகிறதில்லை.

(இதில் குறிக்கப்படுகிறவன் கர்மத்திற்குரியவனென அறிக. ब्रह्मणि (ப்ரஹ்மணி)=ப்ரக்ருதியிடத்தில் (ஸ்ரீராமானுஜர்) सङ्गम् (ஸங்கம்)=மோக்ஷ பலனில் உள்ள ஆசையைக்கூட—ஸ்ரீ சங்கரர்)].

कायेन मनसा बुद्धया केवलैरिन्द्रियैरपि ।
योगिनः कर्म कुर्वन्ति सङ्गं त्यक्त्वात्मशुद्धये ॥ ११

காயேன மனஸா புத்யா கேவலைரிந்த்ரியைரபி ।
யோகின: கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்மசுத்தயே॥ 11

கர்மயோகிகள் பயனில் ஆசையை விட்டு, மனத் தூய்மைக்காக உடல், மனம், புத்தி, ஆசையற்றுள்ள புலன்கள் ஆகியவற்றால் கர்மம் செய்கிறார்கள்.

[*ஸ்ரீதரர்*:— உடலால் செய்யப்படுபவை, நீராடல் போன்றவை. மனத்தால் செய்யப்படுவன த்யானம் முதலியன. புத்தியால் செய்யப்படுபவை தத்வ விசாரம், நிச்சயம் முதலியன. புலன்களால் செய்யப்படுபவை பகவானை வாயாரப் பாடிப் புகழ்வது, அவனது குணங்களைக் கேட்டல் முதலியன.

குறிப்பு:— "அபிமானமற்றுள்ள (ஆசையற்றுள்ள) இந்த்ரியங்களால் (புலன்களால்)" என்றால் தான் செய்யும் கர்மத்தில் புலன்களால் ஏற்கப்படும் விஷயங்களில் (வஸ்துக்கள் அல்லது பொருள்களில்) விருப்பும், வெறுப்பும் வைக்காது எனக் கருத்து.]

युक्तः कर्मफलं त्यक्त्वा शान्तिमाप्नोति नैष्ठिकीम् ।
अयुक्तः कामकारेण फले सक्तो निबध्यते ॥ १२

யுக்த: கர்மஃபலம் த்யக்த்வா சாந்திமாப்நோதி நைஷ்டிகீம் ।
அயுக்த: காமகாரேண ஃபலே ஸக்தோ நிபத்யதே ॥ 12

கர்மத்தின் பயனில் ஆசையை விட்டுள்ள கர்மயோகி, ஆத்மநிஷ்டையால் அடையத்தக்க மோக்ஷத்தை அடைகிறான். ஆசையினால் ஏவப்பட்டு பயனில் இச்சையுடைய கர்மயோகி கட்டில் (பந்தத்தில்) அகப்பட்டுக்கொள்கிறான்.

[युक्तः (யுக்த:)=(1) ஈச்வர ப்ரீதியாகச் செய்கிறேன் (கர்மத்தை) என்ற மனச்சாந்தியை யடைந்துள்ளவன் (ஸ்ரீ சங்கரர்) (2) பரமேச்வர நிஷ்டையில் நிலைத்துள்ளவன் (ஸ்ரீதரர்) (3) ஆத்ம ப்ரயோஜனத்திலேயே நோக்கமுள்ளவன் (ஸ்ரீ ராமானுஜர்) शान्तिम् (சாந்திம்)=ஆத்மானுபவ இன்பத்தை (ஸ்ரீ ராமானுஜர்)]

सर्वकर्माणि मनसा सन्यस्यास्ते सुखं वशी ।
नवद्वारे पुरे देहे नैव कुर्वन् न कारयन् ॥ १३

ஸர்வகர்மாணி மனஸா ஸன்யஸ்யாஸ்தே ஸுகம் வசீ ।
நவத்வாரே புரே தேஹே நைவ குர்வன் ந காரயன் ॥ 13

புலன்கள் மனது ஆகியவற்றை தன் வசமாக்கிக் கொண்டவன் (சுவாதீனமாகவுள்ளவன்) எல்லாக் கர்மங்களையும் விவேகத்துடன் (அறிவுடன்) கூடிய மனத்தினால் விட்டுவிட்டு, ஒன்பது வாயில்களையுடைய பட்டினத்தைப் போலுள்ள உடலில் ஒன்றும் செய்யாதும், செய்விக்காதும் ஸுகமாக (ஆனந்தமாக) இருக்கிறான்.

[ஸ்ரீ சங்கரர்:— இதில் குறிப்பிடப்படுபவன் இந்த அத்யாயத்தின், 8, 9-ஆம் ச்லோகங்களினால் குறிப்பிடப்பட்டவனேயாகும்.

ஸ்ரீதரர், ஸ்ரீ ராமானுஜர் & ஸ்ரீ ராகவேந்த்ரர்:— देहे (தேஹே) என்பதற்கு பதிலாக देही (தேஹீ) என்று பாடம் என்றும், அதற்கு உடலையுடைய ஆத்மாவென்று பொருளென்றும் கூறுகின்றனர். இப்பொருள் पुरे (புரே) என்ப

துடன் பொருந்தும் பொருட்டு "पुरे (புரே=தேஹத்தில் (உடலில்) देही (தேஹீ)=உடலையுடைய ஆன்மாவான வன்" என்று உரை செய்துள்ளனர்.

குறிப்பு:— உடல் ஒன்பது த்வாரங்களை (கண்கள்-2, காதுகள்-2, மூக்குத்வாரங்கள்-2. வாய்-1, மலங்கழிக்கும் த்வாரம்-1, சிறுநீர் வெளியாகும் த்வாரம்-1, ஆக ஒன்பது) உடையதாகையால் 9 வாயில்களைக் கொண்ட பட்டினத்துக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பட்டினத்தை உபமானமாகக் கொண்டதன் காரணம் யாதெனில்—

ஒன்பது வாயில்களையுடைய ஒரு கோட்டையிலிருந்துகொண்டு தானுகவும், மந்திரி முதலியோரைக் கொண்டும், பல விஷயங்களிலும், கார்யங்களிலும் ஈடுபட்டு, பல செயல்களைப் புரிந்தும், செய்வித்தும் நெடுங்காலம் ஆட்சி செய்துவந்த ஓர் அரசன், அரசாட்சியில் வெறுப்பு ஏற்பட்டு, ஆட்சியை மற்றொருவரிடம் ஒப்படைத்துவிட்டு, அப்பட்டினத்திலேயே வசித்துக்கொண்டிருந்தான் எனக் கற்பனை செய்துகொள்வோம். அவன் எப்படி அரசாட்சிக்குரிய கவலைகள், தொல்லைகளில்லாது ஸுகமாகவும், ஆனந்தமாகவும் இருப்பானே அப்படியே உடலாகிய கோட்டைக்குள் இருந்துகொண்டு புலன்கள், மனம், புத்தி, அஹங்காரம் (தான் எனும் எண்ணம்) உடல் இவைகளினுல் செய்யப்படும் எல்லாக் கர்மங்களையும் தானே செய்வதாகவும், செய்விப்பதாகவும் ப்ரமை (புத்தி மாராட்டம்) அடைந்து, அவைகளால் ஏற்படும் இன்ப துன்பங்களை தன்னுடையதாக எண்ணம் கொண்டிருந்த இந்த ஆன்மா (ஜீவன்) ஞானமடைந்து, தான் அனுபவித்து வந்த இன்ப துன்பங்கள் தன்னைச் சார்ந்ததல்ல, உடல், புலன்களின் செய்கைகளுக்கு தான் கர்த்தா (செய்கிறவன்) அல்லவென அறிவானுகில், அப்படியுள்ளவனுக்கு உடல், புலன்கள் முதலியவற்றின்

செய்கைகள் நடந்துகொண்டிருந்தபோதிலும், அவைகளின் தொடர்பை விட்டு, உடலினுள் ஸுகமாக இருப்பான். இவற்றினை விளக்கவே ஒன்பது வாயில்களைக் கொண்ட பட்டினம் உதாரணமாகச் சொல்லப்பட்டது.]

न कर्तृत्वं न कर्माणि लोकस्य सृजति प्रभुः ।
न कर्मफलसंयोगं स्वभावस्तु प्रवर्तते ॥ १४

ந கர்த்ருத்வம் ந கர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு: ।
ந கர்மஃபலஸம்யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்ததே ॥ 14

ஈச்வரன் மக்களுக்காக கர்த்ருத்வத்தையோ (செய்யக்கூடியவன் என்பதையோ) கர்மங்களையோ, கர்மத்தின் பயனில் பற்றுதலையோ உண்டாக்குகிறதில்லை. மாயையே இவற்றுள் நுழைந்துள்ளது. (கர்த்ருத்வம், கர்மம் இவை மாயையின் குணத்தாலுண்டானவை எனக் கருத்து)

[प्रभुं (ப்ரபும்) = ஆத்மா அல்லது உடலுடையவன் = தேஹீ (ஸ்ரீ சங்கரர்)

ஸ்ரீ ராமானுஜர் :— लोकस्य (லோகஸ்ய) = தேவன், மனிதன், மிருகம், பறவை, அசைவற்ற பொருள்கள், ஆகியவற்றின் உருவங்களும், ப்ருக்ருதியின் தொடர்புள்ள இவ்வுலகிற்கு कर्तृत्वम् (கர்த்ருத்வம்) = தேவன், மானிடன் முதலியவற்றில் அவரவர்களுக்குத் தனித்தனி கர்த்ருத்வத்தையும் (செயல்புரியும் தகுதியையும்) कर्माणि = அவரவருக்குத் தனித்தனி கர்மங்களையும், कर्मफलसंयोगम् (கர்மஃபலஸம்யோகம்) = அவரவர்களுக்கு அவ்வக்கர்மங்களாலுண்டான பயன்களுடன் தொடர்பையும், प्रभुः (ப்ரபு:) = கர்மத்தின் கட்டிலிருந்து விடுபட்டு, தன் ஸ்வ ஸ்வரூபத்தினுடனுள்ள ஆன்மா न सृजति (ந ஸ்ருஜதி) = உண்டாக்குவதில்லை. स्वभावस्तु (ஸ்வபாவஸ்து) = ப்ரக்ருதி வாஸனை

யாகிற அநாதி காலமாக தொடர்ந்து வந்த முன் கர்மங்களாலுண்டான, ப்ரக்ருதியின் தொடர்பினுலுண்டான உடலிலுள்ள பற்றின் வாஸனே, प्रवर्तते (ப்ரவர்த்ததே) = உண்டுபண்ணுகிறது. இயற்கையால் (ஸ்வபாவத்தால்) செயலுக்குரிய தகுதி, செய்கை இவை ஏற்பட்டனவேயன்றி ஆத்மாவிற்கு கர்த்ருத்வம் (செயல்படும் திறன்) இல்லே என்பது கருத்து.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— प्रभुः (ப்ரபு:) = அசைவற்றப் பொருள்களேக் காட்டிலும் சாமர்த்யமுள்ள ஜீவன், लोकस्य (லோகஸ்ய) = ஜனங்களுக்காகவோ, தனக்காகவோ, कर्तृत्वम् (கர்த்ருத்வம்) = செயல்படும் திறமையையோ, कर्माणि (கர்மாணி) = கர்மங்களேயோ, कर्मफल-संयोगम् (கர்மபலஸம்யோகம்) = செயலின் பயனேயாவது, न सृजति (ந ஸ்ருஜதி) = சுதந்திரமாக உண்டுபண்ணவோ, தான் பெறவோ சக்தியுள்ளவனல்ல. स्वभावस्तु (ஸ்வபாவஸ்து) = சுதந்திரமாக எல்லாவற்றையும் உண்டாக்கும் ஈச்வரன், प्रवर्तते (ப்ரவர்த்ததே) = சுதந்திரமாக உண்டாக்குகிருர்.

அல்லது

प्रभुः (ப்ரபு:) = ஈச்வரன், लोकस्य (லோகஸ்ய) = ஜீவன்களுக்கு, कर्तृत्वम् (கர்த்ருத்வம்) = செயல்புரியும் திறன், कर्माणि (கர்மாணி) = கர்மங்கள், कर्मफलसंयोगम् (கர்மபலஸம்யோகம்) = கர்மங்களின் பயனில் தொடர்பு (ஆகியவற்றில்), न सृजति (ந ஸ்ருஜதி) = சுதந்திரம் கொடுக்கிறதில்லே.

ஸ்ரீதரர் :— प्रभुः (ப்ரபு:) = ஈச்வரன்].

नादत्ते कस्यचित्पापं न चैव सुकृतं विभुः ।
अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः ॥ १५

நாதத்தே கஸ்யசித்பாபம் ந சைவ ஸுக்ருதம் விபு: I
அஞ்ஞானேனுவ்ருதம் ஞானம் தேன முஹ்யந்தி ஜந்தவ: II

ஈச்வரன் யாதொருவனின் பாவத்தையோ, புண்யத்தையோ க்ரஹிக்கிறதில்லை (தானெடுத்துக்கொள்வதில்லை). அறிவின்மையால் ஞானம் (ஆன்மீக அறிவு) மூடப்பட்டுள்ளதால் மானிடர்கள் மோஹமடைந்துள்ளார்கள் (புத்திமாருட்டமடைந்துள்ளனர்).

[ஸ்ரீ சங்கரர் :— மானிடர்கள் ' நான் செய்கிறேன், நான் செய்விக்கிறேன், நான் சாப்பிடுகிறேன், நான் சாப்பாடு செய்விக்கிறேன் ' என்றெல்லாம் மோஹமடைந்துள்ளார்கள்.

ஸ்ரீ ராமானுஜர் :— विभुः (விபு:) = ஆத்மா (ஜீவன்), कस्यचित् (கஸ்யசித்) = மகன்கள், நண்பர்களுடைய, पापं (பாபம்) = பாவத்தின் பயனுகிய துயரத்தை, नादत्ते (நாதத்தே) = போக்கடிக்கிறதில்லை. தன்னைச் சேர்ந்தவனென்கிற ஆசையை, அப்பாவத்திற்குப் பரிஹாரமாகவாவது, அந்தப் பாவத்தைத் தான் க்ரஹித்துக்கொள்ளவாவது ஏற்படுகிறதில்லை. कस्यचित् (கஸ்யசித்) = எதிரியாகிய ஒருவனின், सुकृतम् (ஸுக்ருதம்)=புண்ணியப் பயனுகிய இன்பத்தை, नादत्ते (நாதத்தே) = போக்கடிக்கிறதில்லை; ஏனெனில் विभुः (விபு:)=எங்கும் வ்யாபித்தவன், இவனுக்கு மகன், நண்பன், எதிரி என்பாரில்லை. எனவே பாவ, புண்யங்களைப் போக்கடிக்கக் காரணமேயில்லை. உலகில் உறவினன், விரோதி எனவெல்லாம் கூறப்படுவது முன்ஜன்ம கர்மவாஸனையால் உண்டானவை. எப்படியெனில், अज्ञानेनावृतं ज्ञानम् (அஞ்ஞானேனுவ்ருதம் ஞானம்)=தன்னுடைய ஸ்வரூபஞ்ஞானம் அறியாமையினுல் மூடப்பட்டுள்ளது; அதனுல் உறவினன், எதிரி என்பவை ஏற்படுகின்றன.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— विभुः (விபு:) = ஜீவன், कस्यचित्-पापं नादत्ते (கஸ்யசித்பாபம் நாதத்தே) = ஒரு கெட்ட கர்மத்

தின் பயனான பாவத்தைச் சுதந்திரமாக அடையவோ, कस्यचित् सुकृतम् (கஸ்யசித் ஸுக்ருதம்) = ஒரு நல்ல கர்மத்தின் பயனாகிய புண்யத்தைச் சுதந்திரமாக அடையவோ சக்தியற்றவன். ஈச்வரனுக்கே அத்தகைய சக்தியுண்டு.

அல்லது

विभुः (விபு:) = ஈச்வரனுக்கு பாவ, புண்ய கர்மங்கள் ஏதுமில்லாததால் அக் கர்மபயனுமில்லை பாவ, புண்யமற்ற பரம்பொருள் (ஈச்வரன்) ஒருவனுளேல், அவன் ஏன் காணப்படுகிறதில்லை எனில், ஜீவனுடைய அறிவு, அறியாமையால் மறைக்கப்பட்டிருப்பதால், அந்த ஜீவன் ஈச்வரனை அறிவதில்லை].

ज्ञानेन तु तदज्ञानं येषां नाशितमात्मनः ।
तेषामादित्यवत् ज्ञानं प्रकाशयति तत्परम् ॥ १६

ஞானேன து ததஞானம் யேஷாம் நாசிதமாத்மன: ।
தேஷாமாதித்யவத் ஞானம் ப்ரகாசயதி தத்பரம் ॥ 16

ப்ரஹ்ம ஞானத்தினால் (ப்ரஹ்மத்தைப் பற்றிய அறிவினால்), எவர்களுடைய அறியாமை(அஞ்ஞானம்) அழிக்கப்பட்டுள்ளதோ, அவர்களுக்கு ஞானம் சூர்யனைப்போல் பரப்ரஹ்ம ஸ்வரூபத்தைப் பிரகாசமாக எடுத்துக்காட்டுகிறது (சூர்யனின் ஒளி இருளை அகற்றி, பொருள்களைப் பிரகாசமாகச் செய்வதுபோல்).

[ஸ்ரீ ராமானுஜர் :— येषामात्मनाम् (யேஷாம் ஆத்மனாம்) = உலகியலிலிருந்து விடுபட்டுள்ள ஆன்மாக்களுடைய अज्ञानम् (அஞ்ஞானம்) = நீண்ட காலமாகிய கர்மக் கூட்டங்களான அறியாமை ज्ञानेन (ஞானேன) = ஆத்ம ஸ்வரூப விஷய பரிபூர்ண ஞானமெனும் பேரறிவால் नाशितम् (நாசிதம்) = அழிக்கப்பட்டதோ तेषाम् (தேஷாம்) = அப்படி அறியாமை நீங்கியவர்களுடைய तत्परं ज्ञानम् (தத்பரம் ஞானம்) — பரிபூர்ணமானதும் இயற்கையானது

மான அந்த அறிவு, आदित्यवत् (ஆதித்யவத்)=சூர்யனின் ஒளிபோல் प्रकाशयति (ப்ரகாசயதி) = எல்லாவற்றையும் ஒளியடையச் செய்கிறது. எவர்களுடைய அறியாமை நாசமடைந்ததோ அவர்களுடைய என்ற பன்மை ஜீவ னின் ஸ்வரூபம் பல என்பதைக் குறிக்கின்றது. அறியா மையினுல் பலவெனத்தோன்றுமேயாகிலும், உண்மை யில் ஒன்றுதானெனக் கூறுவது சரியல்ல. அறியாமை ஒழிந்தபின்னரும், பல என்ற பொருளில் சொல்லப்பட் டுள்ளதால் ஜீவன்கள் பலவென்றும், ஜீவேச்வர பேத முண்டு என்றும் ஏற்படுகிறது.]

तद्बुद्धयस्तदात्मानस्तन्निष्ठास्तत्परायणाः ।
गच्छन्त्यपुनरावृत्तिं ज्ञाननिर्धूत कल्मषाः ॥ १७

தத்புத்தயஸ்ததாத்மானஸ்தந்நிஷ்டாஸ்தத்பராயணு: l
கச்சந்த்யபுனராவ்ருத்திம் ஞானநிர்தூத கல்மஷா: ll 17

நிச்சயமான ப்ரஹ்ம ஞானத்தையும், ப்ரஹ்மத்தில் நிலைத்த மனதையும், ப்ரஹ்ம நிஷ்டையையும் உடை யோர்களாயும், ப்ரஹ்மத்தையே ஆச்ரயித்தவர்களாயும், ஞானத்தினுல் எல்லாப் பாவங்களையும் போக்கடித்துக் கொண்டவர்களாகவும் உள்ளவர்கள் திரும்ப ஸம்ஸாரம் எனும் கடலுக்கு வராத இடமான மோக்ஷத்தை (வீடு பேறு) அடைகின்றனர். (तद्बुद्धय: (தத்புத்தய:) தன் ஆத்மஸ்வரூபத்தைக் காண்பதில் நிச்சய அறிவுள்ளவர் கள் (ராமானுஜர்).

[तदात्मानः (ததாத்மான:)=(1) தானே ப்ரஹ்மமென்ற நிச்சயமுடையவர்கள் (ஸ்ரீ சங்கரர்), (2) ஆத்மஸ்வரூப தர்சனத்தில் மனதைச் செலுத்துகின்றவர்கள் (ஸ்ரீராமா னுஜர்) (3) தனக்குப் பரமாத்மாவே யஜமானன் என்று கருதுகிறவர்கள் (ஸ்ரீராகவேந்த்ரர்) तन्निष्ठा: (தன்னிஷ்டா:)= (1) ஆத்மஸ்வரூபத்தில் எப்போதும் அப்யாஸமுள்ளவர் (ஸ்ரீராமானுஜர்) (2) அசைவற்ற ப்ரஹ்மநிஷ்டையை

யுடையவர் (ஸ்ரீராகவேந்த்ரர்) तत्परायणाः (தத்பராயணா:)= தன் ஆத்ம ஸ்வரூபத்தையறிவதே உயர்ந்த ப்ரயோஜன மாக எண்ணியவர்கள் (ஸ்ரீராமானுஜர்).

ज्ञाननिर्धूतकल्मषाः (ஞானநிர்தூத கல்மஷா:) = பகவானின் கிருபையால் உண்டான ஞானத்தினல் எல்லா பாவங்களும் நீங்கியவர். (ஸ்ரீ சங்கரர்).

अपुनरावृत्तिम् (அபுனராவ்ருத்திம்) = மறு பிறப்பற்ற முக்தஸ்வரூபத்தை (ஸ்ரீ ராமானுஜர்)]

विद्याविनयसंपन्ने ब्राह्मणे गवि हस्तिनि ।
शुनि चैव श्वपाके च पण्डितास्समदर्शिनः ॥ १८

வித்யாவினயஸம்பன்னே ப்ராஹ்மணே கவி ஹஸ்தினி I
சுனி சைவ ச்வபாகே ச பண்டிதாஸ்ஸமதர்சின: II 18

கல்வியும் வணக்கமுமுடைய அந்தணனிடத்திலும், பசுவின்பாலும், யானையினிடத்தும், நாயினிடத்தும், நாயின் இறைச்சியை யுண்பவனிடத்திலும், ப்ரஹ்மத்தை ஒருங்கே ஒரே விதமாகப் பார்ப்பவர்கள் ஞானிகளென்று சொல்லப்படுகிருர்கள்.

['வினயம்' என்பதற்கு ஸ்ரீ சங்கரர் 'உபஸமம்' (அதாவது ஸமத்வத்துடன் கூட) என்று பொருள் கூறியுள்ளார். ஸ்ரீ ராமானுஜர் :- पण्डिताः (பண்டிதா:)=ப்ரக்ருதியினின்று விடுபட்ட ஆத்மஸ்வரூபத்தை அடைந்தவர்கள். समदर्शिनः (ஸமதர்சின:) = எல்லா ஜீவஸ்வரூபங்களும் ஞான உருவாக ஸமமென அறிகிறவர்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— समदर्शिनः (ஸமதர்சின :)=மேம்பட்ட, நடுநிலையுடைய, கீழ்ப்பட்ட பிராணிகளிடத்தில் எல்லாக் குணங்களும் பரிபூர்ணமடைந்த பரமாத்மா ஊடுருவி, ஸமமாக உள்ளார் என அறிகின்றவர்; அதாவது, உயர்ந்த பிராணியில் பரமாத்மா முழுதாகவும், கீழ்ப்பட்ட வஸ்துவில் குறைந்துமுள்ளதாக அறிவிலிகள் நினைப்பர்.

விவேகிகள் (அறிவு முற்றியவர்) எங்கும் பரமாத்மா ஸம மாகவே இருப்பதாகப் பார்க்கிறார்கள் என்று கருத்து.]

इहैव तैर्जितस्सर्गो येषां साम्ये स्थितं मनः ।
निर्दोषं हि समं ब्रह्म तस्माद्ब्रह्मणि ते स्थिताः ॥ १९

இஹைவ தைர்ஜிதஸ்ஸர்கோ யேஷாம் ஸாம்யே ஸ்திதம் மன: ।
நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம தஸ்மாத்ப்ரஹ்மணி தே ஸ்திதா: ॥ 19

எவர்களின் மனம் ப்ரஹ்மம் எல்லாவற்றிலும் ஸம மென்கிற விஷயத்தில் அசைவற்று விளங்குகிறதோ அவர்களால் இப்பூதவுடலுடனிருக்கையிலேயே பிறப்பு இறப்புகள் ஜயிக்கப்பட்டன. குற்றமற்ற ப்ரஹ்மம் எல்லா வற்றிலும் ஸமமானதல்லவா? எனவே அவர்கள் ப்ரஹ்மத்தினிடத்தேயுள்ளார்கள். (ப்ரஹ்மஸ்வரூபத்தை அடைகின்றனர்).

[ஸ்ரீதரர்:— நல்லொழுக்கமுடையோன், ஒழுக்கம் கெட்டவன், தகுதியுள்ளவன், தகுதியற்றவன் ஆகியோரிடம் ஒரே விதமாக இருக்கத்தகாது. தராதரமுள்ள ஞானமிருக்க வேண்டும். அப்படியின்றி இரு வகையினரையும் ஸமமாக எண்ணி நடப்பவனுக்கு இவ்வுலகிலும், மேலுலகிலும் நிந்தனையே உண்டாகுமென கௌதம மஹருஷி சொல்லியுள்ளார். அப்படியிருக்க எல்லாவற்றையும் எவ்வாறு ஸமமாகப் பார்க்கலாமெனில், ஆத்ம ஸ்வரூப ஞானம் எவனுக்கு ஏற்படவில்லையோ அவனுக்குத்தான் தராதரம் (பாகுபாடுள்ள) ஞானம் சொல்லப்பட்டதேயன்றி ஆத்மஸ்வரூபஞானமடைந்தவனுக்கு தாரதம்மிய (வேற்றுமை காணும்) ஞானம் சொல்லப்படவில்லை.

ஸ்ரீ ராமானுஜர்:— साम्ये (ஸாம்யே)=ப்ருக்ருதி விடுபட்ட ஆத்ம ஸ்வரூபமெல்லாம் ஸமமென்பதில் येषां मनः स्थितः (யேஷாம் மன: ஸ்தித:)=எவர்களின் மனம் அசை

வற்றுள்ளதோ, तैः = அவர்களால், इहैव (இஹைவ) = ஸாதனானுஷ்டான காலத்திலேயே, सर्गः जितः (ஸர்க: ஜித:) = பிறப்பும் இறப்பும் ஜயிக்கப்பட்டன. निर्दोषम् (நிர்தோஷம்) = ப்ருக்ருதியின் தொடர்புள்ள குறையில்லா ததும், समं हि (ஸமம்ஹி) = எல்லாவற்றிலும் ஞான உரு வாகவே இருப்பதும்தான் ஆத்ம வஸ்து அதுதான் ब्रह्म (ப்ரஹ்ம) = ப்ரஹ்மமெனச் சொல்லப்படுவது. ते (தே) = அந்த ப்ரக்ருதியிலிருந்து விடுபட்ட ஆத்மஸ்வரூபிகள் ब्रह्मणि स्थिताः (ப்ரஹ்மணி ஸ்திதா:) = ஞான (அறிவு) மய மான உருவோடு உள்ளார்கள்]

न प्रहृष्येत् प्रियं प्राप्य नोद्विजेत् प्राप्यचाप्रियम् ।
स्थिरबुद्धिरसंमूढो ब्रह्मवित् ब्रह्मणि स्थितः ॥ २०

ந ப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத்
ப்ராப்யசாப்ரியம் 1
ஸ்திரபுத்திரஸம்முடோ ப்ரஹ்மவித் ப்ரஹ்மணி ஸ்தித: 11 20

ப்ரஹ்மத்தினிடம் திடமான புத்தியையுடையவனும், முற்றிலும் மோஹமற்றவனாகவும், ப்ருஹ்ம நிஷ்டை யுடையவனாகவும் உள்ள ப்ரஹ்மஞானி, விரும்பியதை அடைவதால் இன்பத்தையோ, விரும்பாததை அடைவ தால் வருத்தத்தையோ அடைவதில்லை.

[ஸ்ரீ ராமானுஜர் முன் ச்லோகத்தில் போலவே இந்த ச்லோகத்திலும் மேலாக ப்ரஹ்ம பரமாகச் சொல்லப்பட் டவைகளை ஆத்மபரமாகப் பொருளுரைத்துள்ளதுதான் வேறுபாடு மற்று வேறுபாடில்லை.

குறிப்பு:— ப்ரஹ்மஞானமேற்பட்டவனுக்கு, விருப்பு வெறுப்பு எப்படியுண்டாகும்? அவனுக்கு விரும்பப் படுவதும் விரும்பப்படாததுமில்லையென்பது திண் ணம். ஆனல் ப்ராரப்தகர்மம் (முன் பிறவிகளின் தொடர்பினலுள்ள ஊழ்வினை) அவனை இப்பிறவி

யின் பூத உடல் உள்ளவரை விடாது. அதை அவன் அனுபவித்தே தீரவேண்டும். அப்படி அனுபவிக்கும் போது, அவ்வுடலுக்குண்டாகும் விருப்பம் வெறுப்பு இவைகளை அவன் அனுபவிப்பதில்லை, ஆனால் அவன் அனுபவிப்பதுபோல் பிறருக்குத் தோன்றும்.]

बाह्यस्पर्शेष्वसक्तात्मा विन्दत्यात्मनि यत्सुखम् ।
स ब्रह्मयोगयुक्तात्मा सुखमक्षयमश्नुते ॥ २१

பாஹ்யஸ்பர்சேஷ்வஸக்தாத்மா விந்தத்யாத்மனி யத்ஸுகம் I
ஸ ப்ரஹ்மயோகயுக்தாத்மா ஸுகமக்ஷயமச்நுதே II 21

உலகிலுள்ள விஷயங்களில் (இன்பத்தை கொடுக்கக் கூடியதாகத் தோன்றும் பொருள்களில்) ஆசையற்ற மனதையுடையவன் தனது அந்தக்கரணத்தில் (இருதயத்தில்) எந்த ஸுகமுண்டோ அதை அடைகிறான். ப்ரஹ்மத்தைத் தியானிப்பதில் மனதை ஈடுபடுத்தியவன் அழிவற்ற ஸுகத்தை அடைகிறான். உலக விஷயங்களில் ஆசையுள்ளவனுக்கு மனத்தில் எப்பொழுதும் கவலைகள் ஏற்படும். ஆசையற்ற மனதுடையவனுக்குக் கவலையேற்படுவதில்லை. அப்படி கவலையின்றியிருப்பதே ஸுகமல்லவா? ஆயினும் இந்த ஸுகம் நிரந்தரமானதல்ல. கவலையற்ற மனமும் இருதயமும் ப்ரஹ்மத் தியானத்தில் நின்றுவிட்டால் அழிவற்ற மோக்ஷ ஸுகம் கிடைக்கும்.

ஸ்ரீ ராமானுஜர் :— आत्मनि (ஆத்மனி) = ஆத்மஸ்வரூபத்தில், यत्सुखं (யத்ஸுகம்) என்பதற்குப் பதிலாக यस्सुखं (யஸ்ஸுகம்) என்று பாடம் — यः (ய:) = எவன், सुखं (ஸுகம்) = ஸுகத்தை, विन्दति (விந்ததி) = அடைகிறானோ सः (ஸ:) = அவன், என்று அன்வயம்.]

ये हि संस्पर्शजा भोगा दुःखयोनय एव ते ।
आद्यन्तवन्तः कौन्तेय न तेषु रमते बुधः ॥ २२

யே ஹி ஸம்ஸ்பர்சஜா போகா து:கயோனய ஏவ தே ।
ஆத்யந்தவந்த: கௌந்தேய ந தேஷு ரமதே புத: ॥ 22

ஓ குந்தியின் மகனே! விஷயங்களினுல் (இன்பம் தருவதாகத் தோன்றுபவைகளினுல்) உண்டாகும் ஸுகங்கள் (இன்பங்கள்) துயரத்திற்குக் காரணமானவைகளே. ஏனெனில் அவை உண்டாவதும் அழிவதுமாகவுள்ளன. (நிலையற்றவை). அத்தகைய விஷய ஸுகங்களில் அறிவாளி (விவேகி) ஸந்தோஷமடைகிறதில்லை.

[संस्पर्शजा: (ஸம்ஸ்பர்சஜா:) = விஷயங்களுக்கும் புலன்களுக்குமேற்படும் தொடர்பினுலுண்டான - ஸ்ரீராமானுஜர்].

शक्नोतीहैव यस्सोढुं प्राक्शरीरविमोक्षणात् ।
कामक्रोधोद्भवं वेगं स युक्तस्ससुखी नरः ॥ २३

சக்னோதீஹைவ யஸ்ஸோடும் ப்ராக்சரீரவிமோக்ஷணாத் ।
காமக்ரோதோத்பவம வேகம் ஸ யுக்தஸ்ஸஸுகீ நர: ॥ 23

ஆசை, கோபம் ஆகியவற்ருலுண்டான மனத் துடிப்பை உடனுக்குடன் (ஸஹித்து, அப்படியே) பூத உடல் உள்ள வரையில் ஸஹித்துக்கொள்வதற்கு எவனொருவன் ஆற்றலை உடையவனே அவனே மனச்சாந்தியுடைய யோகி. அவனே ஸுகத்தையுடையவன்.

[ஸ்ரீதரர் :— "மரணமடைந்தபின் பெண்டிர் சவ உடலைக் கட்டித் தழுவிக்கொள்வதினுலோ, மகன் பூதவுடலை எரிப்பதாலோ, எப்படி அவ்வுடலுக்கு மனோவிகாரம் ஏற்படுவதில்லையோ, அதேபோல் உயிருடன் கூடிய உடலுடனிருக்கையிலே தன் உடலினுல் உண்டாகும் இன்ப துன்பங்களில் வேற்றுமையற்ற மனதுடையவனுக இருக்கவேண்டுமென்பது கருத்து". இதற்கு ஞான வாஸிஷ்டத்திலிருந்து ஒரு ச்லோகத்தை உதாரணமாகக் கொடுக்கிருர் :—

"प्राणे गते यथा देहः सुखदुःखे न विन्दति ।
तथा चेत् प्राणयुक्तोपि स कैवल्याश्रयो भवेत् ॥"

ஸ்ரீ சங்கரர்:— कामम् (காமம்)=ஆசை (தனக்கு எது இன்பமெனத் தோன்றுகிறதோ அத்தகையவற்றை பார்ப்பது, கேட்பது, உணர்வது, போன்றவைகளாலுண்டான விருப்பம்), क्रोधम् (க்ரோதம்)=கோபம், (தனக்கு எது துயறத்தையுண்டாக்குகிறதோ அத்தகையவற்றை பார்ப்பது, கேட்பது நினைப்பது, ஆகியவற்ருலுண்டாகும் வெறுப்பு). वेगं (வேகம்)=மனத்துடிப்பு (இது காமத்தினுலுண்டானது, கோபத்தினுலுண்டானதென இருவகைப்படும் — காமத்தினுலுண்டாவது— மயிர்க்கூச்செறிதல், கண்கள், முகம் இவைகளில் மலர்ச்சி ஏற்படுதல், புன்சிரிப்பு முதலியவற்ருல் மனத்தில் ஏற்படும் பரபரப்பு. க்ரோதத்தாலுண்டாவது— உடலில் படபடப்பு, வேர்வை, உதட்டைக்கடித்தல், கண்கள் சிவப்பது, வாய் குளறல் முதலியவற்ருல் ஏற்படும் மனப்பரபரப்பு) सोढुम् (ஸோடும்)=இப்படி காமக்ரோதங்களால் ஏற்படும் மனத்துடிப்பை அது உண்டானவுடன், அதற்குள்ளாகாது விவேகத்தினுல் (அறிவாற்றலால்) அடக்குவது.

ஸ்ரீமத்வர் & ஸ்ரீராகவேந்த்ரர்:— விலங்குகள், பரவைகள் முதலிய உடல்களை அடைந்தால் ஆசை கோபம் ஆகியவற்றை அடக்குவது முடியாத கார்யம். ஆகையால் மானிட உடலையடைந்துள்ளபோதே காமக்ரோதங்களை அடக்கவேண்டும்].

योऽन्तःसुखोऽन्तरारामस्तथान्तर्ज्योतिरेव यः ।
सयोगी ब्रह्मनिर्वाणं ब्रह्मभूतोऽधिगच्छति ॥ २४

யோந்தஸ்ஸுகோஅந்தராராமஸ்ததாந்தர்ஜ்யோதிரேவ ய: ।
ஸ யோகீ ப்ரஹ்மநிர்வாணம் ப்ரஹ்மபூதோதிகச்சதி ॥ 24

தன் ஆன்மாவிடத்திலேயே ஸுகத்தையும், இன்ப விளையாட்டையும், அப்படியே ப்ரகாசத்தையும், எவன் அடைகிருனே அவன் யோகி. அந்த யோகி ப்ரஹ்மத்தின் உருவுடையவனுகி ப்ரஹ்மத்தில் லயமடைகிருன் (கலந்து விடுகிருன்).

[अन्तरारामः (அந்தராராம:) = (1) தன் விளையாடல் ஆன்மாவிடத்திலேயேயன்றி வெளிப்பொருள்களிலுண்டாவதில்லை (ஸ்ரீதரர்) (2) பரமாத்ம தர்சனம், பரமாத்மாவைத்தொடல், அங்கேயே உரையாடல் முதலியவைகளால் ஏற்படும் ஸுகத்தையுடையவன் (ஸ்ரீ மத்வர்) (3) பகவானின் தர்சனத்தினுலுண்டான ஸுகத்தையுடையவன் (ஸ்ரீ ராகவேந்த்ரர்)

अन्तर्ज्योतिरेव (அந்தர்ஜ்யோதிரேவ) = தனக்குள்ளே ப்ரகாசிக்கும் பகவானுகிற ஜோதியையுடையவன்; ब्रह्मभूतः (ப்ரஹ்மபூத:) = ப்ரஹ்மத்தினிடம் நிஷ்டையுடையவனுக) — ஸ்ரீ ராகவேந்த்ரர்; ब्रह्मनिर्वाणम् (ப்ரஹ்மநிர்வாணம்) = தன் ஆத்மானுபவ ஸுகத்தை— ஸ்ரீராமானுஜர்.]

लभन्ते ब्रह्मनिर्वाणमृषयः क्षीणकल्मषाः ।
छिन्नद्वैधा यतात्मानस्सर्वभूतहिते रताः ॥ २५

லபந்தே ப்ரஹ்மநிர்வாணம்ருஷய: க்ஷீணகல்மஷா: 1
சின்னத்வைதா யதாத்மானஸ்ஸர்வபூதஹிதே ரதா: 11 25

பாவங்களையும், ஸந்தேஹத்தையும், அறியாமையையும், போக்கடித்தும், புலன்கள், மனம், ஆகியவற்றை தன் வசமாக்கிக் கொண்டும், எல்லாப் பிராணிகளுக்கும் நன்மையையே நினைத்துக்கொண்டுமிருக்கிற முனிவர்கள் (ஞானிகள்) ப்ரஹ்மத்தை அடைகின்றனர் (ஜீவன்முக்தர்களாகின்றனர்).

[छिन्नद्वैधाः (சின்னத்வைதா:) = (1) சீதோஷ்ணம், ஸுகம் துக்கம் முதலிய த்வந்த்வங்கள் (இரட்டைகள்) அற்றவர் (ஸ்ரீ ராமானுஜர்), (2) ஸம்சயம் (ஐயம்), விபரீத ஞானமற்றவர்களாகவும், பரந்த மனப்பான்மையுள்ளவர்களாகவும் இருப்பவர் (ஸ்ரீ மத்வர்), (3) மனஸ்வாதீனமுடையவர்கள் (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

ऋषयः (ருஷய:) = ஆத்மதர்சனமுள்ளவர் (ஸ்ரீராமானுஜர்)

ब्रह्मनिर्वाणम् (ப்ரஹ்ம நிர்வாணம்) = (1) தன் ஆத்மானுபவ இன்பத்தை (ஸ்ரீ ராமானுஜர்), (2) ப்ரஹ்மத்தினல் கொடுக்கப்பட்ட இன்பத்தை (ஸ்ரீமத்வர்), (3) ப்ராக்ருத சரீரமில்லாத ப்ரஹ்மத்தை—ஸ்ரீ ராகவேந்த்ரர்]

कामक्रोधवियुक्तानां यतीनां यतचेतसाम् ।
अभितो ब्रह्मनिर्वाणं वर्तते विदितात्मनाम् ॥ २६

காமக்ரோதவியுக்தாநாம் யதீநாம் யதசேதஸாம் I
அபிதோ ப்ரஹ்மநிர்வாணம் வர்ததே விதிதாத்மநாம் II 26

ஆசை, கோபம் இவைகளிலிருந்து விடுபட்டும், மனத்தையடக்கியும், ஆத்ம தத்வத்தையறிந்தும் எல்லாக் கர்மங்களும் விட்டுப்போயுமுள்ள யதிகளுக்கு (ப்ருஹ்ம நிஷ்டர்களான துறவிகளுக்கு) ப்ரஹ்மானந்தம் எங்கும் இருக்கிறது.

[ஸ்ரீ ராமானுஜர் :— विदितात्मनां (விதிதாத்மநாம்) என்பதற்கு பதிலாக विजितात्मनाम् (விஜிதாத்மநாம்) எனப்பாடம் —பொருள் :— மனதை வென்றவர்கள்.

यतीनां (யதீநாம்) = முயற்சி செய்பவர்களுக்கு (ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ ராகவேந்த்ரர்)

अभितः (அபிதः) = (1) கைக்குள்ளேயே (ஸ்ரீ சங்கரர்), (2) எவ்விடத்திலும் (மத்வர்), (3) எக்காலத்திலும், எவ்விடத்திலும் (ஸ்ரீ ராகவேந்திரர்), சீக்ரமாய், ஸமீபத்தில், அந்த க்ஷணத்திலேயே (ஆசிரியர்)]

स्पर्शान्कृत्वा बहिर्बाह्यांश्चक्षुश्चैवान्तरे भ्रुवोः ।
प्राणापानौ समौ कृत्वा नासाभ्यन्तरचारिणौ ॥ २७

ஸ்பர்சான்க்ருத்வா பஹிர்பாஹ்யாம்ஸ்சக்ஷுஸ்சைவாந்தரே
ப்ருவோ: I
ப்ராணபானௌ ஸமௌ க்ருத்வா நாஸாப்யந்தரசாரிணௌ II

यतेन्द्रियमनोबुद्धिर्मुनिर्मोक्षपरायणः ।
विगतेच्छाभयक्रोधो यः सदा मुक्त एव सः ॥ २८

யதேந்த்ரியமனோபுத்திர்முனிர்மோக்ஷபராயண: I
விகதேச்சாபயக்ரோதோ ய: ஸதா முக்த ஏவ ஸ: II 28

உடலிற்கு வெளியிலுள்ள சப்தம் முதலிய விஷயங்களை உடலிற்குள் சேராது வெளியே தள்ளியும், கண்களைப் புருவங்களின் இடையே வைத்தும், ப்ராண அபான வாயுக்களை மூக்கினுள் ஸமமாக உலாவும்படி (கும்பகம்) செய்தும் புலன்கள், மனம், புத்தி, ஆகியவற்றையடக்கியும், ஆசை, பயம், கோபம் ஆகியவற்றை விட்டும், மோக்ஷத்தையே எதிர்பார்த்தவனாக, மௌனத்தோடு (பேசாமை) கூடியுள்ள யோகி எவனோ, அவன் எப்போதும் முக்தனே (எல்லாத் துயரங்களிலிருந்தும் விடுபட்டவனே.)

[27-வது ச்லோகத்தில்— भ्रुवोः अन्तर एव (ப்ருவோ: அந்தரஏவ) என்ற பதங்களுக்கு மூக்கின் நுனி என்று பொருள் கூறலாம். மூக்கின் நுனி என்பது இரு கண்களின் புருவங்களுக்கு இடையே சிறுத்துள்ள பகுதியென்றும், அல்லது அப்பகுதியை அடியாக வைத்துக் கொண்டால், மேல் உதட்டிற்கு மேலாக இரு த்வாரங்களையுடைய அகண்ட பகுதியை நுனி என்றும் கொள்ளலாம். ஆனால் இந்த ச்லோகத்தில், புருவத்தின் மத்தியில் எனச் சொல்லப்பட்டிருப்பதாலும், ஸ்ரீ ராமானுஜர் 'नासिकाग्रे' (நாஸிகாக்ரே) என அப்பதங்களுக்கு உரை எழுதியுள்ளதாலும், மூக்கின் நுனி என்பது புருவங்களுக்கிடையேயுள்ள பகுதிதான் எனப்பொருள்படுகிறது. (அத். 6,-ச்லோ. 13, அத். 8-ச்லோ. 10 பார்க்க). 28-வது ச்லோகம்—ஸ்ரீ ராமானுஜர்:— यतेन्द्रियमनोबुद्धिः (யதேந்த்ரிய மனோபுத்தி:)=ஆத்ம தர்சனத்தின் பொருட்டு, புலன், மனம், புத்தி ஆகியவற்றையடக்கி, मुनिः यः

(முனி:ய:)=ஆத்ம தர்சனத்திலேயே இருப்பவன், सदा (ஸதா)=ஸாதனுனுஷ்டான ஸமயத்திலும்,

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— मुक्त एव (முக்த ஏவ) = முக்தன் போன்றவனே, முக்தனுக்கு ஸமமானவன்.

குறிப்பு:— ஸ்ரீதரரின் விரிவுரைப்படி விவரமான பொருள் தரப்படுகிறது:— "வெளியிலுள்ள விஷயங்களை வெளியே தள்ளி," என்ருல், புலன்களுக்குப் புலப் படும் சப்தம் (கேட்பது) ஸ்பர்சம் (உணர்வது) ரூபம் (உருவம் பார்க்கப்படுவது) ரஸம் (உருசிக்கப்படுவது), கந்தம் (நுகரப்படுவது), ஆகியவற்றையுடைய பொருள்கள் விஷயங்களெனப்படும். இந்த விஷயங் களைப் புலன்கள் எடுத்துக்கொண்டு போய் மனதிடம் சேர்க்கின்றன. மனம் அவ்விஷயங்களை புத்தியிடம் சேர்க்கிறது. புத்தி அவ்விஷயங்களை ஆத்மாவிடம் சேர்க்கிறது. அந்த விஷயங்களை எடுத்துக்கொண் டால் அவைகளாலுண்டாகும் ஸுக துக்கங்களை ஆத்மா அடைகிருன். அப்படி விஷயங்களை கிரஹிக் கிறவரை நிஷ்டையெனும் ப்ரஹ்மத்யானத்திற்கு ஆத்மா தகுதியற்றவன். எனவே உடலுக்கு வெளியே யுள்ள விஷயங்களைத் தன்னிடம் வந்துசேர இடம் கொடாது வெளியே தள்ள வேண்டுமெனச் சொல் லப்பட்டது. தன் அருகே வந்துவிட்ட விஷயங்களை அனுபவிக்காமல் தள்ளிவிட ஞானி தகுந்தவன். யோகாப்யாஸம் செய்பவன் தகுதியற்றவனுனதால் அவனுக்கு வழி இங்கு வகுக்கப்பட்டுள்ளது. அவ் வழி, விஷயங்களைத் தன்னிடம் கொண்டுவந்து சேர்க்கும் புலன்கள், மனம், புத்தி ஆயினவற்றை முறையே அடக்குதலேயாம். பழக்கத்தால் முதலில் புலன்களையும், பின்னர் மனத்தையும், அதன் பின்னர் புத்தியையும் கிரமமாக அடக்கவேண்டும். இவையடங்கிடின் இன்ப, துன்பங்கள் ஆத்மாவிற்கு ஏற்படக் காரணமில்லை. புலன்களுள் முக்கியமான கண், வாய், மூக்கு இவற்றையடக்கும் முறையும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. கண்களை மூடினுல்

தூக்கம் வரும், திறந்திருந்தால் விஷயங்களைப் பார்க்கும். எனவே கண்களைப் பாதி திறந்துவைத்துப் பார்வையைப் புருவங்களின் மையத்தில் நிறுத்தி வைக்கவேண்டும். ப்ராணன், அபானன் முதலிய காற்றுக்கள் மூக்கின் மூலம் விஷயங்களைக் கிரஹிக்கின்றன. அவைகளை வெளியிலும், உள்ளேயும் அதிகமாக உலாவவிடாமல் (ஏனெனில் வாயுக்களை முழுதும் அடக்கிவிட்டால் உயிர் போய்விடும். முழுதும் வெளியே விட்டால் வாஸனை முதலிய விஷயங்களை மனதிற்குக் கொண்டுவந்து சேர்த்துவிடும்) மூக்கினுள் நிலவும்படி செய்யவேண்டும் மௌனம் என்பது மோனநிலை. வாக்கு, நாக்கு (பேச்சு, உருசி) இவைகளால் விஷயங்களில் ஏற்படும் ப்ரவ்ருத்தியை (ஊடுருவலை) தடுக்குமாகையினுல் மௌனம் எனும் வாயைக் கட்டுப்படுத்தல் சொல்லப்பட்டுள்ளது.]

भोक्तारं यज्ञतपसां सर्वलोकमहेश्वरम् ।
सुहृदं सर्वभूतानां ज्ञात्वा मां शान्तिमृच्छति ॥ २९

போக்தாரம் யக்ஞதபஸாம் ஸர்வலோகமஹேச்வரம் ।
ஸுஹ்ருதம் ஸர்வபூதானும் ஞாத்வா மாம் சாந்திம்ருச்சதி ॥

யக்ஞம் (வேள்வி), தவம், ஆகியவற்றின் பயன்களை அனுபவிக்கிறவனுகவும் அல்லது பயன்களைக் கொடுத்துக் காப்பாற்றுபவனுகவும், எல்லா உலகங்களுக்கும் ஈசனுகவும் (யஜமானன் அல்லது பிரபு) எல்லாப் பிராணிகளுக்கும் உதவி செய்பவனுகவுமுள்ள என்னை எவன் அறிந்து கொள்கிருனே, அவன் மோக்ஷத்தை (வீடுபேற்றை) அடைகிருன்.

[भोक्तारम् (போக்தாரம்) என்ற சொல்லிற்கு, ஸ்ரீ சங்கரர் 'கர்த்தாவாகவும் (செயலாளியாகவும்) தேவதாரூபியாகவும் (தேவதையின் உருவாகவும்) இருந்து உண்ணும்' என்று பொருள் கூறியுள்ளார்.

ஸ்ரீ ராமானுஜர்:— நான் எல்லா உலகிற்கும் ஈச னென்றும், எல்லாப் பிராணிகளுக்கும் நண்பனென்றும், அறிந்து கருமயோகம் செய்வதிலேயே ஸுகத்தை அடைகிருன்.

குறிப்பு:— வேள்வி தவமிவைகளின் பயனைத் தான் அனுபவிப்பதாகப் பகவான் சொல்வதின் கருத்தை ஸ்ரீ மத்வாசார்யார் சொல்லியுள்ள கருத்தையொட்டி விவரிக்கலாம். எல்லாப் பிராணிகளுக்குமீசனுன பரமாத்மா, அவரது மேற்பார்வைக்குட்பட்ட ஜீவர்கள் செய்யும் வேள்வி, தவம் ஆகியவற்றின் முழுப்பயன் களில் அந்தந்த ஜீவ இயற்கையின்படி, அவரவர் தகுதிக்கேற்ப, ஓரளவு கொடுத்து, மீதத்தை ஈச்வரனே அனுபவிக்கிருர். உதாரணமாக ஒரு நாட்டு சேனைத் தலைவன் தன் அரசன் ஆணைப்படி பிறநாடு ஒன்றின் மீது போர் தொடுத்து, ஜயமடைந்தபின், போரில் ஜெயிக்கப்பட்ட பல பொருள்களை தன்னுட்டு மன்ன னிடம் கொண்டு சேர்ப்பிக்கும்போது, அவ்வரசன், வெற்றியுடன் திரும்பிய சேனைத்தலைவன் முதலியோ ருக்கு, அவர்கள் கொண்டுவந்த பொருள்களில் சில வற்றை அவரவர் தகுதியை யொட்டி அவர்களுக்குக் கொடுப்பதுபோல் ஜீவனுக்குச் சிறிது பயனைக் கொடுக்கிருன் என்பது கருத்து.]

கர்மஸன்யாஸயோகமெனும் ஐந்தாவது அத்யாயம் முற்றிற்று.

ஆருவது அத்யாயம்

ஆத்மஸம்யமயோகம்

(த்யானயோகம்)

श्री भगवानुवाच

अनाश्रितः कर्मफलं कार्यं कर्म करोति यः ।
स सन्यासी च योगी च न निरग्निर्नचाक्रियः ॥ १

அனுச்ரித: கர்மஃபலம் கார்யம் கர்ம கரோதி ய: 1
ஸ ஸன்யாஸீ ச யோகீ ச ந நிரக்னிர்நசாக்ரிய: 1 1

கர்மத்தின் பயனில் ஆசை வைக்காதவனுய்ச் செய்ய வேண்டிய (நித்ய நைமித்திக) கர்மங்களை எவன் செய்கிருனே, அவனே ஸன்யாஸி (உண்மைத் துறவி), அவனே யோகி. அக்னியை விட்டவன் (புனிதமான தீயில் செய்ய வேண்டிய ஹோமம் முதலியவற்றை விட்டவன்) ஸன் யாஸியாகமாட்டான். யாதொரு கர்மத்தையும் செய்யாம லிருப்பவன் யோகியாகமாட்டான். (அல்லது அக்னி, கர்மம் இவைகளை விட்டவன் ஸன்யாஸியுமல்ல, யோகியு மல்ல).

[ஸ்ரீ சங்கரர் :— அக்னியுபாஸனையையும், கர்மங்களை யும் விட்டு, உலகில் புகழுடன் விளங்கும் ஸன்யாஸாச்ரமி களை குறை கூறும்பொருட்டு இது சொல்லப்பட்டதல்ல. பயனில் ஆசையை விட்டுக் கர்மங்களைச் செய்வது, ஈச்வரார்ப்பணமாகச் செய்யும் கர்மயோகியுங்கூட ஸன்யாஸியாகின்ருன் என்ற கருத்து சொல்லப்பட் டுள்ளது.

குறிப்பு :— ஞானமடைவதற்கு முன் அக்னிஹோத்ரம், வைச்வதேவம் முதலிய கர்மாக்களைக் கைவிடக் கூடாது.

"अग्निर्देवो द्विजातीनां मुनीनां हृदि दैवतम् ।
प्रतिमास्वप्रबुद्धानां सर्वत्रसमदर्शिनाम् ॥"

அதாவது மூன்று வர்ணாச்ரம ஜாதிகளுக்கு அக்னியில் தெய்வம், முனிவர்களுக்கு இருதயத்தில் தெய்வம், அறிவில்லாதவர்களுக்கு (அஞ்ஞானிகளுக்கு) பிரதிமைகளில் (விக்ரஹங்களில்) தெய்வம், ஸமநோக்குடையோருக்கு எங்கும் தெய்வம். (உத்தரகீதையைப் பார்க்கவும்) இந்த வாக்கியத்தின்படி பிராம்மணர்கள் ஞானமடையுமுன், அக்னியின்மூலம் செய்யவேண்டிய கர்மங்களை விட்டுவிட்டால், கேடு அடைவார்களேயன்றி ஸன்யாஸியாகமாட்டார்கள் என்பது கருத்து.]

यं सन्यासमिति प्राहुर्योगं तं विद्धि पाण्डव ।
न ह्यसन्यस्तसंकल्पो योगी भवति कश्चन ॥ २

யம் ஸன்யாஸமிதி ப்ராஹுர்யோகம் தம் வித்தி பாண்டவ ।
ந ஹ்யஸன்யஸ்தஸங்கல்போ யோகீ பவதி கஸ்சன ॥ 2

ஹே பாண்டவ! (ஓ அர்ஜுன), எதை ஸன்யாஸமென்று சொல்லுகின்றனரோ அதைக் கர்மயோகமென்றறி. ஏனெனில், எல்லா விருப்பங்களையும் விடாத ஒருவனும் கர்மயோகியாவதில்லை.

[ஸ்ரீ சங்கரர்:— பரமார்த்த ஸன்யாஸியையும், பயனில் ஆசையற்ற கர்மயோகியையும் எப்படி ஸமமாகச் சொல்லலாமெனில், கர்ம பலனில் ஆசையை விட்ட முறையில் இருவரும் ஸமமாகையால் அப்படிச் சொல்லப் பட்டது. सन्यासमिति (ஸன்யாஸமிதி) = (1) 'ஸன்யாஸ' என்று பாடம். ஞானயோகமெனப்பொருள் (ஸ்ரீராமானுஜர்), (2) ஆசை வெகுளி இவைகளை விடுதல் (ஸ்ரீ ராகவேந்த்ரர்) योगम् (யோகம்)—தியான யோகத்திற்கு காரணமாகவும், காமம் க்ரோதம் இவைகளை விட்டுச் செய்யப் படும் கர்மயோகத்திலடங்கியிருக்கிறதாக. (ஸ்ரீ ராகவேந்த்ரர்)]

आरुरुक्षोर्मुनेर्योगं कर्मकारणमुच्यते ।
योगारूढस्य तस्यैव शमःकारणमुच्यते ॥ ३

ஆருருக்ஷோர்முனேர்யோகம் கர்மகாரணமுச்யதே ।
யோகாரூடஸ்ய தஸ்யைவ சம: காரணமுச்யதே ॥ 3

ஞானயோகமடைய விரும்பும் யோகிக்குக் கர்ம யோகம் காரணமாகவும், ஞானயோகமடைந்துள்ளவனுக்கு மனதை அடக்குதலே அகண்ட தியானத்திற்குக் காரணமாகவுமுள்ளது.

[ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர் :— பயன் கருதாக் கருமம் ஞானத்திற்குக் காரணமாகவும், ஞானமடைந்தவனுக்கு மனதை நிறுத்தல் நிலேத்தத் தியானத்திற்குக் காரணமாகவுமிருக்கிறது.

ஸ்ரீ ராமானுஜர் :— शमः (சம:) = கருமத்தை விடுதல், कारणमुच्यते (காரணமுச்யதே) = காரணமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆத்மஸ்வரூப தர்சனம் வரையில்தான் கருமம் செய்யவேண்டும். ஆத்ம ஸ்வரூப தர்சனமாகிய மோக்ஷத்தையடைகிறவன், பிறகு கருமத்தை விட்டு விடலாமெனக் கருத்து. योगम् (யோகம்) = தன் ஆத்ம ஸ்வரூப தர்சனம்.

ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— शमः = பகவத் ஞானத்தில் எப்பவும் தியானம், ஸ்தோத்ரம், கீர்த்தனம், நமஸ்காரம், அர்ச்சனை முதலியனவும் कारणम् = முக்திக்கு உபாயமாக उच्यते சொல்லப்படுகின்றன.]

यदा हि नेन्द्रियार्थेषु न कर्मस्वनुषज्जते ।
सर्वसंकल्पसन्यासी योगारूढस्तदोच्यते ॥ ४

யதா ஹி நேந்த்ரியார்தேஷு ந கர்மஸ்வனுஷஜ்ஜதே ।
ஸர்வஸங்கல்பஸன்யாஸீ யோகாரூடஸ்ததோச்யதே ॥ 4

எப்போது விஷயங்களில் ஆசை வைக்கிறதில்லையோ, கருமங்களைச் செய்கிறதில்லையோ, அப்போது எல்லா இச்சைகளையும் (விருப்பங்களையும்) விட்ட அவன் யோகாருடனெனச் (யோகத்தில் லயித்தவன்) சொல்லப் படுகிறான்.

[ஸ்ரீ சங்கரர் :— यदा हि चेन्द्रियार्थेषु (என்று பாடம்) यदाहि (யதாஹி) = எப்போது, इन्द्रियार्थेषु (இந்த்ரியார்த் தேஷு) = புலன்களை இழுக்கும் விஷயங்களிலும், कर्मसु च (கர்மஸுச) = கருமங்களிலும். नानुषज्जते (நானு ஷஜ்ஜதே) = ஆசை வைக்கிறதில்லையோ, तदा (ததா) = அப்போது. (மற்ற பதங்களின் பொருளில் வேற்றுமை யில்லை).]

उद्धरेदात्मनात्मानं नात्मानमवसादयेत् ।
आत्मैव ह्यात्मनो बन्धुरात्मैव रिपुरात्मनः ॥ ५

உத்தரேதாத்மனாத்மானம் நாத்மானமவஸாதயேத் ।
ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்துராத்மைவ ரிபுராத்மன: ॥ 5

தன்னால் அல்லது விவேகமுள்ள மனதால் தன்னை (பிறவிக் கடலிலிருந்து) கரையேற்றிக்கொள்ளவேண்டும். தன்னை (ஸம்ஸாரமெனும் துயரத்தில், அல்லது நரகத்தில் விழும்படி) கெடுத்துக்கொள்ளலாகாது. ஏனெனில் தனக்குத்தானே (தன் மனமே) உறவினன், தனக்குத்தானே (மனமே) எதிரி.

[ஒவ்வொருவனும் மோக்ஷம் அல்லது நரகம், ஸுகம் அல்லது துக்கம் அடைய அவனுடைய முயற்சியே காரணம், எனக் கருத்து. आत्मना (ஆத்மனா) = மனதினால் அல்லது பரமாத்மாவினால் (ஸ்ரீ ராகவேந்த்ரர்) आत्मैव (ஆத்மைவ) = (1) உலக வழக்கிலுள்ள உறவினர் அன்புப் பிணிப்புக்குரியவர்களேயன்றி மோக்ஷத்திற்கு விரோதிகள், உறவினராகார். தானே தனக்கு உறவினனாகவும், நண்பனாகவும் ஆகவேண்டும் (ஸ்ரீ சங்கரர்),

(2) தன் மனதே தனக்கு உறவினன், எப்படியான மன மெனில் விஷயத்தில் பற்றற்ற மனம் (ஸ்ரீ ராமானுஜர்). (3) மனமே உறவினன், அல்லது பரமாத்மாவே உறவினன், எப்படியெனில் பரமாத்மாவிடம் பக்தியுடன் இருந்தால் அவர் உறவினன் போல ஆவார் என்ற கருத்து (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

आत्मैवरिपुः (ஆத்மைவரிபு:) = (1) தன் ஆன்மாவே பிறனை எதிரியாகக் கருதக் காரணமாவதால் தனக்குத் தன் ஆன்மாவே சத்ருவாகிறது (ஸ்ரீ சங்கரர்), (2) விஷயத்தில் (புலன்களை இழுக்கும் பொருள்) பற்றுள்ள தன் மனமே தனக்குச் சத்ரு (ஸ்ரீ ராமானுஜர்), (3) மனதே அல்லது பரமாத்மாவிடம் பக்தியில்லாவிடில் பரமாத்மா அத்தகைய மனதுடையவனை சத்ருவாக மதிக்கிறார் (ஸ்ரீ ராகவேந்த்ரர்).]

बन्धुरात्मात्मनस्तस्य येनात्मैवात्मना जितः ।
अनात्मनस्तु शत्रुत्वे वर्तेतात्मैव शत्रुवत् ॥ ६

பந்துராத்மாத்மனஸ்தஸ்ய யேனுத்மைவாத்மனு ஜித: 1
அனுத்மனஸ்து சத்ருத்வே வர்தேதாத்மைவ சத்ருவத் 11 6

எவனுல் மனம் ஜயிக்கப்பட்டிருக்கிறதோ (வசப்படுத்தப்பட்டிருக்கிறதோ) அவனுக்கு மனம் உதவி செய்யும். மனதை வசப்படுத்தாதவனுக்கு மனம் எதிரி போன்று கெடுதி செய்கிறது.

[யாதொரு ஜீவனுல் பரமாத்மா பக்தியினுல் வசப்படுத்தப்பட்டாரோ, அந்த ஜீவனுக்கு அப்பரமாத்மா உறவினன். பரமாத்மாவிடம் பக்தி இல்லாத ஜீவனுக்கு அப்பரமாத்மா எதிரி போன்று கெடுதி விளைவிப்பான்—ஸ்ரீ ராகவேந்த்ரர்].

जितात्मनः प्रशान्तस्य परमात्मा समाहितः ।
शीतोष्णसुखदुःखेषु तथा मानावमानयोः ॥ ७

ஜிதாத்மன: ப்ரசாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித: I
சீதோஷ்ணஸுகது:கேஷு ததா மாநாவமானயோ: II 7

மனதை ஜயித்தும், ஆசை வெகுளி முதலியவைகளை அடக்கியுள்ளவனின் மனம், சீதம், உஷ்ணம், இன்பம், துயரம், மானம், அவமானம் ஆகியவற்றையடையினும், மிகுதியாகத் தன் ஆன்மாவில் நிஷ்டையை (அசைவற்ற ஈடுபாட்டை) உடையதாகவே இருக்கும்.

[ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர் :— சீதோஷ்ணம், இன்பதுன்பம், மானம், அவமானம் ஆகியவற்றில் ஒரே நிலையிலிருந்தும், ஆசை, கோபமிவற்றையடக்கியும், மனம், புலன்களி வற்றை ஜயித்துமுள்ளவனின் ஹ்ருதயத்தில் பரமாத்மா ஒளிவீசிக்கொண்டிருக்கிறார்.

ஸ்ரீ ராமானுஜர் :— परमात्मा समाहितः (பரமாத்மா ஸமாஹித:) = தன் ஸ்வரூபம் ப்ரகாசிக்கின்றது. இப்படிப்பட்ட ஆத்மஸ்வரூபம், ப்ரக்ருதியின் கட்டைப் போக்கடித்துக் கொண்டு, சுத்தமாகயிருப்பதால், பரமாத்மாவெனச் சொல்லப்பட்டது. அல்லது आत्मा (ஆத்மா) = ஆன்மா परं (பரம்) = மிகுதியாக, समाहितः = (ஸமாஹித:) = ஒளி வீசுகின்றது]

ज्ञानविज्ञानतृप्तात्मा कूटस्थो विजितेन्द्रियः ।
युक्त इत्युच्यते योगी समलोष्टाश्मकाञ्चनः ॥ ८

ஞானவிஞ்ஞானத்ருப்தாத்மா கூடஸ்தோ விஜிதேந்த்ரிய: I
யுக்த இத்யுச்யதே யோகீ ஸமலோஷ்டாச்ம காஞ்சன: II 8

அறிவு, அறிந்தபடி அனுபவம் இவற்றால் நிறைவடைந்த மனமுடைய, மனோவிகாரமற்ற, புலன்களைச் செவ்வனே வென்ற, மண்கட்டி, கல், தங்கம் ஆகியவற்றை ஸமமாகக் கருதும், ஞானயோகி யோகத்துடன் கூடியவன் (யோகாரூடன்) எனச் சொல்லப்படுகிறான்.

[ज्ञानविज्ञानतृप्तात्मा (ஞானவிஞானத்ருப்தாத்மா) = (1) ஞானமென்பது ஆத்மஸ்வரூபஞானம். விஞ்ஞான மென்பது எல்லாக் கார்யங்களேயும் நடத்தும் ப்ருக்ருதியே, ஆத்மாவுக்குத் தொடர்பில்லே. இத்தகைய ஞானத்திஞல் த்ருப்தியடைந்த மனத்தையுடையவன் (ஸ்ரீ ராமானுஜர்), (2) ஞானம் பகவத்ஸ்வரூபத்தை ச்ரவணம் மனனம் முதலியவற்ருல் அறிவது. விஞ்ஞானம் பகவத் மஹி மையையறிவது அல்லது ச்ரவணம் முதலியவற்ருல் ஏற் படும் ஞானத்திஞல் கிடைக்கும் பகவத் தர்சனம். (ஸ்ரீ மத்வர்), (3) பகவான் ஸர்வோத்தமன் என வேதங் களிஞல் அறிவது ஞானம். பகவத் மஹிமையை வேதங் களாலறிவது விஞ்ஞானம் (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

कूटस्थः (கூடஸ்த:) = (1) தேவ, மானிட உடல்களி லிருப்பினும் ஞாஞகார ஆத்மஸ்வரூபத்துடனிருப்பவன் (ஸ்ரீ ராமானுஜர்), (2) சீதோஷ்ணங்களால் மாறுதலடையா தோன் ஸ்ரீ ராகவேந்த்ரர், ஸ்ரீமத்வர்).

समलोष्टाश्मकाञ्चनः (ஸமலோஷ்டாச்ம காஞ்சன:) = மண் முதலிய எல்லாவற்றையும் அதனதன் இயற்கைப் படி சரியாக அறிவது (மத்வர்). (இம்மதப்படி ஐந்து வித பேத ஞானம் மோக்ஷத்திற்குரியது:— ஜீவேச்வரபேதம், ஜீவபரஸ்பரபேதம், ஜீவஜடபேதம், ஜடபரஸ்பரபேதம். ஜடேச்வரபேதம்) योगी (யோகீ) = (1) கர்மயோகி (ராமா னுஜர்), ஞானயோகி (ஸ்ரீ மத்வர்). युक्तइत्युच्यते (யுக்தஇத் யுச்யதே) = (1) தன் ஸ்வரூபத்தை அறிகிற யோகாப்யாசத் திற்குத் தகுந்தவன் எனச் சொல்லப்படுகிருன் (ஸ்ரீ ராமா னுஜர்), (2) முழு யோகத்தையுடையவஞகச் சொல்லப் படுகிருன் (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

सुहृन्मित्रार्युदासीनमध्यस्थद्वेष्यबन्धुषु ।
साधुष्वपि च पापेषु समबुद्धिर्विशिष्यते ॥ ९

ஸுஹ்ருன்மித்ரார்யுதாஸீனமத்யஸ்தத்வேஷ்ய பந்துஷு ।
ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர்விசிஷ்யதே ॥ 9

கைமாறு எதிர்பாராது உதவி செய்யும் நண்பன், யாதோ ஒரு உதவியைத் திரும்பப்பெறும் நோக்குடன் நட்புக்கொள்பவன், எதிரி, (அபகாரம் செய்பவன்), வேற்றுமைகளுடைய இரு சராருக்கும் உதவியோ அப காரமோ செய்யவேண்டியவனுக இருந்தும் அப்படிச் செய்யாது ஒதுங்கியிருப்பவன், ஒருவரையொருவர் எதிர்க்கும் இரு கக்ஷியாரையும் ஸமாதானம் செய்பவன், வெறுக்கத்தக்கவன், தன்னிடம் அன்புடைய உறவினன், ஆகியோரிடத்திலும், ஸாத்விக குணமுள்ளோரிடத்திலும், பாவிகளிடத்தும், ஸமமான புத்தியை (நோக்கை) உடைய வன் மேம்பாடடைந்தவனுவான்.

[सुहृत् (ஸுஹ்ருத்) = வயதின் விவரத்தைக் கவனி யாது ஒருவனுக்கு எவன் உதவி செய்கிருனே அவன். (ஸ்ரீ ராமானுஜர்) मित्रम् (மித்ரம்) = (1) தனக்கு ஸம வய துள்ளவனுக இருந்து உதவி புரிபவன் (ஸ்ரீ ராமானுஜர்), (2) தனது நண்பனைத் தக்க புத்திமதி கூறி கெடுதியிலிருந்து காப்பவன் (ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்). अरिः (அரி:) = ஒரு காரணத்தைக் கொண்டு கெடுதி செய்பவன். उदासीनः (உதாஸீன:) = (1) உதவி, கெடுதிகளுக்குக் கார ணங்களில்லாததால் உதவியோ கெடுதியோ செய்யா திருப்பவன் (ஸ்ரீ ராமானுஜர்), (2) உதவி, கெடுதி செய்யக் காரணமிருந்தும் அப்படிச் செய்யாதவன் (ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்).

मध्यस्थः (மத்யஸ்த:) = (1) பிறவியினுலேயே உத வியோ, கெடுதியோ செய்யாதவன் (ஸ்ரீ ராமானுஜர்), (2) உதவி, கெடுதி ஆகிய இரண்டும் செய்பவன் (ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்) बन्धुः (பந்து:) = (1) பிறவி யினுலேயே நன்மையைக் கோருகிறவன் (ஸ்ரீ ராமானுஜர்), (2) பிரதி ப்ரயோஜனத்தை எதிர்பார்த்து உதவிசெய்பவன் (ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்). समबुद्धिः = நட்பு (மித்ரத்வம்) முதலியன மனதில் ஏற்படுபவையேயன்றி ஜீவஸ்வரூபத் திற்கில்லையென்றும் எல்லா ஜீவன்களும் சைதன்யாம்சத்

தில் ஒரே வகையாக ஸமமாயிருக்கிறதென்றும் அறிகின்றவன் (ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்)]

योगी युंजीत सततमात्मानं रहसि स्थितः ।
एकाकी यतचित्तात्मा निराशीरपरिग्रहः ॥ १०

யோகீ யுஞ்ஜீத ஸததமாத்மானம் ரஹஸி ஸ்தித: I
ஏகாகீ யதசித்தாத்மா நிராசீரபரிக்ரஹ: II 10

மனம், உடல், புலன்கள், இவைகளை வசப்படுத்திக் கொண்டவனுகவும், பற்றற்றவனுகவும், தனக்கென யாதொரு பொருளையும் வைத்துக்கொள்ளாதவனுகவுமுள்ள யோகி தனிப்பட்ட இடத்தில், ஒருவனுகவே நிலையாக இருந்துகொண்டு, மனதை எப்போதும் நிலைநிறுத்த வேண்டும்.

[ஸ்ரீ ராமானுஜர் :— निराशी: (நிராசீ:) = ஆன்மாவைத் தவிர பிற பொருள்களில் ஆசையற்றவன், अपरिग्रहः (அபரிக்ரஹ:) = ஆன்மாவைத் தவிர பிற பொருள்களில் அபிமானமற்றவன், योगी (யோகீ) = கர்மயோகநிஷ்டன், आत्मानम् (ஆத்மானம்) = தன்னை, सततं (ஸததம்) = யோகாப்யாஸ காலம் முழுதும், युंजीत (யுஞ்ஜீத) = தன்னுடைய ஆத்மதர்சன நிஷ்டையையுடையவனுகச் செய்துகொள்ள வேண்டியது. ஸ்ரீ ராகவேந்த்ரர்:- युंजीत (யுஞ்ஜீத) = அகண்ட த்யானத்தில் நிறுத்தவேண்டியது.]

शुचौ देशे प्रतिष्ठाप्य स्थिरमासनमात्मनः ।
नात्युच्छ्रितं नातिनीचं चैलाजिनकुशोत्तरम् ॥ ११

சுசௌ தேசே ப்ரதிஷ்டாப்ய ஸ்திரமாஸனமாத்மன: I
நாத்யுச்ச்ரிதம் நாதிநீசம் சைலாஜினகுசோத்தரம் II 11

तत्रैकाग्रं मनः कृत्वा यतचित्तेन्द्रियक्रियः ।
उपविश्यासने युञ्ज्याद्योगमात्मविशुद्धये ॥ १२

ததரைகாக்ரம் மன: க்ருத்வா யதசித்தேந்த்ரியக்ரிய: ।
உபவிச்யாஸனே யுஞ்ஜ்யாத்யோகமாத்மவிசுத்தயே ॥ 12

சுத்தமான இடத்தில், அதிக உயரமோ, மிகத் தாழ்ந்தோ இல்லாத தர்ப்பை, மான் அல்லது புலியின் தோல், வஸ்திரம் (துணி) இவைகள் முறையே ஒன்றின் மீது ஒன்ருகப் போடப்பட்ட அசைவற்ற ஆஸனத்தில் (இருக்கையில்) உட்கார்ந்து, மனதை ஒரே நிலையில் இருக்கச்செய்தும், மனம், புலன்கள் ஆகியவற்றின் செயல்களை அடக்கி, மனதைத் தன்வசப்படுத்துவதற்காக (சுவாதீனம் செய்துகொள்ள) ப்ரஹ்மத்யானம் செய்ய வேண்டியது.

[ஸ்ரீ ராமானுஜர் :— स्थिरम् (ஸ்திரம்) = மரத்தினல் செய்யப்பட்ட योगम् (யோகம்) = கட்டுகளிலிருந்து விடுபட आत्मविशुद्धये (ஆத்மவிசுத்தயே) = ஆத்மாவலோகனத்தை (ஆத்ம தர்சனத்தை).]

समं कायशिरोग्रीवं धारयन्नचलं स्थिरः ।
संप्रेक्ष्य नासिकाग्रं स्वं दिशश्चानवलोकयन् ॥ १३

ஸமம் காயசிரோக்ரீவம் தாரயன்னசலம் ஸ்திர: ।
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திசஸ்சானவலோகயன் ॥

प्रशान्तात्मा विगतभीर्ब्रह्मचारिव्रते स्थितः ।
मनः संयम्य मच्चित्तो युक्त आसीत मत्परः ॥ १४

ப்ரசாந்தாத்மா விகதபீர்ப்ரஹ்மசாரிவ்ரதே ஸ்தித: ।
மன: ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பர: ॥ 14

யோகி உடல், கழுத்து, தலை ஆகியவற்றை அசையாது ஸமநிலையில் வைத்துக்கொண்டும், அசைவற்று (ஸ்திரமாக) இருந்துகொண்டும், தன் மூக்கின் நுணியைப் பார்த்துக்கொண்டும், வெளித்திக்குகளை (திசைகளை)

பாராது, மன அமைதியையடைந்தவனாக, பயங்களை விட்டு, ப்ரஹ்மசாரி வ்ரதத்தில் (ஸுகபோகங்களில் ஈடு படாது) இருந்துகொண்டும், மனதை விஷயங்களில் (சிற் றின்பங்களில்) போகாமால் தடுத்து, என்னிடத்தில் (பகவா னிடத்தில்) சித்தத்தை வைத்து, என்னையே (பகவானையே) நம்பினவனாக வேண்டியது (அல்லது) என்னையே தியா னம் செய்துகொண்டிருக்கவேண்டியது.

[नासिकाग्रम् (நாஸிகாக்ரம்) = மூக்கு நுணி என்பது புருவங்களுக்கிடையே சிறுத்துள்ள மூக்கின் பாகமெனப் பொருள். அத். 5, ச்லோகம் 27-குறிப்பையும் பார்க்கவும். ब्रह्मचारिव्रते (ப்ரஹ்மசாரிவ்ரதே) = பெண்களைப்பற்றி எண் ணுமை, பிக்ஷையெடுத்த அன்னத்தை உண்ணல், குரு விற்குப் பணிவிடை செய்தல், வேதமோதல், ப்ரஹ்மத் தைப்பற்றித் தெரிந்துகொள்ளல் இவை ப்ரஹ்மசாரி வ்ரதங்களாம்.]

युञ्जन्नेवं सदात्मानं योगी नियतमानसः ।
शान्तिं निर्वाणपरमां मत्संस्थामधिगच्छति ॥ १५

யுஞ்ஜன்னேவம் ஸதாத்மானம் யோகீ நியதமானஸ: I
சாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம்ஸ்தாமதிகச்சதி II 15

மனதையடக்கிய யோகி, எப்பொழுதும் முன் சொல்லப்பட்டபடி (ச்லோ. 13, 14) மனதை நிறுத்தினுல் (கட்டுப்படுத்தினுல்), மோக்ஷத்தையே நிஷ்டையாகவுடை யதும் (வீடுபேறு அடையும் தவத்தையுடையதும்), என் னுடைய (பகவானுடைய) ஆதீனமானதும் (வசமானதும்) ஆகிய பிறப்பிறப்புகளின் முடிவை அடைகிருன் (பிறப் பிறப்பிலிருந்து விடுபட்டு முக்திநிலையை அடைகிருன்).

[आत्मानम्(ஆத்மானம்)=பரமாத்மாவை (ஸ்ரீ ராகவேந்த் ரர்). युञ्जन् (யுஞ்ஜன்) = த்யானம் செய்பவனுய் (ஸ்ரீ ராக வேந்த்ரர்).

निर्वाणपरमाम् (நிர்வாணபரமாம்) = (1) அடையத்தகுந்த மோக்ஷத்தை உடையது - (ஸ்ரீதரர்), (2) ஸுகத்தை முடிவானதாகவுள்ள - (ஸ்ரீ ராமானுஜர்), (3) சரீரம் போனவுடன் - (ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்).

मत्संस्थाम् (மத்ஸம்ஸ்தாம்) = (1) என்னுடைய ஸ்வரூபமாக (உருவாக) இருத்தலாகிய - (ஸ்ரீதரர்), (2) என்னிடத்திலிருப்பை - (ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வர்).]

नात्यश्नतस्तु योगोऽस्ति न चैकान्तमनश्नतः ।
न चातिस्वप्नशीलस्य जाग्रतो नैव चार्जुन । १६

நாத்யச்நதஸ்து யோகோஅஸ்தி ந சைகாந்தமனச்னத: ।
ந சாதிஸ்வப்னசீலஸ்ய ஜாக்ரதோ நைவ சார்ஜுன ॥ 16

ஓ அர்ஜுன! அதிகமாக உண்பவன், முற்றிலும் உணவை விட்டவன், அதிகத் தூக்கமுள்ளவன், முற்றிலும் தூக்கமற்றவன் ஆகியோருக்கு த்யானயோகமில்லை (ஸித்திக்காது).

[ஸ்ரீ சங்கரரும் ஸ்ரீதரரும் முன் அத். 4. ச்லோகம் 30ல் சொல்லப்பட்டபடி யோக சாஸ்திரப்படி வயிற்றில் 2 பாகம் உணவு, 1 பாகம் தண்ணீர், மற்றும் 1 பாகம் வாயுக்களின் சஞ்சாரத்திற்கு விட்டு, நிறப்பவேண்டுமெனக் கூறுகின்றனர். ஸ்ரீ மத்வர் நாரதீயபுராண வசனப்படி சக்தியுள்ளவன் தூக்கம், உணவு, பயம், ஸ்வாஸம், சேஷ்டை. சோம்பல் முதலியவற்றை விட்டு கண்களை மூடி, யோகம் செய்யவேண்டும் எனச் சொல்லப்பட்டதாகக் கூறுகிறார். ஆனல் இந்த கீதா ச்லோகம் உணவு முதலியவற்றை முற்றிலும்விடச் சக்தியற்ற யோகி விஷயமாகச் சொல்லப் பட்டதாகும்.]

युक्ताहारविहारस्य युक्तचेष्टस्य कर्मसु ।
युक्तस्वप्नावबोधस्य योगो भवति दुःखहा ॥ १७

யுக்தாஹாரவிஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு ।
யுக்தஸ்வப்ஞவபோதஸ்ய யோகோ பவதி து:கஹா ॥ 17

மிதமான உணவும், மிதமான நடையும் (உடலைக் காப்பாற்ற எவ்வளவு தேவையோ அவ்வளவு உணவு முதலியன சேகரிக்கச் செய்யவேண்டிய) செயல்களைப் புரிதலும் மிதமான தூக்கமும், மிதமான விழிப்பும் உள்ளவனுக்கு துயரத்தைப் போக்கடிக்கக்கூடிய த்யான யோகம் கைகூடும் (த்யானயோகம் செய்ய முயல்பவன் இதில் கூறியபடி பயிற்சி பெறவேண்டுமெனக் கருத்து).

[दुःखहा (து:கஹா) = ஸம்ஸார து:கமெனும் பிறவித் துயரத்தைப் போக்குகிற – (ஸ்ரீ மத்வர்)]

यदा विनियतं चित्तमात्मन्येवावतिष्ठते ।
निस्पृहस्सर्वकामेभ्यो युक्त इत्युच्यते तदा ॥ १८

யதா வினியதம் சித்தமாத்மன்யேவாவதிஷ்டதே ।
நிஸ்ப்ருஹஸ்ஸர்வகாமேப்யோ யுக்த இத்யுச்யதே ததா ॥ 18

எப்போது மனம் வசப்பட்டு ப்ரஹ்மத்யானத்தில் தானே நிறுத்தப்பட்டிருக்குமோ, எப்போது எல்லா விஷயங்களிலிருந்துமுண்டாகும் ஆசையை விட்டிருப்பானோ, அப்போது யோக ஸித்தியை யடைந்தவனென்று சொல்லப்படுகிறான்.

[आत्मन्येव (ஆத்மன்யேவ) = தன் ஆத்ம ஸ்வரூபத்திலேயே (ஸ்ரீசங்கரர்), युक्त इति (யுக்த இதி) = யோகம் செய்யத்தகுந்தவனென்று (ஸ்ரீ ராமானுஜர்).]

यथा दीपो निवातस्थो नेङ्गते सोपमा स्मृता ।
योगिनो यतचित्तस्य युञ्जतो योगमात्मनः ॥ १९

யதா தீபோ நிவாதஸ்தோ நேங்கதே ஸோபமா ஸ்ம்ருதா ।
யோகினோ யதசித்தஸ்ய யுஞ்ஜதோ யோகமாத்மன: ॥ 19

பரமாத்ம த்யானத்தைப் பயிற்சி செய்யும், வசப்படுத்தப்பட்ட மனதையுடைய யோகிக்கு, காற்றில்லா இடத்திலுள்ள விளக்கு (அசைவற்ற ஒளி) உதாரணமாகச் சொல்லப்பட்டுள்ளது.

[காற்றடைப்புள்ள இடத்திலுள்ள விளக்கு அசைவற்று ஒரே நிலையில் பிரகாசிப்பதுபோல், யோகி மனம், உடல், புலன்கள் ஆகியவற்றை அசைவற்ற நிலையில் நிறுத்தி, ஒரே நிலையிலிருந்து யோகநிஷ்டை செய்ய வேண்டும். ஸ்ரீ ராமானுஜர் :— **यतचित्तस्य** (யதசித்தஸ்ய) = மனச்சுவாதீனமுடைய, **योगिनः** (யோகின:) = யோகியின், **योगं युञ्जतः** (யோகம் யுஞ்ஜத:) = யோகத்தைச் செய்கிற **आत्मनः** (ஆத்மன:) = ஆத்மஸ்வரூபத்திற்கு— மற்ற பதங்களுக்கு மேலேயுள்ளபடி.]

यत्रोपरमते[1] **चित्तं निरुद्धं योगसेवया ।**
यत्र[2] **चैवात्मनात्मानं**[3] **पश्यन्नात्मनि**[4] **तुष्यति ॥ २०**

யத்ரோபரமதே சித்தம் நிருத்தம் யோகஸேவயா ।
யத்ர சைவாத்மனுத்மானம் பச்யன்னுத்மனி துஷ்யதி ॥ 20

सुखमात्यन्तिकं यत्तद्बुद्धिग्राह्यमतीन्द्रियम् ।
वेत्ति यत्र न चैवायं स्थितश्चलति[5] **तत्त्वतः ॥ २१**

ஸுகமாத்யந்திகம் யத்தத்புத்திக்ராஹ்யமதீந்த்ரியம் ।
வேத்தி யத்ர ந சைவாயம் ஸ்திதஸ்சலதி தத்த்வத: ॥ 21

1, 2 = எந்த அவஸ்தையில் (ஸ்ரீதரர்), 3, 4 = தன்னுடலிலுள்ள பரமாத்மாவை (ஸ்ரீ மத்வர், ஸ்ரீராகவேந்த்ரர்). 5 = (a) ஆத்மஸ்வரூபத்திலிருந்து (ஸ்ரீ சங்கரர்), (b) பகவானுடைய உருவத்திலிருந்து (ஸ்ரீமத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்).

[1] यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिकं ततः ।
यस्मिन्स्थितो न दुःखेन गुरुणापि विचाल्यते ॥ २२

யம் லப்த்வா சாபரம் லாபம் மன்யதே நாதிகம் தத: 1
யஸ்மின்ஸ்திதோ ந து:கேன குருணுபி விசால்யதே ll 22

तं विद्याद्दुःखसंयोगवियोगं योगसंज्ञितम् ।
स निश्चयेन योक्तव्यो[2] योगोऽनिर्विण्णचेतसा[3] ॥ २३

தம் வித்யாத்து:கஸம்யோகவியோகம் யோகஸம் ஜ்ஞிதம் 1
ஸ நிஸ்சயேன யோக்தவ்யோ யோகோ
அநிர்விண்ணசேதஸா ll 23

பயிற்சியினுல் விஷயங்களிலிருந்து (புலன்கள் புகும் பொருள்கள்) இழுக்கப்பட்ட மனம், எந்த யோகத்தில் நிற்குமோ. எந்த யோகத்திலிருப்பவன் மனத்தினுல் ஆன் மாவைப் பார்த்துத் தன்னிடத்திலேயே மகிழ்ச்சியடை கிருனே, எந்த யோகத்தில் திடமாயிருக்கிற யோகி, புலன் களுக்குப் புலப்படாது, புத்தியினுல் அறியத்தக்க, அளவு கடந்த, முடிவற்ற ஸுகத்தை (பேரின்பத்தை), அனுபவிக் கின்ருனே, எந்த ஸுகத்தை அனுபவிப்பதிலிருந்து பிரி கிறதில்லையோ, எதை அடைந்தபிறகு, அதைக்காட்டிலும் வேறு ஒன்றை அதிகப் பயனுள்ளதாகக் கருதுகிற தில்லையோ, எந்த யோகத்திலிருப்பவன் பெரும் துயரத்தி னுல் (து:கத்தினுல்) கூட அசைக்கப்படுவதில்லையோ, அதை, எல்லாத் துயரத்தின் தொடர்பைப் போக்கும் அந்த யோகநிஷ்டை நிலையை, யோகமென்ற பெயர் கொண்ட

1=(a) எந்த ஆத்ம லாபத்தை (ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்), (b) எந்த யோகத்தை (ஸ்ரீ மத்வர்) 2= அனுஷ்டிக்கத் தகுந்தது (ஸ்ரீ ராகவேந்த்ரர்) (3) निर्विण्ण-चेतसा (எனப்பாடம்) = விஷய வைராக்யமடைந்த மனதையுடையவனுல் (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

தாக அறியவேண்டும். உறுதியுடன், அசைவற்ற மன நிலையுடையவனே அத்தகைய யோகத்தை அடையத் தகுந்தவன்.]

संकल्पप्रभवान्कामांस्त्यक्त्वा[1] सर्वानशेषतः ।
मनसैवेन्द्रियग्रामं विनियम्य समन्ततः ॥ २४

ஸங்கல்பப்ரபவான்காமாம்ஸ்த்யக்த்வா ஸர்வானசேஷத: 1
மனஸைவேந்த்ரியக்ராமம் வினியம்ய ஸமந்தத: 11 24

शनैः शनैरुपरमेद्बुद्ध्या धृतिगृहीतया ।
आत्मसंस्थं[2] मनः कृत्वा न किंचिदपि चिन्तयेत् ॥ २५

சனை: சனைருபரமேத்புத்த்யா த்ருதிக்ருஹீதயா 1
ஆத்மஸம்ஸ்தம் மன: க்ருத்வா நகிம்சிதபி சிந்தயேத் 11 25

---

1 காமங்கள் (ஆசைகள்) ஸங்கல்பத்தாலுண்டாவது, ஸ்பர்சம் முதலியவற்ருல் உண்டாவது என இருவகைப்படும். ஸங்கல்பமென்பது ‘ இதைச் செய்யவேண்டும், அதனுல் இப்பயனையடையலாம் ’, என்று மனதிலுண்டாகும் தோற்றம். இதனுலுண்டாவது மகப்பேறு போன்றவை. ஸ்பர்சமென்பது ஞான, கர்மேந்த்ரியங்கள் விஷயங்களுடன் தொடர்படைவது. இதனுலுண்டாவது சீதோஷ்ணம் முதலியவை. இவ்விரண்டு விதமாக உண்டாகும் ஆசைகளில் (காமங்களில்) முந்தியதை விட்டுவிடவேண்டும். பிந்தியதை முழுதும் விடமுடியாது. எனவே அதனுல் ஏற்படும் இன்ப துன்பங்களை விலக்கவேண்டியது. (ஸ்ரீ ராமானுஜர்).

2 आत्मसंस्थं (ஆத்மஸம்ஸ்தம்) = பரமாத்மாவிலிருக்கும்படி – (ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்).

ஸங்கல்பத்தினுல் (திட்டமிடுவதால்) உண்டாகும் எல்லா விஷய ஆசைகளை முழுதும் விட்டு, மனதினுல் எல்லாப் புலன்களையும் விஷயங்களிலிருந்து திருப்பி, தைர்யத்தினுல் தன்வயப்படுத்திய புத்தியினுல், மனதை ஆத்மாவிடம் நிலைக்கச்செய்து, மெள்ள, மெள்ள மனதைக் கட்டுப்படுத்தி நிறுத்தவேண்டும். அப்படி நிறுத்தியபின் ப்ரஹ்மத்தைத் தவிர வேறு ஒன்றையும்பற்றி நினைக்காதிருக்கவேண்டும்.

यतो यतो निश्चरति मनश्चञ्चलमस्थिरम् ।
ततस्ततो नियम्यैतदात्मन्येव वशं नयेत् ॥ २६

யதோ யதோ நிஸ்சரதி மனஸ்சஞ்சலமஸ்திரம் ।
ததஸ்ததோ நியம்யைததாத்மன்யேவ வசம் நயேத் ॥ 26

நிலையற்ற, சஞ்சலமான (உடனுக்குடன் மாறும்) இயற்கையுள்ள மனம் எந்தெந்த விஷயங்களில் புகுமோ அந்தந்த விஷயங்களிலிருந்து இம் மனத்தைத் திருப்பி, பரமாத்மாவிடம் நிலைத்து நிற்கும்படி செய்யவேண்டும்.

प्रशान्तमनसं ह्येनं योगिनं सुखमुत्तमम् ।
उपैति शान्तरजसं ब्रह्मभूतमकल्मषम् ॥ २७

ப்ரசாந்தமனஸம் ஹ்யேனம் யோகினம் ஸுகமுத்தமம் ।
உபைதி சாந்தரஜஸம் ப்ரஹ்மபூதமகல்மஷம் ॥ 27

அமைதியான மனதையுடைய, ரஜோகுணமற்றுள்ள, ஜீவன் முக்தனுகவுள்ள, பாவமற்ற யோகியை மிகச்சிறந்த ஸுகம் (பேரின்பம்) அடைகிறது என்பதில் ஐயமில்லை.

[ब्रह्मभूतम् (ப்ரஹ்மபூதம்) = (1) ஜீவன் முக்தனுக, ஜீவன் முக்தன் எனில் இறந்தபின் அடையும் மோக்ஷத்தை உடலிருக்கையிலேயே அடைகிறவன் (சுகர், வாமதேவர் போல்), (2) ப்ரக்ருதித் தொடர்பற்று தன் ஸ்வரூபத்துடனிருக்கிற (ஸ்ரீ ராமானுஜர்), (3) ப்ரஹ்ம த்யானத்திலுள்ள (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

युञ्जन्नेवं[1] सदात्मानं[2] योगी विगतकल्मषः[3] ।
सुखेन ब्रह्मसंस्पर्शमत्यन्तं[4] सुखमश्नुते ॥ २८

யுஞ்ஜன்னேவம் ஸதாத்மானம் யோகீ விகதகல்மஷ: I
ஸுகேன ப்ரஹ்மஸம்ஸ்பர்சமத்யந்தம் ஸுகமச்னுதே II

மேற்சொன்னபடி, எப்பொழுதும் மனதை ஸ்வாதீனம் செய்துகொண்ட, (தன்வசப்படுத்திய) பாவமற்ற யோகி முயற்சியின்றி ப்ரஹ்மதர்சனமெனும் சிறந்த ஸுகத்தை (இன்பத்தை) அடைகிறுன்.

सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि ।
ईक्षते योगयुक्तात्मा सर्वत्रसमदर्शनः ॥ २९

ஸர்வபூதஸ்தமாத்மானம் ஸர்வபூதானி சாத்மனி I
ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ரஸமதர்சன: II 29

எல்லாவிடத்திலும் (நான்முகனை ப்ரஹ்மா முதல் தூண் வரை எல்லாப் பொருள்களிலும்) ஸமமாக ப்ரஹ்மத்தைப் பார்க்கும் த்யானயோகத்திலீடுபட்ட யோகி, தன்னை எல்லாப் பொருள்களிலுமிருப்பதாகவும், தன்னிடத்தில் எல்லாப்பொருள்களுமிருப்பதாகவும் பார்க்கிறுன்.

---

1 இப்படி த்யானிக்கும் (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

2 பரமாத்மாவை (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

3 (a) எல்லா ப்ராசீன கர்மங்களையும் போக்கடிக்கும் (ஸ்ரீ ராமானுஜர்).
(b) காமக்ரோதங்களைப் போக்கடிக்கும் (ஸ்ரீராகவேந்த்ரர்).

4 (a) ப்ரஹ்மைக்யமாகிய (ஸ்ரீ சங்கரர்).
(b) ப்ரஹ்மானுபவரூபமான (ஸ்ரீ ராமானுஜர்).
(c) பகவானையடைந்தபின் தனக்குண்டாகும் (ஸ்ரீ ராகவேந்த்ரர்).

13

[ஸ்ரீ சங்கரர் ;— எல்லாப் பூதங்களிலுமுள்ள ஆன்மா தானே என்பதாயும், தன்னிடத்தில் எல்லாப் பூதங்களை யும் ஸமமாகவும் அதாவது ஆத்மா ஒன்றே என்பதாக பார்க்கிறவன்தான் யோகி.

ஸ்ரீ ராமானுஜர் :— ப்ரக்ருதியிலிருந்து விடுபட்ட மற்ற ஜீவஸ்வரூபமும், ப்ரக்ருதியிலிருந்து விடுபட்ட தன் ஜீவ ஸ்வரூபமும் ஸமமானவை. ப்ரக்ருதி விமுக்தமான தன் ஜீவஸ்வரூபம் ப்ரக்ருதி விமுக்தமான பிற ஜீவ ஸ்வரூபத் திற்கு ஸமமென பார்க்கிறவன் யோகி. (அத். 5, ச்லோகம் 19, அத். 6. ச்லோகம் 33 பார்க்க).

ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களிலும் ப்ரஹ்மம் ஒரேவிதமாகயிருப்ப பதாகவும், எல்லாப் பொருள்களும் ப்ரஹ்மத்தினிடமிருப் பதாகவும் அறிகின்றவன் யோகி.

குறிப்பு :— இந்தச் செய்யுளின் கருத்தைத் தெரிவிக்கும் உபநிடத வாக்யங்கள் பின்வருமாறு :—

(1) यस्तुसर्वाणिभूतानि आत्मन्येवानुपश्यति ।
सर्वभूतेषु चात्मानं ततो न विजुगुप्सते ॥

(ஈசாவாஸ்யோபநிஷத்)

(2) सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि ।
संपश्यन् ब्रह्मपरमं यातिनान्येन हेतुना ॥

(கைவல்யோபநிஷத்)

यो मां पश्यति सर्वत्र सर्वं च मयि पश्यति ।
तस्याहं न प्रणश्यामि स च मे न प्रणश्यति ॥ ३०

யோ மாம் பச்யதி ஸர்வத்ர ஸர்வம் ச மயி பச்யதி ।
தஸ்யாஹம் ந ப்ரணச்யாமி ஸ ச மே ந ப்ரணச்யதி ॥ 30

எவன் எல்லாப் பொருள்களிலும் பரமாத்மாவாகிய என்னையும், என்னிடத்தில் எல்லாப் பொருள்களையும்

காண்கிருனே, அவனுக்கு நான் காணுமற்போகிறதில்லை. எனக்கும் அத்தகையோன் காணுமற்போகிறதுமில்லை.

[ஸ்ரீ சங்கரர் :— "நான் அவனுக்கும், அவன் எனக்கும் காணுமல் போவதில்லை" என்ருல், "நானே அவன், அவனே நானுக ஒன்ருகிவிடுகிறேம்" எனக் கருத்து.

ஸ்ரீ ராமானுஜர் :— ப்ரக்ருதியிலிருந்து விடுபட்ட எல்லாப் பிராணிகளுடைய ஸ்வரூபங்களுக்கு ஸமமான ஸ்வரூபத்தையுடைய என்னை, எவன் அறிகின்ருனே, என்னுடைய ஸ்வரூபத்திற்கு ஸமமான ஸ்வரூபமுடையதாக ப்ரக்ருதி விமுக்தமான எல்லா ஆத்மஸ்வரூபத்தையும் எவன் பார்க்கின்ருனே, அத்தகைய ஆத்மதர்சனமுள்ள யோகிக்கு நான் ப்ரத்யஷமாக (எதிரிலுள்ளவனுக) இருக்கிறேன்; அவனும் எனக்கு ப்ரத்யக்ஷமாகவே இருக்கிருன்.

ஸ்ரீ மத்வர் :— என்னிடத்தில் எல்லா பூதங்களையும், எல்லா பூதங்களில் (பிராணிகளிடத்தும்) என்னையும் பார்க்கிறவனின் எல்லா நலன்களுக்கும் நான் பொறுப்பாளியாகாமல்போவதில்லை. அவனும் என் பக்தனுகாமல் போவதில்லை (பக்தன்), ஸ்ரீ ராகவேந்த்ரர் **सर्वज्ञ मयि पश्यति** (ஸர்வஞ்ச மயி பச்யதி) என்பதற்கு 'எல்லாப் பூதங்களும் (பிராணிகள், பிற பொருள்கள் யாவும்)' என்னுடைய அதீனமானவையெனப் பார்க்கிருனே' என்று பொருள் கூறி மற்ற சொற்களுக்கு ஸ்ரீ மத்வர் போலவே விரிவுரை எழுதியுள்ளார்]

सर्वभूतस्थितं यो मां भजत्येकत्वमास्थितः ।
सर्वथा वर्तमानोऽपि स योगी मयि वर्तते ॥ ३१

ஸர்வபூதஸ்திதம் யோ மாம் பஜத்யேகத்வமாஸ்தித: I
ஸர்வதா வர்தமானேஅபி ஸ யோகீ மயி வர்த்ததே II 31

எல்லாப் பிராணிகளிடத்திலுமிருக்கிற என்னை வேற்றுமையில்லாத ஒன்ருகவே அறிந்து எவன் பஜிக்கிருனே (ஸேவிக்கிருனே) அந்த யோகி எவ்வழியைக் கடைப்பிடித்திருந்தாலும் என்னிடமே இருக்கிருன்.

[एकत्वमास्थितः (ஏகத்வமாஸ்தித :)=முழுதான அருவி னுருவாக ஒரே விதமாகவுள்ள (ஸ்ரீ ராமானுஜர்), सर्वथा वर्तमानोऽपि (ஸர்வதா வர்த்தமானோஅபி)=(1) எக்காலத்தி லும், த்யான காலத்திலும், த்யானம் கலைந்தபின்னும் (ஸ்ரீ ராமானுஜர்), (2) நன்மை தீமைகளைச் செய்திடினும் (ஸ்ரீ ராகவேந்த்ரர்). मयि वर्तते (மயிவர்த்ததே)=(1) வைஷ் ணவ பரமபதமாகிய (விஷ்ணுவின் தொடர்புள்ள உயர்ந்த பதவியிலுள்ள) நித்ய முக்தனாக எப்பொழுதும் விடுபட்ட நிலையில்) இருக்கிறான் (ஸ்ரீ சங்கரர்), (2) முக்தியையடை கிறான் (ஸ்ரீதரர்), (3) தன்னையும் பிற பிராணிகளையும் என் உருவுக்கு ஸமமான உருவமுடையவர்களாகப் பார்க் கிறான். (4) மோக்ஷத்திலிருக்கிறான்— ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராக வேந்த்ரர்].

आत्मौपम्येन सर्वत्र समं पश्यति योऽर्जुन ।
सुखं वा यदि वा दुःखं स योगी परमो मतः ॥ ३२

ஆத்மௌபம்யேன ஸர்வத்ர ஸமம் பச்யதி யோஅர்ஜுன ।
ஸுகம் வா யதி வா து:கம் ஸ யோகீ பரமோ மத: ॥ 32

அர்ஜுனா! எல்லாப் பிராணிகளிடத்தே ஸுகத் தையோ, அல்லது துக்கத்தையோ, தன்னிடத்தே போல் ஸமமாகப் பார்க்கும் யோகி மேலானவன் என்பது என் கருத்து.

[ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— தனக்கு ஸுகத்தில் ஆசையும், துயரத்தில் வெறுப்பும் எப் படியோ அதேபோல், பிற பிராணிகளுக்கும் ஸுகமேற் படவும், துயரமேற்படாதிருக்கவும், பிரார்த்தித்து, அவ் விதம் நடப்பவன் எவனோ அவன் யோகி, மேம்பட்டவன்.

ஸ்ரீராமானுஜர் :— ப்ரக்ருதியிலிருந்து விடுபட்ட ஆத்ம ஸ்வரூபத்தில் ப்ரக்ருதித் தொடர்புள்ள ஸுக துக்கங்கள் எப்படி ஒட்டாதோ, அதுபோல பிற பிராணிகளின் ப்ரக் ருதி விமுக்த ஆத்மஸ்வரூபத்தில் சுக துக்கங்கள் ஒட்டுகிற

தில்லை என்று அறிகிறவன் மேலானவன். அல்லது பிறருக்குண்டாகும் ஸுக துக்கங்களால் எப்படி தான் விருப்பு வெறுப்புகளை அடைகிறதில்லையோ, அதேபோல் தன் சுக துக்கங்களால் தானே விருப்பு வெறுப்புகளடையாதவன் உயர்வானவன் என்பது என் எண்ணம்.]

अर्जुन उवाच

योऽयं योगस्त्वया प्रोक्तः साम्येन मधुसूदन ।
एतस्याहं न पश्यामि चञ्चलत्वात्स्थितिं स्थिराम् ॥ ३३

யோஅயம் யோகஸ்த்வயா ப்ரோக்த: ஸாம்யேன
மதுஸூதன ।
ஏதஸ்யாஹம் ந பச்யாமி சஞ்சலத்வாத்ஸ்திதிம் ஸ்திராம் ॥

ஓ மதுஸூதனை! உம்மால் சொல்லப்பட்ட ஸமமாக அறிவதான யோகத்தின் திடமான இருத்தலை மனம் ஆட்டமுள்ள நான் தெரிந்துகொள்ளவில்லை.

[ஸ்ரீ சங்கரர்:— எல்லாப் பொருள்களையும் ப்ரஹ்மமாகவும் ப்ரஹ்மத்தை எல்லாப் பொருள்களாகவும் ஸமமாக அறியவேண்டுமெனக் கூறினீர். மனம் சஞ்சலமுள்ளதால் அத்தகைய அசைவற்ற திடபுத்தி ஏற்படுவது கடினம் என அர்ஜுனன் கருத்து.

ஸ்ரீதரர்:— ப்ரஹ்ம த்யானத்தில் சலிக்காது, திடமாக மனதை நிறுத்துவது செய்யமுடியாதது என்பது அர்ஜுனன் கருத்து.

ஸ்ரீ ராமானுஜர்:— (33, 34 ச்லோகங்களுக்குச் சேர்த்துப் பொருள் கூறப்பட்டுள்ளது). ப்ரக்ருதித் தொடர்பற்ற ஞானவடிவான ஆத்மாவும், பரமாத்மாவும் வேருகிலும் பரமாத்மாவுக்கு எப்படி ப்ரக்ருதித் தொடர்பும் கருமங்களுமில்லையோ, அதுபோல் ப்ரக்ருதி விமுக்த ஆத்மாக்களுக்குமில்லை. ஆதலால் ஜீவேச்வர ஆகார பேதமான ஸமத்வம் சொல்லப்பட்டது. அதை அறிவதே ஸமதர்சன யோகமெனவும் உரைத்தீர். இது அஸாத்யமென எனக்குத்

தோன்றுகிறது. கர்ம வாஸனையால் ஜீவனின் மனம் வெகு காலமாக விஷயங்களில் உழன்று, அவைகளிலும் ஒரு நிலையையடையாது ஊசலாடிக்கொண்டே யிருக்கிறது. இப்படி பழக்கத்தால் சஞ்சலமாகவுள்ள மனதை ப்ரக்ருதி விமுக்த ஆத்ம ஸ்வரூப ஸமதர்சன த்யான யோகத்தில் நிலையாக வைப்பது எப்படி முடியும்? அப்படி மனத்தை நிறுத்தமுடியாதென அர்ஜுனனின் எண்ணம்.]

चञ्चलं हि मनः कृष्ण प्रमाथि बलवद्दृढम् ।
तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम् ॥ ३४

சஞ்சலம் ஹி மன: க்ருஷ்ண ப்ரமாதி பலவத்த்ருடம் ।
தஸ்யாஹம் நிக்ரஹம் மன்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் ॥

ஓ கிருஷ்ண! மனம் இயற்கையிலேயே நிலையற்றதாக உடல் புலன்களைக் கலங்கச் செய்கிறதாகவும், கட்டுப்படாததாகவும், விஷயங்களில் கெட்டியாகப் பற்றுள்ளதாகவும் உள்ளது. மனதை அடக்குவது காற்றைப் பிடித்துக் குடத்தில் அடக்குவதுபோல் மிகவும் முடியாத கார்யமென நான் எண்ணுகிறேன்.

श्रीभगवानुवाच
असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम् ।
अभ्यासेन तु कौन्तेय वैराग्येण च गृह्यते ॥ ३५

அஸம்சயம் மஹாபாஹோ மனோ துர்நிக்ரஹம் சலம் ।
அப்யாஸேன து கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே ॥

கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்குச் சொல்வது :—

தோள் வலிமையுள்ள ஓ அர்ஜுன! மனது நிலையற்றது, அதை அடக்குவது மிகவும் சிரமமென்பதில் ஐயமில்லை. ஆயினும் பழக்கத்தினாலும். புலன்களின் ஈடுபாட்டுக்

குரியவைகளில் வைராக்யம் (வெறுப்பு புத்தி) அடைவதினுலும் மனம் அடக்கப்படுகிறது.

[ஸ்ரீதரர், இந்த ச்லோகத்தின் விரிவுரையில் யோக சாஸ்திரத்திலிருந்து ஒரு செய்யுளை மேற்கோளாகக் கொடுக்கிருர். அதன் பொருள் :— ப்ரவ்ருத்தியற்ற மனதின் ப்ரஹ்மஸ்வரூபமாயுள்ள நிலை எதுவோ அது 'அஸம் ப்ரஞ்ஞாத ஸமாதி' என்று சொல்லப்படுகிறது.

'வைராக்யம்' என்பதற்கு ஸ்ரீ ராமானுஜரின் பொருள் : விஷயங்கள் (புலன்களின் ஈடுபாட்டிற்கானவை) கெடுதியானவை எனப் பழக்கத்தால் அறிந்து விஷயங்களை விட்டு மனது விலகுதலே வைராக்யம்]

असंयतात्मना योगो दुष्प्राप इति मे मतिः ।
वश्यात्मना तु यतता शक्योऽवाप्तुमुपायतः ॥ ३६

அஸம்யதாத்மனு யோகோ துஷ்ப்ராப இதி மே மதி: ।
வச்யாத்மனு து யததா சக்யோஅவாப்துமுபாயத: ॥ 36

அடக்கப்படாத மனதையுடையவனுல் யோகம் அடையக்கூடியதல்ல என்பது எனது திடமான எண்ணம். அடக்கப்பட்ட மனதுடன்கூடி முயற்சி செய்பவனுல், பயிற்சி, வைராக்யம் ஆகிய உபாயங்களினுல் யோகத்தை அடையமுடியும்.

[योग: (யோக:)=ஸமதர்சனயோகம் (ஸ்ரீ ராமானுஜர்).

उपायत: (உபாயத:) = என் ஆராதன ரூபமான ஞானத்தையுட்கொண்ட கர்மயோகமாகிற உபாயத்தினுல் (ஸ்ரீராமானுஜர்).]

अर्जुन उवाच

अयतिः श्रद्धयोपेतो योगाच्चलितमानसः ।
अप्राप्य योगसंसिद्धिं कां गतिं कृष्ण गच्छति ॥ ३७

அயதி: ச்ரத்தயோபேதோ யோகாச்சலிதமானஸ: ।
அப்ராப்ய யோகஸம்ஸித்திம் காம் கதிம் க்ருஷ்ண கச்சதி ॥

அர்ஜுனன் சொல்வது:— ஓ கிருஷ்ண! நம்பிக்கையுடன் கூடி யோகத்தில் ஈடுபட்டு, ஆனால் முழுதும் செய்ய முயற்சி செய்யாது யோகத்தை விட்டு நழுவி, சிற்றின்பங்களில் நுழைந்த மனதையுடையவன் (யோகபிரஷ்டன்) யோகத்தின் பயனையடையாது எக்கதியை அடைகிருன்?

कच्चिन्नोभयविभ्रष्टश्छिन्नाभ्रमिव नश्यति ।
अप्रतिष्ठो महाबाहो विमूढो ब्रह्मणः पथि ॥ ३८

கச்சின்னேபயவிப்ரஷ்டஸ்சின்னுப்ரமிவ நச்யதி ।
அப்ரதிஷ்டோ மஹாபாஹோ விமுடோ ப்ரஹ்மண: பதி ॥ 38

தோள்வலிமையுடையோய் (ஹே க்ருஷ்ண)! கர்ம வழி, யோக வழி இரண்டும் கெட்டு, பிடிப்பற்று ப்ரஹ்மத்தையடையும் உபாயத்தில் அறிவில்லாதவனுக, சிதறுண்ட மேகம்போல அழிவடைவானு? அல்லது ஒரு போதும் அடையமாட்டானு?

[ஸ்ரீதரர்:— யோகத்தில் பிரவேசித்ததால் இப்போது கர்மானுஷ்டானமில்லை. முன் கர்மப்பயனை ஈச்வரார்ப்பணம் செய்துவிட்டதால் ஸ்வர்கம் முதலிய ஸுக பலனுமில்லை. அப்யாஸம், வைராக்யம் முதலியவைகளில் முயற்சியின்மையால் ஞானயோக ஸித்திபெற்று மோக்ஷமடையவும் வழியில்லை. எனவே இரண்டும் கெட்டவன். 'ப்ரஹ்மத்தை அடையுமுபாயம்' என்பது, மனதை அடக்கல், புலன்களையடக்கல், ஸமதமங்கள், விடா முயற்சி, வைராக்யம் முதலியவைகளே.

'சிதறுண்ட மேகம்போல்'— கூட்டமாகச் சேர்ந்துள்ள மேகங்கள் காற்ருல் பிரிக்கப்படுகின்றன. அப்படிச் சிதறின மேகம் எதிலிருந்து பிரிந்ததோ அதனுடனே, பிற மேகங்களுடனே சேராது, தன் உருவே குலைந்து

அழியும். இதை தியானத்திலிருந்து நழுவினவனுக்கு உபமானமாகச் சொல்லப்பட்டது.

उभयभ्रष्टः (உபயப்ரஷ்ட:) = (1) ஸ்வர்கம் முதலிய வற்றை கர்ம பலனைத் தியாகம் செய்ததால், அடைய முடியாதவன். ப்ரஹ்மத்தை அடைவதற்கான யோக மார்க்கத்தையும் விட்ட அறிவிலி (ஸ்ரீ ராமானுஜர்) 2. ஸ்வர்க்கமுமில்லை, மோக்ஷமுமில்லை. ஸ்வர்க ஸாதன மான காம்யகர்மமில்லை. மோக்ஷஹேதுவான தியான யோகமுமில்லை. இவ்வுலகமில்லை, விண்ணுலகுமில்லை. எனவே இரண்டும் கெட்டவன்—ஸ்ரீ ராகவேந்த்ரர்]

एतन्मे संशयं कृष्ण छेत्तुमर्हस्यशेषतः ।
त्वदन्यः संशयस्यास्य छेत्ता न ह्युपपद्यते ॥ ३९

ஏதன்மே ஸம்சயம் க்ருஷ்ண சேத்துமர்ஹஸ்யசேஷத: I
த்வதன்ய: ஸம்சயஸ்யாஸ்ய சேத்தா ந ஹ்யுபபத்யதே II 39

ஹே க்ருஷ்ண! என்னுடைய இந்த ஸந்தேஹத்தைத் தீர்க்கக்கூடிய தகுதியுடையவர் நீரே, வேறு தகுந்தவர் யாருமில்லை.

श्रीभगवानुवाच

पार्थ नैवेह नामुत्र विनाशस्तस्य विद्यते ।
न हि कल्याणकृत्कश्चित् दुर्गतिं तात गच्छति ॥ ४०

பார்த நைவேஹ நாமுத்ர விநசஸ்தஸ்ய வித்யதே I
ந ஹி கல்யாணக்ருத்கஸ்சித் துர்கதிம் தாத கச்சதி II 40

ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்வது :—

குழந்தாய்! அர்ஜுன! யோகத்திலிருந்து வழுவின வனுக்கு (யோகப்ரஷ்டனுக்கு) இவ்வுலகிலோ பரலோகத் திலோ கெடுதி ஏற்படுவதில்லை, நற்கர்மத்தைச் செய்த எவனும் கெடுதியடைகிறதில்லை.

[विनाश: (விநச:)=(1) சங்கரர் :— முற்பிறவியைக் காட்டிலும் தாழ்ந்த பிறவி, (2) ஸ்ரீதரர் :— கெடுதி (தோஷம்) அல்லது நரகமடைதல். (3) ஸ்ரீ ராமானுஜர் :— ஸ்வர்கமடைதல், ப்ரஹ்மத்தை அடைதல், இவைகளில் தான் வேண்டியது கிடைக்காமல் போகும் நாசம் அல்லது துவக்கிய ஏவலை நடுவே விட்டதினுல் ஏற்படும் தோஷம்,, (4) ஸ்ரீ ராகவேந்த்ரர் :— இவ்வுலகில் விலங்குகள் போன்ற பிறவியாவது பரலோகத்தில் நரகமாவது].

प्राप्य पुण्यकृतां लोकानुषित्वा शाश्वतीः समाः ।
शुचीनां श्रीमतां गेहे योगभ्रष्टोऽभिजायते ॥ ४१

ப்ராப்ய புண்யக்ருதாம் லோகானுஷித்வா சாச்வதீ: ஸமா: 1
சுசீனும் ச்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோஅபிஜாயதே 11 41

யோக ப்ரஷ்டன் (யோகத்தை முழுதும் செய்யாது விட்டவன்) அச்வமேதம் போன்ற யாகங்களைச் செய்த புண்யமுடையவர் எந்த லோகத்தையடைவார்களோ அவ்வுலகையடைந்து நீண்ட காலம் சுகமாக இருந்து பிறகு, இம் மண்ணுலகில் சுத்தமும், செல்வமும் படைத்த வீட்டில் பிறவி எய்துகிருன்.

[எந்த சிற்றின்பத்தில் ஆசைகொண்டு யோகத்தை விட்டானுே அந்த இன்பத்தை, புண்ய லோகங்களில் தன் னிஷ்டமான காலம் வரை அனுபவித்து, பிறகு இவ்வுலகில் சுத்தமும், செல்வமும் படைத்த யோகத்திற்குத் தகுதியான குலத்தில் பிறக்கிருன் — ஸ்ரீ ராமானுஜர்]

अथवा योगिनामेव कुले भवति धीमताम् ।
एतद्धि दुर्लभतरं लोके जन्म यदीदृशम् ॥ ४२

அதவா யோகினுமேவ குலே பவதி தீமதாம் 1
ஏதத்தி துர்லபதரம் லோகே ஜன்ம யதீத்ருசம் 11 42

அல்லது ஞானிகளான யோகாப்யாசம் செய்கிறவர்களின் குலத்திலேயே பிறக்கிருன், இவ்வுலகில் இத்தகைய பிறவி கிடைப்பது மிகவும் அதிசயம் (துர்லபம்).

[முன் ச்லோகத்தில் குறிக்கப்பட்டவன் சிறிது காலம் யோகாப்யாஸம் செய்துவிட்டவன், இந்த ச்லோகத்தில் குறிக்கப்படுபவன், வெகு காலம் யோகம் செய்து, நிலை பெறும்கால் விட்டுவிட்டவன்— ஸ்ரீ ராமானுஜர். योगिनां कुलएव (யோகினும் குலஏவ)=யோகிகளான ஏழைகளின் குலத்தில்)— ஸ்ரீ சங்கரர்].

तत्र तं बुद्धिसंयोगं लभते पौर्वदेहिकम् ।
यतते च ततो भूयः संसिद्धौ कुरुनन्दन ॥ ४३

தத்ர தம் புத்திஸம்யோகம் லபதே பௌர்வதேஹிகம் I
யததே ச ததோ பூய: ஸம்ஸித்தௌ குருநந்தன II 43

குருவம்சத்தினனே! (அர்ஜுனு!) மேற்சொன்ன நற்குலத்தில் பிறந்த பிறவியில் முற்பிறவியின் வாஸனையினல் (நிறைவேருது போன யோக வாஸனையினுல்) தனக்குண்டான அத்தகைய யோகம் செய்யும் முயற்சியுள்ள புத்தித் தொடர்பை அடைகிருன். பிறகு முற்பிறவியில் விட்டுப்போன யோகஸித்தியை அடைய மறுபடி முயற்சிக்கிருன்.

[भूयः (பூய:) = அதிகமாக (ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராகவேந்த்ரர்).]

पूर्वाभ्यासेन तेनैव ह्रियते ह्यवशोऽपि सः ।
जिज्ञासुरपि योगस्य शब्दब्रह्मातिवर्तते ॥ ४४

பூர்வாப்யாஸேன தேனைவ ஹ்ரியதே ஹ்யவசோ அபி ஸ: I
ஜிஞாஸுரபி யோகஸ்ய சப்தப்ரஹ்மாதிவர்ததே II 44

அந்த முற்பிறவியின் பயிற்சியினுல் தானே பராதீனனுக (பிறர் வசப்பட்டு) முன் ஜன்ம யோகப்ரஷ்டன் யோகத்துக்கு இழுக்கப்படுகிருன். யோகப் பயிற்சியில் விருப்பமுள்ளவனுயினும், முன் ஜன்ம வாஸனையினுல் வேதத்தில் கூறப்பட்ட கர்மபலனை அதிக்ரமிக்கிருன் (ஞானயோகத்திற்குரிய தகுதியை அடைகிருன்).

[जिज्ञासुरपि (ஜிஞாஸுரபி) = யோகத்தை அறிய விரும்பி அதில் ஈடுபட்ட துறவியும்கூட (ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்).

शब्दब्रह्मातिवर्तते (சப்தப்ரஹ்மாதிவர்ததே) = (1) பரமாத்மாவை படிப்படியாக அடைகிருன் (அடுத்த ச்லோகத்தைக் கவனிக்க) — ஸ்ரீ மத்வர், (2) வேதத்தின் விதிகளை அதிக்ரமிக்கிருன் (விடுபட்டவனுகிருன்) — ஸ்ரீ ராகவேந்த்ரர். ச்லோகத்தின் பின்பாதி — யோகத்தை அறிய விரும்புகிறவன், அப்பிறவியில் அறியாவிடில், அடுத்தபிறவியில் அறிந்து, கடைப்பிடித்து, ஞானியாகி, தேவ, மானிட, பூமி, ஸ்வர்க்கம் ஆகிய பெயர்களால் சொல்லத்தகுந்த ப்ரக்ருதியை அதிக்ரமிக்கிருன் (ஞானனந்த உருவான ஆத்மஸ்வரூபத்தை அடைகிருன்) — ஸ்ரீ ராமானுஜர்]

प्रयत्नाद्यतमानस्तु योगी संशुद्धकिल्बिषः ।
अनेकजन्मसंसिद्धस्ततो याति परां गतिम् ॥ ४५

ப்ரயத்னுத்யதமானஸ்து யோகீ ஸம்சுத்தகில்பிஷ: 1
அநேகஜன்மஸம்ஸித்தஸ்ததோ யாதி பராம் கதிம் ll 45

முயற்சியால் யோகப்பயிற்சி செய்யும் யோகி பாவத்திலிருந்து விடுபட்டு, பல பிறவிகளில் செய்த யோகத்தினுல் ஞானஸித்தியை அடைந்து, பிறகு மோக்ஷத்தை அடைகிருன் (இவன் ஜிஞாஸு அல்ல).

[ஸ்ரீ ராமானுஜர் :— பல பிறவிகளில் சேர்த்த புண்ய கர்மங்களால் பாவங்களைப் போக்கடித்துக்கொண்டு, ஸித்திபெற்றவனுய், மறுபடி யோகத்தில் முயற்சி செய்பவ

ஞகிற யோகீ, யோகத்திலிருந்து வழுவிடினும், யோகப் பயிற்சியின் மேன்மையால் மோக்ஷமடைகிருன்.

[ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர் :— முன் ச்லோகத்தில் குறிக்கப்பட்ட ஜிஞாஸுவின் பொருட்டு இந்த ச்லோகம் ஏற்பட்டதாக அறியத்தக்கது.]

तपस्विभ्योऽधिको योगी ज्ञानिभ्योऽपि मतोऽधिकः ।
कर्मिभ्यश्चाधिको योगी तस्माद्योगी भवार्जुन ॥ ४६

தபஸ்விப்யோஅதிகோ யோகீ ஞானிப்யோஅபி
மதோஅதிக: ।
கர்மிப்யஸ்சாதிகோ யோகீ தஸ்மாத்யோகீ பவார்ஜுன ॥ 46

அர்ஜுனு!, தவம் செய்பவர்கள், சாஸ்த்ர அறிவு பெற்றவர்கள், கர்மம் செய்வோர் ஆகியோரைக் காட்டிலும் த்யான யோகி மேலானவன் என்பது என்னுடைய துணிபு. ஆகையால் நீ யோகியாகக்கடவாய்.

[தவம், சாஸ்த்ர ஞானம், கர்மமிவை த்யானயோகியிடத்தில் அடங்கியுள்ளன. மற்றும் விருப்பு, வெறுப்புகளற்றவனுக இருப்பதால் த்யான யோகி மேலோன்.]

योगिनामपि सर्वेषां मद्गतेनान्तरात्मना ।
श्रद्धावान्भजते यो मां स मे युक्ततमो मतः ॥ ४७

யோகினுமபி ஸர்வேஷாம் மத்கதேனுந்தராத்மனு ।
ச்ரத்தாவான்பஜதே யோ மாம் ஸ மே யுக்ததமோ மத: ॥ 47

எல்லாவிதமான யோகிகளுக்குள், எவன் என்னிடத்தில் நிறுத்தப்பட்ட மனதினுல் பக்தியோடு என்னை ஸேவிக்கிருனே அவன் மேலான (சிரேஷ்டமான) யோகி என்று எனக்கு அபிப்பிராயம் (ஸம்மதனுக இருக்கிருன்).

[ஸ்ரீ ராமானுஜர் :— मद्गतेनान्तरात्मना (மத்கதேனாந்தராத்மனா) = எனக்கு விருப்பமானதன்றி பிற எல்லா வியாபாரங்களையும் விட்டுள்ள மனதினால், அதாவது வெளியுள்ளிரண்டிலும் என்னையே த்யானித்தும், என்னைவிட்டு ஒருக்கணமும் பிரியாதுள்ள மனத்தையுடைய श्रद्धावान् (ச்ரத்தாவான்) = என்னை விரைவில் அடையவேண்டுமென்பதில் பரபரப்புடன் கூடியவன்.

ஸ்ரீதரர் :— பலவகைக் கர்மங்களைச் செய்யும் கர்மயோகிகளுக்குள் ஈச்வரனை பஜிக்கும் த்யான யோகி ச்ரேஷ்டன்.

ஸ்ரீ ராமானுஜர் :— இந்த அத்யாயம், 29, 30, 31, 32-ஆம் ச்லோகங்களில் சொல்லப்பட்டுள்ள யோகிகள் முறையே ஒருவரைவிட அடுத்தவர் மேலோர் என அந்தந்த ச்லோகத்தில் சொல்லப்பட்டதல்லாமல், அந்த நால்வகை யோகிகளையும் காட்டிலும் இந்த ச்லோகத்தில் குறிப்பிடப்படுபவன் மேலானவன்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— ஞானயோகி, பக்தியோகி இவர்களுள் பக்தியோகி மேலானவன்.

ஸ்ரீ சங்கரர் :— சில யோகிகள் த்யான விஷயமாக ருத்ரன், இந்த்ரன், ஸூர்யன், ஸுப்ரமண்யன், கணபதி முதலிய தேவதைகளில் ஒன்றைக் குறித்துக்கொள்கிறார்கள். சிலர் த்யானத்திற்கு விஷயமாக பரமாத்மாவையே ஏற்படுத்திக்கொண்டு பக்தியுடன் த்யானிக்கிறார்கள். இவர்களுள் பரமாத்ம த்யானமுடைய யோகியே மேலானவன்.

ஆத்மஸம்யமயோகமென்கிற (த்யானயோகம்)
ஆறாவது அத்யாயம் முற்றிற்று.

ஏழாவது அத்யாயம்

விஞ்ஞானயோகம்

श्रीभगवानुवाच

मय्यासक्तमनाः पार्थ युञ्जन्मदाश्रयः ।
असंशयं समग्रं मां यथा ज्ञास्यसि तच्छृणु ॥ १

ஸ்ரீ பகவானுவாச :—

மய்யாஸக்தமனு: பார்த்த யுஞ்ஜன் மதாச்ரய: I
அஸம்சயம் ஸமக்ரம் மாம் யதா ஞாஸ்யஸி தச்ருணு II 1

ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்வது :—

ஓ பார்த்த ! (அர்ஜுன !) என்பால் மனதை வைத்து, யோகம் செய்பவனுகவும், என்னைச் சரணடைந்தவனுக வும் முழுமையெய்திய என்னை எவ்விதம் ஐயமின்றி நீ அறிவாயோ அதைச் சொல்கிறேன், கேள்.

[ஸ்ரீதரர் :— இதுவரை ஆத்மதத்வம் சொல்லி, இனி உபாஸனைக்குத் தகுந்ததைச் சொல்லப் போகிருர்.

ஸ்ரீ ராமானுஜர் :— முன் ஆறு அத்யாயங்களில் பக வானையடையக் காரணமாகிய உபாஸனையைச் சொல் வதின் பொருட்டு ஜீவனுடைய ஆத்மஸ்வரூப நிச்சயத் துடன் கூடிய கர்மானுஷ்டானம் சொல்லப்பட்டது. இது முதல் ஆறு அத்யாயங்களில் பரமாத்மஸ்வரூபமும், பரமாத்மாவையடையக் காரணமான உபாஸனை எனும் பக்தியும் சொல்லப்படும். ஏழாவது அத்யாயத்தில் பரமாத்மஸ்வரூப நிச்சயம், ப்ரக்ருதியால் ஜீவனுக்கு அது மறைவுபட்டிருப்பது, ப்ரக்ருதியை விலக்கச் சரணுகதி விவரமும், ஞானம் ச்ரேஷ்டமென்பதும் சொல்லப்பட் டுள்ளன.

समग्रम् (ஸமக்ரம்) = எல்லா விபூதி, வலிமை, சக்தி, ஐச்வர்யம் முதலிய குணங்கள் படைத்துள்ள — ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்.

मय्यासक्तमनाः (மய்யாஸக்தமனா:) = என்னிடம் பிரியமுள்ள மனதையுடைய, मदाश्रयः (மதாச்ரய:)=பகவானே எல்லாவற்றையும் செய்விக்கிறவர் என்கிற நிச்சயமுடைய, योगं युञ्जन् (யோகம் யுஞ்ஜன்) = யோகத்தில் பிரவேசிக்கிற — ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

ज्ञानं तेऽहं सविज्ञानं इदं वक्ष्याम्यशेषतः ।
यज्ज्ञात्वा नेह भूयोऽन्यज्ज्ञातव्यमवशिष्यते ॥ २

ஞானம் தே அஹம் ஸவிஞானம் இதம் வக்ஷ்யாம்யசேஷத: I
யத்ஞாத்வா நேஹ பூயோ அன்யத்ஞாதவ்யமவசிஷ்யதே II 2

எதையறிந்தால், மோக்ஷமடையும் பாதையில் மறுபடி வேறென்று தெரியவேண்டுமென மீதமிருக்காதோ, அனுபவ அறிவுடன் கூடிய அந்த அறிவை குறைவின்றி நான் உனக்குச் சொல்கிறேன்.

[सविज्ञानम् (ஸவிஞானம்) = (1) உயிருள்ள, உயிரற்றவைகளுக்கில்லாத பகவானின் மேன்மை, குணதிசயங்களை அறிகிற அறிவோடு கூடின — ஸ்ரீ ராமானுஜர், (2) பகவானின் விசேஷ மேன்மையின் அறிவுடன் கூடிய — ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

ज्ञानं (ஞானம்)=(1) பகவத்ஸ்வரூபஞானம் — ஸ்ரீராமானுஜர், (2) என்னைப்பற்றிய அறிவு — ஸ்ரீ மத்வர், (3) ஸாமான்ய மஹாத்ம்ய ஞானம் — ஸ்ரீ ராகவேந்த்ரர்]

मनुष्याणां सहस्रेषु कश्चिद्यतति सिद्धये ।
यततामपि सिद्धानां कश्चिन्मां वेत्ति तत्त्वतः ॥ ३

மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஸ்சித்யததி ஸித்தயே I
யததாமபி ஸித்தானும் கஸ்சின்மாம் வேத்தி தத்வத: II 3

அநேக மனிதர்களுள் ஒருவன் ஞானமடையும் பொருட்டு முயற்சி செய்கிறுன். முயற்சி செய்யும் பல ஞானிகளுள் ஒருவன் என்னை உண்மையாக அறிகிறுன்.

[मनुष्याणाम् (மனுஷ்யாணும்), सहस्रेषु (ஸஹஸ்ரேஷு) = சாஸ்திரத்தை அறியத் தகுதியுள்ள ஆயிரம் மனிதர்களுள் — ஸ்ரீ ராமானுஜர்.]

भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च ।
अहंकार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ॥ ४

பூமிராபோ அனலோ வாயு: கம் மனே புத்திரேவ ச l
அஹம்கார இதீயம் மே பின்ஞ ப்ரக்ருதிரஷ்டதா ll 4

என்னுடைய ப்ரக்ருதியே (சக்தியான மாயைதானே) பூமி, ஜலம், அக்னி, காற்று, ஆகாயம், மனம், புத்தி, நான் என்னும் எண்ணம் (அஹங்காரம்) இப்படி எட்டு விதமாகப் பிரிந்திருக்கிறது.

[ஸ்ரீதரர் :— பூமி, ஜலம், அக்னி, காற்று, ஆகாயம் ஆகிய பூதங்களின் சூக்ஷ்ம தன்மாத்ரைகள் அல்லது ஸ்தூல சூக்ஷ்ம பூதங்கள்.

ஸ்ரீ சங்கரர் :— பூத தன்மாத்ரைகள், ஸ்தூலமல்ல.

मनः (மன:) = (1) மனதுக்காரணமான அஹங்காரத் தத்வம் — ஸ்ரீ சங்கரர், (2) அல்லது பிரதானம் — ஸ்ரீதரர், (3) மனம் முதலிய புலன்கள் — ஸ்ரீ ராமானுஜர்.

बुद्धिः (புத்தி:) = (1) அஹங்காரத் தத்வத்தின் காரணமான மகத்தத்வம்—ஸ்ரீ சங்கரர், (2) மகத்தத்வம்—ஸ்ரீதரர், ஸ்ரீ ராமானுஜர்.

अहंकारः (அஹங்கார:) = (1) அவித்தையுடன் (அறியாமையுடன்) கூடிய தெளிவற்ற நிலே — ஸ்ரீ சங்கரர், (2) அவித்தை அல்லது அஹம்காரமும் புலன்களும், (3)– அஹம்காரத்வமும் மகத்வமும், அஹம்காரத்தில் மகத்

தத்வமடங்கியிருப்பதால் மகத்தத்வம் தனியாகச் சொல்லப்படவில்லை — ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.

குறிப்பு :— இந்த ச்லோகத்தில் ப்ரக்ருதி தத்வம் எட்டு விதமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. புராணங்களில் தத்வங்கள், 17, 23, 24, 36, 96 என்று பலவிதமாகச் சொல்லப்பட்டுள்ளன. இத்தக் கணக்குகளும் தவறல்ல. ஸ்ரீதரரின் அபிப்ராயப்படி இந்த கீதையிலேயே அத். 13, ச்லோகம் 6இல் சொல்லப்பட்டிருக்கும் 24 தத்வங்களைச் சுருக்கி இங்கு எட்டெனக் குறிக்கப்பட்டுள்ளது. விஷ்ணு புராணத்திலும் (அம்சம் 1, அத். 2ல்), பாகவதத்திலும் (ஸ்காந்தம் 2,-. 5. 5)— சொல்லியிருக்கிறபடி இந்த தத்வங்களை அறியலாம்.

மாயைக்கு, அவ்யக்தம், பிரதானம், மூலப்ருக்ருதி என மூன்று பெயர்கள். மாயையிலிருந்து ஸத்வ, ரஜஸ், தமஸ் ஆகிய மகத்தத்வம் உண்டாயிற்று, மகத் தத்வத்திலிருந்து வைகாரிகம், தைஜஸம், பூதாதி என்ற 3 விதமான அஹங்காரதத்வம் பிறந்தன. இவற்றுள் வைகாரிகம் ஸாத்விகமாம், தைஜஸம் ராஜஸமாம், பூதாதி தாமஸமாம். பூதாதி தாமஸ அஹங்காரம் மாறுதலடைந்து சப்தமெனும் தன்மாத்ரையையுண்டாக்கியது. சப்தத்திலிருந்து ஆகாசமுண்டாயிற்று. ஆகாசத்திற்கு சப்தமே குணமாகியது ஆகாசம் விகாரமடைந்து ஸ்பர்சம் (உணர்தல்) எனும் தன்மாத்ரையையுண்டாக்கியது. அதிலிருந்து வாயு (காற்று) உண்டாயிற்று. வாயுவுக்கு சப்தம், ஸ்பர்சம் இரண்டு குணங்களேற்பட்டன. வாயு விகாரமடைந்து ரூபம் (உருவம்) எனும் தன் மாத்ரையையுண்டாக்கியது. ரூபத்திலிருந்து தேஜஸ் (அக்னி) உண்டாயிற்று. இந்த தேஜஸுக்கு சப்தம், ஸ்பர்சம், ரூபம் ஆக மூன்று குணங்கள். தேஜஸ் வேறுபட்டு ரஸம் எனும் தன்மாத்திரையை ஏற்படுத்தியது ரஸத்திலிருந்து அப்பு (ஜலம், தண்ணீர்) உண்டாயிற்று. அப்புவுக்கு ரஸம், ரூபம், ஸ்பர்சம் சப்தம் ஆகிய நான்கும் குணங்களாயின. அப்பு வேறுபட்டு கந்தம் (வாசனை நுகரக்கூடியது) எனும் தன்மாத்திரை ஏற்பட்டது. கந்தத்திலிருந்து ப்ருதிவீ (பூமி)

உண்டாயிற்று. இந்தப்ரக்ருதிக்கு கந்தம், ரஸம், ரூபம், ஸ்பர்சம், சப்தம் இவ்வைந்தும் குணங்களாயின. ஆனல் ஆகாசத்திற்குச் சப்தமும், வாயுவுக்கு ஸ்பர்சமும் (உணர்தலும்) தேஜஸுக்கு ரூபமும் (உருவமும்) அப்புவுக்கு (ஜலத்திற்கு) ரஸமும் (ருசி, திரவத்தன்மை) ப்ருதிவிக்கு (பூமிக்கு) கந்தமும் (வாஸனையும்) முக்யமான குணங்களெனப்படும். சப்தம் முதலிய தன்மாத்ரைகள் அந்தந்த பூதங்களின் (ஆகாயம் முதலிய ஐந்து) சூக்ஷ்மங்களெனப் படும்.

வைகாரீகமெனும் ஸாத்விக அஹங்காரத்திலிருந்து மனதும் அதன் அபிமான தேவதையான சந்திரனும் உண்டாயின அதேபோல் 10 திக்குகள் வாயு, சூரியன், வருணன், அச்வினி தேவதைகள், அக்னி, இந்த்ரன், உபேந்த்ரன், மித்ரன், ப்ரஜாபதி, ஆகிய 10 அபிமான தேவதைகளும் உண்டாயினர்.

தைஜஸம் என்ற ராஜஸ அஹங்காரத்திலிருந்து ஞானேந்திரியங்கள் ஐந்தும் (கண், காது, நாக்கு, மூக்கு, தோல்) கர்மேந்திரியங்கள் ஐந்தும் (கை, கால், வாய், பாயு (மலம் கழிக்கும் த்வாரம்) உபஸ்தம் (சிற்றின்பமேற் படும் பகுதி) உண்டாயின இந்த 10 இந்திரியங்களுக்கு முன் கூறப்பட்ட 10 தேவதைகளும், அபிமான தேவதை களானூர்கள்.

இதேபோல் ஞான சக்தியான புத்தியும், க்ரியா சக்தி யான ப்ராணனும் தைஜஸ அஹங்காரத்திலிருந்தே உண் டானவை.]

अपरेयमितस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम् ।
जीवभूतां महाबाहो ययेदं धार्यते जगत् ॥ ५

அபரேயமிதஸ்த்வன்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம் ।
ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத் ॥ 5

பெருந்தோளுடையாய்! ஓ அர்ஜுன! மேற்சொன்ன எட்டுவிதமான ப்ரக்ருதி தாழ்மையானது. இதைக் காட்டிலும் மாறுபட்டதும் எதனுல் இந்தப் பிரபஞ்சம் (பூமி முதலிய உலகங்கள்) தாங்கப்பட்டுள்ளதோ, அத்தகையதும், ஜீவஸ்வரூபமானதும் (உயிருடன் வாழக் காரணமாகவுள்ளதும்) என் உருவமான (பாகமான) அந்த ப்ரக்ருதியே மேலானது என அறி.

[ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர் — என் ஜடப்ரக்ருதியை என்னுடைய சேதன ப்ரக்ருதி தரித்துக்கொண்டுள்ளது.

ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்— சேதன ப்ரக்ருதியான லக்ஷ்மியினுல் ஜடப்ரக்ருதியான இப்ரபஞ்சம் தரிக்கப்பட்டிருக்கிறது. பிராணன்களை தரிப்பதினுலும், எப்போதும், எவ்விடமும் பரவியிருப்பதாலும், இந்த லக்ஷ்மி ஜீவபூதமெனப்படுகிறது.]

एतद्योनीनि भूतानि सर्वाणीत्युपधारय ।
अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलयस्तथा ॥ ६

ஏதத் யோனீனி பூதானி ஸர்வாணீத்யுபதாரய ।
அஹம் க்ருத்ஸ்னஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலயஸ்ததா ॥ 6

எல்லா பூதங்களையும் (மனிதன் முதல் எல்லாப் பொருள்களையும்) இந்த, ஜட (அசைவற்ற) சேதன (உணர்வுள்ள, உயிருள்ள) இரு வகை ப்ரக்ருதியினுலே உண்டானவை எனத் தெரிந்துகொள். அவைகளின் மூலமாக எல்லா உலகின் உற்பத்தி அழிவு இவைகளுக்குக் காரணம் நானே.

मत्तः परतरं नान्यत्किंचिदस्ति धनंजय ।
मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव ॥ ७

மத்த: பரதரம் நான்யத்கிம்சிதஸ்தி தனஞ்ஜய ।
மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணு இவ ॥ 7

ஓ அர்ஜுன! என்னைவிட மேம்பட்டது வேறு யாதொன்றுமில்லை. ஆனால் கண்ணுக்குப் புலப்படும் பிரபஞ்சம் (உலகங்கள்) யாவும், நூலில் மணிகள் கோர்க்கப்பட்டிருப்பவைபோல், என்னிடம் கோர்க்கப்பட்டிருக்கின்றன.

["மிக மேம்பட்டது (ச்ரேஷ்டம்) எப்படியெனில், பரமாத்மா ஜட சேதனப்பொருள்களுக்கு சேஷியாயும், அவைகளுக்குக் காரணமாகவுமிருப்பதால், ஞானம், சக்தி, வலிமையுடன் கூடியிருப்பதாலும், சிரேஷ்டம். கார்யம் காரணம் போன்றவைகளுடன் கூடியுள்ள அசைவற்ற, உயிருடன் கூடிய எல்லாப் பிரபஞ்சமும் என் சரீரம். எல்லாவற்றிற்கும் ஆத்மாவான எல்லாப் பிரபஞ்சமும் ஒன்றியுள்ளது (ஆச்ரயித்துள்ளது) என்பது 'நூலில் மணிகள் போல் என்னிடம் கோர்க்கப்பட்டுள்ளது' என்பதின் பொருள் — ஸ்ரீ ராமானுஜர்.

குறிப்பு:— ஜீவன் சேஷி, அதேபோல் பரமாத்மாவும் சேஷி. ஜீவனின் விஷயத்தில் சப்தாதிகள், பிற பொருள்கள் சேஷம். பரமாத்மாவின் விஷயத்தில் ஜீவனும் பிற எல்லாப் பொருள்களுமே சேஷம்.]

रसोऽहमप्सु कौन्तेय प्रभास्मि शशिसूर्ययोः ।
प्रणवः सर्ववेदेषु शब्दः खे पौरुषं नृषु ॥ ८

ரஸோஅஹமப்ஸு கௌந்தேய ப்ரபாஸ்மி சசிஸூர்யயோ: ।
ப்ரணவ: ஸர்வவேதேஷு சப்த: கே பௌருஷம் ந்ருஷு ॥

குந்தியின் மகனே! (அர்ஜுன) தண்ணீரில் ருசியாகவும், சந்திரன், ஸூர்யர்களுள் ஒளியாகவும், எல்லா வேதங்களிலும் ப்ரணவமாகவும். ஆகாயத்தில் ஒலியாகவும், மனிதர்களிடத்தில் மானிடத்தன்மையுமாகவும் இருப்பது நானே.

[குறிப்பு:— இதுமுதல் 11ஆவது வரையுள்ள ச்லோகங்களுச்கு விரிவுரை 11ஆவது ச்லோகத்தின் கீழ்க் காண்க.]

पुण्यो गन्धः पृथिव्यां च तेजश्चास्मि विभावसौ ।
जीवनं सर्वभूतेषु तपश्चास्मि तपस्विषु ॥ ९

புண்யோ கந்த: ப்ருதிவ்யாம் ச தேஜஸ்சாஸ்மி விபாவஸௌ ।
ஜீவனம் ஸர்வபூதேஷு தபஸ்சாஸ்மி தபஸ்விஷு ॥ 9

பூமியில் நல்ல வாஸனையும், அக்னியின் ப்ரகாசமும், பிராணிகளின் ஆயுளும், தவம் செய்கிறவர்களின் தவமும் நானே.

बीजं मां सर्वभूतानां विद्धि पार्थ सनातनम् ।
बुद्धिर्बुद्धिमतामस्मि तेजस्तेजस्विनामहम् ॥ १०

பீஜம் மாம் ஸர்வபூதானும் வித்தி பார்த்த ஸனுதனம் ।
புத்திர்புத்திமதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநுமஹம் ॥ 10

ஓ அர்ஜுனு ! நித்யனுன (அழிவற்றவனுன) என்னை எல்லா பூதங்களுக்கும் (எல்லாப் பொருள்கள், உயிருடையன) விதை என அறிந்துகொள். புத்திசாலிகளின் தீர்மானமான அறிவும், தேஜஸ் (காந்தி) உடையவர்களின் காந்தியும், நானே.

बलं बलवतां चाहं कामरागविवर्जितम् ।
धर्माविरुद्धो भूतेषु कामोऽस्मि भरतर्षभ ॥ ११

பலம் பலவதாம் சாஹம் காமராகவிவர்ஜிதம் ।
தர்மாவிருத்தோ பூதேஷு காமோஅஸ்மி பரதர்ஷப ॥ 11

பரதகுல ச்ரேஷ்டனுன அர்ஜுனு ! வலிமையுள்ளோரின் பிரியமும் ஆசையுமற்ற உடல் வலிமையும், பிராணிகளின் தர்மத்திற்கு விரோதமில்லாத ஆசையும் நானே.

[இந்த அத்யாயத்தின் 8 முதல் 11 முடிவாகவுள்ள நான்கு ச்லோகங்களின் விவரமான பொருள் கீழே தரப்படுகிறது:—

ஸ்ரீ சங்கரர் :— 7-ஆவது ச்லோகத்தில், "நூலில் மணி போலப் பிரபஞ்சம் என்னிடம் கோர்க்கப்பட்டிருக்கிறது" என சொல்லப்பட்டது இந்த 4 ச்லோகங்களில் விவரிக்கப்படுகிறது. ஜலத்தில் ரஸாம்சம் எதோ அதுவே எனது ஸ்வரூபம். ரஸமாகிய எனது உருவத்தில் மணியாகிய ஜலம் கோர்க்கப்பட்டிருக்கிறது. எனவே ரஸமே நான் எனச் சொல்லப்பட்டது. இதேபோல் சந்திரன் சூர்யன் ஆகிய விஷயங்களிலும் பொருள் கொள்ள வேண்டும். (ச்லோ-8).

पुण्यो गन्धः (புண்யோகந்த:) நல்ல வாஸனை எனச் சொல்லப்பட்டுள்ளது. துர்வாஸனையில் (நாற்றம்) ஈச்வ ராம்சமில்லை எனச் சொல்வதற்காக இங்கு 'புண்யோ கந்த:' என்று சொல்லப்படவில்லை. பூமியிலும் பிற பொருள்களிலும் ஏற்படுவது நல்ல வாஸனையே. மற்ற தத்வங்களின் சேர்க்கையினால் நல்ல வாஸனை நாற்ற மாகிறதேயன்றி இயற்கையாகத் துர்கந்தம் (நாற்றம்) இல்லை, சுத்தமும் ஞான ஒளியுமுள்ள ஜீவஸ்வரூபம், அறிவின்மையின் ஸம்பந்தத்தால் அசுத்தத்தையும், அஞ்ஞானத்தையுமடைந்திருப்பதுபோல். (ச்லோ.—9)

कामम् (காமம்) = அடையப்படாத பொருள்களை அடையவேண்டுமென்கிற விருப்பம். रागम् (ராகம்)= தான் ஆசைப்பட்டு அதனால் கிடைத்த பொருள்களிடத்தில் விருப்பம். धर्माविरुद्धः कामः (தர்மாவிருத்த: காம:) உடலைக் காத்துக்கொள்வதற்காக, உணவு தண்ணீர் முதலியவற்றில் ஆசை.

ஸ்ரீதரர் :— ரஸத்தில் சூக்ஷ்ம பாகம் என்னுடைய அம்சம். அவ்வம்சம் விபூதி என்றும் சொல்லப்படும். அந்த என் அம்சமான ரஸத்திற்கு நான் இருப்பிடமாகையால், "ஜலத்திலுள்ள ரஸம் நான்", என்று சொல்லப்பட்டது. மற்றவைகளையும் இதே விதமான பொருளுடன் கிரஹிக்க வேண்டும். रागम् (ராகம்) = கிடைத்தது போதாது இன்னும் அதிகம் வேண்டுமெனும் ஆசை.

धर्माविरुद्धः कामः (தர்மாவிருத்த: காம:), தன்னை ரக்ஷித்துக் கொள்ள வேண்டிய ஆசையிலும்கூட தர்மத்திற்கு விரோதமாக இருக்கக்கூடாது.

ஸ்ரீ ராமானுஜர் :— ரஸம் முதலியன என்னைவிட வேருனவையாகிலும். அவை என்னுல் உண்டாக்கப் பட்டவை. என்னுலுண்டாக்கப்பட்டு, என்னை அண்டிய வைகளாய், என் உடலாய், என்னுடைய சேஷபூதமாய் (மீதமாய்), நான் அவைகளுக்கு சேஷியாகவும் இருப்ப தால் அவை நானென்று சொல்லப்பட்டன. மற்றவை களையும் இதே முறையில் பொருள்படுத்தவேண்டியது.

ஸ்ரீ மத்வர் :— எல்லாப் பொருள்களும் ஈச்வராதீன மாயும், ஈச்வரனை ஆதாரமாகக் கொண்டுள்ளதாகவும் இருப்பதால், எப்பொருள் எவன் அதீனமாக இருக் கிறதோ, அப்பொருள் அவனுகவே சொல்லப்படுகிறது. ஆதலால் தன் அதீனமான ரஸம் முதலியன தானே எனப் பகவானுல் சொல்லப்பட்டது. ஜலத்தில் ரஸம் எப்படி மேம்பாடுடையதோ அப்படியே நான் எல்லாவற்றிலும் மேம்பட்ட பகுதியாக இருக்கிறேன்.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :- ஜலத்திலுள்ள ரஸம் முதலியவை களை அதிலுள்ள பரமாத்மாவுக்குப் ப்ரதிமையாகக் கொண்டு, உபாஸிக்கும் ஞானிகளுண்டு. எனவே ரஸம் முதலியன நானே என பகவான் வேற்றுமையின்றிச் சொல்கிருர்.

குறிப்பு :- 'நாதப்ரஹ்மேத்யுபாஸ்தே' முதலிய ச்ருதி வாக்யங்களில், உபாஸன ஸ்தலங்களில், ப்ரதிமை யான பெயர்களையும், உபாஸிக்கப்படும் ப்ரஹ்மத்தை யும் அபேதமாக (வேற்றுமையற்றதாக) சொன்னதாக அறியவேண்டியது]

ये चैव सात्विका भावा राजसास्तामसाश्च ये ।
मत्त एवेति तान्विद्धि न त्वहं तेषु ते मयि ॥ १२

யே சைவ ஸாத்விகா பாவா ராஜஸாஸ்தாமஸாஸ்ச யே।
மத்த ஏவேதி தான்வித்தி ந த்வஹம் தேஷு தே மயி ॥ 12

ஸத்வ, ரஜஸ், தமோகுணங்களினுலுண்டான பொருள்கள் எவையோ அவை என்னுல் உண்டானவை யென்றும், நான் அவைகளில்லை எனவும், அவை என்னிடத்தில் உள்ளனவென்றும் அறிந்துகொள்.

[सात्विका: (ஸாத்விகா:) = ஸத்வ குணத்தினுலுண்டான சமதமாதிகள், राजसा: (ராஜஸா:) = ரஜோகுணத்தினுலுண்டான ஹர்ஷதர்பாதிகள், तामसा: (தாமஸா:) = தமோ குணத்தினுலுண்டான சோக மோஹாதிகள் — ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்.

तेषु अहं न (தேஷு அஹம் ந) = (1) அவைகளுக்கு நான் வசப்பட்டவனல்ல. (ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர்), (2) என்னுடைய இருப்பு அவைகளின் அதீனமல்ல (ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்)

ते मयि (தே மயி) — (1) அவை என் வசப்பட்டவை (ஸ்ரீ சங்கரர், ஸ்ரீதரர், ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்) (2) அவை எனக்கு சரீரமாய் என்னை அண்டியிருக்கின்றன (ஸ்ரீ ராமானுஜர்).

*இதன் கருத்து— ஆத்மா இல்லாது சரீரம் (உடல்) இருக்க முடியாது. ஆத்மா உடலை விட்டுமிருக்க முடியும். ஆத்மா உடலால் போக விஷயமாய் உதவியடைகிருன். எனக்கு உடலினுலாகவேண்டியது ஒன்றுமில்லை. லீலையின் பொருட்டு உடலை எடுத்துக்கொள்கிறேன்.]

त्रिभिर्गुणमयैर्भावैः एभिः सर्वमिदं जगत् ।
मोहितं नाभिजानाति मामेभ्यः परमव्ययम् ॥ १३

த்ரிபிர்குணமயைர்பாவை: ஏபி: ஸர்வமிதம் ஜகத் ।
மோஹிதம் நாபிஜானுதி மாமேப்ய: பரமவ்யயம் ॥ 13

மூன்று விதமான குணவிகாரங்களுள்ளதாகவும், மூன்று விதங்களாகவுமுள்ள பொருள்களினுல் மோஹத்தை

யடையும் (ஏமாற்றமடையும்) பிராணிகள், இப்பொருள்களிலின்றும் வேறுபட்ட, அழிவற்ற என்னை அறிகிறதில்லை.

[‘பொருள்களிலின்றும் வேருன’, ‘அழிவற்ற’ என்ற அடைமொழிகளினுல் கண்ணுக்குப் புலனுகவுள்ள பிரபஞ்சத்தைக்காட்டிலும் ப்ரஹ்மஸ்வரூபம் வேறென்றும், அது அழிவடையாதது என்றும், எல்லாப் பொருள்களிலும் இருக்கும் ப்ரஹ்மம், வேத வாக்யப்படி, அப்பொருள்கலில் ஒட்டாது சாக்ஷியாக மட்டுமுள்ளதேயன்றி, பொருள் உருவாக இல்லாததால், பொருள் அழிவால் ப்ரஹ்மத்திற்கு அழிவில்லை என்றும் தெளிவாகிறது.]

दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया ।
मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ॥ १४

தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா ।
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே ॥ 14

தெய்வத் தொடர்புள்ளதும், மூவகை (ஸத்வ, ரஜஸ், தமஸ்) குணமானதுமாகிய இந்த என் மாயையைத் தாண்டுவது கடினம். எவர்கள் என்னையே சரணமடைகிருர்களோ அவர்கள் இந்த மாயையைத் தாண்டிவிடுவார்கள்.

[ஸ்ரீ ராமானுஜர்:— மாயை முக்குணங்களுடன் கூடியது. அது ஈச்வரனுல் படைக்கப்பட்டது. மாயை பொய் என்பது சரியல்ல. அது உண்மையானது. மந்த்ரங்கள், வெடி மருந்துகள் முதலியவற்ருல் பல விநோதங்களைக் காண்பிப்பவர் மாயாவிகளெனச் சொல்லப்படுகின்றனர். இத்தகைய இந்த்ரஜாலம் முதலிய வித்தைகள் மித்யையானுலும் (பொய்யானுலும்), அவ்வித்தைகளுக்குக் காரணமாகவுள்ள மந்த்ரங்கள் பொய்யல்ல. இந்த உண்மையான மாயையைத்தான் “மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாத்”, எனும் ச்ருதி வாக்யத்தில் ஈச்வர மாயை என்று

சொல்லியிருக்கிறது. இது ஈச்வர ஸ்வரூபத்தை மறைத்து, விஷயங்களில் ஆசையை யுண்டாக்குகிறது. இது மாயையின் சக்தி. அந்த மாயையும் பொய்யல்ல. மாயையைத் தாண்டுவதெனில் மாயையைப் போக்கடிப்பதல்ல, அதனாலேற்படும் கெடுதிகளைப் போக்கிக்கொள்வதே.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— மாயை விஷ்ணுவின் ஒரு ஸ்த்ரீயான துர்க்கை. இவள் உலகை மோஹிக்கச் செய்யும் சக்தியுடையவள். அவளாலுண்டாகும் துன்பங்களை நிவர்த்தித்துக்கொள்வது கடினமென்பது கருத்து.]

न मां दुष्कृतिनो मूढाः प्रपद्यन्ते नराधमाः ।
माययापहृतज्ञाना आसुरं भावमाश्रिताः ॥ १५

ந மாம் துஷ்க்ருதினோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: ।
மாயயாபஹ்ருதஞானா ஆஸுரம் பாவமாச்ரிதா: ॥ 15

பாவிகளாயும், மூடர்களாயும், ஆத்ம ஸ்வரூபத்தின் அறிவற்றவர்களாயும், அரக்கரின் இயற்கையையுடையவர்களாயும், மனிதருள் கடைநிலையிலுள்ளவர்களாயுமுள்ளவர்கள் என்னைச் சரணமடைகிறதில்லை.

[आसुरं भावम् (ஆஸுரம் பாவம்) = (1) பிறரைத் துன்புறுத்தலும், பொய்யுரைப்பதும் இயற்கையாக உடையவர் — ஸ்ரீ சங்கரர். (2) உடல், புலன்கள், பிராணன்கள் ஆகியவற்றைக் காப்பதில் நோக்கமுடையவர் அஸுரர். அவ்வித நடத்தையுள்ளவர்கள் அஸுர ஸ்வபாவமுள்ளவர்கள் -- ஸ்ரீ ராகவேந்த்ரர்.

ஸ்ரீ ராமானுஜர் பாவிகளை நான்கு வகையர்களாக வகுத்துக் கூறுகிறார் :— (1) மூடர்கள்—ஒன்றை மற்றொன்றாகப் புரிந்துகொள்ளும் விபரீத ஞானமுள்ளவர், (2) நராதமர்கள் (மானிடருள் கீழ்ப்பட்டவர்) ஈச்வர ஸ்வரூப ஞானமிருந்தாலும் அதிலேயே பிடிமானம் வைக்கத் தகுதியற்றவர், (3) மாயையினால் பரிக்கப்பட்ட அறி

வுடையவர், (4) அரக்க இயல்புள்ளவர்கள் அதாவது ஈச்வரனிடம் த்வேஷ புத்தியுடையவர். இதில் முதல் வகை பிரிவினரிலிருந்து முறையே ஒருவரைவிட ஒருவர் அதிகப் பாவிகள்.]

चतुर्विधा भजन्ते मां जनाः सुकृतिनोऽर्जुन ।
आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ ॥ १६

சதுர்விதா பஜந்தே மாம் ஜனு: ஸுக்ருதினோऽர்ஜுன ।
ஆர்தோ ஜிஞாஸுரர்தார்தீ ஞானீ ச பரதர்ஷப ॥ 16

பரதகுல ச்ரேஷ்டனுன அர்ஜுனு! வியாதி முதலிய துன்பத்தையடைந்தவன், ஆத்மஸ்வரூப அறிவடையும் ஆசையுள்ளவன், பொருளையடைய விரும்புபவன், ப்ரஹ்மஞானி இப்படி நான்கு வகை புண்யவான்கள் என்னைப் போற்றுகிருர்கள்.

[आर्तः (ஆர்த:) = போக்கடித்துக்கொண்ட ஐச்வர்யத்தை மறுபடியும் வேண்டுகிறவன், अर्थार्थी (அர்தார்த்தீ) = ஏழ்மையிலிருந்து பாக்யத்தை வேண்டுகிறவன், जिज्ञासुः (ஜிஞாஸு:) = ப்ரக்ருதியினின்று விடுபட்டு, தன் ஸ்வரூபத்தையடைய விரும்புகிறவன், ज्ञानी (ஞானீ) = பகவானுக்குச் சேஷமாயுள்ள தன் ஆத்மஸ்வரூபத்தை அறிந்து தான் அடையவேண்டியது பரமாத்மா எனத் தெரிந்து கொள்கிறவன் — ஸ்ரீ ராமானுஜர்.]

तेषां ज्ञानी नित्ययुक्त एकभक्तिर्विशिष्यते ।
प्रियो हि ज्ञानिनोऽत्यर्थं अहं स च मम प्रियः ॥ १७

தேஷாம் ஞானீ நித்யயுக்த ஏகபக்திர்விசிஷ்யதே
ப்ரியோ ஹி ஞானினோ அத்யர்தம் அஹம் ஸ ச மம ப்ரிய: ॥

இவர்களுள் நிலையான யோகத்தையும், என் ஒருவனிடத்திலேயே பக்தியையுமுடைய ஞானி மேம்பட்டவன். அந்த ஞானிக்கு நான் மிகவும் விருப்பமுள்ளவன். அவனும் எனக்குப் பிரியமானவன்.

[नित्ययुक्तः (நித்யயுக்த:) = ஒரு கார்யம் முடியும் வரை என்னிடம் பக்தியுடன் இருப்பவர்போலல்லாது எப்போதும் என்னையே ஆச்ரயித்திருப்பவன் — ஸ்ரீராமானுஜர்.

एकभक्तिः (ஏகபக்தி:) = (1) பரமாத்வைத் தவிர வேறு பொருள் இல்லாததால் ஒரே பக்தியுடையவன் — ஸ்ரீ சங்கரர், (2) என்னிடமே பக்தியுள்ளவன் — ஸ்ரீ ராமானுஜர்]

उदाराः सर्व एवैते ज्ञानी त्वात्मैव मे मतम् ।
आस्थितः स हि युक्तात्मा मामेवानुत्तमां गतिम् ॥ १८

உதாரா: ஸர்வ ஏவைதே ஞானீ த்வாத்மைவ மே மதம் ।
ஆஸ்தித: ஸஹி யுக்தாத்மா மாமேவானுத்தமாம் கதிம் ॥ 18

மேலே சொல்லப்பட்ட நால்வரும் மேலானவர்களே. அவர்களுள் ஞானியோ, நானே என்பது என்னுடைய தீர்மானம். ஏனெனில் அந்த ஞானி என்னிடம் மனதை நிலையாய் நிறுத்தினவனாகவும், என்னையே மிக உயர்ந்த அடைவதற்குரியதாகவும் நம்பியவனாக இருக்கிறான்.

[ஸ்ரீ ராமானுஜர் :— என்னையன்றி ஞானிக்கு பிராண தாரணை இல்லை. எனவே எனக்கு அந்த ஞானியைத் தவிர ஆத்மதாரணை இல்லை.

ஸ்ரீ ராகவேந்த்ரர் :— அதிக அன்பினால் "அவன் நானே", எனச் சொல்லப்படுகிறது போல், பகவான் ஞானிகளிடத்திலுள்ள அன்பினால் "ஞானியோ நானே" என்று சொன்னதாகக் கொள்க. அல்லது முயற்சியால் என்னையே அடைந்திருக்கிறான் எனவும் பொருள் கூறலாம்.]

बहूनां जन्मनामन्ते ज्ञानवान् मां प्रपद्यते ।
वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः ॥ १९

பஹூனாம் ஜன்மனாமந்தே ஞானவான் மாம் ப்ரபத்யதே ।
வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: ॥ 19

பல பிறவிகளெடுத்தபின் எல்லாம் வாஸுதேவனின் உருவமென அறிவு அடைந்தவன் என்னைப் போற்றி ஸேவிக்கிருன். அத்தகைய மனதையுடையவன் மிகவும் அரிது (இத்தகையவன் கிடைப்பது அரிது).

[ஸ்ரீ ராமானுஜர் :— ज्ञानवान् (ஞானவான்) = என்னுடைய உடலின் இருப்பு, செயல்கள் யாவும் பகவானின் அதீனமானவை என்ற அறிவுள்ளவன், वासुदेवस्सर्वमिति (வாஸுதேவஸ்ஸர்வமிதி) = நானடையத்தக்க உயர்ந்த வஸ்து வாஸுதேவன்தான், என் மனத்தின் எண்ணங்கள் அனைத்தும் அவர்தான் என்றும், मां प्रपद्यते (மாம் ப்ரபத்யதே) = என்னை உபாஸிக்கிருன் என்றும் பொருள். (அத். 7, ச்லோ. 4, 5, 6, 7, 12, 17, 18 கவனிக்க).

वासुदेवस्सर्वमिति (வாஸுதேவஸ்ஸர்வமிதி) = (1) எல்லாம் வாஸுதேவனின் பராமரிப்பிலுள்ளவை-ஸ்ரீ மத்வர், (2) எல்லாவுலகங்களினிருப்பு ஆகியவை வாஸுதேவாதீனம் அல்லது பூர்ணமான பொருள் வாஸுதேவனே, (3) எல்லாவற்றிலும் தான் இருப்பதாலும், எல்லாவற்றையும் தன்னிடம் வாழும்படி செய்வதாலும், எல்லாவற்றையும் மறைக்கிறபடியாலும் வாஸு என்று பெயர், மோக்ஷமடைய விரும்புவோர்களால் பிரார்த்தனை செய்யப்படுகிறவனுகவும், ஸர்வ ஸ்வதந்த்ரனுகவும் இருப்பதால் தேவனென்கிற பெயர். ஆகையால் வாஸுதேவன் என்று ஸ்ரீ சங்கரர் விஷ்ணுஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் பொருள் கூறியுள்ளார்.]

कामैस्तैस्तैर्हृतज्ञानाः प्रपद्यन्तेऽन्यदेवताः ।
तं तं नियममास्थाय प्रकृत्या नियताः स्वया ॥ २०

காமைஸ்தைஸ்தைர்ஹ்ருதஞானு: ப்ரபத்யந்தே
அன்யதேவதா: l
தம் தம் நியமமாஸ்தாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா ll 20

தங்களுடைய பூர்வஜன்ம (முற்பிறவி) கர்மவாஸனை யினுல் கட்டுப்பட்டும், எதெதுகளில் ஆசையோ, அந் தந்த விஷயங்களினுலே அறிவில்லாதுமிருக்கிற ஜனங் கள்; எந்தெந்த தேவதைகளைக் குறித்து என்னென்ன விரதங்களைச் செய்யவேண்டுமோ அவையவைகளைச் செய்து பிற தெய்வங்களை ஸேவிக்கிருர்கள்.

[தேவதைகளை ஸேவிக்க நியமத்துடன் வேள்விகளைச் செய்யவேண்டும். வேத விதிகளினின்றும் வழுவாது செய்யவேண்டும். தவறினுல் பயன் கெடும், குற்றமும் ஏற்படும். ஈச்வரனைப் பஜிப்பதற்கு யாதொரு நியமமும் இல்லை. புலன்களையும், மனதையும் சிற்றின்பப் பொருள் களில் நுழையாது தடுத்து, ஈசனிடம் மனதை நிறுத்தி த்யானம் செய்வது பயன் தரும். எனினும்கூட, வேள்வி முதலியவற்றிக்குப் பொருள், மனித உதவி முதலியன தேவை. ஈச்வர த்யானத்திற்கு இவை யாதும் தேவை யில்லை. செய்த வரை இதற்குப் பயனுண்டு—ஆசிரியர்.]

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।
तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम् ॥ २१

யோ யோ யாம் யாம் தனும் பக்த: ச்ரத்தயார்சிதுமிச்சதி I
தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் II 21

எந்தெந்த பக்தன் எந்தெந்த தேவ சரீரத்தை அன் புடன் பூஜிக்க விரும்புகிருனே, அந்தந்த பக்தனுடைய அந்த விருப்பத்தைத் திடமாக இருக்கும்படி நான் செய் கிறேன்.

[ஸ்ரீ ராமானுஜர்:— என் உடலான இந்த்ரன் முதலிய தேவதைகளைப் பூஜிப்பது என்னை (ஈச்வர உடலை) பூஜித்த தாகவே ஆகும். அப்படி பூஜிப்பதை ஈசன் ஏற்று அதற் குரிய பயனைக் கொடுக்கிருர். எனவே எந்த தேவதையை ஆராதனம் செய்தாலும் அது ஈச்வராராதனமே என்பது கருத்து.]

स तया श्रद्धया युक्तस्तस्याराधनमीहते ।
लभते च ततः कामान् मयैव विहितान् हि तान् ॥ २२

ஸ தயா ச்ரத்தயா யுக்தஸ்தஸ்யாராதானமீஹதே ।
லபதே ச தத: காமான் மயைவ விஹிதான் ஹி தான் ॥ 22

மேலே சொல்லப்பட்ட பக்தன், திடமான ப்ரியத்துடன் அந்தத் தேவதையின் ஆராதனையைச் செய்ய விரும்புகிறான். என்னால் ஏற்படுத்தப்பட்ட, அப்படி விரும்பப்பட்ட பயன்களை அந்தத் தேவதையினாலேயே அடைகிறான். (தேவதைகளைக் குறித்துச் செய்யப்படும் ஆராதனைகளுக்குப் பலன் என்னவென்று என்னால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி தேவதைகள் அந்தந்த ஆராதனை செய்தவனுக்குப் பயனைக் கொடுக்கின்றனர்).

[ஸ்ரீ சங்கரர் :- हितान् कामान् (ஹிதான் காமான்) (எனப் பாடம்)என்பதற்கு இஷ்டமான காமங்களை (பொருள்களை) எனச் சிலர் பொருள் கூறியுள்ளார்கள். இது சரியல்ல. ஏனென்றால் காமம் ஒருவனுக்கும் ஹிதமானதல்ல.]

अन्तवत्तु फलं तेषां तद्भवत्यल्पमेधसाम् ।
देवान्देवयजो यान्ति मद्भक्ता यान्ति मामपि ॥ २३

அந்தவத்து ஃபலம் தேஷாம் தத்பவத்யல்பமேதஸாம் ।
தேவான்தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி ॥ 23

வேள்வி முதலியவற்றால் தேவதைகளைப் பூஜிக்கிறவர்கள் தேவதைகளையடைகிறார்கள். அத்தகைய பூஜையால் அடையும் பயன் முடிவுடையது (அழிவுள்ளது). என் பக்தர்கள் (நேராக என்னைப் பூஜிப்பதால்) என்னையே அடைகிறார்கள்.

[अल्पमेधसां (அல்பமேதஸாம்)=(1) இந்த்ரன் முதலிய தேவதைகள் பரமாத்மாவின் உடல் எனும் அறிவில்லாது

அந்த தேவதைகளைப் பூஜிப்பவர் அற்பபுத்தியுள்ளவர் — ஸ்ரீ ராமானுஜர், (2) அற்பமான பலனில் புத்தியுள்ளவர் — ஸ்ரீ ராகவேந்த்ரர்.

अन्तवत्तु (அந்தவத்து) = (1) தேவதைகளுக்கே முடிவுண்டாகையால் அவர்களை அடைந்தவருக்கும் முடிவுண்டு — ஸ்ரீதரர், (2) முடிவை உடையது அல்லது அற்ப காலத்தையுடையது — ஸ்ரீ ராமானுஜர்.

मामपि यान्ति (மாமபி யாந்தி) — அந்தந்த தேவதைகளைக் கிரமமாக அடைந்து கடைசியில் என்னையும் அடைகிறார்கள் — ஸ்ரீ ராகவேந்த்ரர். அந்தந்த தேவதையைப் பூஜிப்பதால் அந்தந்த தேவதையின் உலகையும், அங்குள்ள சுகத்தையும் அடைவார்கள். அவை அழிவுள்ளவை. என்னை அடைவதே சாச்வதமான பலன் என்பது கருத்து.]

अव्यक्तं व्यक्तिमापन्नं मन्यन्ते मामबुद्धयः ।
परं भावमजानन्तो ममाव्ययमनुत्तमम् ॥ २४

அவ்யக்தம் வ்யக்திமாபன்னம் மன்யந்தே மாமபுத்தய: ।
பரம் பாவமஜானந்தோ மமாவ்யயமனுத்தமம் ॥ 24

அழிவற்ற, மிக மேம்பட்ட உலக விலக்ஷணமுமான (உலகிற்கப்பாற்பட்ட) என் ஸ்வரூபத்தை அறியாத அறிவிலிகள் காணமுடியாத என்னை மானிடன் முதலிய உருவில் காணப்படுகிறவனாக நினைக்கிறார்கள்.

[ஸ்ரீ சங்கரர் :— அவ்யக்தனான (ஈச்வரனாகவும், மாயையை அடிமையாக வைத்திருக்கும்) माम् (மாம்) = என்னை மாயைக்குட்பட்ட சாதாரண மனிதனாக அறிவிலிகள் எண்ணுகிறார்கள்.

ஸ்ரீதரர் :— அவ்யக்தனான (ப்ரபஞ்சத்திற்கு அப்பாற்பட்டவனாகவும்) माम् (மாம்) = ஜகத்தைக் காக்கும் பொருட்டு விளையாட்டினால் ப்ரகாசிக்கும் பலவித உருவங்களையுடையவனாகவும், சுத்ததத்வ ஸ்வரூபனாகவு

முள்ள என்னை; கர்மத்தினுலுண்டான பஞ்சபூதங்களை யுடைய உடலையுடையவனுயும், தேவதைகளுக்குச் சம மானவனுகவும் அறிவிலிகள் நினைக்கிருர்கள்.

ஸ்ரீ ராமானுஜர் :— என்னுடைய முடிவற்ற கல்யாண குணங்களையும், உருவையும், உலகைக் காக்க அவதரித் துள்ளேன் என்பதையும் அறியாதவர்கள், உலகிலுள்ள அரச குமாரர்களில் ஒருவனுக என்னை எண்ணுகின்றனர்.

ஸ்ரீ மத்வர் :— ஸச்சிதானந்த தேஹத்தையுடைய என்னை அறிவிலிகள் ஸத்வ, ரஜஸ், தமஸ் எனும் முக் குணங்களாலான உடலையுடையவனுக எண்ணுகின்றனர்.

ஸ்ரீ ராகவேந்த்ரர்:- ஒருவருக்கும் தெரியாத மாபெரும் மேன்மையோடுகூடிய என்னை இப்போது நான் பிரகாசப் படுத்தும் அற்ப மஹிமையை மாத்திரமே பெற்றவனென நினைக்கின்றனர்]

नाहं प्रकाशः सर्वस्य योगमायासमावृतः ।
मूढोऽयं नाभिजानाति लोको मामजमव्ययम् ॥ २५

நாஹம் ப்ரகாச: ஸர்வஸ்ய யோகமாயாஸமாவ்ருத: I
மூடோஅயம் நாபிஜாநுதி லோகோ மாமஜமவ்யயம் II 25

யோக மாயையினுல் மறைக்கப்பட்டுள்ள நான் எல்லோருக்கும் காணப்படுவதில்லை. எனவே அறிவிலி களான இந்த ஜன்மங்கள் என்னைப் பிறவியற்றவனுக வும், அழிவற்றவனுகவும் அறிகிறதில்லை.

[योगमायासमावृत: (யோகமாயாஸமாவ்ருத:)=(1) மனித னுலுண்டாக்கமுடியாத, எப்படி உண்டாக்கலாமென மனி தன் மனத்தால் நினைக்கத்தகாத விநோதமான படைப்பு முதலிய சக்தி — ஸ்ரீதரர், (2) குணங்களின் சேர்க்கையான மாயை அல்லது பகவத்சித்தாஸமாதானம் என்ற யோகத்தினுலுண்டான மாயை — ஸ்ரீ சங்கரர், (3) ஜீவனை யடையத்தக்க மனித உடலை அடைவது யோகம். அது

தான் மாயை. இப்போது நான் (பகவான்) அந்த உடலை அடைந்திருப்பதால் யோக மாயையினால் மறைந்திருக்கிறேனென்பது கருத்து — ஸ்ரீ ராமானுஜர், (4) யோக சாமர்த்யமாகிய ஒரு உபாயம். அதனாலும் மாயையினாலும் சூழப்பட்டிருக்கிறேன் — ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்.]

वेदाहं समतीतानि वर्तमानानि चार्जुन ।
भविष्याणि च भूतानि मां तु वेद न कश्चन ॥ २६

வேதாஹம் ஸமதீதானி வர்தமானானி சார்ஜுன l
பவிஷ்யாணி ச பூதானி மாம் து வேத ந கஸ்சன ll 26

ஓ அர்ஜுனா! சென்றுபோன, இருக்கின்ற, வரப்போகிற ப்ரபஞ்சங்களை (உலகங்களை) நான் அறிவேன். என்னையோ ஒருவனும் அறியமாட்டான்.

[ஸ்ரீ சங்கரர் :— என்னை ஒருவனும் அறியமாட்டான் என்றால் என்னைச் சரணமடைந்த பக்தனல்லாது, மற்றவர் அறியமாட்டார் எனக் கருத்து.

न वेद (ந வேத) = (1) உலகிற்குதவியாக க்ருஷ்ணவதாரம் செய்திருப்பதாக அறியவில்லை — ஸ்ரீ ராமானுஜர், (2) தன் சுய சக்தியால் அறியமாட்டான் — ஸ்ரீ மத்வர்.]

इच्छाद्वेषसमुत्थेन द्वन्द्वमोहेन भारत ।
सर्वभूतानि संमोहं सर्गे यान्ति परन्तप ॥ २७

இச்சாத்வேஷஸமுத்தேன த்வந்த்வமோஹேன பாரத l
ஸர்வபூதானி ஸம்மோஹம் ஸர்கே யாந்தி பரந்தப ll 27

பரதகுலத்தில் பிறந்த ஓ அர்ஜுனா! தேஹத்தை அடையும்போதே காமக்ரோதங்களால் (ஆசை, கோபம்) உண்டான, சுகதுக்கங்களாலுண்டாயிருக்கும் அவிவேகத்தால் (அறிவின்மையால்) எல்லாப் பிராணிகளும் விஷயங்களில் (புலன்களுக்கு இன்பம் தரும் பொருள்களில்) அபிமானத்தை (பற்றுதலை) அடைகின்றனர்.

குறிப்பு:— விஷயாபிமானமென்பது உலகிலுள்ள, உருவம், ருசி, வாஸனை முதலியவையுடைய பொருள்களில் ஏற்படும் பற்றுதல். அதற்குக் காரணம் ஸுக துக்கங்கள். சுக துக்கங்களுக்குக் காரணம் விருப்பு, வெறுப்பு. இவை உடலை அடையும்போதே முற்பிறவியின் கர்ம வாஸனைக்கேற்ப உண்டாகின்றன. ஆன்மாவுக்கு உண்மையில் ஸுக துக்கத் தொடர்பில்லை.]

येषां त्वन्तगतं पापं जनानां पुण्यकर्मणाम् ।
ते द्वन्द्वमोहनिर्मुक्ता भजन्ते मां दृढव्रताः ॥ २८

யேஷாம் த்வந்தகதம் பாபம் ஜனானும் புண்யகர்மணும் ।
தே த்வந்த்வமோஹநிர்முக்தா பஜந்தே மாம் த்ருடவ்ரதா: ॥

புண்யம் செய்த எந்த மக்களின் பாபம் அழிந்ததோ, அவர்கள் த்வந்த்வ (இரட்டை) மோஹத்திலிருந்து (புத்திமாராட்டத்திலிருந்து) விடுபட்டு, திடமான (அசைவற்ற) விரதத்தை உடையவர்களாக என்னை பஜிக்கிறார்கள் (ஸேவிக்கின்றனர்).

[दृढव्रताः (த்ருடவ்ரதா:) = (1) பரமாத்ம தத்வத்தில் நிச்சய புத்தியையுடையவர்கள் — ஸ்ரீ சங்கரர், (2) திடமான ஸங்கல்பமுடையவர்கள் — ஸ்ரீ ராமானுஜர்.]

जरामरणमोक्षाय मामाश्रित्य यतन्ति ये ।
ते ब्रह्म तद्विदुः कृत्स्नमध्यात्मं कर्म चाखिलम् ॥ २९

ஜராமரணமோக்ஷாய மாமாச்ரித்ய யதந்தி யே ।
தே ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்னமத்யாத்மம் கர்ம சாகிலம் ॥

எவர்கள் என்னை ஆச்ரயித்து (சரணடைந்து), கிழத்தன்மையையும், சாவையும் போக்கடித்துக்கொள்ள

முயல்கின்றனரோ, அவர்கள் எல்லாக் கர்மத்தையும் (ஊழ்வினையையும்) அத்யாத்மத்தையும், அந்த ப்ரஹ்மத்தையும் அறிகிறார்கள்.

[जरामरणमोक्षाय = (1) ப்ரக்ருதி விமுக்த ஆத்மஸ்வரூப தர்சனத்தின் பொருட்டு,—இவன்தான் ஜிஞாஸு எனும் ஞானமடைய வேண்டுமென்ற ஆசையுடையவன்— ஸ்ரீ ராமானுஜர். (2) பக்தர்களில், உத்தம, மத்யம, அதம என மூன்று வகையர் உண்டு. உத்தம பக்தன் ஸ்ரீ நாராயணனின் சரணாரவிந்த பக்தியைத் தவிர, மோக்ஷம் முதலிய எதிலும் ஆசையில்லாதவன். மத்யம பக்தன் மோக்ஷத்தில் ஆசையுடையவன். அதம பக்தன் ஸ்வர்கம் முதலிய பலன்களில் ஆசையுள்ளவன். இங்கு சொல்லப்படுபவன் மத்யம பக்தன்— ஸ்ரீ மத்வர், ஸ்ரீ ராகவேந்த்ரர்]

साधिभूताधिदैवं मां साधियज्ञं च ये विदुः ।
प्रयाणकालेऽपि च मां ते विदुर्युक्तचेतसः ॥ ३०

ஸாதிபூதாதிதைவம் மாம் ஸாதியக்ஞம் ச யே விது: I
ப்ரயாணகாலேஅபி ச மாம் தே விதுர்யுக்தசேதஸ: II 30

எவர்கள் அதிபூத, அதிதெய்வங்களுடனும், அதியக்ஞத்துடனும் கூடின என்னை அறிகிறார்களோ, அவர்கள் மரணகாலத்திலும் என்னிடம் மனதை வைத்தவர்களாய், என்னை அறிந்தவர்களாவார்கள்.

[ஸ்ரீராமானுஜர்— ப்ரக்ருதி விமுக்த ஆத்ம தர்சனத்தின் பொருட்டு முயலுபவர் என்று முன் ச்லோகத்தில் சொல்லப்பட்டவர்கள், கர்மம், அத்யாத்மம், ப்ரஹ்மம் இவைகளை அறிய முயல்கின்றனர். சிலர் ஐச்வர்யத்தை அடையும் பொருட்டு ஸாதி பூதனும், ஸாதி தேவனுமான என்னை அறிய முயல்கிறார்கள், இவ்விரு வகையாரும் ஞானியும், ஸாதியக்ஞமாகிய நாராயணனை உபாஸிப்ப

வர்கள். இம் மூவகையினரும், சாகுங்கால், எவ்விதமான என் உருவத்தை அடைய விரும்புகிறார்களோ, அவ்வித மான வேண்டும் உருவத்தை அவரவர் பார்க்கின்றனர்.

குறிப்பு :— 29, 30 ச்லோகங்களில், சொல்லப்பட்ட கர்மம், அத்யாத்மம், ப்ரஹ்மம், அதிபூதம், அதிதைவம், அதி யக்ஞம் முதலியவை அத். 8இல் விவரிக்கப்படுகிறது.]

விஞ்ஞானயோகமெனும் ஏழாவது அத்யாயம்
முற்றிற்று.